**க.து.ந.க.எண்.பி8/2351/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.135/2015 **பொருள் எண்.01**

**மண்டலம்–8, வார்டு–105, எம்.எம்.டி.ஏ காலனி பிரதான சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்கு பணி ஆணை அளிக்க அனுமதி**

**வார்டு எண் : 105** **மண்டலம் : 8**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–8, வார்டு–105, எம்.எம்.டி.ஏ காலனி பிரதான சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்றத்தீர்மான எண்.577/2014,நாள்.20.11.2014 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | வருவாய்த்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 3,15,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 2,65,51,722.76 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 26,55,172.28 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 6,63,793.07 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | | ரூ. 2,65,517.23 |
| | (உ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 5,98,277.43 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 2,65,517.23 |
| | (எ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | ரூ. 1,00,000.00 |
| | ஏ) கலந்தரிதற் கட்டணம் | : | ரூ. 4,00,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 3,15,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 08.01.2015<br>2. மக்கள் குரல் தமிழ் நாளிதழ் நாள். 08.01.2015<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 08.01.2015 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 23.01.2015 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர்(கட்டடம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது |
| | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | ஏழு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2014-2015 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | R. கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ | 2,65,51,722.76 | 2,74,58,265.00 | (+) 3.41% அதிகம் |
| 2 | யோக லட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் | 2,65,51,722.76 | 2,49,03,840.00 | (-) 6.21% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | பூங்காவனம் கன்ஷ்ட்ரக்ஷன் | 2,65,51,722.76 | ஒப்ப ஆவணங்களை இனைய தளத்தில் ஈ–டென்டர் முறையில் சமர்ப்பிக்காததால் இப்பணிக்குண்டான ஒப்பத்திற்கு தகுதியின்மை (Not eligible) | |
| 4 | பிரியா கன்ஷ்ட்ரக்ஷன் | 2,65,51,722.76 | 2,87,67,240.00 | (+) 8.34% அதிகம் |
| 5 | தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்டக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 2,65,51,722.76 | 2,46,56,792.00 | (-) 7.14% குறைவு |
| 6 | செமி பிரி வெஜிடபிள் பிரைவேட் லிமிடெட் | 2,65,51,722.76 | ஒப்ப ஆவணங்களை இனைய தளத்தில் ஈ–டென்டர் முறையில் சமர்ப்பிக்காததால் இப்பணிக்குண்டான ஒப்பத்திற்கு தகுதியின்மை (Not eligible) | |
| 7 | குருமூர்த்தி என்ஜீனியரிங் என்டர்பிரைசஸ் | 2,65,51,722.76 | ஒப்ப ஆவணங்களை இனைய தளத்தில் ஈ–டென்டர் முறையில் சமர்ப்பிக்காததால் இப்பணிக்குண்டான ஒப்பத்திற்கு தகுதியின்மை (Not eligible) | |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள். 23.02.20145 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார் |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ.2,46,56,792/- (-) 7.14 % குறைவு 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | : | வகுப்பு –1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–கட்டடத்துறை 2014-2015 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 25.04.2015 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 23.01.2015 அன்று ஏழு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஏழு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இதில் மூன்று ஒப்பந்ததாரர்கள் கூடுதல் விவரங்களை இணைய தளம் மூலம் ஈ–டென்டர் முறையில் சமர்ப்பிக்காததால் இவர்களின் ஒப்பங்கள் நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள நான்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 19.02.2015 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்டக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,65,51,723.00 யைவிட (-)7.14% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,46,56,792/- ஆகும். மேலும் பேச்சுவார்த்தைக்கு பின்னர் 23.02.2015 அன்று ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,46,56,792/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.2,46,56,792/- |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (-) 7.14% குறைவு |
| The Hindu (Habitat) dated.07.02.2015 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 14.73% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 24.02.2015 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.2,46,56,792/-க்கான

ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்டக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்டக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,46,56,792/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து ஐம்பத்தாராயிரத்து ஏழுநூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று பணினை அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**21.04.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**49/2015**, நாள்.**21.04.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**23.04.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**67/2015**, நாள்.**23.04.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.11.ந.க.எண்.சி1/0926/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.136/2015 **பொருள் எண்.02**

**மண்டலம் 11 – தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை – தேவைப்படும் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த – நிர்வாக அனுமதி**

தலைமைப் பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மண்டலம் 11ல், துப்புரவு பணிகள் சீரியமுறையில் நடைபெற வேண்டி மாநகராட்சியின் கொள்கை முடிவுகளின்படி பகல் மற்றும் இரவு நேர தூய்மை பணிகளை மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை குறைந்த பட்சம் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணிகளை செவ்வனே மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை 3173 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் உள்ளன. இப்பகுதிகளில் 4,29,768 மக்கள் சுமார் 1,58,210 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தினமும் தூய்மை பணிகள் மேற்கொண்டு சுத்தம் சுகாதாரம் பேண வேண்டியது அவசியமாகிறது. மேலும், பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்டவாறு தூய்மை பணி மேற்கொள்ள மண்டலம் 11ல், பகுதி 32, 33 (ம) 34க்கு 1504 தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படும் நிலையில் தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 327 நபர்கள் மற்றும் முந்தைய நகராட்சி மற்றும் தற்காலிக பணியாளர்கள் 146 நபர்கள் ஆகமொத்தம் 473 துப்புரவு பணியாளர்கள் உள்ள நிலையில் மீதம் தேவைப்படும் 1031 பணியாளர்களில் தற்போது தற்காலிகமாக 520 பணியாளர்கள் மட்டும் ஒப்பந்தம் அடிப்படையில் பணியில் ஈடுப்படுத்தி துப்புரவு பணிகளை சீரான முறையில் மேற்கொள்ள துப்புரவு பணிகளின் அவசர அவசியம் கருதி 2015–2016ம் ஆண்டிற்க்கு கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி கூடுதலாக தூய்மைப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த புதியதாக ஒப்பம் கோர வேண்டியது அவசியமாகிறது.

மன்ற தீர்மானம் எண்–141,142 மற்றும் 143/2013, நாள்.21.02.2013 அன்று பெறப்பட்டு பகுதி–32,33 மற்றும் 34க்கு உட்பட்ட பகுதிகளில் கூடுதலாக 1047 தூய்மைப் பணியாளர்கள் பணியமர்த்த ஒப்புதல் பெறப்பட்டது. ஆனால் மண்டலம் 11ல் உள்ள பல சாலைகள் மற்றும் தெருக்களில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட 1047 நபர்களில் காலியிடங்கள் போக மீதமுள்ள 1031 பணியாளர்களுக்கு பதில் 520 நபர்கள் மட்டும் போதுமானதாகக் கருதப்பட்டு, தற்போது 520 பணியாளர்கள் மட்டும் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தம் 31.03.2015 அன்று முடிவடைய உள்ளதால் தூய்மை பணிகள் மேற்கொள்வதில் தொய்வு நிலை ஏற்படாமலிருக்க வரும் 2015–2016ம் ஆண்டிற்கான தூய்மை பணியாளர்கள் தேவைக்கு ஒப்பம் கோர வேண்டியுள்ளது.

| வ. எண் | வார்டு எண். | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள | | | தேவைப்படும் பணியாளர்கள் | தற்போது தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | | |
| 1. | 143 | 118 | 10 | 19 | 29 | 89 | 40 |
| 2. | 144 | 93 | 28 | 2 | 30 | 63 | 40 |
| 3. | 145 | 157 | 16 | 27 | 43 | 114 | 40 |
| 4. | 146 | 125 | 18 | 0 | 18 | 107 | 40 |
| 5. | 147 | 143 | 27 | 0 | 27 | 116 | 46 |
| 6. | 148 | 121 | 13 | 13 | 26 | 95 | 40 |
| 7. | 149 | 109 | 38 | 0 | 38 | 71 | 40 |
| 8. | 150 | 118 | 18 | 39 | 57 | 61 | 35 |
| 9. | 151 | 84 | 24 | 0 | 24 | 60 | 38 |
| 10. | 152 | 113 | 70 | 3 | 73 | 40 | 40 |
| 11. | 153 | 105 | 29 | 1 | 30 | 75 | 40 |
| 12. | 154 | 73 | 17 | 18 | 35 | 38 | 35 |
| 13. | 155 | 145 | 19 | 24 | 43 | 102 | 46 |
| **மொத்தம்** | | **1504** | **327** | **146** | **473** | **1031** | **520** |

மண்டலம் 11, பகுதி 32, 33 மற்றும் 34ல் தூய்மைப் பணிக்கு தேவைப்படும் 520 துய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக 2014–15 ஆண்டிற்கான விலைப்பட்டியலின்படி தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.278/– என்ற கூலி அடிப்படையில் 2015–2016ம் ஆண்டிற்கு பணியில் ஈடுபடுத்த (520x278x365) = ரூ.5,27,64,400/– (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தி ஏழு இலட்சத்தி அறுபத்தி நான்காயிரத்து நாநூறு மட்டும்) செலவினம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மண்டல அலுவலர் 11 அவர்களால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி வட்டார இணை ஆணையர் (தெற்கு) அவர்களின் மூலமாக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் கீழ்கண்ட இனங்களுக்கு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களால் ஆணையிடப்பட்டது.

1. மண்டலம் 11க்கு ஒப்பந்த அடிப்படையில் 2015–2016ல் 01.04.2015 முதல் 31.03.2016 வரை ஓர் ஆண்டிற்கு தினமும் 520 துப்புரவுப் பணியாளர்களை தனியார் நிறுவனங்கள் மூலம் துப்புரவு பணிக்கு வழங்க ஒப்பந்தம் கோரவும்.
2. தூய்மை பணிக்கு ஒப்பந்ததாரர் மூலமாக பணியாளர்களைக் ஈடுபடுத்தி பணி செய்ய சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 2014–2015ம் ஆண்டிற்கான விலைவிகிதப்படி தினக்கூலி நபர் ஒருவருக்கு 278/– வீதம் 520 பணியாளர்களுக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,27,64,400/– (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தி ஏழு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நாநூறு மட்டும்) நிர்வாக அனுமதிக்கும்.
3. இதற்கான செலவினங்களை துப்புரவு துறையின் தலைப்பு எண்.40–41–03 என்ற கணக்கு குறியீட்டிலும் 230–15–01–00 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்.

எனவே, 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 52/2015 நாள் 21.04.2015–ன்படி இந்த பணியை பொறுத்தவரை முதல் மூன்று மாதங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட வேண்டும். யார் யார் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் துப்புரவு பணி செய்கிறார்கள், யார் யாருக்கு எந்தெந்த தெருக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்ற முழு விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். மூன்று மாதங்கள் கழித்து ஒப்பந்ததாரரின் பணி தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு திருப்தியாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே அடுத்த 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்கப்பட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒப்பந்ததாரரின் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு திருப்தியாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே அடுத்த மூன்று மாதங்களுக்கு பணியாணை நீட்டிப்பு வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகளை பணியாணையில் குறிப்பிட்டு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.70/2015, நாள் 23.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இப்பொருளை பொருத்தமட்டில், ஏற்கனவே இந்த மண்டலத்தில் நியமிக்கப்பட்ட, சொர்ணஜெயந்தி குழுவின் மூலம் பணியாற்றும் பணியாளர்கள் தற்போது பணி செய்து கொண்டு இருந்தால், அப்பணியாளர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும், அவ்வாறு சொர்ணஜெயந்தி மூலம் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் இல்லையெனில், தனியார் நிறுவனம் மூலம் துப்புரவு பணியாளர்கள் பணி செய்ய ஒப்பந்தம் கோர பரிசீலிக்கலாம் என தீர்மானித்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*******

**ம.அ.12ந.க.எண்.இ1/1860/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.137/2015 பொருள் எண்.03

**ஒப்பந்தப்புள்ளி**

மண்டலம்–12 வார்டு–158ல் நந்தம்பாக்கம் பகுதியில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் வரும் மே மாதம் 23 மற்றும் 24 தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடக்க உள்ளது. அது தொடர்பாக முதன்மை செயலாளர்/ஆணையாளர் அவர்களின் தலைமையில் 25.02.2015 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு சென்னை வர்த்தக மையத்தினை சுற்றியுள்ள ஐடிபில் மற்றும் இதர நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றவும், அந்த இடத்தில் வாகனங்களை நிறுத்த வசதியாக மண் கொட்டி சமன் செய்து வாகன நிறுத்தம் ஏற்படுத்தி தரவும் திறந்த வெளி கால்வாயினை தூர்வாரி சுத்தப்படுத்தவும், பொது சுகாதார பணிகளை மேற் கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தினை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நிதியிலிருந்து பெறவும் அறிவுரை பெறப்பட்டுள்ளது.

17.03.2015 நாளிட்ட அரசு கடிதத்தில் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு சென்னை வர்த்தக மையத்தினை சுற்றியுள்ள ஐடிபில் மற்றும் டிட்கோ நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றவும் அதற்கான திட்ட அறிக்கையினை தயாரித்து அரசிடமிருந்து தொகையினை பெற்றுக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை தொடர்ந்து பின்வருமாறு பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஐடிபில் மற்றும் இதர நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றவும், அந்த இடத்தில் வாகனங்களை வசதியாக மண் கொட்டி சமன் செய்து வாகன நிறுத்தம் ஏற்படுத்த | 7 | 64,63,000.00 |
| 2 | பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள | 1 | 4,67,900.00 |
| 3 | ஐடிபிஎல் வளாகத்தில் சாலை பணிகள் மேற்கொள்ள | 11 | 2,76,45,000.00 |
| | மொத்தம் | 19 | 3,45,75,900.00 |

மேற்படி பணிகளை மேற்கொள்ள உரிய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

1) மேற்படி பணிகளுக்காக 2014–15–ம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட ரூ. 3,45,75,900.00 க்கான மதிப்பீடுகளுக்கு அனுமதியும்,
2) உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு முன்னதாக இப்பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியத்தை கருதி இப்பணிக்கு மண்டலம் மற்றும் வட்டார அளவில் கோரியமைக்கும்,
3) இப்பணிக்கான தொகை ரூ, 3,45,75,900/–யை அரசின் நிதியில் இருந்து பெறுவதினை எதிர் நோக்கி சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து இப்பணியினை மேற்கொள்ளவும்,

எனவே, மேற்காணும் இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டமைக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2) ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.51/2015, நாள்.21.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.69/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1371A/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 06–04–2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.138/2015 பொருள் எண்.04

**இயந்திரப் பொறியியல் துறை – பொது சுகாதாரத்துறைக்கு கழிவு செய்யும் நிலையில் இயங்கும் வாகனங்களுக்கு பதிலாக புதியதாக 7 எண்ணிக்கையில் கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தல் – ஒப்பம் கோரி திறக்கப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தாரிடமிருந்து வாகனங்களை கொள்முதல் செய்ய அனுமதி**

மாண்புமிகு மேயர் அவர்கள் 2014–15ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பிக்கையில் இயந்திரப் பொறியியல் துறை என்னும் தலைப்பின்கீழ் பத்தி எண்.64, வரிசை எண்.3ல் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் சுற்றித் திரியும் மாடுகளை அகற்ற வேண்டி 7 எண்ணிக்கையில் கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருக்கும் வாகனங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக புதியதாக கொள்முதல் செய்யப்படும் என அறிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் 7 எண்ணிக்கையில் கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்வது குறித்த கருத்துரை வழங்குமாறு மாநகர நல அலுவலர் அவர்களை கோரப்பட்டது.

மாநகர நல அலுவலர் அவர்களின் கருத்துருவில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பழைய வண்டிகள் அவ்வப்பொழுது பழுதடைவதாகவும் பிற மண்டலங்களிலிருந்து வண்டியை எடுத்து சென்று பணி மேற்கொள்ள சிரமமாக உள்ளதாகவும், தற்போது 7 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்படவுள்ள வாகனங்களை மண்டலங்கள் 1, 2, 3, 7, 11, 14 மற்றும் 1 5 ஆகியவற்றிற்கு வழங்கி சீரிய முறையில் கால்நடை பிடிக்கும் பணி அந்தந்த மண்டலத்திலேயே செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் 7 கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்களில் 6 வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும் 1 வாகனம் 12 ஆண்டுகளுக்கு மேலாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாகனங்களில் பெரிய பழுதுகள் ஏற்படுவதாலும், இதனை நிவர்த்தி செய்வது பொருளாதார ரிதீயாக ஏற்புடையதாகாது என்பதாலும், இந்த வாகனங்களை கழிவு செய்து புதியதாக ரூ. 112.00 இலட்சம் மதிப்பீட்டில் 7 கால்நடை ( மாடு) பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்ய 28.08.2014 நாளிட்ட மன்றத்தீர்மான எண். 436/2014 மூலம் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மின்னனு முறையில் ஒப்பம் கோரி சென்னை மாநகராட்சி செய்தி மலரில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்ப திறப்பு நாளான 14.11.2014 அன்று ஒரு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் மட்டுமே ஒப்பத்தினை சமர்ப்பித்திருந்தனர். இந்நிறுவனம் அளித்திருந்த தொழில் நுட்ப தகுதிகள் குறித்த ஆவணங்களை ஆய்வு மேற்கொண்டதில் ஒப்ப நிபந்தனை 3.1.1–ன்படி ஒப்ப படியும் கணினியில் ஏற்றப்பட்டு உரிய முறையில் ஒப்பமிட்டு சமர்ப்பிக்காததால் இவ்வொப்பம் 23.12.2014 நாளிட்ட ஒப்பங்கள் ஏற்கும் குழுமத்தின் ஆணையின்படி ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பம் கோரப்பட்டது.

மறு ஒப்பம் குறித்த அறிவிப்பு 8.1.2015 அன்று வெளியிடப்பட்டது. மறு ஒப்பம் 30.1.2015 அன்று திறக்கப்பட்டது. இதில் இரு ஒப்பந்ததாரர்கள் தங்களது ஒப்பத்தினை சமர்ப்பித்திருந்தனர் அவர்களது விவரம் பின்வருமாறு:

1. திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் மற்றும் 2 . திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ்,

இவ்விரு நிறுவனங்களும் தொழில் நுட்ப தகுதிகள் பெற்றதன் அடிப்படையில் ஒப்பக்குழுவின் பரிந்துரையின்படி, நிதி ஒப்பங்கள் 3.3.2015 அன்று திறக்கப்பட்டது.

இவ்விரு நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார் | திருவாளர்கள். வைஷ்வி மோட்டார்ஸ் |
|---|---|---|---|
| 01. | Supply of closed body LCV cattle catcher BS IV Model as per specification (Inclusive of taxes, levies, entry taxes, Transit insurance transportation charges with temporary registration.<br>1. No. | ரூ. 14,37,396,00 | 15,12,000/– |
| | 7 Nos. | ரூ. 1,00,61,772/– | Rs.1,05,84,000/– |

மேற்கண்ட அட்டவணையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்தார் ஒரு வாகனத்தின் விலை ரூ.14,37,396/– எனவும் 7 எண்ணிக்கையிலான கால்நடை(மாடு) பிடிக்கும் வாகனங்களின் மொத்த விலை ரூ.1,00,61,772/– எனவும் தெரிவித்து விலைப்புள்ளி அளித்துள்ளனர்.

எனவே திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்தாரை விலைகுறைப்பு அளிக்க கோரப்பட்டது. திருவாளர்கள் கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தார் விலை குறைப்பு குறித்த பேச்சு வார்த்தைக்குபின் தங்களது 6.3.2015 நாளிட்ட கடிதத்தில் ஒரு வாகனத்திற்கு 1396 வீதம் 7 வாகனங்களுக்கு ரூ. 9,772/–விலை குறைப்பு அளித்துள்ளார்கள்.

விலை குறைப்புக்குப்பின் திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி விபரம் பின்வருமாறு:

| வ.எண். | விவரம் | திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார் |
|---|---|---|
| 01, | Supply of closed body LCV cattle catcher BS IV Model as per specification<br>(Inclusive of taxes, levies, entry taxes, Transit insurance transportation charges with temporary registration.<br>Rate per vehicle. | ரூ. 14,36,000/– |
| | Total amount for 7 Nos. of Vehicle | Rs. 1,00,52,000/ |

திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்தார் 7 வாகனங்கள் வழங்குவதற்காக கோரியுள்ள தொகையான ரூ. 1,00,52,000/– நிர்வாக அனுமதி பெற்ற தோராய மதிப்பீட்டுத் தொகையினைவிட (–10.25%) குறைவாகும்.

திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி குறித்து உயர்மட்ட ஒப்பக்குழுவின் பரிந்துரை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் 01.04.2015 அன்று நடைபெற்ற ஒப்பக்குழும கூட்டத்தில் இவ்வொப்பம் தொடர்பான விரிவான விவாதத்திற்குப்பின் ஒரு வாகனத்தின் விலை ரூ. 14,36,000/– வீதம் 7 எண்ணிக்கையில் கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்கள் ரூ.1,00,52,000/–க்கு திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய உயர்மட்ட ஒப்பக்குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆகவே சிறப்பு உபகரணங்களுடன் கூடிய கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனம் ஒன்றின் விலை ரூ.14,36,000/– வீதம் 7 எண்ணிக்கையில் கால்நடை (மாடு) பிடிக்கும் வாகனங்களுக்கான மொத்த தொகை ரூ.1,00,52,000/– ஆகும். இச்செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தில் 2015–16 ஆம் ஆண்டிற்கான மூலதன நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளலாம், இவ்வொப்பம் செல்லத்தக்க காலம் 29.04.2015 வரை ஆகும்.

ஒப்பக்குழுமத்தின் பரிந்துரையை ஏற்று திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ. 1,00,52,000/– மதிப்பீட்டில் 7 எண்ணிக்கையில் மாடு பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்ய கீழ்கண்ட இனங்கள் மீது முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே,

1. இவ்வொப்பத்தில் ஒப்ப நிபந்தனைகளின்படி தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைப்புளளி அளித்த திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டாாஸ் நிறுவனத்தார் மாடு பிடிக்கும் வாகனம் ஒன்றுக்கு ரூ. 14,36,000/– வீதம் 7 எண்ணிக்கைகள் வழங்க குறிப்பிட்டிருந்த மொத்த விலையான ரூ. 1,00,52,000/–க்கு கால்நடை பிடிக்கும் வாகனங்களை கொள்முதல் செய்யவும்,
2. திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்திரவாதம் பெற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
3. வாகனங்கள் நிரந்தர பதிவு செய்து ஆணையர் அவர்களின் பெயரில் விலைப்பட்டி அளித்து சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டப்பின் மொத்த கொள்முதல் விலையில் 90 சதவிகிதம் காசோலையாக வழங்கவும்,
4. எஞ்சியுள்ள வாகன மொத்த தொகையின் 10 சதவிகித தொகையை வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட பின் வழங்கவும்,
5. வாகனங்கள் நிரந்தரப்பதிவு, தகுதி சான்றிதழ், சாலைவரி மற்றும் காப்பீடு ஆகியவைகளை திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்தார் மேற்கொண்டப்பின் இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் இந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டப்பின் அத்தொகையை திருப்பி வழங்கவும்,
6. மேற்கண்ட இக்கொள்முதலுக்கான செலவை இயந்திரப் பொறியியல் துறை தலைமையிடம் 2015–16ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.47/2015, நாள்.21.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.66/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.(எல்இ9)AA1/2617/2002</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.03.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.139/2015 **பொருள் எண்.05**

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை–புதிய மண்டலம்–6, வார்டு–76 (பழைய மண்டலம்–7,வார்டு–99)இல் கல்யாண மேஸ்திரி தோட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி (பொது) நிலங்களை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு சென்னை மாநகராட்சியின் இசைவினை அளிக்க அனுமதி.</u>**

புதிய மண்டலம்–6, வார்டு–76 (பழைய மண்டலம்–7, வார்டு–99)–இல் புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டம், தொகுதி எண். 34 கல்யாண மேஸ்திரி தோட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதியில் புரசைவாக்கம் கிராமத்தில் கீழ்கண்ட புலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்பாடு கொண்ட நிலங்களில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேம்பாட்டு பணிகளை செய்து முடித்துள்ளதாகவும், இந்நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு சென்னை மாநகராட்சியின் மன்றத் தீர்மானத்தினை பெற்று அனுப்பிவைக்குமாறும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய கடிதங்களில் கோரப்பட்டுள்ளது.

| கிராமம் | புல எண். | பரப்பளவு | | | வகைப்பாடு | உரிமையாளர் |
|---|---|---|---|---|---|---|
| | | கா | மனை | ச. அடி | | |
| புரசைவாக்கம் | 2197/1 | 00 | 01 | 0009 | Park | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2197/3 பாகம் | 00 | 09 | 1432 | Anti-Malaria Channel | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2197/10 பாகம் | 00 | 10 | 1898 | Hutting Ground | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2197/11 | 00 | 00 | 0847 | Road | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2197/12 | 00 | 05 | 1462 | Park | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2197/13 | 00 | 00 | 0676 | Latrine | செ. மா. |
| புரசைவாக்கம் | 2197/6 | 00 | 04 | 0760 | Hutting Ground | செ. மா. (பொது) |
| புரசைவாக்கம் | 2198/1 | 00 | 01 | 2004 | Laterine | செ. மா. |
| புரசைவாக்கம் | 2198/2 | 00 | 01 | 0559 | Hutting Ground | செ. மா. (பொது) |

மேற்கண்ட திட்டப்பகுதியில் உள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய களப்பணியாளர்களுடன் கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு இந்நிலங்களின் பரப்பளவு உறுதி செய்யப்பட்டது. இந்நிலங்கள் பூங்கா, சாலை, பொதுக்கழிப்பிடம் மற்றும் கால்வாய் (Anti Malarial Channel) போன்ற உபயோகத்திற்காக அரசால் சென்னை மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப்பட்ட அரசு நிலங்களாகும். இந்நிலங்களில் ஆக்கிரமித்திருந்த குடிசை வாழ் மக்களுக்கு சென்னை பெருநகர வளர்ச்சிகுழுமத்திடம் திட்ட வரைபட அனுமதியினைப்பெற்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேம்பாட்டு பணிகளை செய்து கொடுத்துள்ளது. மேலும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சியிடம் முன்நுழைவு அனுமதி பெறாமலேயே திட்டம் நிறைவேற்றியுள்ளது.

மேற்கண்ட நிலத்தில் வருங்காலத்தில் கால்வாய் (Anti Malarial Channel) மேம்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா ? என்பது குறித்து கருத்துரு தெரிவிக்குமாறு மழைநீர் வடிகால்வாய் துறையினை கோரியதில், இத்திட்டப்பகுதியில் வெங்கடேச பத்தன் தெருவிலிருந்து ஓட்டேரி ஒடைக்குச் செல்லும் கால்வாய் மிகவும் முக்கியமானது எனவும், இக்கால்வாய் பட்டாளம், கல்யாண மேஸ்திரி தோட்டம், வடக்கு சூளை, டிமல்லஸ் சாலை, புளியந்தோப்பு ஆகிய இடங்களின் வழியாக செல்கிறது எனவும், இக்கால்வாயினை இடிக்க கூடாது எனவும், மேலும் இக்கால்வாயில் அடிக்கடி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் கால்வாய் அமைந்துள்ள கல்யாண மேஸ்திரி தோட்ட திட்டப்பகுதியில் உள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யக்கூடாது என்றும் மழைநீர் வடிகால்வாய் துறையின் குறிப்பில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கல்யாண மேஸ்திரி தோட்டம் திட்டப்பகுதியில் உள்ள நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்ய இயலாது என 19.04.2005 நாளிட்ட கடிதம் வாயிலாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

அரசு கடிதத்துடன் இணைத்து பெறப்பட்டுள்ள பல்வேறு அரசு துறைகளுக்கு சொந்தமான நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வது சம்பந்தமாக தலைமை செயலாளரால் 15.03.2005 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பில், (Minutes of the meetings) கல்யாண மேஸ்திரி தோட்ட திட்டப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைந்துள்ள நிலத்தினை தவிர்த்து மீதமுள்ள ஆட்சேபணையில்லாத நிலங்களை மட்டுமே தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கு சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் பெற்று அனுப்ப வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் செல்லும் நிலங்களை தவிர்த்து மீதமுள்ள நிலங்களுக்கு உண்டான புல வரைபடத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாமென கூட்டுப்புலத்தணிக்கை செய்த இவ்வலுவலக உதவி பொறியாளரின் 08.09.2005–ஆம் நாளிட்ட அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட திட்டப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் செல்லும் நிலங்களை தவிர்த்து மீதமுள்ள நிலத்திற்கு உண்டான புலவரைபடத்தினை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் கோரப்பட்டது. அதன்படி மழைநீர் வடிகால்வாய் நிலங்களை தவிர்த்து வரைபடம் தயார் செய்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி (பொது) நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நிலமாற்றம் செய்ய சென்னை மாநகராட்சியின் இசைவினைக்கோரிய 21.01.2011–ஆம் நாளிட்ட கடிதம் மூலம் அதற்கு உண்டான புல வரைபடத்தினை வாரியம் அனுப்பிவைத்துள்ளது.

மேற்கண்ட திட்டப்பகுதியில் 06.08.2014 அன்று மழைநீர் வடிகால்த்துறை, மேற்பார்வை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளருடன் இணைந்து கூட்டு புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி நிலமானது மாவட்ட ஆட்சியர் கடித எண்.ஏ3/15497/68, நாள்.19.06.1972–ன்படி நில எடுப்பு செய்யப்பட்டு சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட பொது நிலம் எனவும், இந்த நிலத்தில் 2197/3 புலமானது தற்போது சிமெண்டினால் மேற்பரப்பு மூடப்பட்டு ஆங்காங்கே மனித நுழைவாயில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இந்த கால்வாயை ஒட்டினாற்போல் இரு பகுதியிலுள்ள வீடுகளிலிருந்து கழிவுநீர் இதன் வழியாக செல்வதாகவும், இப்புலத்தில் கிழக்கு பகுதியில் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு ஒட்டினாற்போல் சில வீடுகள் கட்டப்பட்டு குடியிருந்து வருவதாகவும் மேற்படி நிலமானது வாய்க்கால் வகைப்பாட்டை (Anti Malaria Channel) சார்ந்தது என்பதால் எதிர்காலத்தில் வாய்க்கால் அகலபடுத்துவதற்கும் தூர்வாருவதற்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் முறையாக செல்வதற்கும் தேவைப்படுவதால் இதனை நிலமாற்றம் செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டது.

மேலும், நகர நில அளவை எண்.2197/6, 2197/10 மற்றும் 2198/2 ஆகிய புல எண்கள் முழுவதும் சிமெண்ட் ஷீட் போட்ட வீடுகள் மற்றும் தளம் மாடி வீடுகள் கட்டப்பட்டு வசித்து வருவதாகவும் புல எண்.2197/12–ல் நில எடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க புலத்தில் பூங்காவாக இல்லாமல் தற்போது சிமெண்ட் ஷீட் போட்ட வீடுகள் மற்றும் தளம், மாடி வீடுகள் கட்டப்பட்டு வசித்து வருவதாகவும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடித எண்.எ4/2008/2001, நாள்.10.08.2001–ன்படி பூங்காவிற்காக பெறப்பட்ட நிலத்தை பூங்காவாக பயன்படுத்த வேண்டும் என்பதால் வேறு வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்ய இயலாது என தெரிவித்து மேற்படி நிலங்கள் நில எடுப்பில் எடுக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பொது நிலம் என்பதால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு நிலஉரிமை மாற்றம் செய்யலாம் என 06.08.2014–ஆம் நாளிட்ட தனி வட்டாட்சியர்/நிமஉது–இன் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. இத்திட்டப் பகுதியிலுள்ள சாலைகள், பொதுக் கழிப்பிடத்திற்கான நிலங்கள் மற்றும் திறந்தவெளி நிலங்கள்(பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள்) போன்றவைகளை தானப் பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு வாரியம் உரிய முறையில் ஒப்படைக்க வேண்டும்.

2. இத்திட்டப் பகுதியில் சென்னை மாநகாட்சி கட்டுப்பாட்டின் கீழ் சாலைகள், பொதுக் கழிப்பிட நிலங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

எனவே,

1. மண்டலம்–6, வார்டு–76 புரசைவாக்கம் கிராமம் புல எண்.2197/6, 2197/10, 2198/2 – உள்ள நிலம் சென்னை மாநகராட்சியால் நில எடுப்பு மூலம் எடுக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பொது நிலங்கள் என்பதால் நிபந்தனை அடிப்படையில் நில கிரயத் தொகை பெற்றுக் கொண்டு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கும்,
2. புல எண்.2197/12 – யில் காணும் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட நிலம் தற்போது பூங்காவாக இல்லாமல் தளம் போட்ட மாடி வீடுகளாக உள்ளதால் இது குறித்து பூங்கா துறையிடமிருந்து கருத்துரை கோருவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு வார்டுகுழு பரிந்துரையை எதிர்நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.59/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இAA-1/145/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.140/2015 **பொருள் எண்.06**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – காஞ்சிபுரம் மாவட்டம் –ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் கிராமம் – பிளாக் எண்.2ல் நகர நில அளவை எண்.17 பாகம், பிளாக் எண்.2ல் நகர நில அளவை எண்.18 பாகம் மற்றும் பிளாக் எண்.7ல் நகர நில அளவை எண்.24 பாகம் , பிளாக் எண்.9 நகர நில அளவை எண்.1 பாகம் மற்றும் 2 பாகம் – சென்னை பறக்கும் ரயில் திட்டம் (MRTS) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி**

21.12.2012 நாளிட்ட ஆலந்தூர் வட்டாட்சியரின் கடிதத்தில் ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் கிராமம் – பிளாக் எண்.2ல் நகர நில அளவை எண்.17 பாகம், விஸ்தீரணம் 0.625 ச.மீ, பிளாக் எண்.7–ல் நகர நில அளவை எண்.24 பாகம், விஸ்தீரணம் 0.1800 ச.மீ மற்றும் பிளாக் எண்.9ல் நகர நில அளவை எண்.1 பாகம், விஸ்தீரணம் 0.8095 ச.மீ, பிளாக் எண்.9ல் நகர நில அளவை எண்.2 பாகம் விஸ்தீரணம் 0.7760 ச.மீ, பிளாக் எண்.14, நகர நில அளவை எண்.31 பாகம், விஸ்தீரணம் 1060 ச.மீ நிலத்தை சென்னை பறக்கும் ரயில் திட்டம் (MRTS) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்புவது தொடர்பாக மன்றத்தில் வைத்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி புலங்களை மாவட்ட வருவாய் அலுவலர்/நி.ம.உ.து மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் புல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட நிலங்களை சென்னை பறக்கும் ரயில் திட்டம் (MRTS) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசுக்கு முன் மொழிவு அனுப்ப வார்டுகுழு பரிந்துரையினை எதிர்நோக்கி மன்ற தீர்மான எண.192/2013, நாள்.26.04.2013அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் தற்போது பெறப்பட்ட 23.2.2015ஆம் நாளிட்ட கூடுதல் முதன்மைச்செயலர் / நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் கீழ்கண்ட புல எண்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை சென்னை மெட்ரோ ரயில் போக்குவரத்து திட்டத்திற்கு இரயில் பாதை அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சி கருத்துரையினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| வார்டு–இ/பிளாக் எண்.2 | நகர நில அளவை எண்.17 | தெரு | 280 ச.மீ |
| வார்டு–இ/பிளாக் எண்.2 | நகர நில அளவை எண்.18 | வடிகால்வாய் | 238 ச.மீ |
| வார்டு–இ/பிளாக் எண்.7 | நகர நில அளவை எண்.24 | தெரு | 142 ச.மீ |
| வார்டு–இ/பிளாக் எண்.9 | நகர நில அளவை எண்.1 | ரோடு | 366 ச.மீ |
| வார்டு–இ/பிளாக் எண்.9 | நகர நில அளவை எண்.2 | மயானம் | 275 ச.மீ |
| | | மொத்தம் | 1301 ச.மீ |

மேற்காணும் புல எண்களில் உள்ள மொத்த பரப்பளவிற்கும் மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது இப்புலங்களில் குறிப்பிட்ட பரப்பளவிற்கு மட்டுமே மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய தடையின்மை சான்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்நிகழ்வின் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட இனங்களான

1. ஏற்கனவே இயற்றப்பட்ட மன்ற தீர்மானம் எண்.192/2013 நாள். 26.4.2013 ஆம் நாளிட்ட மன்ற தீர்மானத்தில் திருத்தம் செய்வதற்கும்
2. தற்போது குறிப்பிட்ட பரப்பளவிற்கு மட்டுமே நில உரிமை மாற்றத்திற்கு தடையின்மை சான்று கோரியுள்ள கீழ்கண்ட புல எண்களான.

| வ.எண் | வார்டு–இ/பிளாக் எண். | நகர நில அளவை எண். | தெரு | ச.மீ |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–இ/பிளாக் எண்.2 | நகர நில அளவை எண்.17 | தெரு | 280 ச.மீ |
| 2. | வார்டு–இ/பிளாக் எண்.2 | நகர நில அளவை எண்.18 | வடிகால்வாய் | 238 ச.மீ |
| 3. | வார்டு–இ/பிளாக் எண்.7 | நகர நில அளவை எண்.24 | தெரு | 142 ச.மீ |
| 4. | வார்டு–இ/பிளாக் எண்.9 | நகர நில அளவை எண்.1 | ரோடு | 366 ச.மீ |
| 5. | வார்டு–இ/பிளாக் எண்.9 | நகர நில அளவை எண்.2 | மயானம் | 275 ச.மீ |
| மொத்தம் | | | | 1301 ச.மீ |

ஆக மொத்தம் 1301 ச.மீ பரப்பளவு கொண்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம் ஆதம்பாக்கம் கிராமத்தில் உள்ள 5 நிலத்தினையும் சென்னை பறக்கும் ரயில் திட்டம் (MRTS) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நில நிர்வாக துறைக்கு தடையின்மை சான்று வழங்கும் பொருட்டு வார்டுகுழு பரிந்துரையினை எதிர்நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.63/2015, நாள்.23.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்(எல்இ8) DA3 / 3480/ 2011**

**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 13.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.141/2015 **பொருள் எண்.07**

**திறந்தவெளி நிலத்தினை பூங்காவாக பயன்படுத்திக் கொள்ள மீண்டும் ஓராண்டிற்கு நீட்டிப்பதற்கு அனுமதி**

மண்டலம்–13, வார்டு–170 (பழைய மண்டலம்–9, வார்டு–140) அடையாறு கிராமம், பிளாக் எண்.9, நகர புல எண்.3/3 (பழைய எண்.31) 3233 சதுர மீட்டர் பரப்பளவுள்ள திறந்தவெளி நிலத்தினை திரு.என்.இராமமூர்த்தி, தலைமைப் பொறியாளர், ஐடிசி நிறுவனம் அவர்கள் எண்.63, அண்ணாசாலை, கிண்டி, சென்னை–32–இல் ஐந்து நட்சத்திர ஓட்டல் (five star hotel) பூங்காவாக பராமரிக்கவும், ஐடிசி நிறுவனம், சென்னை மாநகராட்சி திறந்தவெளி நிலத்தை மீண்டும் ஓராண்டிற்கு அனுமதி காலம் புதுப்பிக்குமாறு 02.02.2015 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட 3233 சதுர மீட்டர் பரப்பளவுள்ள திறந்த வெளி நிலத்தை பூங்காவாக பராமரிக்க மீண்டும் அனுமதி காலத்தை புதுப்பித்துக் கொள்ள பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் உருவாக்குதல் மற்றும் பராமரிப்பு விதிகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:–

சென்னை மாநகராட்சி பொறுப்பில் உள்ள திறந்தவெளி நிலங்களில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை புதிதாக அமைக்கவும்/ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தி பராமரிக்க விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நலச்சங்கங்கள் தங்களது விருப்பத்தினை எழுத்து மூலமாக ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆணையரால் அங்கீகரிக்கப்படும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நலச்சங்கங்கள் தாங்கள் சென்னை மாநகராட்சியின் கீழ்க்கண்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுவதாக சம்மதித்து அதனை ரூபாய் 20 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பமிட்டு சான்று உறுதி அலுவலரால் சான்று அளிக்கப்பட்டு ஒப்பந்தம் ஆணையருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

1. முன்கொணர்பவர்(Sponsor), எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தத்தின் எந்தப் பகுதியையும் உள் குத்தகைக்கு விடக்கூடாது.
2. முன்கொணர்பவர் பிணை வைப்புத் தொகையாக நிலப்பகுதியின் பரப்பு, இருப்பிடம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்கு ஏற்றார் போல் கீழ்க்கண்டவாறு ரூ.50,000/–ரூ.100000/– மற்றும் ரூ.2,00.000/–(ரூபாய் ஐம்பதாயிரம், ரூபாய் ஒன்று இலட்சம், ரூபாய் இரண்டு லட்சம்) மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.
   - 10 கிரவுண்டு மற்றும் அதற்கு மேலாக உள்ள நிலபரப்பு அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் / நட்சத்திர ஓட்டல் வளாகங்கள் இவற்றில் உள்ள திறந்தவெளி நிலங்கள் அல்லது பிரதான சாலைகளில் உள்ள திறந்தவெளி நிலங்கள் ஆகியவற்றிற்கு ரூ.2 லட்சம்.
   - 10 கிரவுண்டிற்கு குறைவாக உள்ள நிலப்பகுதிகள் மற்றும் பிரதான சாலைகள் தவிர்த்து இதர சாலைகளில் உள்ள நிலங்களுக்கு ரூ.1 லட்சம்.
   - சாலை போக்குவரத்து தீவு பூங்காக்களுக்கு ரூ.50 ஆயிரம்.
3. ஒப்பந்த காலத்தில் உரிய தொகை மற்றும் கட்டணங்களில் மாற்றம் ஏற்பட்டால், முன்கொணர்பவர் திருத்தி அமைக்கப்பட்ட கட்டணம் செலுத்த ஒப்புகை தர வேண்டும்.
4. பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை உருவாக்கவும், பராமரிக்கவும் உரிய அனுமதி சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஆணையருக்கு விண்ணப்பித்து புதுப்பித்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு ஆண்டும் முன் கொணர்பவரின் பராமரிப்பு தன்மையை பொறுத்தும் மாநகராட்சியின் விருப்பு உரிமையின் பேரிலும் ஒப்பந்தம் நீட்டிக்கப்படும்.
6. சென்னை மாநகராட்சி செய்து கொண்ட ஒப்பந்த தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் பூங்காப் பணியினை தொடங்காவிட்டால் இவ்வொப்பந்தம் தானாகவே காலாவதி ஆகும்.
7. முன்கொணர்பவரால் பூங்கா பராமரிப்பு தொடங்கப்பட்டவுடன் மாநகராட்சி பணியாளர்கள் பணியில் இருந்து விலக்கி கொள்ளப்படுவார்கள்.

8. பூங்கா மற்றும் விளையாட்டுத்திடலுக்கு முன்கொணர்பவரே பணியாட்களை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
9. இப்பணி பேருந்து சாலைகள் மற்றும் பூங்கா துறையின் மேற்பார்வையின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவமைப்பு மற்றும் விவரக் குறிப்பீட்டின்படி மேற்கொள்ளுதல் வேண்டும்.
10. திறந்தவெளி நிலங்களில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் போது அதற்கான நுழைவாயில் பிரதான சாலை வழியாக இருக்க வேண்டும்.
11. மேலும் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்களை சுற்றி சுற்றுச்சுவர் உரிய முறையில் எழுப்பப்பட்டு இருக்க வேண்டும்.
12. முன்கொணர்பவர் கட்டமைப்பின் மீதோ, இடத்தின் மீதோ அல்லது இதர சாதனங்கள் மீதோ யாதொரு உரிமையும் கோருதல் கூடாது.
13. பூங்கா மற்றும் விளையட்டுத் திடல்களில் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டமைப்புகள் தவிர்த்து வேறு எந்த கட்டமைப்புகளையும் மாநகராட்சி ஆணையரின்றி அமைக்கக் கூடாது.
14. முன்கொணர்பவர் வடிவமைப்பிலும், மேம்படுத்துதலிலும் சென்னை மாநகராட்சி மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ள கேரும் போது அம்மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.
15. கட்டமைப்பு மற்றும் நில எழில் வடிவமைப்பு மற்றும் வரைப்படம் முதுநிலை அளவையின் ஆய்வாளர் மற்றும் வடிவமைப்பு வல்லுநர் ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
16. பூங்காக்களில் இலை தழைகளை மக்கி உரமாக்க தேவையான கம்போஸ்ட் குழிகள் அமைக்கப்பட்டு அதற்கு போதிய பாதுகாப்பும் அமைக்க வேண்டும்.
17. விளையாட்டுத் திடல்களின் தரை தளம் தடகளம் மற்றும் இதர உடற்பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் உரிய விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி விவரகுறிப்பேட்டின் பிரகாரம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
18. பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்களை மாநகராட்சி குறிப்பிட்ட நேரங்களில் பொதுமக்களுக்கு திறந்து வைக்கவும், பூட்டப்படுதலும் வேண்டும்.
19. பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்களின் நேரம் பலகையால் யாவருக்கும் தெரியும் வண்ணம் எழுதி வைத்திருக்க வேண்டும்.
20. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் பெயரால் மாநகராட்சி பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற பெயர் பலகை மட்டில் வைக்க அனுமதி உண்டு. ஏனைய விளம்பர மற்றும் இதர வாசக பதாதைகள் வைக்க அனுமதி இல்லை.
21. பூங்காவிற்கு நீர்ப்பாய்ச்சத் தேவையான நீர் ஆதாரங்களை முன்கொணர்பவரே செய்து கொள்ள வேண்டும். இதற்கு தேவையான மின் இணைப்பு பெற மாநகராட்சி அனுமதி வழங்கும்.
22. இரவு நேரங்களில் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்களில் போதுமான வெளிச்சம் அளிக்க தேவையான மின்விளக்குகள் நிறுவி அவற்றை பராமரிக்க வேண்டும்.
23. பூங்கா பராமரிப்பிற்காகும் மின் பயனீட்டு அளவிற்கான தொகையை ஒவ்வொரு மாதமும் முன்கொணர்பவரே செலுத்திட வேண்டும்.
24. பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்களை எக்கரணத்தை முன்னிட்டும் வர்த்தக ரீதியான காரணங்களுக்கு உ பயோகித்தல் கூடாது.
25. பூங்காக்கள் எழில்மிகு வடிவமைப்புகளுடன் ஆண்டுதோறும் பராமரிக்கப்பட வேண்டும்.
26. பூங்காவில் செய்ய வேண்டிய பணிகளான (புல்தரை வெட்டுதல்/Lawn Mowing) ஓரச்செடிகளை வெட்டுதல்(Hedges and Edges Pruning), களை எடுத்தல் மற்றும் மண் கிளறிவிடுதல் (Digging-Hoeing), பழுது நடவு(Gap filling) ஆகியவற்றை அந்தந்த கால இடைவெளியில் செய்யாமல் பணிமுடக்கம் இருந்தால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.
27. செடிகளுக்கு உரமிடுதல், பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளித்தல் போன்ற பணிகளை அவ்வப்போதும் மாநகராட்சி அலுவலர்கள் அறிவுறுத்தும் போதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
28. விளையாட்டுத் திடல்களில் இளைஞர்கள், சிறார்களின் உள்ளத்தையும் உடலையும் வலுப்படுத்தும் வகையிலும் பொழுதுபோக்கு அம்சங்களுடனும் கூடிய நவீன தொழில் நுட்ப விளையாட்டு சாதனங்கள் நிறுவப்பட்டு பராமரிக்க வேண்டும்.

29. விளையாட்டுத் சாதனங்கள் பழுதடையும்பொது அவற்றை முறையாக பழுது நீக்கம் செய்யவும் தேவைப்படும்போது மாற்றி அமைக்கவும், செய்ய வேண்டும்.
30. விளையாட்டு சாதனங்கள் மற்றும் நீர்நிலைகளால் சிறுவர்களுக்கோ, பெரியவர்களுக்கோ விபத்து ஏதும் ஏற்படாமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
31. பூங்காவிலுள்ள நடைபாதைகள் மற்றும் அமரும் பகுதிகளை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம்.
32. பூங்காவிலுள்ள பெயர்ப்பலகை, செய்தி விளக்கப்படங்களின்தட்டிகள், பூங்காவின் சுற்றுச்சவர்களின் இரும்பு கம்பிகள், வண்ண ஓவியங்கள் மற்றும் நுழைவாயில் கதவுகளை போதியகால இடைவெளியில் சுத்தம் செய்தல் வேண்டும்.
33. முன்கொணர்பவர் கட்டமைப்பை சீரிய முறையில் சுத்தம் செய்தல் மற்றும் வர்ணம் பூசுதல் முதலியவற்றை அவ்வப்போதும் மற்றும் மாநகராட்சி கேட்டு கொள்ளும் போது மேற்கொள்ளுதல் வேண்டும்.
34. நடைபாதை மற்றும் இருக்கைளை துப்புரவு செய்யும் பணி நடைபயிற்சியாளர்களுக்கு இடையூறின்றி முன்னரே ஒவ்வொருநாளும் முடித்திருக்க வேண்டும்.
35. பூங்காக்களின் நில எழில் அமைப்புகளுக்கு பார்வையாளர்களால் எவ்வித சேதாரமும் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.
36. பூங்காக்களின் சேகரிக்கப்படும் இலை தழைகளை நெருப்பிலிட்டு எரிக்கக்கூடாது. மாறாக அவைகளை பூங்காவின் குறிப்பிட்ட இடத்தில் குழிகளில் இட்டு மக்கச்செய்து உரமாக பயன்படுத்த வேண்டும்.
37. பூங்கா மற்றும் விளையட்டுத் திடல்களில் அபாயகரமானஅல்லது காய்ந்த மரங்கள் இருப்பின் அவற்றை மாநகராட்சியின்அதிகாரிகளின் அனுமதியுடன்அகற்றி பொதுமக்களுக்கு எவ்வித இழப்பும் நேராவண்ணம் காத்துக் கொள்ள வேண்டும்.
38. பூங்காவில் வெட்டப்பட்ட மரக்கிளைகள் மற்றும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி சுத்தமாக பராமரிக்க பட வேண்டும். பூங்கா கழிவுகள், குப்பைகளை பூங்காவின் உள்ளேயோ வெளியிலோ குவித்து வைத்தல் கூடாது அவைகளை மாநகராட்சி தூய்மை பணி விதிகளின்படி அப்புறப்படுத்த வேண்டும்.
39. பூங்காவில் பார்வையாளர்கள் பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு வருவது தடுக்கப்படவேண்டும்.
40. செல்ல பிராணிகளை அழைத்து வருதல் தடுத்திட வேண்டும்.
41. மழைக்காலங்களில் நடைபாதையிலோ அமர்விடங்களிலோ நீர் தேங்காவண்ணம் பராமரிக்க வேண்டும்.
42. மரத்தில் ஆணிஅடித்தல், போஸ்டர், விளம்பரப் பலகைகள்அடித்தல் கூடாது.
43. பூங்காவினுள் அசம்பாவிதம் மற்றும் சமூக விரோத செயல்களுக்கு இடம் கொடுக்கா வண்ணம் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.
44. சென்னை மாநகராட்சியின் உயர் அலுவலர்கள் பூங்காவை ஆய்வு மேற்கொள்ளும்போது பூங்கா பராமரிப்பு தொடர்பான விளக்கங்களை அளிக்க வேண்டும்.
45. மாநகராட்சியில் செடிகள் மற்றும் தாவரங்களில் உற்பத்தி பெருக்க பணிகள் நடைபெறும்போது தடை ஏதும் இருக்கக்கூடாது.
46. பூங்காவினுள்ள மின்விளக்குகள், மின்மோட்டார்கள் மற்றும் இதர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தோட்டக்களப் பொருட்களை பொறுப்புடன் பாதுகாத்தல் வேண்டும்.
47. பூங்காவினுள்வரும் பார்வையாளர்களிடம் நன்கொடையாகவோ அன்பளிப்பாகவோ கண்டிப்பாக எதையும் பெறுதல் கூடாது.
48. பூங்கா நடைப்பயிற்சி பெறுவோரிடம் அல்லது விளையாட்டு பயிற்சி பெறுவோரிடமோ எவ்விட கட்டணமும் வசூலிக்கப்படக்கூடாது.
49. சென்னை மாநகராட்சி ஒப்பந்த காலத்தில் இவ்வுரிமையை, இரத்து செய்ய உரிமை உள்ளது.
50. சென்னை மாநகராட்சி ஆணையர் நிர்வாக காரணங்களை முன்னிட்டு இவ்வொப்பந்தத்தை இரத்து செய்ய நேரிட்டால் முன்கொணர்பவர் எவ்வித இழப்பீடும் கோருதல் கூடாது. அவ்வாறு பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்களை மாநகராட்சிக்கு

ஒப்படைக்க கோரும் போது உடனடியாக மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். நிறுவனங்கள் செலுத்திய பிணைவைப்புத் தொகை அவர்களுக்கு திருப்பி வழங்கப்படும்.

51. பூங்கா பராமரிப்பு திருப்திகரமாக இல்லாதிருந்தால் ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய முழு அதிகாரம் சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் ஆணையர் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கும் உண்டு, அவ்வாறு ரத்து செய்யும் பட்சத்தில் பினை வைப்புத் தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது.

52. சென்னை மாநகராட்சி ஒப்பந்த காலத்தின் போது பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்களில் மரங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளால் விபத்துகள் ஏதும் நிகழ்ந்தால் அதற்கு மாநகராட்சி பொறுப்பேற்காது எக்காரணத்தை முன்னிட்டும் இழப்பீடு வழங்கப்படமாட்டாது.

53. ஒப்பந்தத்திலிருந்து விலக விரும்பினால் 2 மாதங்களுக்கு முன்னதாகவே மாநகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு முன்கூட்டியே தெரிவிக்காத நிலையில் பிணை வைப்புத்தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது.

54. அவ்வாறு முன்கொணர்பவர் பராமரிப்பில் இருந்து விலகிக் கொள்ளும் போது ஏற்கனவே இருந்த கட்டமைப்புகள் மற்றும் நில எழில் அமைப்புகள் உரிய முறையில் சீர்திருத்தப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்.

55. சென்னை மாநகராட்சி எப்போது வேண்டுமானாலும் மேற்கண்ட விதிகளை கூட்டவோ மாற்றி அமைக்கவோ அதிகாரம் உண்டு.

56. இப்பூங்கா பராமரிப்பில் மேற்கண்ட நிபந்தனைகள் குறித்த அல்லது இவைதவிரவும் எழும் எவ்விதமான கேள்விகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் சென்னை மாநகராட்சியின் முடிவே இறுதியானது மற்றும் முடிவானது.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஐடிசி நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு மீண்டும் அனுமதி காலம் புதுப்பித்து அனுமதி வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.64/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>வ.து.ந.க.எண்.எம்2/294/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.03.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.142/2015 **பொருள் எண்.08**

**<u>தெருமின்விளக்கு கம்பங்களில் விளம்பரம் செய்ய அனுமதி</u>**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், **1919**, பிரிவு எண்.**415–**ன்படி, சென்னை மாநகராட்சியால் பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு இடங்களில் தெருமின்விளக்கு கம்பங்கள்அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், **1919**, பிரிவு எண்.**223**எ–ல், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரங்களை மேற்கொள்ளும் வகையில் வழிவகையினை ஏற்படுத்திக்கொள்ளவும், இவ்விடங்களில் விளம்பரங்களை செய்ய, கட்டணத்தினை வசூலித்துக் கொண்டு அனுமதி வழங்கிடவும் சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.**37**ல், உள்ளாட்சி அமைப்புகளின் சட்டப்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை பயன்படுத்தி, விளம்பரங்கள் மூலமாக, உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வருவாயினை பெருக்கிக்கொள்ளலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பரிந்துரையானது தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தெருமின்விளக்கு கம்பங்களில் விளம்பரப்பலகைகளை வைக்க அனுமதி வழங்குவதன் மூலம், அனுமதிக் கட்டணம் மூலமாகவும், விளம்பர வரி மூலமாகவும் சென்னை மாநகராட்சிக்கான வருவாயினை பெருக்கிடலாம்.

சேவை வரித் துறையின், **22.06.2006** நாளிட்ட கடிதத்தில், விளம்பரங்கள் செய்வதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்யும் நிகழ்வில், சேவைவரியினையும் சேர்த்து வசூலிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்கள்/ தெருமின்விளக்கு கம்பங்கள் போன்றவற்றில் விளம்பரப்பலகைகளை மூன்று ஆண்டு காலத்திற்கு வைத்துக்கொள்ள பொது ஏல முறையினை பின்பற்றி அனுமதி வழங்கிடவும்,
2) அனுமதிக் கட்டணம், சேவை வரி மற்றும் விளம்பரப்பலகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு விளம்பரவரி ஆகியவற்றை விதிகளின்படி வசூலித்திடவும்,
3) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தெருமின்விளக்கு கம்பங்கள் அமைந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு, விளம்பரப்பலகைகளை வைப்பது குறித்து சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, விரிவான அறிக்கையினை தயாரித்திட, ஒரு கலந்தாலோசகரை (consultant/consulting service) (also through TNUIFSL) சட்டப்படி நியமித்திடவும்,

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**23.04.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**61/2015**, நாள்.**23.04.2015**ன்படிஇதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**வ.து.ந.க.எண்.எம்1/1408/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.143/2015 **பொருள் எண்.09**

**மண்டலம்–8, வார்டு–101ல் உள்ள அம்மா அரங்கம் (சென்னை மாநகராட்சி கலையரங்கம்) (Auditorium) – அரசு / அரசு சார்ந்த பிற துறை நிறுவனங்களால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு கட்டணத்தில் சலுகை வழங்குவதற்கு அனுமதி**

மன்றத் தீர்மானம் எண்.264/2012, நாள். 25.07.2012 மற்றும் ஆணையர் அவர்களின் 13.08.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, முறையே சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடங்கள் மற்றும் தி.நகர், ஜி.என். செட்டி ரோடில் உள்ள சர்.பிட்டி.தியாகராயர் கலை அரங்கம் ஆகியவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு ஒதுக்கீடு செய்யும் நடைமுறைகளை மாற்றியமைக்கப்பட்டு அதன்படி வருவாய் துறை தலைமையிடத்தில் முன்பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை–8 அவர்கள் 29.01.2015 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 03.02.2015 நாளிட்ட ஆணையின்படி ஷெனாய் நகர் கலையரங்கம், கேபிள் டி.வி. ஆப்ரேட்டர்களுக்கு பயிற்சி வழங்கும் நோக்கத்திற்கு மன்றத்தினால் நிர்ணயிக்கப்படவுள்ள வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் 07.02.2015 அன்று நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி, ஷெனாய் நகர் அம்மா அரங்கத்தினை (கலையரங்கத்தினை) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள் 27.02.2015–ன்படி வாடகை தொகை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:–

| Sl.No. | Subject | Only Auditorium and Basement parking Rent –Amount | | | For First Floor, Mazenine and Basement (Non A/c Hall) | |
|---|---|---|---|---|---|---|
| | | Full Day | 12 Hours | 4 Hours | 1 Day | Half Day |
| 01 | Rent | 2,50,000/- | 1,75,000 | 30000/- | 59,490/- | 29,475/- |
| 02 | Cleaning Charges | 15,000/ | 15,000 | 2500/- | 7500/- | 3500/- |
| 03 | P.A. System | 15,000/- | 10,000 | 5000/- | 3000/- | 2000/- |
| 04 | E.B. Charges | 30,000/- | 15,000 | 5000/- | 7500/- | 4000/- |
| 05 | Service Tax (Sl.No. 1 to 4) | 12.36% | 12.36% | 12.36% | 12.36% | 12.36% |
| 06 | Caution Deposit(Refundable) | 20,000/- | 20,000 | 20,000/- | 10,000/- | 10,000/- |

மேலும் மண்டல அலுவலர்–8 அவர்களின் குறிப்பின்படி, இக்கலையரங்கம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வாடகைக்கு வழங்க, 05.03.2015 நாளிட்ட முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் ஆணையின்படி வருவாய் துறை, தலைமையிடத்தில் முன்பதிவு செய்வதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் இயக்குநர் அவர்கள் 04.03.2015 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 05.03.2015 நாளிட்ட அரசு / அரசு பொதுத் துறை நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளை ஷெனாய் நகர் கலையரங்கத்தில் நடத்த மன்ற தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்கப்படவுள்ள கட்டணத்தை செலுத்த ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில், சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, வார்டு எண்.101, 8–வது குறுக்கு தெரு, செனாய் நகர், சென்னை–30ல் உள்ள அம்மா அரங்கத்தை (கலையரங்கத்தை) 08.03.2015 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்து மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள் 27.02.2015–ன்படி கடிதம் அனுப்பப்பட்டது.

மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள் 27.02.2015–ன்படி ஷெனாய் நகர் அம்மா அரங்கத்தினை (கலையரங்கத்தினை) வாடகைக்கு விடுவதற்கு முன் மேற்கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகளில் வரிசை எண்.13ல் “அரசு நிகழ்ச்சிகளுக்கு கட்டணத் தொகையில் சலுகை (concession) வழங்கப்படும்” என மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் சலுகை கட்டணம் மன்றத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது.

சலுகை வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட கட்டண விவரங்கள் பின்வருமாறு:–

**1) சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, வார்டு எண்.101, 8–வது குறுக்கு தெரு, செனாய் நகர், சென்னை–30ல் உள்ள அம்மா அரங்கம் (கலையரங்கம்) கட்டண விவரம் :–**

| Sl. No. | Subject | Only Auditorium and Basement parking Rent –Amount | | | For First Floor, Mazenine and Basement (Non A/c Hall) | |
|---|---|---|---|---|---|---|
| | | Full Day Rs. | 12 Hours Rs. | 4 Hours Rs. | 1 Day Rs. | Half Day Rs. |
| 01 | Rent fixed in Resolution No.93/2015, dated 27.02.2015) For General Public | 2,50,000 | 1,75,000 | 30000 | 59,490 | 29,475 |
| 02 | Rent for Government / Public Sector Undertakings (25% Concession on Rent only) | -Nil- | -Nil- | -Nil- | -Nil- | -Nil- |
| 03 | Cleaning Charges | 15,000/ | 15,000 | 2500/- | 7500/- | 3500/- |
| 04 | P.A. System | 15,000/- | 10,000 | 5000/- | 3000/- | 2000/- |
| 05 | E.B. Charges | 30,000/- | 15,000 | 5000/- | 7500/- | 4000/- |
| 06 | Service Tax (Sl.No. 1 to 5) | 12.36% | 12.36% | 12.36% | 12.36% | 12.36% |
| 07 | Caution Deposit (Refundable) | 20,000/- | 20,000 | 20,000/- | 10,000/- | 10,000/- |

எனவே,

1) சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, வார்டு எண்.101, 8–வது குறுக்குத் தெரு, செனாய் நகர், சென்னை–30ல் அமைந்துள்ள கலையரங்கத்தினை, மன்றத்தினால் நிர்ணயிக்கப்படவுள்ள வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், கேபிள் டி.வி. ஆப்ரேட்டர்களுக்கு பயிற்சி வழங்கும் நோக்கத்திற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்.–க்கு 07.02.2015 அன்று ஒரு நாள் மட்டும் செனாய் நகர் கலையரங்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

2) கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பில் 08.03.2015 அன்று “மகளிர் தினத்தை” முன்னிட்டு நடைபெற உள்ள அரசு விழாவில் சுமார் 500 மகளிர் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்காக அரசு / அரசு பொதுத்துறை நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளை ஷெனாய் நகர் கலையரங்கத்தில் நடத்த மன்ற தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்கப்படவுள்ள கட்டணத்தை செலுத்த ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு 08.03.2015 அன்று ஒரு நாள் மட்டும் செனாய் நகர் கலையரங்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

3) சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, வார்டு எண்.101, ஷெனாய் நகர் கலையரங்கத்தில் அரசு / அரசு சார்ந்த பிற துறை நிறுவனங்களால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு மன்றத் தீர்மானம் எண்.93/2015, நாள் 27.02.2015–ன்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை தவிர்த்து இதர கட்டணங்கள் மட்டும் செலுத்துவதற்கு சலுகை வழங்க உத்தேசிக்கப்பட்டு பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கட்டணங்களை நிர்ணயம் செய்வதற்கு அனுமதியும்,

| Sl.No. | Subject | Auditorium and Basement parking Only Rent –Amount | | | For First Floor, Mazenine and Basement (Non A/c Hall) | |
|---|---|---|---|---|---|---|
| | | Full Day Rs. | 12 Hours Rs. | 4 Hours Rs. | 1 Day Rs. | Half Day Rs. |
| 01 | Rent fixed in Resolution No.93/2015, dated 27.02.2015) For General Public | 2,50,000 | 1,75,000 | 30000 | 59,490 | 29,475 |
| 02 | Rent for Government / Public Sector Undertakings (25% Concession on Rent only) | -Nil- | -Nil- | -Nil- | -Nil- | -Nil- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **03** | **Cleaning Charges** | **15,000/** | **15,000** | **2500/-** | **7500/-** | **3500/-** |
| **04** | **P.A. System** | **15,000/-** | **10,000** | **5000/-** | **3000/-** | **2000/-** |
| **05** | **E.B. Charges** | **30,000/-** | **15,000** | **5000/-** | **7500/-** | **4000/-** |
| **06** | **Service Tax (Sl.No. 1 to 5)** | **12.36%** | **12.36%** | **12.36%** | **12.36%** | **12.36%** |
| **07** | **Caution Deposit (Refundable)** | **20,000/-** | **20,000** | **20,000/-** | **10,000/-** | **10,000/-** |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.62/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ச.கு.ந.க.எண்.எல்சி2/4774/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.144/2015 **பொருள் எண்.10**

**<u>சட்ட நடவடிக்கைகள் – இன்ஸ்ட்யூட் ஆப் பிரதர்ஸ் ஆப் செயின்ட் பேட்ரிக் என்பவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.21619/2013– தலைமை வழக்கறிஞர் திரு.ஏ,,எல்.சோமயாஜி அவர்கள் சென்னை மாநகராட்சி சார்பாக 06/08/2013, 14/08/2013, 27/8/2013, 29/08/2013 மற்றும் 18/09/2013 ஆகிய தேதிகளில் ஆஜரானது – வழக்கு கட்டணம் நாளொன்றுக்கு ரூ.40,000/– வீதம் ரூ.2,00,000/– மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வழங்கியதற்கு அனுமதி</u>**

திருவாளர்கள் செயின்ட் பேட்ரிக் சகோதரர்களின் நிறுவனத்தால் உயர்நீதிமன்றத்தில் (1) முதன்மை செயலர் மற்றும் ஆணையர், நில நிர்வாகம் (2) மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (3) மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடமைத்துறை, சென்னை மாநகராட்சி மற்றும் (4) வட்டாட்சியர், மயிலாப்பூர்– திருவல்லிக்கேணி தாலுக்கா ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.21619/2013ல் சுமார் 10 ஏக்கர் மற்றும் 2 கிரவுண்ட் அளவுள்ள சர்வே எண்.2/1 (டி.எஸ்.எண்.2 (பாகம்), பிளாக் எண்.24ல் உள்ள இடத்தினை மனுதாரர் பெயருக்கு பட்டா வழங்க கோரி நீதிப்பேராணை மனு எண்.21619/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், தமிழ்நாடு தலைமை வழக்கறிஞர் திரு.ஏ.எல்.சோமயாஜி அவர்கள் சென்னை மாநகராட்சி சார்பாக ஆஜாராகி வாதாடவும் மற்றும் மன்றத்தீர்மானத்தின்படி வழக்கு கட்டணம் வழங்கவும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 06/09/2013 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

27/01/2009 நாளிட்ட சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.31/2009ன்படி உயர்நீதிமன்றத்தில் வழக்காடும் மூத்த வழக்கறிஞருக்கு தொகுதி வழக்குகளுக்கு நாளொன்றுக்கு முதல் வழக்கிற்கு ரூ.15,000/–ம், அடுத்தடுத்த வழக்குகளுக்கு ரூ.7500/– வீதம் அதிகபட்சமாக ரூ.60,000/– வழங்க அனுமதி அளித்துள்ளது. 31/10/2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.710/2013ன்படி மூத்த வழக்கறிஞர் கோரும் கேட்புத்தொகையை வழக்கு கட்டணமாக வழங்க அனுமதி அளித்துள்ளது.

தலைமை வழக்கறிஞர் அவர்கள் 19/09/2013 நாளிட்ட தனது கடிதத்தில் நீதிப்பேராணை மனு எண்.21619/2013ல் சென்னை மாநகராட்சி சார்பாக 06/08/2013, 14/08/2013, 27/08/2013, 29/08/2013 மற்றும் 18/09/2013 ஆகிய தேதிகளில் ஆஜரானதற்காக நாளொன்றுக்கு ரூ.40,000/– வீதம் ஐந்து நாட்களுக்கு ரூ.2,00,000/–வழங்கும்படியும் திரு.வி.பாரதிதாசன், நிலை வழக்கறிஞருக்கு மூன்றில் ஒரு பங்கு கட்டணம் வழங்கவும் கோரியிருந்தார்.

தலைமை வழக்கறிஞர் கோரியிருந்த வழக்கு கட்டணத்தை மேற்குறிப்பிட்ட மன்றத்தீர்மானத்தின்படி வழங்க இயலாத நிலையில், இதனை சிறப்பு நிகழ்வாக கருதி, முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணைக்காக சமர்ப்பிக்கப்பட்டதில், முதன்மை செயலர்/ ஆணையர் அவர்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தலைமை வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் வழங்க அனுமதியளித்துள்ளார்.

எனவே, தலைமை வழக்கறிஞர் திரு.ஏ.எல்.சோமயாஜி அவர்களுக்கு நீதிப்பேராணை மனு எண்.21619/2013ல் சென்னை மாநகராட்சி சார்பாக 06/08/2013, 14/08/2013, 27/08/2013, 29/08/2013 மற்றும் 18/09/2013 ஆகிய தேதிகளில் ஆஜரானதற்காக நாளொன்றுக்கு ரூ.40,000/– வீதம் ஐந்து நாட்களுக்கு ரூ.2,00,000/– வழங்கியதற்கும், திரு.வி.பாரதிதாசன், நிலைவழக்கறிஞருக்கு ரூ.66,666/– மூன்றில் ஒரு பங்கு கட்டணம் வழங்கியதற்கு நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.65/2015, நாள்.23.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.10.ந.க.எண்.அ2/10941/01/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 13.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.145/2015 **பொருள் எண்.11**

**ஒப்பம் – 2013–2014–மண்டலம்–10 – வார்டு– 132 ஏ.வி.எம் மயான பூமியில் மின் தகனமேடை அமைக்கும் பணிக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

01. பணியின் பெயர் – மின் தகனமேடை அமைக்கும் பணி

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 132 | ஏ.வி.எம். மயான பூமியில் புதியதாக மின் தகன மேடை அமைக்கும் பணி | மின் தகன மேடை அமைக்கும் பணி | – | – | 1,39,30,000.00 |
| | | **மொத்தம்** | | | | **1,39,30,000.00** |

02. 10வது வார்டு குழுவின் ஒப்புதல் நாள் – 10வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.2036 நாள்–19.08.2014

03. திட்ட குறியீட்டு எண் – NIC/2014-15/7860

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு – 2013–2014 ம் ஆண்டு விலை

(அ) பணியின் செலவினம் – ரூ.11941650.13
(ஆ) மேற்பார்வை செலவு – ரூ. 1194165.01
(இ) சில்லரை மேற்பார்வை செலவு – ரூ. 298541.25
(ஈ) எதிர்பாரா விளைவுகள் – ரூ.40000.00
உ) மின்சாரம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் – ரூ.40000.00
ஊ) எதிர்பாரா செலவு – ரூ.296227.11
எ) தரக்கட்டுபாடு செலவினம் – ரூ.119416.50
**மொத்தம் – ரூ. 13,93,00,000.00**

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது /நாள் – செ.மா. ஒப்பந்தப்புள்ளி, மலர்–20 இதழ் 1040 நாள்.11.09.2014.

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் –

07. மின்னனு மூலமாக ஒப்பம் பெறப்பட்ட நாள் – 26.09.2014

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் – ஆம்

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? –

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன – ஒன்று

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்/திரு | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2013 –14 ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். டி.ரங்கநாதன் | 11941650.13/– | 12359607.88/– | (+)3.50 % அதிகம் |

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்– – ஆம். நாள்.11.12.2014
13. ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் **ரூ.12359607.88/– (+)3.50 % அதிகம்**
14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் – வகுப்பு 1
15. கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் – பொருந்தாது
    அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர்
16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? – உள்ளது
    வரவு செலவு திட்ட தலைப்பு – மூலதன நிதி
17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் – 90 நாட்கள்

மேற்கண்ட பணிக்காக மின்னனு ஒப்பம் கோரப்பட்ட நாளான 26.09.2014 அன்று ஒற்றை ஒப்பம் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி கோரிய **திருவாளர். டி.ரங்கநாதன்** அவர்களின் ஒப்பத் தொகை **ரூ.12359607.88/–** ஆகும். இது 2013–14ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான **ரூ.11941650.13/-** யை விட (+)3.50% அதிகம் ஆகும். அதே சமயம் ஒப்பந்ததாரரின் ஒப்பம் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையாலும், அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு **திருவாளர்.டி.ரங்கநாதன்** அவர்களின் ஒப்பத்தை பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 31.05.2014 அன்று வெளியான வெளி சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு (–)11.97% குறைவு ஆகும்.

மன்றத் தீர்மானத்தின்படி, (தீர்மான எண்.512/2007, நாள்–25.09.2007)

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும் (Source- Builders Association of India – South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும் சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு, 31.05.2014 நாளிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு கீழ்கண்ட ஒப்பந்ததாரருக்கு இறுதியாக ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது .

மேலும் இந்த ஒப்பந்த தொகை 2013–2014 ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)3.50 % அதிகம் ஆகும்.

மேலும் இப்பணிக்கான ஒப்பத்தை **திருவாளர்.டி.ரங்கநாதன்** அவர்களுக்கு 2013–14ம் அலுவலக விலைக்கு **(+)3.50% அதிகம் ரூ.12359607.88/–** மதிப்பிற்கு இப்பணி வழங்கலாம்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை **திருவாளர் டி.ரங்கநாதன்** அவர்களுக்கு 2013–14ம் ஆண்டு அலுவலக விலைக்கு **(+)3.50% அதிகம் ரூ.12359607.88/–** மற்றும் 2013–2014 அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் வெளிசந்தை விலையுடன் **(–)11.97%** குறைவான மதிப்பிற்கு வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) (2)–ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.46/2015, நாள்.21.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> ''23.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.68/2015, நாள்.23.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.5.ந.க.எண்இ1/7842/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.03.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.146/2015 **பொருள் எண்.12**

**<u>மண்டலம்–5, வார்டு–60ல் ஆதம் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி இலவச மருத்துவமனை கட்டடிடத்தை இடிக்க அனுமதி.</u>**

| வ எண் | வார்டு எண்–60 | மண்டலம்–5 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–5, வார்டு–60ல் ஆதம் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி இலவச மருத்துவமனை கட்டிடம் . |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1940ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 2260 சதுர அடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 2260 சதுர அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.15,000/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உதேசிக்கப்பட்டுள்ளது ? | புதிய நகர பொது சுகாதார மையம். |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–5 |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்–5 வார்டு குழு தீர்மான எண்.16, நாள்.13.01.2015 |

எனவே, மண்டலம்–5, வார்டு–60, ஆதம் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி இலவச மருத்துவமனை கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமப்பிக்கப்படுகிறது.

17.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.6/15, நாள்.17.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.48/15 நாள்.21.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/02448/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.147/2015 **பொருள் எண்.13**

**மண்டலம்–9, வார்டு–116ல் உள்ள பள்ளி கட்டிடத்தின் முதல் தளம் இடிப்பதற்கு அனுமதி**

| வ. எண். | வார்டு எண்–116 | மண்டலம்–9 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–9, வார்டு–116ல் வெங்கட்ரங்கம் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஓடுகளால் வேயப்பட்ட பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள முதல் தளம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1922 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 1. தரைதளம் – 518 ச.மீ<br>2. முதல் தளம் – 518 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 518 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1,108.92 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தரை தளம் மட்டும் இரவு நேர காப்பகமாக மாற்றம் செய்வதற்கு |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | ஓடுகளால் வேயப்பட்ட முதல் தளம் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–9 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள் | 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.185/2015, நாள்.18.02.2015 |

எனவே, மண்டலம்–9, வார்டு–116ல் வெங்கட்ரங்கம் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ஓடுகளால் வேயப்பட்ட பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள முதல் தளத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“16.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கல்வி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.09/2015, நாள்.16.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.50/15, நாள்.21.04.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மஅ.12.ந.க.எண்இ1/3624/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.148/2015 **பொருள் எண்.14**

**மண்டலம் 12( ஆலந்தூர்), வார்டு 162 நோபல் முதல் தெருவில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் வார்டு–160 மார்கோஸ் தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடங்களை இடிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–12, வார்டு–162 நோபல் முதல் தெரு மற்றும் வார்டு–160 மார்கோஸ் தெருவில் உள்ள பொதுக் கழிப்பிட கட்டிடங்கள் இடியும் தருவாயில் உள்ளது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண்–162 | மண்டலம்–12 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–12, வார்டு–162 நோபல் முதல் தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2005–ம் ஆண்டு ஆலந்தூர் நகராட்சியால் கட்டப்பட்டது |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 110.39 $M^2$ |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 153.92 $M^2$ |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.28,380/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உதேசிக்கப்பட்டுள்ளது ? | சாலை விரிவாக்கத்திற்காக பயன்படுத்தப்பட உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9.<br>10. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?<br>வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டல அலுவலர்–12<br>மண்டலம்–12 வார்டு குழு தீர்மான எண்.29, நாள்.20.03.2015 |

| வ. எண் | வார்டு எண்–160 | மண்டலம்–12 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–12, வார்டு–160 மார்கோஸ் தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2001–ம் ஆண்டு ஆலந்தூர் நகராட்சியால் கட்டப்பட்டது |
| 3.<br>4. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ?<br>அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 24.63 $M^2$<br>72.30 $M^2$ |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.15,000/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | கட்டிடம் சேதமடைந்து இடியும் நிலையில் உள்ளது |

| | | |
|---|---|---|
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உதேசிக்கப்பட்டுள்ளது ? | துப்புரவு பணியாளர்கள் உடை மாற்றும் அறை மற்றும் இருப்பு அறை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | சாலை மட்டத்திலிருந்து 4 அடி தாழ்வாக இருப்பதால் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு உருவாகிறது. மேலும் கட்டிடம் சேதமடைந்து இடியும் நிலையில் உள்ளது. பொது மக்கள் பயன்பாடு அதிகமாக இல்லை. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–12 |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்–12 வார்டு குழு தீர்மான எண்.30, நாள்.20.03.2015 |

எனவே, மண்டலம்–12, வார்டு–162 நோபல் முதல் தெரு மற்றும் வார்டு–160 மார்கோஸ் தெருவில் உள்ள பொதுக் கழிப்பிட கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமப்பிக்கப்படுகிறது.

17.04.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.07/2015 நாள்.17.04.2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.62/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

<u>**பொ.து.ந.க.எண்.ஈ2/15630/2015**</u>

<u>**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்24.04.2015 நாளிட்ட குறிப்பு**</u>

தீர்மான எண்.149/2015 **பொருள் எண்.15**

<u>**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**</u>

டாக்டர். R.சுகன்யா, மண்டல மருத்துவ அலுவலர், ஆலந்தூர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக **26.5.1986** முதல் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியில் சேர்ந்து பின்னர் **23.11.2011** பிற்பகல் முதல் மண்டல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **17.04.1957** வயது முதிர்வு ஓய்வு நாள்.**30.04.2015 .**

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் **26.5.1986** முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது . மேலும் **26.5.1988** முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். R.சுகன்யா, மண்டல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **01.04.2015** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது **30.04.2015** வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ.**20/–** முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு–**2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே டாக்டர். R.சுகன்யா, மண்டல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்பயிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை **30.04.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/15631/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்24.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.150/2015 **பொருள் எண்.16**

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

டாக்டர். M.S.ஜெர்லின், மருத்துவ அலுவலர், இராயபுரம் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக **2.5.1990** முதல் பணியில் சேர்ந்து, சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **09.04.1957** வயது முதிர்வு ஓய்வு நாள்: **30.04.2015 .**

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் **2.5.1990** முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது . மேலும் **2.5.1992** முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். M.S.ஜெர்லின், மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று **01.04.2015** நாளிட்ட விழிப்புத்துறையின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது **30.04.2015** வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ **20/–** முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நேர்செய்யப்படாத முன்பணங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே டாக்டர். M.S.ஜெர்லின், மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை **30.04.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/15073/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.151/2015 **பொருள் எண்.17**

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

டாக்டர்.N. ராணி, மருத்துவ அலுவலர், அண்ணாநகர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக **28.11.1988** முதல் பணியில் சேர்ந்து, திருவண்ணாமலை நகராட்சியில் **28.11.1988** முதல் **12.07.1989** வரையிலும், பின்னர் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்யப்பட்டு, **29.07.1989** முதல் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **12.04.1957** வயது முதிர்வு ஓய்வு நாள்: **30.04.2015 .**

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் **28.11.1988** முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது . மேலும் **28.11.1990** முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். N.ராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **01.04.2015** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது **30.04.2015** வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ **20/–** முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பணம் தீர்வு செய்யப்படாமை ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே டாக்டர்.N. ராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்கள் மற்றும் அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை **30.04.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/11561/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.152/2015 **பொருள் எண்.18**

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

டாக்டர். M. பங்கஜம், மருத்துவ அலுவலர் அம்பத்தூர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக **02.03.1987** முதல் பணியில் சேர்ந்து வேலூர் மாநகராட்சியில் **02.03.1987** முதல் **02.11.1988**வரையிலும் ஆவடி பெருநகராட்சியில் **02.11.1988** முதல் **28.05.1997** ஆலந்தூர் நகராட்சியில் **28.05.1997** முதல் **14.07.1999** வரையிலும், அம்பத்தூர் நகராட்சியில் **15.07.1999** முதல் பணியில் சேர்ந்து பின்னர் அம்பத்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சி எல்லையுடன் இணைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை சென்னை மாநகராட்சி பணிக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டு, சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி **31.03.1957** வயது முதிர்வு ஓய்வு நாள் **31.03.2015 .**

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியை ஆவடி நகராட்சியில் செயல்முறை ஆணை எண் **3685/91** நாள் **31.03.92**ன் படி அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.M.பங்கஜம், மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **06.03.2015** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறையில் கடந்த **5** ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரபடவில்லை எனவும், தெரிவித்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளரால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் , கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ **20** முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது. தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனினும் மார்ச் **2015** மாத மன்றக்கூட்டம் முடிவடைந்து விட்ட நிலையில் தனியர் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால மன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும், தனியரை **31.03.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர்.M.பங்கஜம், மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களை **31.03.2015** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/008126/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.153/2015 **பொருள் எண்.19**

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.எஸ்.ரவிச்சந்திரன், செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் அவர்கள், பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வு பெற கோரியுள்ளதினை தொடர்ந்து தனியர் வகித்துவரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால், 01.02.2015 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு 03.02.2015 முற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

இவ்வாறு தனியர் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு 03.02.2015 முற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறுவதற்கு மத்திய வட்டார அலுவலகத்திலிருந்து கோப்பு பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக கீழ்க்காண் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

24.02.2015 நாளிட்ட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் குறிப்பில் திரு.எஸ்.ரவிச்சந்திரன், செயற்பொறியாளர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் கட்டிடத் துறையில் உதவி பொறியாளராக 06.07.1993 அன்று பணியில் சேர்ந்துள்ளார். 31.07.2014 அன்று செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று மத்திய வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். மேலும், தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ள கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/ மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவை இருப்பின் அதன் விவரங்களை கோரி சான்றுகள் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | பணிபுரிந்த மண்டலம் / துறைகள் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் | கட்டிடத்துறை | 06.07.1993 | 22.05.2000 |
| 2. | உதவி பொறியாளர் | பேருந்து சாலைத்துறை | 22.05.2000 | 03.09.2001 |
| 3. | உதவி பொறியாளர் | பணித்துறை | 03.09.2001 | 17.05.2007 |
| 4. | உதவி செயற்பொறியாளர் | மண்டலம் 7 (புதிய மண்டலம் 9) | 18.05.2007 | 11.12.2012 |
| 5. | உதவி செயற்பொறியாளர் | மழைநீர் வடிகால் துளை | 12.12.2012 | 26.03.2014 |
| 6. | உதவி செயற்பொறியாளர் | வடக்கு வட்டார அலுவலகம் | 26.03.2014 | 30.07.2014 |
| 7. | செயற்பொறியாளர் | வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) | 31.07.2014 | 02.02.2015 |

மேற்குறிப்பிட்ட மண்டலம்/துறைகளிலிருந்து, தனியர் மீது தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரமும், தனியர் மீது தணிக்கைத்தடை நேர்செய்யப்படாத முன்பணம் நிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் என்ற விவரமும் பெறப்பட்டுள்ளது. தனியருக்கு சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் முன்பண நிலுவைகள் ஏதும் இல்லை என தெரிவித்து சம்மந்தப்பட்ட சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திலிருந்து சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

02.12.2014 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் அறிக்கையில் திரு.எஸ்.ரவிச்சந்திரன் செயற்பொறியாளர் அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. ஆனால் தனியர் மீது ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறையில் அரசாணை எண்.(ப) 3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ஆநு4) நாள்:02.01.2008 ன்படி குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளதாக அறியப்படுகிறது எனவும், இதுகுறித்து இயக்குநர் ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் பொதுத்துறை, சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளுக்கு கடிதம் அனுப்பி குற்றச்சாட்டின் தற்போதைய நிலை குறித்து அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**22.01.2015** நாளிட்ட இயக்குநர், ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அவர்களின் கடிதத்தில் திரு.எஸ்.ரவிச்சந்திரன், செயற்பொறியாளர் அவர்கள் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசால் அறிவுறுத்தப்பட்டதாகவும், அவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆணையின்படி, சென்னை மாநகராட்சி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் **12.09.2014** நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேலே கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரிந்த திரு.எஸ்.ரவிச்சந்திரன், செயற்பொறியாளர் அவர்கள் மீது தணிக்கைத் தடைகள், நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் அவரது செயல்பாடுகளினால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஆகியவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அத்தொகை முழுவதும் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மற்றும் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் குறிப்பிட்டுள்ள துறையைச் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமும் இன்றி நிபந்தனைக்குட்பட்டும், தனியரை **03.02.2015** முற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/2315 / 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.154/2015 **பொருள் எண்.20**

**தலைமை பொறியாளர் பதவிக்கு தகுதியுடைய நபர்கள் இல்லாததால் இன்மை பட்டியல் வெளியிட அனுமதி**

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான 15.01.2015ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | தலைமை பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 15.01.2015 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8900 | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | அ) கண்காணிப்பு பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,<br>ஆ) கண்காணிப்பு பொறியாளர் பதவியில் 2 ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>இ) தலைமை பொறியாளர் பொதுப்பணித்துறை அல்லது நெடுஞ்சாலைத்துறையிலிருந்து அயற்பணியில் நியமனம் | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 02 |
| | | அரசாணை எண்.95, நநி(ம)குவ, துறை நாள்:14.10.2012ன் படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 03 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 03 |
| | | 2. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | 3. பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 01 |
| | | 4. மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் | – | – |
| | | 5. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | – |
| | | **நிகர காலிப்பணியிடம்** | **–** | **01** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?<br>இல்லையெனில் காரணம். | | | ஆம் |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிபுரியும் கண்காணிப்பு பொறியாளர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | கண்காணிப்பு பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | இரண்டாண்டு பணி முடிக்கும் காலம் | ஓய்வு பெறும் நாள் | மைய நாளில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் தற்போது வரை பணிபுரிந்துள்ள காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | கே. ஸ்ரீதரன் | 25.01.2014 | 25.01.2016 | 28.02.2015 | 11 மாதங்கள் | வயது முதிர்வு ஓய்வு |
| 2 | எஸ்.இளஞ்செழியன் | 31.12.2014 | 31.12.2016 | 31.12.2014 | – | வயது முதிர்வு ஓய்வு |
| 3 | ஆர்.வரதராஜன், | 05.08.2014 | 30.4.2016 | 30.4.2015 | 5 மாதங்கள் | ஊட்டப் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வட்டார அலுவலகம் (தெற்கு) | | | | | பதவியான கண்காணிப்பு பொறியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிநிறைவு செய்யவில்லை. |
| 4 | பிரிசில்லா திலகராணி, வட்டார அலுவலகம் (வடக்கு) | 04.08.2014 | 30.4.2016 | 30.4.2016 | 5 மாதங்கள் | ஊட்டப் பதவியான கண்காணிப்பு பொறியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிநிறைவு செய்யவில்லை. |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க கீழ்நிலை பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் 2 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை தளர்வு செய்து 2 ஆண்டுகள் பணித்தகுதியை நீக்கம் செய்திட வேண்டி சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள மன்றத் தீர்மானம் பெற்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அரசின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி இரண்டாண்டு காலம் பணி தகுதியினை கண்காணிப்பு பொறியாளர் பதவியில் தற்போது பணிபுரியும் அலுவலர்கள் எவரும் பெற்றிருக்கவில்லை என சமர்ப்பிக்கப்படுகிறது.

தலைமை பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான கண்காணிப்பு பொறியாளர் பதவியில் இரண்டாண்டு பணிநிறைவு செய்த நபர்கள் எவரும் இல்லாத காரணத்தால், 2015–2016ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவிக்கு **இன்மை பட்டியல் (Nil Panel)** வெளியிடுவது குறித்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2 /26376/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.155/2015 **பொருள் எண்.21**

**01.07.2014 மைய நாளிட்ட மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டது இத்தெரிவுபட்டியலில் இடம்பெற்றுள்ள சில பொறியாளர்களுக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மண்டல அலுவலர் பதவிக்கு திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட அனுமதி**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.540/2014, நாள்.30.9.2014ல், 2014–2015ஆம் ஆண்டிற்கு மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிப்பது தொடர்பாக கீழ்கண்ட இனங்களுக்கு அரசின் ஆணை பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து, மண்டல அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு 16.10.2014 நாளிட்ட கடிதம் மூலமாக கீழ்கண்ட இனங்களின் மீது அரசின் ஒப்புதல் வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

1. மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான 7 காலிப்பணியிடங்களுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டியிருந்தாலும், சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்துவரும் மாவட்ட வருவாய் அலுவலர்கள்/நகராட்சி ஆணையர்கள் அவ்வப்போது பணியிட மாற்றத்தாலும் பதவி உயர்வாலும் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து மாற்றுபணியாளரின்றி விடுவிக்கப்படும் நேர்வில் மண்டல அலுவலர் பதவியில் திடீரென காலிப்பணியிடங்கள் ஏற்படுவதால் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவியில் வாலாயமாக நடைபெறும் பணிகள் தொய்வின்றி நடைபெற, சென்னை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி, மண்டல அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 15 பணியிடங்களில் தற்போது மண்டல அலுவலராக பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ள அலுவலர்களில் ஊட்டப்பதவியில் ஒராண்டு பணி நிறைவு செய்தவர்கள் மற்றும் ஒராண்டு பணிநிறைவு செய்யாதவர்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட 15 நபர்களைக்கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு விதிமுறைகளிலிருந்து விலக்களித்து அரசின் ஒப்புதல் பெறவும்,
2. மண்டல அலுவலர் பதவிக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பணிவிதியின்படி ஊட்டப்பதவியில் 3 ஆண்டு பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதிலிருந்து 3 ஆண்டுகளுக்கு குறைவாக ஆனால் 1 ஆண்டிற்கு மேல் பணிபுரிந்துள்ள கோட்ட மின் பொறியாளர்/செயற்பொறியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டும், 1 ஆண்டிற்கும் குறைவாக பணிபுரிந்துள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் அவர்களின் பெயரைக்கொண்டும் மண்டல அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள இத்தெரிவுப்பட்டியலில் கீழ்கண்ட நபர்களின் பெயர்களை சேர்ப்பதற்கும்,

| வ. எண். | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்/கோட்ட மின் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர்.இ.சரஸ்வதி<br>கூடுதல் சுகாதார அலுவலர், | 06.11.2013 |
| 02 | எம்.பரந்தாமன், கோட்ட மின் பொறியாளர், | 03.08.2012 |
| 03 | எஸ்.காளிமுத்து, செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 04 | ஆர்.ரங்கநாதன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 05 | கே.சின்னசாமி, செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 06 | எல்.நந்தகுமார், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 07 | எம்.முருகன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 08 | எஸ்.சக்திமணிகண்டன்,<br>செயற்பொறியாளர் | 26.12.2013 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013) |

| | | |
|---|---|---|
| 09 | டி.கே.மோகன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 10 | எஸ்.பி.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 11 | எஸ்.நடராஜன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 12 | ஆர்.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், | 25.07.2014 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.2013) |
| 13 | ஜி.விரப்பன், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 14 | கே.விஜயகுமார், செயற்பொறியாளர், | 11.01.2013 |
| 15 | பி.கே.விஜயா, செயற்பொறியாளர், | 11.01.2013 |

3. மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு தெரிவுப்பட்டியலில் கண்டுள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்கள்/கோட்ட மின் பொறியாளர் ஆகியோர்கள் மந்தன அறிக்கையை சமர்ப்பிக்காததால் இவர்களின் மந்தன அறிக்கைகள் பெறப்பட்டபின் பதவி உயர்வு வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன், அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள /மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள மற்றும் அயற்பணியில் பணிபுரியும் மண்டல அலுவலர்கள் பணியிடம் மாறுதலால் ஏற்படும் காலிப்பணியிடங்களில் தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600 என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறவும்,
4. மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.4, 6 மற்றும் 9ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.ரங்கநாதன், செயற்பொறியாளர், திரு.எல்.நந்தகுமார், செயற்பொறியாளர் மற்றும் திரு.டி.கே.மோகன், செயற்பொறியாளர் ஆகியோர்கள் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற விவரம் இணையதளம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தேர்வில் தனியர் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு அவர்களது பெயர்களை தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கும் நிலை ஏற்படின், இதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியர்கள் கடிதம் அளித்துள்ளதாலும், இக்கடிதத்தில் துறை தலைவர் பரிந்துரை செய்துள்ளதாலும், இத்தேர்வில் இவர்கள் தேர்ச்சி பெற்ற விவரம் அரசு செய்தி வெளியீட்டில் (Govt.Gazette ) அறிவிக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு இவர்களுக்கு ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.7600 என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறவும்,
5. மன்ற தீர்மானம் எண்.706/2013, நாள்:31.10.2013ல் மண்டல அலுவலர் பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகளை மாற்றம் செய்ய உத்தேசித்து பணிவிதிகளுக்கு திருத்தம் கோரி அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசின் ஒப்புதலுக்குட்பட்டு தயாரிக்கப்பட்ட இத்தெரிவுப்பட்டியலுக்கு, அரசின் ஆணை பெறவும், அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

**METHOD OF APPOINTMENT:-**

1. By appointment of Junior I.A.S., Officers or District Revenue Officers on deputation; or
2. By appointment of Municipal Commissioners of Special Grade and above from Tamil Nadu Municipal Commissioner Service on deputation; or
3. By appointment of officers from any other State Service on deputation; or
4. By transfer from the holders of the post of Additional Revenue Officers and by promotion from the holders of the post of Chief accounts Officer and personal Assistant to Commissioner; or
5. By promotion from the holders of the post of Additional Health Officer; or

6. **By promotion from the holders of the post of Executive Engineer and Divisional Electrical Engineer and the ratio between the officers in items Nos (iv), (v) and (vi) shall be**
   **Addl. R.O. - 1 :**
   **C.A.O. - 1 :**
   **Addl. C.H.O.- 1 :**
   **D.E.E. - 2 :**
   **E.E. - 10 :**

**In case of non- availability of officers in any one of the above said categories, the posts will be filled up from available officers from other category. In case 2 or more people compete for the vacancy, the senior most officer (based on the date of joining in Corporation service) will be included in the panel.**

**Explanation**: Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal.

**<u>QUALIFICATION:-</u>**

1. Graduate of any recognized University
2. **Must have worked atleast for period of 1 year in the category from which they are selected by promotion.**
3. Must have passed Account Test for Subordinate Officers part-I or Account Test for Executive Officers.

இதன் தொடர்ச்சியாக 13.04.2015 நாளிட்ட அரசு கடிதத்தில் 2014–15ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் தேர்ந்த பெயர்ப்பட்டியலில் இடம்பெற்றிருந்த கீழ்கண்ட 6 செயற்பொறியாளர்கள் கண்காணிப்பு பொறியாளர்களாக விதி தளர்வு செய்து , அரசாணை(ப) எண் 178 ந.நி.ம.கு.வ(மாந3) துறை, நாள்.16.3.2015ன் படி பதவி உயர்வு பெற்றுள்ளனர் எனவும், மேற்காணும் அரசாணையில் இடம்பெற்றுள்ள நபர்களை தவிர்த்து தகுதியுள்ள நபர்களை கொண்ட 2014–15ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கான திருத்திய பெயர்பட்டியலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பெயர் மற்றும் பதவி** | **பணிபுரியும் துறை / மண்டலம்** |
|---|---|---|
| 01 | திரு.எஸ்.காளிமுத்து,<br>செயற்பொறியாளர், | மண்டலம் – 8 |
| 02 | திரு.ஆர்.ரங்கநாதன்,<br>செயற்பொறியாளர், | மண்டலம் – 10 |
| 03 | திரு.கே.சின்னசாமி,<br>செயற்பொறியாளர், | மண்டலம் – 11 |
| 04 | திரு.எல்.நந்தகுமார்,<br>செயற்பொறியாளர், | தரக்கட்டுப்பாடு (தெற்கு),<br>தலைமையிடம் |
| 05 | திரு.எம்.முருகன்,<br>செயற்பொறியாளர், | நகரமைப்பு அமலாக்கம்,<br>மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம் |
| 06 | திரு.எஸ்.சக்திமணிகண்டன்,<br>செயற்பொறியாளர், | மண்டலம் – 4 |

மேற்படி அரசாணைப்படி, கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு பெற்ற செயற்பொறியாளர்களின் பெயர்கள் 2014–15ம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்குரிய தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3 முதல் 8 வரையில் இடம்பெற்றுள்ளது. இவர்களில் திருவாளர்கள் 1) எஸ்.காளிமுத்து, 2) ஆர்.ரங்கநாதன், 3) எஸ்.சின்னசாமி, 4)எல்.நந்தகுமார், ஆகியோர் ஏற்கனவே ஏற்பட்டுள்ள 4 காலிப்பணியிடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களாக 16.03.2015 நாளிட்ட

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின்படி பணியமர்த்தப்பட்டுள்ளதால் இவர்களது பெயர்களை மண்டல அலுவலர் தெரிவுப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், திரு.எம்.முருகன், என்பவருக்கு இப்பட்டியல் ஆண்டில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படும் என்பதால் மண்டல அலுவலர் தெரிவுப்பட்டியலில் இருந்து இவரது பெயரையும் நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. திரு.எஸ்.சக்திமணிகண்டன், அவர்களின் பெயர் கண்காணிப்பு பொறியாளர் தெரிவுப்பட்டியலில் இடம்பெற்று இருப்பினும் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படாத நிலை ஏற்படின் இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி வழங்க இயலாது என்பதால் மண்டல அலுவலர் தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்கலாம்.

மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் 7 காலிப்பணியிடங்களுக்கு தயாரிக்கப்படவேண்டும். எனினும் சென்னை மாநகராட்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்கள்/நகராட்சி ஆணையர்கள் அயற்பணி அடிப்படையில் 8 நபர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். இவர்கள் அவ்வப்போது பணியிட மாற்றத்தாலும் பதவி உயர்வாலும் சென்னை மாநகராட்சி பணியிலிலிருந்து மாற்றுபணியாளரின்றி விடுவிக்கப்படுவதால் மண்டல அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏற்படுகிறது இதனால் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவியில் வாலாயமாக தினந்தோறும் நடைபெறும் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே நிர்வாக நலன் கருதி சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கு 12 பணியிடங்களுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றம் வசம் உள்ளது.

மண்டல அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்காக தகுதியுள்ள நபர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு துறை தலைவர்கள்/மண்டல அலுவலர்களிடம் கோரப்பட்டு, வரப்பெற்ற விவரங்களின்படி சென்னை மாநகராட்சி பொதுப்பணி பிரிவின் கீழ்வரும் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் உள்ள திரு.ஜே.கே.பட்டாபிராமன் அவர்கள் தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். இதன்படி இவருக்கு 3 வருட காலங்களுக்கு மண்டல அலுவலர் பதவி வழங்க இயலாது என்பதால் இக்காலிப்பணியிடத்தை நிரப்ப தகுதியான நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பொதுப்பணி பிரிவின் கீழ்வரும் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் உள்ளவர்கள் எவரும் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கான தகுதிகள் பெற்றிருக்கவில்லை என தெரிவித்து மத்திய கணக்கு குழுமத்தில் "**இன்மை அறிக்கை**" அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இக்காலிப்பணியிடத்தை நிரப்ப தகுதியான நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சி சுகாதார பணிப்பிரிவின் கீழ்வரும் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் உள்ள டாக்டர்.இ.சரஸ்வதி, அவர்கள் மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளார் ஆனால் தனியர் ஊட்டப்பதவியான கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் 06.11.2013 அன்று பணியில் சேர்ந்து 1 வருடகாலத்திற்கும் குறைவாக அதாவது 01.07.2014 தேதி வரை 7 மாதங்கள் மட்டுமே பணிபுரிந்துள்ளார் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு ஊட்டப்பதவியில் 1 ஆண்டு பணிக்காலம் நிர்ணயிக்க அரசின் ஆணை கோர உள்ளதாலும் இவரது பெயரையும் இத்தெரிவுப்பட்டியல் சேர்த்து அரசின் பரிசீலனைக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறைக்கு ஒதுக்கப்பட்ட 2 பணியிடத்திற்கு ஒருவர் மட்டும் விருப்பம் தெரிவித்துள்ளார் மற்றவர் மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை தெரிவித்துள்ளார். எனவே இக்காலிப்பணியிடத்தை நிரப்ப ஒரு நபர் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**<u>மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணியிடம்</u>**

| வ. எண். | பதவியின் பெயர் | ஒதுக்கப்பட்ட பணியிடம் மற்றும் பதவி உயர்வால் நிரபப்ட வேண்டிய பணியிடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | கூடுதல் வருவாய் அலுவலர் | 1 | விருப்பமின்மை |
| 2 | தலைமை கணக்கு அலுவலர் | 1 | நபர் இல்லை |
| 3 | கூடுதல் சுகாதார அலுவலர் | 1 | 1 நபர் விருப்பம் தெரிவித்துள்ளார் |
| 4 | கோட்ட மின் பொறியாளர் | 2 | 1 நபர் விருப்பம் தெரிவித்துள்ளார் |
| 5 | செயற்பொறியாளர் | 10 | 10 நபர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் |
| **மொத்தம்** | | **15** | **12** |

சென்னை மாநகராட்சியில் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், கோட்ட மின் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | மூன்று ஆண்டு பணி முடிக்கும் காலம் | மைய நாளில் செயற் பொறியாளர் பதவியில் தற்போது வரை பணி புரிந்துள்ள காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | கூடுதல் வருவாய் அலுவலர் பணியிடம் | – | – | – | திரு.ஜே.கே.பட்டாபிராமன் அவர்கள் தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். |
| 02 | தலைமை கணக்கு அலுவலர் பணியிடம் | – | – | – | தகுதியான நபர் எவரும் இல்லை. |
| 03 | டாக்டர்.இ.சரஸ்வதி மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) | 06.11.2013 | 06.11.2016 | 7 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 04 | எம்.பரந்தாமன், கோட்ட மின் பொறியாளர்,மின்துறை. | 03.08.2012 | 03.08.2015 | 1 வருடம் 10 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 05 | ஆர்.விஜயலக்ஷ்மி, கோட்ட மின் பொறியாளர், மின்துறை. | 03.08.2012 | 03.08.2015 | 1 வருடம் 10 மாதங்கள் | தனியர் தனக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு விருப்பமில்லை என கடிதம் அளித்துள்ளார். |
| 06 | ப்பி.ட்டி.ராமன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், வடக்கு வட்டார துணை ஆணையர் அலுவலகம் | 09.04.2012 | 09.04.2015 | 2 வருடம் 3 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | எஸ்.காளிமுத்து, செயற்பொறியாளர், மண்டலம்–08. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 08 | ஆர்.ரங்கநாதன், செயற்பொறயாளர், மண்டலம்–10. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 09 | கே.சின்னசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–11. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 10 | எல்.நந்தகுமார், செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு (தெற்கு),தலைமையிடம், | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 11 | எம்.முருகன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம், | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| 12 | ஆர்.துரைசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–05. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 13 | எஸ்.சக்திமணிகண்டன், செயற்பொறியாளர், மண்டலம்–04. | **26.12.2013** (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்: **11.01.2013)** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>எனினும் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படாத நிலை ஏற்படின் இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி வழங்க இயலாது என்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 14 | டி.கே.மோகன், செயற்பொறியாளர், மண்டலம்–08. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 15 | எஸ்.பி.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், மண்டலம்–14. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 16 | எஸ்.நடராஜன், செயற்பொறியாளர், மண்டலம்–03. | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 17 | ஆர்.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், மண்டலம்–05. | **25.07.2014** (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் **11.01.2013)** | **11.01.2016** | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 18 | பி.ராஜேந்திரன், | **11.01.2013** | **11.01.2016** | 1 வருடம் 5 | இவர் மண்டல அலுவலர் பதவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்பொறியாளர், மண்டலம்–06. | | | மாதங்கள் | உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 19 | ஜி.வீரப்பன், செயற்பொறியாளர், கட்டடம்,தலைமையிடம். | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 20 | கே.சம்பத்குமார், செயற்பொறியாளர், மண்டலம்–13. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 21 | கே.விஜயகுமார், செயற்பொறியாளர், மண்டலம்–11. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 22 | எஸ்.சங்கர், செயற்பொறியாளர், மண்டலம்–01. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 23 | பி.கே.விஜயா, செயற்பொறியாளர், நகரமைப்பு, வட்டார துணை ஆணையர் அலுவலகம் (வடக்கு) | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | தனியர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு நிரந்தரமாக விருப்பமில்லை என கடிதம் அளித்துள்ளார். |
| 24 | கே.பி.விஜயகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை,தலைமையிடம். | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 25 | பி.வி.பாபு, செயற்பொறியாளர், சிறப்பு திட்டம், மத்திய தார்கலவை நிலையம், தலைமையிடம். | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். |
| 26 | எஸ்.தேவேந்திரன், செயற்பொறியாளர் மண்டலம்–02. | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. |
| 27 | ஜி.தேவதாஸ், செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம். | 11.01.2013 | 11.01.2016 | 1 வருடம் 5 மாதங்கள் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி தகுதிகள் பெற்றுள்ளார். தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1920, துணை விதி 10( a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |

மேற்கண்ட முதுநிலை பட்டியலில் கண்டுள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், கோட்ட மின் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களில் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற்று மண்டல அலுவலர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளவர்களில் மூன்றாண்டு காலம் பணி தகுதியினை எவரும் பெற்றிருக்கவில்லை.

மண்டல அலுவலர் பதவிக்கு மேலே தெரிவித்தவாறு பணிவிதிகளை மாற்றம் செய்ய உத்தேசித்து மன்ற தீர்மானம் எண்.706/2013, நாள்:31.10.2013ல் தீர்மானிக்கப்பட்டு அரசாணை கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

எனினும் மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் 3 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை இந்த ஒருமுறை மட்டும் தளர்வு செய்து 1 ஆண்டு பணிநிறைவு செய்த செயற்பொறியாளர்களைக் கொண்டு மண்டல அலுவலர் பணியிடத்தை 2013–2014ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் மூலம் நிரப்புவதற்கு அரசாணை(ப) எண்.14, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:20.01.2014ல் ஆணையிடப்பட்டிருந்ததின் அடிப்படையில் சென்ற ஆண்டு பணிக்கால தகுதியை தளர்வு செய்து தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மண்டல அலுவலர் பதவி முக்கியத்துவம் வாய்ந்த பதவி என்பதாலும், இப்பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணிகள் 10–லிருந்து 15– ஆக கூடுதலாக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவியில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நிர்வாக நலன் கருதி சென்ற 2013–14ஆம் ஆண்டை போல 2014–15ஆம் ஆண்டிலும் பணிக்காலத் தகுதியை தளர்வு செய்து தெரிவுப்பட்டியல் தயாரித்து அரசின் ஆணை கோரலாம். மேற்கண்ட விவரங்களின்படி 1 ஆண்டு பணிநிறைவு செய்த செயற் பொறியாளர்கள் மற்றும் கோட்ட மின் பொறியாளர் மற்றும் 1 ஆண்டு பணி நிறைவு செய்யாத மாநகர கூடுதல் சுகாதார அலுவலரை கொண்டு 2014–2015ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் பட்சத்தில் செயற்பொறியாளர் மற்றும் கோட்ட மின் பொறியாளர் பதவியில் மூப்பு நிலையின் படி மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எ ண். | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | செயற்பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாமா | தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|
| 01 | கூடுதல் வருவாய் அலுவலர் பணியிடம் | – | – | **நபர் இல்லை** |
| 02 | தலைமை கணக்கு அலுவலர் பணியிடம் | – | – | **நபர் இல்லை** |
| 03 | டாக்டர்.இ.சரஸ்வதி கூடுதல் சுகாதார அலுவலர், வட்டார துணை ஆணையர் அலுவலகம்(மத்தியம்). | 06.11.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் 01.07.2014 தேதியில் 7 மாதங்கள் மட்டுமே பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து **அரசின் தளர்வாணைக்குட்பட்டு இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.** |
| 04 | எம்.பரந்தாமன், கோட்ட மின் பொறியாளர், மின்துறை. | 03.08.2012 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 10 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 05 | ஆர்.விஜயலக்ஷ்மி, கோட்ட மின் பொறியாளர், மின்துறை. | 03.08.2012 | இல்லை | தனியர் தனக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 06 | ப்பி.ட்டி.ராமன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், வடக்கு வட்டார துணை | 09.04.2012 | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணையர் அலுவலகம் | | | இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 07 | எம்.முருகன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்கம், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம், | **11.01.2013** | இல்லை | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனியருக்கு இப்பட்டியலாண்டில் ஏற்படும் காலிப்பணியிடத்தில் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படும் என்பதால் இத்தெரிவுபட்டியலில் இவரது பெயரை சேர்ப்பதை தவிர்க்கலாம். |
| 08 | ஆர்.துரைசாமி, செயற்பொறியாளர், மண்டலம்–05. | **11.01.2013** | இல்லை | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 09 | எஸ்.சக்திமணிகண்டன், செயற்பொறியாளர், மண்டலம்–04. | **26.12.2013 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013)** | ஆம் | இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படாத நிலை ஏற்படின் இவருக்கு கண்காணிப்பு பொறியாளர் பதவி வழங்க இயலாது என்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 10 | டி.கே.மோகன், செயற்பொறியாளர், மண்டலம்–08. | **11.01.213** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் **01.07.2014** தேதியில் **1** வருடம், **05** மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 11 | எஸ்.பி.பாலசுப்பரமணியன், செயற்பொறியாளர், மண்டலம்–14. | **11.01.2013** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் **01.07.2014** தேதியில் **1** வருடம், **05** மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 12 | எஸ்.நடராஜன், செயற்பொறியாளர், மண்டலம்–03. | **11.01.2013** | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 13 | ஆர்.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–05. | 25.07.2014<br>(கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.213) | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 14 | பி.ராஜேந்திரன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–06. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 15 | ஜி.வீரப்பன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம்,<br>தலைமையிடம். | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 16 | கே.சம்பத்குமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–13. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 17 | கே.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–11. | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 18 | எஸ்.சங்கர்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–01. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | என்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 19 | பி.கே.விஜயா, செயற்பொறியாளர், நகரமைப்பு, வட்டார துணை ஆணையர் அலுவலகம் (வடக்கு) | 11.01.2013 | இல்லை | தனியர் தனக்கு தற்காலிகமாக மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு நிரந்தரமாக விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளதால் **தனியாரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 20 | கே.பி.விஜயகுமார், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, தலைமையிடம். | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 21 | பி.வி.பாபு, செயற்பொறியாளர், சிறப்பு திட்டம், மத்திய தார்கலவை நிலையம், தலைமையிடம். | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை சேர்க்கலாம்.** |
| 22 | எஸ்.தேவேந்திரன், செயற்பொறியாளர் மண்டலம்–02. | 11.01.2013 | இல்லை | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லையென்பதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 23 | ஜி.தேவதாஸ், செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம், மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம். | 11.01.2013 | ஆம் | இவர் மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1920, துணை விதி 10(a)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. ஒழுங்கு நடவடிக்கை 10 (a) என்பது சிறுகுற்றச்சாட்டு என்பதால் இவ்வொழுங்கு நடவடிக்கையால் பதவி உயர்வுக்கு தடை ஏதும் கிடையாது. இவர் செயற்பொறியாளர் பதவியில் 01.07.2014 தேதியில் 1 வருடம், 05 மாதங்கள், பணிபுரிந்துள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் **தனியாரின் பெயரை சேர்க்கலாம்.** |

எனவே,

1. ஏற்கனவே மண்டல அலுவலர் பதவிக்கு 15 நபர்களின் பெயர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட 2014–15 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவை திரும்ப பெற்றுக்கொள்வதற்கும்,
2. மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான 7 காலிப்பணியிடங்களுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டியிருந்தாலும், சென்னை மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்துவரும் மாவட்ட வருவாய் அலுவலர்கள்/நகராட்சி ஆணையர்கள் அவ்வப்போது பணியிட மாற்றத்தாலும் பதவி உயர்வாலும் சென்னை மாநகராட்சி பணியிலிலிருந்து மாற்றுபணியாளரின்றி விடுவிக்கப்படும் நேர்வில் மண்டல அலுவலர் பதவியில் திடீரென மண்டல அலுவலர் பதவியில் காலிப்பணியிடங்கள் ஏற்படுகிறதால் சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவியில் வாளயமாக நடைபெறும் பணிகள் தொய்வின்றி நடைப்பெற சென்னை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி மண்டல அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 15 பணியிடங்களில் தற்போது மண்டல அலுவலராக பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ள அலுவலர்களில் ஊட்டப்பதவியில் ஒராண்டு பணி நிறைவு செய்தவர்கள் மற்றும் ஒராண்டு பணிநிறைவு செய்யாதவரையும் கொண்டு தயாரிக்கப்பட்ட 12 நபர்களைக்கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு விதிமுறைகளிலிருந்து விலக்களித்து அரசின் ஒப்புதல் வேண்டியும்,
3. மண்டல அலுவலர் பதவிக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்ட பணிவிதியின்படி ஊட்டப்பதவியில் 3 ஆண்டு பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதிலிருந்து 3 ஆண்டுகளுக்கு குறைவாக ஆனால் 1 ஆண்டிற்கு மேல் பணிபுரிந்துள்ள கோட்ட மின் பொறியாளர்/செயற்பொறியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டும், 1 ஆண்டிற்கும் குறைவாக பணிபுரிந்துள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் அவர்களின் பெயரைக்கொண்டும் மண்டல அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள இத்தெரிவுப்பட்டியலில் கீழ்கண்ட நபர்களின் பெயர்களை சேர்ப்பதற்கும்,

| வ. எண். | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்/ கோட்ட மின் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர்.இ.சரஸ்வதி<br>மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்,<br>வட்டார துணை ஆணையர்<br>அலுவலகம்(மத்தியம்). | 06.11.2013 |
| 02 | எம்.பரந்தாமன்,<br>கோட்ட மின் பொறியாளர்,<br>மின்துறை. | 03.08.2012 |
| 03 | எஸ்.சக்திமணிகண்டன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–04. | 26.12.2013<br>(கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள்:11.01.2013) |
| 04 | டி.கே.மோகன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–08. | 11.01.2013 |
| 05 | எஸ்.பி.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–14. | 11.01.2013 |
| 06 | எஸ்.நடராஜன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–03. | 11.01.2013 |

| | | |
|---|---|---|
| 07 | ஆர்.பாலசுப்பரமணியன்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–05. | 25.07.2014 (கருத்தியலான பதவி உயர்வு பெற்ற நாள் 11.01.213) |
| 08 | ஜி.வீரப்பன்,<br>செயற்பொறியாளர்,<br>கட்டடம்,<br>தலைமையிடம். | 11.01.2013 |
| 09 | கே.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர்,<br>மண்டலம்–11. | 11.01.2013 |
| 10 | கே.பி.விஜயகுமார்,<br>செயற்பொறியாளர்,<br>பேருந்து சாலைகள் துறை,<br>தலைமையிடம். | 11.01.2013 |
| 11 | பி.வி.பாபு,<br>செயற்பொறியாளர்,<br>சிறப்பு திட்டம், மத்திய தார்கலவை நிலையம்,<br>தலைமையிடம். | 11.01.2013 |
| 12 | ஜி.தேவதாஸ்,<br>செயற்பொறியாளர்,<br>திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம்,<br>மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம். | 11.01.2013 |

4.மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு தெரிவுப்பட்டியலில் கண்டுள்ள மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்/செயற்பொறியாளர்கள்/கோட்ட மின் பொறியாளர் ஆகியோர்களில் வரிசை எண்.10 முதல் 12 வரை கண்டுள்ள செயற்பொறியாளர்கள் மந்தன அறிக்கையை சமர்ப்பிக்காததால் இவர்களின் மந்தன அறிக்கைகள் பெறப்பட்டபின் பதவி உயர்வு வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன், அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள /மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள மற்றும் அயற்பணியில் பணிபுரியும் மண்டல அலுவலர்கள் பணியிடம் மாறுதலால் ஏற்படும் காலிப்பணியிடங்களில் தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600 என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறுவதற்கும்,

5. மன்ற தீர்மானம் எண்.706/2013, நாள்: 31.10.2013ல் மண்டல அலுவலர் பதவிக்கு மேலே தெரிவித்தவாறு பணிவிதிகளை மாற்றம் செய்ய உத்தேசித்து பணிவிதிகளுக்கு திருத்தம் கோரி அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசின் ஒப்புதலுக்குட்பட்டு தயாரிக்கப்பட்ட இத்தெரிவுப்பட்டியலுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/8054/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.03.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.156/2015 **பொருள் எண்.22**

**<u>வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை</u>**

04.03.2013 நாளிட்ட அரசாணையில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான வருவாய் அலுவலர் பதவி உயர்வு தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும், தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திரு.எம்.கே.திவாகர், கூடுதல் வருவாய் அலுவலருக்கு பதவி மாற்றம் மூலம் வருவாய் அலுவலராக பணி நியமனம் செய்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, 05.07.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக **ரூ.15600–39100+7600/– தர ஊதியம்** என்ற ஊதிய விகிதத்தில் திரு.எம்.கே.திவாகர், கூடுதல் வருவாய் அலுவலர் அவர்களை பதவி மாற்றம் மூலம், வருவாய் அலுவலராக பணியமர்வு செய்து ஆணையிடப்பட்டது.

மேற்படி பதவி மாற்றம் மூலம் வருவாய் அலுவலராக பணியமர்வு செய்யப்பட்ட தனியர் 10.7.2013 முற்பகல் முதல் வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியர் வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள் முதல் வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் வகுப்பு–IA ன்கீழ் வரும் வருவாய் அலுவலர் பதவியை நியமனம் செய்யும் அதிகாரம் அரசின் வசம் உள்ளதால் இப்பதவியில் உள்ள திரு.எம்.கே.திவாகர், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த அரசின் ஆணை பெற மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

திரு.எம்.கே.திவாகர், வருவாய் அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, திரு.எம்.கே.திவாகர், வருவாய் அலுவலர், அவர்கள் இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த, அரசின் ஆணை கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.சு.து.ந.க.எண்.சி1/8201 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.157/2015 **பொருள் எண்.23**

**பதவியிறக்கம் அனுமதி**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் டாக்டர் A. பிரபாவதி, மண்டல சுகாதார அலுவலர் அவர்கள் **19.04.1995**ல் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்து **09.07.1999**ல் மண்டல சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு இவ்விரு பதவிகளிலும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் A. பிரபாவதி, மண்டல சுகாதார அலுவலர் அவர்களின் **03.03.2014,21.01.2015** மற்றும் **10.02.2015** நாளிட்ட கடிதங்களில் தன்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும் தொடர்ந்து மண்டல சுகாதார அலுவலராக பணிபுரிய இயலாத காரணத்தாலும், மேலும் **10.02.2015** நாளிட்ட கடிதத்தில் ஜுலை **2012** முதல் பிப்ரவரி **2014** வரை விடுப்பில் இருந்ததாகவும், மண்டல சுகாதார அலுவலருக்கான பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் தன்னை தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பதவியிறக்கம் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியரின் பணிபதிவேட்டில் **31.12.2014** வரை பணி சரிபார்ப்பு அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், டாக்டர் A.பிரபாவதி, மண்டல சுகாதார அலுவலர் அவர்கள் தன்னை தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பதவியிறக்கம் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

**தமிழ்நாடு சார்நிலை பணி விதி 47 ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**"47.Relinquishment of rights by members-(1).Any person may in writing relinquish any right or privilege to which he may be entitled under these rules or the Special Rules if, in the opinion of the appointing authority, such relinquishment is not opposed to public interest: and nothing contained in these rules or the Special Rules shall be deemed to require the recognition of any right or privilege to the extent to which it has been so relinquished.**

**(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained".**

எனவே, டாக்டர் A. பிரபாவதி, மண்டல சுகாதார அலுவலர் அவர்கள் மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு தற்காலிகமாக விருப்பமின்மை தெரிவித்துள்ளதால், தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பதவியிறக்கம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/11997/2015</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.03.2015 மற்றும் 18.05.2015 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.158/2015 **பொருள் எண்.24**

**<u>தலைமை நிரூபர் பதவிக்கான ஊதிய விகிதம் வகுப்பு–2ன்கீழ் வருவால், சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் வகுப்பு 3 மற்றும் 4ல் இருந்து நீக்கம் செய்யவும், பொது பணி விதிகள் வகுப்பு 1 மற்றும் 2ல் சேர்த்திடவும், நியமன முறை மற்றும் கல்வித் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதை செயல்படுத்திட அரசிற்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கு அனுமதி</u>**

அரசாணை எண்.701, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள்.20.4.1970ல் சென்னை மாநகராட்சி பொது பணி விதிகளில் வகுப்பு 1 மற்றும் வகுப்பு–2ற்கான நியமன முறை மற்றும் கல்வித் தகுதிகள் வரையறுக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.335 நிதி (ஊதிய குழுமம்) துறை, நாள்.26.8.2010ல் சென்னை மாநகராட்சியில் தலைமை நிருபர் மற்றும் நிருபர்களுக்கு பின்வருமாறு ஊதிய விகிதத்தினை திருத்தியமைத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | ஊதிய விகிதம்1.1.06ல் | 1.1.2006 முதல் 1 நபர் குழு பரிந்துரைபடி |
|---|---|---|---|
| 1 | தலைமை நிருபர் | 9300–34800 + தரஊதியம் 4700 | 15600–39100 +தரஊதியம் 5400 |
| 2 | நிருபர் | 9300–34800 + தரஊதியம் 4300 | 9300–34800 + தரஊதியம் 4500 |

மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் 1ல் கண்டுள்ள தலைமை நிருபர் பதவியின் ஊதிய விகிதம் 1.1.2006ல் 15600–39100 +தரஊதியம் 5400 ஆகும். இவ்வூதிய விகிதத்தின்படி இப்பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ம் நிலையில் வகைப்படுத்தப்படவேண்டும். ஆனால் இப்பதவியினை சென்னை மாநகராட்சி, பொது பணி விதிகள் வகுப்பு 3 மற்றும் வகுப்பு 4ம் நிலை பணியாளர்களுக்கான வரைவு துணை விதி 2009ல் சேர்க்கப்பட்டு நியமனமுறை, கல்வித் தகுதி மற்றும் இப்பதவியினை நிரப்பிட மையநாள் போன்ற விவரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தலைமை நிருபர் | நிருபர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் | 1. அரசு தொழில் நுட்ப தேர்வில் தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழியில் தட்டச்சு தேர்வு உயர்நிலையில் தேர்ச்சி<br>2. அரசு தொழில் நுட்ப அதிவேகத் தேர்வில் தமிழ்மொழியில் சுருக்கெழுத்து தேர்ச்சி (நிருபர் மட்டும்)<br>3. அரசு தொழில் நுட்ப தேர்வில் ஆங்கில மற்றும் தமிழ்மொழியில் உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி அல்லது தமிழில் உயர்நிலை ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் கீழ்நிலை<br>4.எம்.எஸ்.ஆபிஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி. | ரூ.9300–34800 + நிலை ஊதியம் ரூ.4700 நிர்ணய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஜனவரி 1ம் நாள் |

சென்னை மாநகராட்சியில் ஒப்பளிக்கப்பட்ட தலைமை நிருபர் பணியிடம் 1 ஆகும். இப்பணியிடத்தில் திருமதி.நஸ்ரீன், என்பவர் பணிபுரிந்து வருகிறார். இப்பதவியில் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் 15600–39100+5400 தரஊதியம் ஆகும். இவ்வூதிய விகிதம் சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ம் நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதமாகும்.

சென்னை மாநகராட்சி, சட்ட விதி 1919 துணை விதி 85(3) (பி) ன்படி வகுப்பு 2ன்கீழ் வகைப்படுத்தப்பட்ட அலுவலர்களை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு நியமனம் செய்யும் அதிகாரப் பங்களிப்பு மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன்பிறகு அரசாணை எண்.181 நதராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.6.10.2009ல் வகுப்பு 2ன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தலைமை நிருபர் பதவி, வகுப்பு 2ன் கீழ் வருவதால் சென்னை மாநகராட்சி, பொது பணி விதிகள் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் வரைவு துணைவிதி 2009 லிருந்து இப்பதவியினை நீக்கம் செய்து, சென்னை மாநகராட்சி, பொதுப்பணி பணிவிதிகள் வெளியிடப்பட்ட 701, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள்.20.4.1970ல் சேர்த்திடவும் , இப்பதவிக்கான நியமன முறை, கல்வித் தகுதி மற்றும் மையநாள் நிர்ணயம் போன்ற விவரங்களை கீழ்கண்டவாறு செயல்முறைப்படுத்திடவும், இதன்பொருட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பிடவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தலைமை நிருபர் | நிருபர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் | 1. அரசு தொழில் நுட்ப தேர்வில் தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழியில் தட்டச்சு தேர்வு உயர்நிலையில் தேர்ச்சி<br>2. அரசு தொழில் நுட்ப அதிவேகத் தேர்வில் தமிழ்மொழியில் சுருக்கெழுத்து தேர்ச்சி (நிருபர் மட்டும்)<br>3. அரசு தொழில் நுட்ப தேர்வில் ஆங்கில மற்றும் தமிழ்மொழியில் உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி அல்லது தமிழில் உயர்நிலை ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் கீழ்நிலை<br>4.எம்.எஸ்.ஆபிஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி. | ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400 நிர்ணய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஜனவரி 1ம் நாள் |

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ4/15014/2015</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.159/2015 **பொருள் எண்.25**

**<u>வரைவாளர் பதவியில் நிர்ணயிக்கப்பட்ட 26 ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை இளநிலை பொறியாளர்(சிவில்) பதவியில் சேர்க்கப்படும் நிகழ்வில் இவ்விரு பதவிகளுக்குண்டான ஊதியம் விகிதம் வேறுபடுவதால் இதற்கான நிதி குறைபாட்டினை சீர்அமைக்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் 3 மற்றும் 4ஆம் நிலை சார்நிலை பணியாளர்களுக்கு துணை விதிகளில் தயாரிக்கப்படும் நிகழ்வில் துணை ஆணையர்(பணிகள்) அவர்களின் 25.02.2015 நாளிட்ட குறிப்பில் இளநிலை பொறியாளர் மற்றும் வரைவாளர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதி தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் வழங்கப்படும் பொறியியல் பட்டயம் (சிவில்) என்று குறிப்பிடப்படுள்ளது, இதனை திருத்தி சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்கள். இவ்விரு பதவிகளுக்கான கல்வி தகுதி பின்வருமாறு:

| இளநிலை பொறியாளர்(சிவில்) | வரைவாளர் |
|---|---|
| **தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் வழங்கப்படும் பொறியியல் பட்டயம் (சிவில்)**<br>(அல்லது)<br>தமிழ்நாடு அரசால் மேற்படி கல்வித்தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிறிதொரு கல்வித்தகுதி.<br><br>பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் பாகம் 2ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>(இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)<br><br>**<u>சம்பள முறை</u>**<br>**ரூ.9300–34,800 + தர ஊதியம் ரூ.4,400** | **தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் வழங்கப்படும் பொறியியல் பட்டயம் (சிவில்)**<br>(அல்லது)<br>தமிழ்நாடு அரசால் மேற்படி கல்வித்தகுதிக்கு இணையாக அங்கீகரிக்கப்பட்ட பிறிதொரு கல்வித்தகுதி.<br><br>1. உதவி வரைவாளர் பதவியில் வரைவாளர் பதவிக்கு உண்டான கல்விதகுதியுடன் 5 ஆண்டு பணிநிறைவு செய்திருக்க வேண்டும்.<br>(அல்லது)<br>2. கீழ்நிலை பதவியில் வரைவாளர் பதவிக்கு உண்டான கல்விதகுதியுடன் 5 ஆண்டு பணிநிறைவு செய்திருக்க வேண்டும்.<br><br>**<u>சம்பள முறை</u>**<br>**ரூ. 5200-20200 + தர ஊதியம் 2800** |

**13.03.2015** நாளிட்ட உதவி ஆணையர் (பொநிமப) அவர்களின் கடிதத்தில் மூலம் இளநிலை பொறியாளர் மற்றும் வரைவாளர் ஆகிய பதவிகளுக்கான கல்வித் தகுதியை நிர்ணயிக்க தலைமைப்பொறியாளர்(பொது) அவர்களிடம் கருத்துரு கோரப்பட்டது.

**08.04.2015** நாளிட்ட தலைமைப்பொறியாளர்(பொது) அவர்களின் குறிப்பில் உதவி வரைவாளர் மற்றும் வரைவாளர் பதவிகளை நீக்கிவிட்டு அந்தப்பதவிகளின் காலிப்பணியிடங்களை இளநிலை பொறியாளர்(சிவில்) என்பதன் கீழ் கொண்டுவந்து, மண்டல அலுவலகங்கள் மற்றும் துறைகளுக்கு தேவைக்கேற்ப வரைபடப்பிரிவிற்காக பிரத்தியேகமாக ஒன்றோ அல்லது இரண்டோ இளநிலை பொறியாளர்(சிவில்) பதவியிலேயே பணியமர்வு செய்யலாம் என கருத்துரு தெரிவித்துள்ளார்.

வரைவாளர் (Draughtsman) பதவிக்கு 26 ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரைவாளர் பதவிக்கும், இளநிலை பொறியாளர் (சிவில்) பதவிக்கும் ஒரே விதமான கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் வரைவாளர் பதவியில் நிர்ணயிக்கப்பட்ட 26 ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை இளநிலை பொறியாளர்(சிவில்) பதவியில் சேர்க்கவும், மற்றும் இளநிலை பொறியாளர்(சிவில்) பதவிக்கு கீழ்நிலை பதவியாக உதவி வரைவாளர் பதவியாக நிர்ணயிக்கவும், இதற்கு அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு அறிக்கை அனுப்ப அனுமதியும், மற்றும் வரைவாளர் பதவியில் நிர்ணயிக்கப்பட்ட 26 ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை இளநிலை பொறியாளர்(சிவில்) பதவியில் சேர்க்கப்படும் நிகழ்வில் இவ்விரு பதவிகளுக்குண்டான ஊதியம் விகிதம் வேறுபடுவதால் இதற்கான நிதி குறைபாட்டினை சீரமைக்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்ஜி4/17147/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.160/2015 **பொருள் எண்.26**

**நேரடி நியமனம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் வகுப்பு–2, 3 மற்றும் 4ம் நிலையில் ஏற்படும் காலிப்ணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் அரசு விதிகளின்படி இனசுழற்சி முறையில் தகுதியான நபர்களின் பட்டியல் பெற்று எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனு எண். 1027/2013 மீதான 09.06.2014 தேதியிட்ட தீர்ப்பில் அரசுத் துறைகளில் உள்ள காலிபணியிடங்களை நிரப்புவது தொடர்பாக வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பதிவு மூப்பு பட்டியல் பெறுவது மட்டுமின்றி இரண்டு பத்திரிகைகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவது குறித்து விளம்பரம் செய்ய வேண்டுமென்றும், அதில் ஒன்று அதிக நபர்கள் படிக்ககககூடிய வட்டார மொழியாக இருக்க வேண்டுமென்று அதன் மூலம் வரும் விண்ணப்பங்களை பரிசீலினை செய்து பணி நியமனங்கள் மேற்க்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 19.02.2015 நாளிட்ட அரசுக்கான கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் 2014–2015ம் ஆண்டிற்கான உதவியாளர் காலிப்பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நேரடி நியமனம் செய்வது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து உரிய தெளிவுரை கோரி 19.02.2015 அன்று அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும், இப்பொருள் தொடர்பாக 27.02.2015 நாளிட்ட மன்றத்தீர்மான எண். 76/2015 நாள் 27.02.2015 பெறப்பட்டு அரசுக்கு 09.03.2015 அன்று மேலும் கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் 19.02.2015 நாளிட்ட கடிதத்தின் மீது 10.04.2015 நாளிட்ட அரசின் தெளிவுரை பெறப்பட்டது. அதில் அரசாணை (நிலை) எண். 44, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 11.03.2015–ன்படி நேரடி நியமனங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண். 44, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 11.03.2015–ன்படி சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் வகுப்பு–2, 3 மற்றும் 4ம் நிலையில் ஏற்படும் காலிப்ணியிடங்களை நிரப்புவதற்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமா்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொசுதுநக எண்.பி1/7893/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.161/2015 **பொருள் எண்.27**

**பொதுசுகாதாரத்துறை– பல்வேறு மருத்துவ பணிகள்– மருத்துவ சாரா பணியாளர்கள் (Paramedical staff) ஒப்பந்த அடிப்படையில் வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்துதல் – 28.11.2014 அன்று மின்னணு ஒப்பங்கள் பெறப்பட்டது– ஒப்ப கூர்ந்தாய்வு குழு (Tender scrutinizing Committee) ஒப்பத்தினை தீர்வு செய்து ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பரிந்துரை செய்து பெறப்பட்டது – ஒப்பத்தினை ஏற்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி 1 முதல் 15 மண்டலங்களில் பொது சுகாதாரத்துறையில் சென்னை மாநகர ஏழை எளிய நடுத்தர மக்களின் நலன் கருதி பல்வேறு மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ பணிகளை மேற்கொள்ள வெளிப்புற சேவையின் அடிப்படையில் போதிய மருத்துவ சாரா பணியாளர்கள் ( Paramedical Staff ) பணி அமர்த்திட குறுகிய கால மின்னணு ஒப்பம் (E- Short Tender) கோரப்பட்டு 28.11.2014 அன்று தொழில்நுட்ப ஒப்பங்கள் திறக்கப்பட்டு 4 ஒப்பந்ததாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பங்கள் ஒப்ப கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் 15.12.2014 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. இந்த ஒப்பத்தில் **M/S.M.MAHESH (L1)** என்ற நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளனர். எனினும் இந்த நிறுவனத்தினர் ஒப்பந்த புள்ளியில் அளித்துள்ள பணியாணை போலியானது என்பதால் அவர்களின் ஒப்பம் ஒப்பக்கூர்ந்தாய்வு குழுவினால் நிராகரித்தும், அவர்களுக்கு அடுத்து குறைந்த நிதி ஒப்பம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினத்தினரிடம் நிதி ஒப்பத்தில் **M/s.M.MAHESH** நிறுவனத்தினர் அளித்துள்ள ஒப்பப்புள்ளி விகிதத்திலேயே பணி மேற்கொள்ள ஒப்புதல் கோரி கடிதம் பெற பரிந்துரை செய்தது.

**M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினர் இது சம்பந்தமாக கோரியதில் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள நிதி ஒப்பத்தினை குறைக்க இயலாது எனவும், அவர்களால் அளிக்கப்பட்ட நிதி ஒப்பத்தினையே பரிசீலனை செய்யவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ. 4,85,04,000 ஆகும். **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினர் அளித்துள்ள ஒப்பந்த புள்ளி ரூ.4,83,36,000 ஆகும். இது ஒப்பந்த மதிப்பீட்டினை விட 1.35% குறைவாகும்.

ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவானது 25.03.2015 அன்று கூடி **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) –ன் ஒப்பப்புள்ளியானது ஒப்பந்த மதிப்பீட்டினை விட 1.35% குறைவாக இருப்பதால், இந்த ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத் துறைக்கான மருத்துவ சாரா பணியாளர்கள் (Paramedical Staff) பணி அமர்த்திட ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவினால் தேர்வு செய்யபட்டுள்ள **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்தின் ரூ.4,83,36,000/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தி மூன்று லட்சத்து முப்பத்தி ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பத்தினை ஏற்றுகொள்ளவும்,
2. **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த தொகையில் 2%க்கு ரூ.9,66,720/– (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எழுநூற்றி இருபது மட்டும்) பிணை வைப்புத்தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதற்கு அனுமதியும்,

3. இச்செலவினம் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் தெரிவித்துள்ள பணியாளர்களுக்கான செலவினம் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்ற பணியாளர்களுக்கான செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும்,
4. பொது மக்களுக்கு இச்சேவை அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும், பணி மேற்கொண்டதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்) வின் கூட்டம் 17.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.08/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.82/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.சு.து.ந.க.எண்.பி1/7894/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.162/2015 **பொருள் எண்.28**

**பொதுசுகாதாரத்துறை– பல்வேறு மருத்துவ பணிகள்– ஆதரவு பணியாளர்கள் (Support staff) ஒப்பந்த அடிப்படையில் வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்துதல் – 28.11.2014 அன்று மின்னணு ஒப்பங்கள் பெறப்பட்டது – ஒப்ப கூர்ந்தாய்வு குழு (Tender scrutinizing Committee) ஒப்பத்தினை தீர்வு செய்து ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பரிந்துரை செய்து பெறப்பட்டது – ஒப்பத்தினை ஏற்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி 1 முதல் 15 மண்டலங்களில் பொது சுகாதாரத்துறையில் சென்னை மாநகர ஏழை எளிய நடுத்தர மக்களின் நலன் கருதி பல்வேறு மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ பணிகளை மேற்கொள்ள வெளிப்புற சேவையின் அடிப்படையில் போதிய மருத்துவ சாரா பணியாளர்கள் (Paramedical Staff) பணி அமர்த்திட குறுகிய கால மின்னணு ஒப்பம் (E- Short Tender) கோரப்பட்டு 28.11.2014 அன்று தொழில்நுட்ப ஒப்பங்கள் திறக்கப்பட்டு 4 ஒப்பந்ததாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பங்கள் ஒப்ப கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் 15.12.2014 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. இந்த ஒப்பத்தில் **M/S.M.MAHESH (L1)** என்ற நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளனர். எனினும் இந்த நிறுவனத்தினர் ஒப்பந்த புள்ளியில் அளித்துள்ள பணியாணை போலியானது என்பதால் அவர்களின் ஒப்பம் ஒப்பக்கூர்ந்தாய்வு குழுவினால் நிராகரித்தும், அவர்களுக்கு அடுத்து குறைந்த நிதி ஒப்பம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினத்தினரிடம் நிதி ஒப்பத்தில் **M/s.M.MAHESH** நிறுவனத்தினர் அளித்துள்ள ஒப்பப்புள்ளி விகிதத்திலேயே பணி மேற்கொள்ள ஒப்புதல் கோரி கடிதம் பெற பரிந்துரை செய்தது.

**M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினர் இது சம்பந்தமாக கோரியதில் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள நிதி ஒப்பத்தினை குறைக்க இயலாது எனவும், அவர்களால் அளிக்கப்பட்ட நிதி ஒப்பத்தினையே பரிசீலனை செய்யவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ. 61,86,000 ஆகும். **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2) நிறுவனத்தினர் அளித்துள்ள ஒப்பந்த புள்ளி ரூ. 64,56,000ஆகும். இது ஒப்பந்த மதிப்பீட்டினை விட ரூ. 2,70,000 (+ 4.36%) அதிமாகும்.

சென்னை மாநகர ஏழை எளிய நடுத்தர மக்களின் நலன் கருதி பல்வேறு மருத்துவ பணிகள் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை அளிக்க இந்த ஒப்பந்தில் கோரியுள்ள, ஆதரவு பணியாளர்கள் (Support Staff) தேவை மிக அத்தியாவசமாகும்.

எனவே, இது சம்பந்தமாக ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவானது 25.03.2015 அன்று கூடி **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** (L2)–ன் ஒப்பப்புள்ளியானது ஒப்பந்த மதிப்பீட்டினை விட ஒப்பப்புள்ளியானது ஒப்பந்த மதிப்பீட்டினை விட கூடுதலாக இருக்கும் தொகை 5% க்கு குறைவாக இருப்பதாலும், ஆதரவு பணியாளர்கள் (Support Staff) தேவை மிக அத்தியாவசமாக கருதப்படுவதாலும், இந்த ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத் துறைக்கான மருத்துவ சாரா பணியாளர்கள் (Paramedical Staff) பணி அமர்த்திட ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவினால் தேர்வு செய்யபட்டுள்ள **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்தின் ரூ.64,56,000/- (ரூபாய் அறுபத்தி நான்கு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரம் அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பத்தினை ஏற்றுகொள்ளவும்,
2. **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்திடம் 2 % க்கு ரூ.1,29,120/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து நூற்றி இருபது மட்டும்) பிணை வைப்புத் தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதற்கு அனுமதியும்,

3. இச்செலவினம் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின்கீழ் தெரிவித்துள்ள பணியாளர்களுக்கான செலவினம் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்ற பணியாளர்களுக்கான செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும்,
4. இதில் பொது மக்களுக்கு இச்சேவை அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும், பணி மேற்கொண்டதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்) வின் கூட்டம் 17.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.09/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.81/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

<u>பொ.து.ந.க.எண்.ஈ4/11228/2015</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.03.2015 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.163/2015 பொருள் எண்.29

<u>திரு.வெ.முத்துகுமார், இளநிலை பொறியாளர் அவர்களை சென்னை மாநகராட்சியிலிருந்து தேனி மாவட்டம், அல்லிநகரம் நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்வதற்கு அனுமதி</u>

மண்டல அலுவலர் மண்டலம்–7 அவர்களின் 21.08.2014 நாளிட்ட கடிதத்தில் திரு.வெ.முத்துக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்–7 அவர்கள் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஏதேனும் ஒரு நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் செய்திடும்படி மனு சமர்ப்பித்துள்ளார்.

திரு.வெ.முத்துக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்–7 அவர்கள் பழைய அம்பத்தூர் நகராட்சியில் ரூ.4800–10000+1650 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் பணி ஆய்வராக பணிபுரிந்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளதை அடுத்து அவர் அரசாணை எண். 67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) துறை, நாள்.18.07.2012ன்படி நகராட்சியில் உள்ள பணிஆய்வர் பதவிக்கான ஊதிய விகிதத்திற்கு இணையான ஊதிய விகிதம் கொண்ட பொறியியல் பதவி ஏதும் சென்னை மாநகராட்சியில் பணிவிதிகளின்படி எந்த பதவியும் இல்லாததால் அவர் சென்னை மாநகராட்சியல் ரூ.5200–20200+1900 தர ஊதியத்தில் உதவி வரைவாளராக பதவி மாற்றம் செய்யப்பட்டு 25.10.2011 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் ஈர்த்துக்கொள்ளப்பட்டார்.

பின்னர், திரு.வெ.முத்துக்குமார் அவர்கள் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்று தற்போது மண்டலம்–7ல் 24.02.2014 முதல் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது மனுவில் தனது வயதான தந்தை மதுரையில் வசித்து வருவதாலும் தனது சகோதரர் சிங்கப்பூரிலும், தனியர் சென்னையில் வேலை பார்த்து வருவதாலும், தனது தந்தையின் உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் போவதாலும், தனது தந்தையை அருகில் இருந்து கவனிக்க இயலாமல் உள்ளதால் மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட ஏதேனும் ஒரு நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் செய்து தரும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) தேனி–அல்லிநகரம் நகராட்சி, அவர்களின் 05.12.2014 நாளிட்ட கடிதத்தில், தேனியில் உள்ள அல்லிநகரம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் உதவிப்பொறியாளர் பணியிடம் தற்போது உதவிப்பொறியாளரால் நிரப்பப்பட்டுள்ளது என்றும் வருங்காலங்களில் தேனி அல்லிநகரம் நகராட்சியில் உதவிப்பொறியாளர் பணியிடத்தில் காலியிடம் ஏற்படும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி மண்டலம் –7ல் இளநிலை பொறியாளராக பணிபுரியும் திரு.வெ.முத்துக்குமார், அவர்கள் மூலம் நிரப்ப 28.11.2014 நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 17.03.2015 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) தேனி அல்லிநகரம் நகராட்சி அவர்கள் தேனியில் உள்ள அல்லிநகரம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் உள்ள உதவிபொறியாளர் 05.02.2015 அன்று பணிமாறுதாலாகி சென்றுள்ளதால் வேறு ஒரு இளநிலை பொறியாளரை நியமிக்காமல் நாளது தேதிவரை பணியிடம் காலியாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்–7 அவர்களின் 10.03.2015 நாளிட்ட கடிதத்தில் தேனி–அல்லிநகரம் நகராட்சி மன்ற தீர்மானத்தின்படி திரு.வெ. முத்துக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்–7 அம்பத்தூர், சென்னை மாநகராட்சி அவர்களை ஒருவழி பணியிட மாறுதல் மூலம் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு ஈர்த்துக்கொள்ள இசைவு அளித்துள்ளதன் அடிப்படையில் தனியரை சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஒருவழி பணியிட மாறுதல் மூலம் தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பெறப்பட வேண்டும்.

மேலே, சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில் திரு.வெ. முத்துக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்–7, அவர்களை தேனி மாவட்டத்திற்கு உட்பட்ட தேனி–அல்லிநகரம் நகராட்சியில் உள்ள இளநிலை பொறியாளர் காலிப்பணியிடத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிய ஒரு வழி பணியிட மாற்றம் செய்ய, அரசிற்கு செயற் குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.வெ.முத்துக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்–7, அவர்களை தேனி மாவட்டம், அல்லிநகரம் நகராட்சிக்கு தனியரின் விருப்பத்தின் பேரில் ஒரு வழி பணியிட மாற்றம் செய்ய, அரசிற்கு செயற் குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.இ7/12095/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்25.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.164/2015 பொருள் எண்.30

**திரு.ட்டி.முத்துகணேஷ், துப்புரவு அலுவலர்அவர்களை சென்னை மாநகராட்சியிலிருந்து சின்னமனூர் நகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் செல்வதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் துப்புரவு அலுவலராக பணிபுரியும் திரு.ட்டி. முத்துகணேஷ், அவர்கள் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு அளித்துள்ள 03.02.2015 நாளிட்ட மனுவில், தனது வயதான அம்மா மற்றும் குழந்தைகள் சொந்த ஊரான தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூரில் வசித்து வருவதாகவும், தனது அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லாமல் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுத்து வருவதாகவும், இத்தனியர் அவர்களை அருகில் இருந்து கவனித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளதால் தற்போது சின்னமனூர் நகராட்சியில் துப்புரவு அலுவலர் பதவியிடம் காலியாக இருப்பதாகவும், இவரை சின்னமனூர் நகராட்சிக்கு பணியிடம் மாற்றம் செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட தனியரான திரு.ட்டி.முத்துகணேஷ், துப்புரவு அலுவலர், வடக்கு வட்டார அலுவலகம், அவர்களின் பணிப்பதிவேட்டினை சரிபார்த்தில், தனியர் 21.08.1998 அன்று சுகாதார ஆய்வாளராக நிரந்தர பதவியில் பணியில் சேர்ந்துள்ளார். இவருக்கு இப்பதவியில் பணிவரன்முறை/தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் சுகாதார ஆய்வாளர் பதவியில் தேர்வு நிலை சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து 05.07.2013ம் தேதி முதல் துப்புரவு அலுவலராக பதவி உயர்வு பெற்று துப்புரவு அலுவலராக வடக்கு வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுக்கள் தற்போதைய நிலையில் ஏதும் இல்லையென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அரசு கடிதம் எண். 27274/மாந3/96–1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:08.07.1996ல் மாநகராட்சி / நகராட்சி அலுவலர்கள் ஒருவழி/இருவழி பணியிட மாறுதல் தொடர்பாக கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியின் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால் அவர் பணிபுரியும் அந்த நகராட்சி/மாநகராட்சி ஆணையருக்குத்தான் தனது மனுவை அனுப்ப வேண்டும்.

2. சம்பந்தப்பட்ட ஆணையர் இந்த மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும்.

3. மாறுதல் கோரப்பட்டுள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியின் ஆணையர் அங்கு பணியிடம் காலி இருந்து, அவரை எடுத்துக் கொள்ளலாம் எனக் கருதினால் அதற்கான மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அந்த நகலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எடுத்துக் கொள்ளும் நகராட்சி / மாநகராட்சி அனுப்பி வைக்க வேண்டும். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவைகளைப் பரிசீலித்து தனது குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4. எனினும் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சி தரும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயற்குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5.மாறுதல் வேண்டுபவர்கள் நகராட்சிக்கோ,. மாநகராட்சிக்கோ மாறுதல் வேண்டி விண்ணப்பம் கொடுத்து அதன் நகலை அரசுக்கு அனுப்பக் கூடாது.

6.மாறுதல் விரும்பும் நபரை ஒரு நகராட்சியோ, மாநகராட்சியோ எடுத்துக் கொள்ள விரும்பவில்லையென்றால் அல்லது பணியிடம் காலியில்லையென்றால் அலுவலர் பணியாற்றும் ஆணையருக்கு தகவல் அளிக்க வேண்டும். அரசுக்கு அனுப்பத் தேவையில்லை.

மேலும், சென்னை நகர முனிசிபல் சட்ட விதி 1919ன் துணை விதி 97(c)ல் மாநகராட்சியிலிருந்து நகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, தனியர், தனது குடும்ப சூழ்நிலையினை தெரிவித்துக் கொண்டு தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள சின்னமனூர் நகராட்சியில் துப்புரவு அலுவலர் பதவி காலியாக

உள்ளதாக தெரிவித்து அவ்விடத்திற்கு பணியிட மாறுதல் கோரும் கோரிக்கை மனு அளித்துள்ளதன் அடிப்படையில்,

1) ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியின் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால் அவர் பணிபுரியும் அந்த நகராட்சி/மாநகராட்சி ஆணையருக்குத் தான் தனது மனுவினை அனுப்ப வேண்டும்.
2) சம்பந்தப்பட்ட ஆணையர் இந்த மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கண்ட வரிசை எண்.1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், திரு.ட்டி. முத்துகணேஷ், துப்புரவு அலுவலர், வடக்கு வட்டார அலுவலகம், என்பவரை சின்னமனூர் நகராட்சிக்கு பணியிட மாறுதலில் அனுப்புவது குறித்து நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/14743/2015</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.165/2015 **பொருள் எண்.31**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (டி) எண். 115, வேளாண்மை (வேநி1) துறை, நாள்: 01.04.2015ன்படி, திரு.ப.ஜெயபால், வேளாண்மை துணை இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை, அவர்கள், சென்னை மாநகராட்சியில், அயற்பணியில், பூங்கா கண்காணிப்பாளர் ஆக 06.04.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/13613/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.166/2015 **பொருள் எண்.32**

**<u>பணியமைப்பு</u>**

உதவி இயக்குநர், திருவள்ளுர் மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை, அவர்களின் செயல்முறை ஆணை ந.க.அ2/6728/2014, நாள்: 16.03.2015ன்படி, கீழ்கண்ட இரண்டு சார்–ஆய்வாளர்கள் (Sub Inspector of Survey) சென்னை மாநகராட்சியில், அயற்பணியில் 23.03.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | திரு.எம்.இருதயராஜ்,<br>சார்–ஆய்வாளர்,<br>அம்பத்தூர் நகரளவை. | 23.03.2015 முற்பகல் |
| 02 | திரு.எம்.சகாதேவன்,<br>சார்–ஆய்வாளர்,<br>திருநின்றவூர் குறுவட்டம். | 23.03.2015 முற்பகல் |

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**க.து.ந.க.எண். அ2/14455/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.167/2015 **பொருள் எண்.33**

**கல்வித்துறை – சாய்வு இருக்கைகள் – 2015 – 2016ஆம் கல்வியாண்டில் 38 சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு தேவையான 3 பேர் அமரும் 1,011 சாய்வு இருக்கைகள் Tansi Project (Nabard) நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2014 – 2015ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை எண்.23-ல் சென்னை மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் தொடர் பயன்பாட்டால் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மேசை, நாற்காலிகளுக்குப் பதிலாக புதிய மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்குவது அவசியத் தேவையாகும். அதனடிப்படையில் எளியோர்க்கும் ஏற்ற மிகு கல்வியை வழங்க வேண்டும். இல்லார்க்கும் இனிய கல்வியை வழங்க வேண்டும். எளியோரையும் வலியோராக்கும் கல்வியை வழங்க வேண்டும் என்ற நோக்கோடு அனைத்துப் பள்ளி வகுப்பறைகளுக்கும் தேவைப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மேசைகள், நாற்காலிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

அதனடிப்படையில் சென்னை உயர்நிலைப்பள்ளிகளின் மாணவ / மாணவியர்களின் தேவைக்கேற்ப 3 பேர் அமரும் சாய்வு இருக்கைகள் வழங்கலாம் என கருதப்பட்டுள்ளது. அதற்கேற்ப சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களிடம் கையொப்பம் பெற்ற இருப்பு நிலவரப்படி, புதியதாக தேவைப்படும் 3 பேர் அமரும் சாய்வு இருக்கைகளின் எண்ணிக்கை விவரங்கள் பெறப்பட்டு டான்சி நிறுவனத்தில் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

3 பேர் அமரக்கூடிய தேவைப்படும் சாய்வு இருக்கைகளின் விவரங்கள் :

| வ.எண் | சென்னை பள்ளிகள் | தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 38 சென்னை உயர்நிலைப்பள்ளிகள் | 1,011 |

விலைப்புள்ளி

| Sl No | Description of Items | Unit | | Qty. Supplied | Unit Price Rs. | Amount |
|---|---|---|---|---|---|---|
| | | Des | Code | | | |
| 1 | Dual Desk with Laminated Top of size: 60" x 36" x 30" | | No | 1 | 6,850.00 | 6,850.00 |
| | | | | | Total | 6,850.00 |
| CODE: DEDUCTIONS | | CODE: | | ADD | | |
| | | CED 12% | | | | 822 |
| | | Cess (on CED) 2% | | | | 16 |
| Sales Commn. 5% | | Cess (on CED) 1% | | | | 8 |
| A.S.T. @ 2% | | | | | Sub Total | 7,696.00 |
| Adv. Adjusted | | VAT 14.5% | | | | 1,116.00 |
| Discount | | Forwarding Charges | | | | |
| Others | | Handling Charges | | | | |
| Vide CR No. | | Delivery Charges | | | | 500.00 |
| | | | | | Total | 9,312.00 |
| | | | | | Net amount | 9,312.00 |
| பேச்சுவார்த்தைக்கு பிறகு Delivery Charges குறைக்கப்பட்ட தொகை | | | | | | (-)100.00 |
| | | | | | Grand Total | 9,212.00 |

**09.02.2015** நாளிட்ட துணை ஆணையர் (கல்வி) அவர்களின் குறிப்பின்படி, டான்சி நிறுவனத்தின் மேலாளர் அவர்களை நேரில் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டு விலைக்குறைப்பு பற்றி பேசப்பட்டது. அப்போது Delivery Charges–க்குண்டான விலையில் ரூ.100/- குறைக்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்டுள்ள டான்சி நிறுவனத்தின் விலைப்பட்டியினை ஆராய்ந்து பார்த்ததில் ஒரு சாய்வு இருக்கையின் விலை ரூ.9,212/- வீதம் 1,011 சாய்வு இருக்கைகளின் மொத்த விலை ரூ. 93,13,332/- தொகை என கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் தொகையில் இருந்து ரூ.1,01,100/- குறைக்கப்பட்டுள்ளது.

24.02.2015 நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் குறிப்பில் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் அனுமதி பெற்று கோப்பினை நடைமுறைப்படுத்தும் படி, குறிப்பிட்டுள்ளார்.

எனவே,

1. சாய்வு இருக்கைகள் – 38 சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு தேவையான 3 பேர் அமரும் 1,011 சாய்வு இருக்கைகள் 2014 – 2015 ஆம், கல்வியாண்டில் Tansi Project(Nabard) நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளியில் ரூ. 93,13,332/- தொகையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
2. அத்தொகையில் இருந்து 50 சதவீதம் ரூ. 46,56,666/- தொகையினை துறை குறியீடு – E- பிரிவு எண் : 80-82-01 கணக்கு குறியீடு – 460-50-01-12 Advance Recoverable Expenses – Tansi என்ற முன்பண குறியீட்டில் பெற்று Tansi Project (Nabard) என்ற நிறுவனத்திற்கு காசோலையாக வழங்குவதற்கு அனுமதியும்,
3. அச்செலவினத்தை துறை குறியீடு எண் : E, பிரிவு எண் : 80-82-01, கணக்கு குறியீடு எண் : 410-70-02-00 அலுவலக தளவாடங்கள் – மேசை, என்ற மூலதன கணக்கில் செலவு மேற்கொள்வதற்கும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் **16.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **24.04.2015** அன்று தீர்மான எண்.**10/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**80/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்இ3./0876/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.168/2015 **பொருள் எண்.34**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

**வார்டு எண் : 73** **மண்டலம் : 6**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர் | : | மண்டலம்–6, வார்டு–73, ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் புதிய மண்டல அலுவலகம்–6 கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்றத்தீர்மான எண்.576/2014,நாள்.20.11.2014 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | மண்டலம்–6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 9,20,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 7,53,22,329.83 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 75,20,678.28 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 18,80,169.57 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | : | ரூ. 7,52,067.83 |
| | (உ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 18,72,686.66 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 7,52,067.83 |
| | (எ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | ரூ. 1,00,000.00 |
| | ஏ) கலந்தரிதற் கட்டணம் | : | ரூ. 38,00,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 9,20,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள் . 26.02.2015<br>2. தினமணி தமிழ் நாளிதழ் நாள். 25.02.2015<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 25.02.2015 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 13.03.2015 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | குறுகிய கால ஒப்பம். தலைமை பொறியாளர்(கட்டடம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2014-2015 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | கஜலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் | 7,53,22,329.83 | 6,89,75,075/- | (-) 8.43 % குறைவு |
| 2. | R.கிருஷ்ணமூர்த்தி அன்டு கோ | 7,53,22,329.83 | 7,15,84,030/- | (-) 4.96 % குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள். 26.03.2015 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார் |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ.6,89,75,075/- (-) 8.43 % குறைவு 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | : | வகுப்பு –1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–கட்டடத்துறை 2014-2015 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 12.06.2015 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 13.03.2015 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 24.03.2015 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கஜலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.7,53,22,329.83 யைவிட (-)8.43% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.6,89,75,075/-ஆகும். எனவே, 26.03.2015 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.6,89,75,075/-ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.6,89,75,075/- |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (-) 8.43% குறைவு |
| The Hindu (Habitat) dated.07.02.2015 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 18.00 % குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 16.04.2015 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.6,89,75,075/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். கஜலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். கஜலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் அவர்களின் ரூ.6,89,75,075/- (ரூபாய் ஆறு கோடியே என்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து எழுபத்தைந்து மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.கஜலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**55/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**73/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி3 /2076 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.169/2015 **பொருள் எண்.35**

**ரிப்பன் மாளிகையை சுற்றி இயற்கை நிலக்காட்சி பணிக்காக கலந்தறிதர்குரியர்கள் நியமிக்க அனுமதி**

**வார்டு எண் : 58** **மண்டலம் : 5**

சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் மற்றும் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடம் கட்டப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. ரிப்பன் மாளிகையை சுற்றி இயங்கிவரும் அனைத்து துறைகளும் தற்போது ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் இயக்கப்பட உள்ளது. இதனால் சிறிய மற்றும் பழைய கட்டடங்களை இடித்து அகற்றி விட்டு ரிப்பன் மாளிகை வளாகத்தை சுற்றி அழகு படுத்தும் நோக்கில் நவீன இயற்கை நிலக்காட்சி (landscape) பணிகள் சுமார் 10.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ரிப்பன் மாளிகை வளாகத்தை சுற்றி இயற்கை நிலக்காட்சி (landscape) பணிக்காக கலந்தறிதர்குரியர்களை நியமிக்க சென்னை மாநகராட்சியின் மூலம் Expression of Intrest முறையில் திறந்த முறை ஒப்பம் (Open tender) கோரப்பட்டு கட்டடக்கலைஞர்களிடம் வடிவமைப்பு பெறப்பட்டன. கட்டடக்கலைஞர்களிடமிருந்து பெறப்பட்ட வடிவமைப்புகளை 30.12.2014 அன்று மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக்குழுவில் கலந்தறிதற்குரியர்களின் தகுதிகள் மற்றும் வடிவமைப்புகள் ஆய்வு செய்யப்பட்டது. மீண்டும் 05.02.2015 அன்று இரண்டாம் முறையாக உயர்மட்டக்குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு இறுதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண். | ரிப்பன் மாளிகையை சுற்றி இயற்கை நிலக்காட்சி பணிக்காக கலந்தறிதர்குரியர்களின் பெயர்கள் திரு/திருவாளர்கள் | உயர் மட்ட குழுவில் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ரகுராமன் ஆர்க்கிடெக்ட்ஸ் | 80% |
| 2 | ரவிக்குமார் அசோசியேட்ஸ் | 75% |

இப்பணிக்காக பணியின் தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ.10,00,00,000/- கோடியில் ஏற்கனவே ஒப்புதல் பெற்ற மன்ற தீர்மானத்தின்படி கலந்தறிதர்குரியவருக்கு 7.5 சதவீதம் தொகையான ரூ.75,00,000/- அப்பணிகளுக்கேற்ப முடியும் தருவாயில் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.

| வ. எண் | இயற்கை நிலக்காட்சி (Land scape) | வழங்கப்பட வேண்டிய சதவீதம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | Architectural services, MEP, Structural design (as applicable) | 4.5% | 45,00,000 |
| 2 | Preparation of Detail specification, Rate Analysis, Estimate, BOQ and tender document | 1.5% | 15,00,000 |
| 3 | Periodic Inspection Evaluation of work at site, Co-ordination drawing, variations due to design change | 1.5% | 15,00,000 |
| | மொத்தம் | 7.5 % | 75,00,000 |

மேற்கண்ட பட்டியலில் உள்ளவர்களில் திருவாளர்கள்.ரகுராமன் ஆர்க்கிடெக்ட்ஸ் அவர்கள் முதன்மையாக உள்ளதால் அவர்களுக்கு மண்டலம்–5, வார்டு–58 ரிப்பன் மாளிகையை சுற்றி இயற்கை நிலக்காட்சி (landscape) பணிக்கான கலந்தறிதர்குரியவராக நியமித்து பணி ஆணை வழங்க நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.56/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.74/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மி.து.ந.க.எண்.மே/பி1/3435/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.170/2015 பொருள் எண்.36

**மின்துறை–புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி 110ன் படி சட்ட சபையில் அறிவிப்பு – ரூ.300 கோடியில் 1,10,000 தெரு விளக்கு கம்பங்கள் அமைக்கும் திட்டம் – தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் ரூ. 30.3 கோடி நிதி உதவி மானியமாக மற்றும் கடனாக வழங்க ஒப்பு கொண்டுள்ளது – கடன் மற்றும் மானியம் பெற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஏற்க – அனுமதி**

சென்னை மாநகராட்சி விரிவாக்கப்படுவதற்கு முன் 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது 9 நகராட்சிகள், 8 நகர பஞ்சாயத்துக்கள் மற்றும் 25 கிராம பஞ்சாயத்துக்கள் மேலே குறிப்பிட்ட அரசு ஆணைப்படி சென்னை மாநகராட்சியுடன் இணைத்துக் கொண்ட பிறகு 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது ஆகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மண்டலம். 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகும்.

சென்னை மாநகராட்சியில் மொத்தம் 2,28,826 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகிறது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதியில் 94,314 தெரு விளக்குகள் உள்ளன, இதில் 34,098 குழல் விளக்குகள் உள்ளிட்டதாகும். சென்னை மாநகராட்சியின் பிரதான பகுதியில் உள்ளது போல், புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சீராக மற்றும் நவீன முறையில் மின் சக்தி சேமிக்கும் வகையில் தெருக்களை ஒளியூட்ட 1,10,055 எண்ணிக்கை தெரு விளக்குகள் தேவைபடுகின்றன. இதற்கான தோராய மதிப்பீடு ரூ.321.79 கோடி ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.04.2013 நாளன்று விதி எண்.110ன் படி சட்ட சபையில் சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சென்னை மாநகராட்சியின் பிரதான பகுதிகளில் உள்ளது போல், சீராக மற்றும் நவீன வகை தெரு விளக்குகள் மின் சக்தி சேமிக்கும் வகையில், 1,10,000 தெரு விளக்கு கம்பங்கள் மற்றம் மின் சக்தி சேமிக்கும் தெரு விளக்குகள் ரூ.300 கோடி தோராய மதிப்பில் வரும் இரண்டு ஆண்டுகளில் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

மேலும் இதன் தொடர்பாக புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 1,10,000 தெரு விளக்குகள் அமைக்க ரூ.300 கோடி நிதி திட்டத்திற்கான அரசின் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி பெற்று (மன்ற தீர்மானம் எண்.378/2013) அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இப்பணிகள் வருவாய ஈட்டித்தராததாக உள்ளதாலும் பெரிய நிதி சுமையை ஏற்படுத்தும் என்பதாலும் இப்பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.200 கோடி நிதி உதவி மானியமாக மற்றும் கடனாக கோரப்பட்டுள்ளது.

2013–14 நிதியாண்டில் 13,609 தெரு விளக்கு கம்பங்களுடன் LED தெரு விளக்குகள் அமைக்க ரூ.51.37 கோடி தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலமாக வெளி நிதி KFW நிறுவனத்திடம், பெரும் பகுதி மானியமாகவும் மீதம் கடனாகவும் கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.30.82 கோடி கடன், ரூ.15.41 கோடி மானியம் மற்றும் ரூ.5.14 கோடி சென்னை மாநகராட்சியின் நிதி ஆகும்.

இந்த நிதியாண்டில் 34,425 தெரு விளக்கு கம்பங்களுடன் LED தெரு விளக்குகள் அமைக்க தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி–III யின் கீழ் ரூ.94.48 கோடி வழங்குவதாக தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் ஒப்பு கொண்டது. இதில் ரூ.66.14 கோடி கடன், ரூ.18.90 கோடி மானியம் மற்றும் ரூ.9.44 கோடி சென்னை மாநகராட்சியின் நிதி ஆகும். 34,425 தெரு விளக்குகள் LED விளக்குகளுடன் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு அரசானை பெறப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

இதனையும் சேர்த்து புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் நிறுவப்பட உள்ள 1,10,055 தெரு விளக்குகளில் 48,034 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மீதம் 62,021 தெரு விளக்குகள் ரூ.177 கோடி மதிப்பில் அமைக்கும் பணிக்கான நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

இந்த நிதியாண்டில் 7,127 தெரு விளக்கு கம்பங்களுடன் LED தெரு விளக்குகள் அமைக்க ரூ.30.3 கோடி தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலமாக வெளி நிதி KFW நிறுவனத்திடம், பெரும் பகுதி மானியமாகவும் மீதம் கடனாகவும் கோரப்பட்டுள்ளது. ரூ.30.3 கோடி வழங்குவதாக தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் கொள்கையளவில் ஒப்புகொண்டுள்ளது. இதில் ரூ.18.18 கோடி கடன், ரூ.9.09 கோடி மானியம் மற்றும் ரூ.3.03 கோடி சென்னை மாநகராட்சியின் நிதி ஆகும். மீதம் உள்ள பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் வெளி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் KfW மற்றும் SMIF-II-2 யுடன் ரூ. 30.3 கோடி வழங்க தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் தனது 31.03.2015 நாளிட்ட கடிதங்கள் மூலம் கீழ்கண்ட தகவல்கள் தெரிவித்துள்ளது.

1) தெரு விளக்கு மேம்பாட்டு பணிகள் செயல்படுத்த சென்னை மாநகராட்சிக்கு ரூ.18.18 கோடி தவணை கடன் கிடைக்கும்.
2) இக்கடன் சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.
3) கடனுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மன்ற ஒப்புதலுடன் அதற்கான மன்ற தீர்மானத்துடன் அனுப்பப்பட வேண்டும்.
4) மன்ற தீர்மானத்தின் நகல் பெற்ற பின்னர் கடனுக்கான தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தத்தின் (Rupee Term Loan Agreement) வரைவு சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்படும்.

மேலும், இப்பணிகள் மேற்கொள்ள ரூ.9.09 கோடி மானியம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள் மேம்பாட்டு பணிகளுக்காக தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் கடன் மற்றும் மானியம் பெற அந்நிறுவனத்தின் கீழ்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒப்புகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டிட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

I) **Special Terms and Conditions of loan**

**1. Loan Amount**

Rupees term loan is Rs.18.18 crores (Rupees Eighteen crores and Eighteen lakhs only)

**2. Interest**

The rate of interest for the loan shall be 8.45% p.a. at Quarterly rest. However, the rates prevailing as on the date of disbursement of loan shall be applicable. The interest rate will be reset once in five years during the tenor of the loan.

**3. Repayment**

a. Tenor – 7years
b. Principal moratorium – 2 years
c. Interest Moratorium – Nil
d. Repayment period – 5 years
e. Frequency of Installments – Quarterly ( Principal and Interest)

**4. Validity**

The loan sanction is valid for a period of two years from the date of execution of loan documents. If the loan is not utilized within the validity period, necessary extension may be considered at the request of the Corporation supported by Council Resolution, on the terms and conditions as may be decided by TNUDF at the time of extension.

**5. Implementation Period**

The proposed streetlight infrastructure improvement project should be completed within 12 months from the date of commencement of project.

**6. Project Cost and Means of Finance**

The Corporation shall implement the Project within the overall project cost of Rs.30.30 Crores and in accordance with the financing plan both as agreed to between the Corporation and TNUDF and which will be set out in the Loan Agreement.

**Means of finance:**

| Sl.No. | Details | Amount (Rs. In Crores) |
|---|---|---|
| 1 | Loan from TNUDF under KfW assisted SMIF-TN-II-2 (60%) | 18.18 |
| 2 | Capital Grant from KfW GF-I (30%) | 9.09 |
| 3 | ULB contribution/ Others (10%) | 3.03 |
| | **Total project cost** | **30.30** |

**7. Disbursement of term loan**

a) Necessary statutory approvals including council resolution and administrative/technical sanction should be obtained by Corporation.
b) The fund will be released based on progress of the project.

**8. Debt Service Reserve Fund**

TNUDF proposes to stipulate adequate security mechanisms to ensure timely payment of interest and principal. Hence, as a credit enhancement measure, the Corporation has to open a Debt Service Reserve Fund (DSRF) account. In DSRF account, the amount to an extent of two semi annual installments (1 year requirement) has to be deposited. The DSRF will be in the form of a fixed deposit having a minimum maturity period of five years, jointly in the name of the Corporation and TNUDF. In case of failure to repay the dues from the escrow account, TNUDF will ask the Corporation to close the Fixed Deposit and pay the due. Within next six months the DSRF will have to be recouped.

**9. Other Terms and Conditions**

a) Selection of contractors and procurement of goods and services shall be as per the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998.
b) The Corporation has to provide monthly progress reports and Statement of expenditure (SOE) during the implementation in the format prescribed by TNUIFSL.
c) TNUIFSL reserves the right to inspect the implementation of the project any time during the construction stage and subsequently also and provide suggestions for incorporation in the scope of the project, if TNUIFSL deems fit.
d) The Corporation has to meet any cost overrun from its own sources on account of delay in procurement or due to increase in prices of materials/labour.
e) The Corporation shall not avail any fresh loans from any other agency during the tenure of TNUDF's loan without obtaining written approval from TNUIFSL.
f) The project shall be implemented according to the Environmental and Social Framework (ECSMF) developed by TNUIFSL.
g) The Corporation has to carry out the O&M from its general funds.

II) **Conditions of Grant:**

1. The grant sanction is valid for a period of 2 years from the date of acceptance of grant terms and conditions. If the grant is not utilized within this validity period of 2 years, necessary extension may be considered at the request of the Corporation, on the terms and conditions as may be decided by TNUDF at the time of extension.
2. Monthly progress reports on the utilization of Grant in the prescribed format shall be submitted to TNUIFSL.

1. Goods, equipments, services and materials to be financed would be procured according to the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998.
2. In case of rehabilitation and resettlement schemes, ECSMF guidelines of TNUIFSL are to be followed.
3. In case of capital expenditure, the Grant Fund is to be used only to support schemes, which directly benefit urban poor. The target population specified in your loan application should not be changed. If there is any variation, especially a decrease in urban poor benefited, our grant amount will be converted to loan at interest rates currently prevailing on TNUDF loans.

III) கடனுக்காக தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் (Rupee Term Loan Agreement) செய்து கொள்ளவும்

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**59/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**77/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.(எல்இ9)AA1/1907/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.171/2015 **பொருள் எண்.37**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–1, வார்டு–14, திருவொற்றியூர் காலடிப்பேட்டை – சலவைத்தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அனுமதி**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், திருவொற்றியூர் நகர புல எண்.134ல் வார்டு. ஜே பிளாக். எண்.4ல் 5660 ச.மீ. பரப்புள்ள நிலத்தில் ஏற்கனவே நகராட்சியில் 1736 ச.மீ. பரப்பில் சலவைத் தொழில் நிலையம் கட்டப்பட்டு மீதி உள்ள 3924 ச.மீ பரப்பில் சலவை தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட உத்தேசித்து நிலம் வழங்க கோரி திருவொற்றியூர் நகராட்சிக்கு ஏற்கெனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன்படி மேற்கண்ட நிலத்தில் திருவொற்றியூர் காலடிப்பேட்டை சலவை தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர சென்னை திருவொற்றியூர் நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.277, நாள்.17.06.1998–ன்படி நகராட்சி மன்றதீர்மான நிறைவேற்றியுள்ளதாலும், தற்போது திருவொற்றியூர் நகராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சியின் மன்ற தீர்மானம் பெற வேண்டியுள்ளதாலும், மேற்கண்ட புல எண்.134–ல் 3924 ச.மீ பரப்பில் சலவைத் தொழிலாளர்களுக்கு மாடி குடியிருப்புகள் கட்டி குடியமர்த்தவும், அரசு ஆணை எண்.35, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.1997–ன்படி மாநகராட்சி மற்றும் நகராட்சி நிலங்கள் குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்யும் போது நிலக்கிரயமாக ரூ.10,000/– வீதம் ஒரு மனைக்கு (கிரவுண்டு) நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளதால் அதன்படி வாரியம் நிலக்கிரயம் செலுத்த ஏதுவாக மன்றத்தீர்மானம் பெற்று வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

1–வது வார்டு குழு தலைவர் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் காலடிபேட்டை சலவை தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக் கொடுப்பதற்கு திருவொற்றியூர் நகராட்சி மன்றத்தீர்மானம் நிறைவேற்றியுள்ளதால் மன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்து வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக 29.05.2012–ஆம் நாளிட்ட 1–வது மண்டல வார்டு குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து நடவடிக்கை எடுக்க ஏதுவாக சலவை தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டக்கோரும் இடம் தொடர்பான மூல ஆவணங்களை அனுப்பிவைக்குமாறு மண்டல அலுவலரிடம் கோரப்பட்டு 04.11.2013–ஆம் நாளிட்ட மண்டல அலுவலரின் குறிப்புடன் இத்துறையில் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனி வட்டாட்சியர்/நிமஉது–வுடன் வார்டு–3, இளநிலைப்பொறியாளர் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டதில் திருவொற்றியூர் வட்டம் மற்றும் கிராமம் பழைய புல எண்.223/1 A மற்றும் 223/2 A, நகர புல எண்.134, வார்டு–14, பிளாக்–4ல் மொத்த பரப்பளவு 125.4 மீட்டர் நீளம், 45.4 மீட்டர் அகலம் கொண்ட 5693 ச.மீ நிலம் அமையப்பட்டுள்ளதாகவும், இதில் சுமார் 1736 ச.மீ பரப்பில் சலவைத்துறைத் தொழில் நிலையம் கட்டப்பட்டு 1971ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதாகவும், சலவைத்துறைக்கு தேவையான நீர்த்தொட்டி, சலவைக்கற்கள் கட்டப்பட்டு சலவைத்துறைக்கு தேவையான தண்ணீர் பெற ஆழ்துளை போர் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளதாகவும், நீர்த்தொட்டியின் கொள்ளவு 20,000 லிட்டர் என குறிப்பிட்டு அதற்கான புகைப்பட நகல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி புலம் சலவைத்தொழில் மேற்கொள்ளும் தொழிலாளர்கள் 1946–ஆம் ஆண்டு முதல் அனுபவித்து வருவதாகவும் மேற்படி புலத்தை பாதுகாக்க வேண்டி 1970–ஆம் ஆண்டு திரு. தருமைய்யா மற்றும் நான்கு நபர்களால் திருவொற்றியூர் நகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளதாக சங்கத் தலைவரால் தெரிவிக்கப்பட்டதாகவும் சலவைத்துறை தொழில் நிலையம் போக மேற்படி புலத்தில் 33 மீட்டர் நீளம் மற்றும் 21.50 மீட்டர் அகலம் கொண்ட 709.05 ச.மீ நீளம் காலி மனையாகவும் இந்த இடம் சலவைத்துறையினரால் துவைக்கப்படும் துணிகள் உலர்த்த தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி மனைக்கு

| | | |
|---|---|---|
| வடக்கு | – | அரசு கிடங்கு |
| தெற்கு | – | இரும்பு தொழிற்சாலை |
| கிழக்கு | – | எண்ணூர் விரைவுச்சாலை |
| மேற்கு | – | பூங்காவனம் புரம் சாலை |

அமையப்பட்டுள்ளது.

மனையின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு இப்புலத்திலிருந்து **5** மீட்டர் நிலம் ஒதுக்கப்பட்டு அம்மா உணவகம் இயங்கி வருவதாகவும் அதற்கு அருகில் **6** குடிசை வீடுகளும் மனைக்கு மேற்கு பகுதியில் பவானி அம்மன் கோயில் ஒன்றும், அதனை ஒட்டியுள்ள புலத்தில் **7** குடிசைவீடுகளும், மனைக்கு தெற்கு பகுதியில் **33** குடிசைவீடுகளும் ஆக **46** குடிசை வீடுகள் கட்டப்பட்டு சுமார் **85** நபர்கள் வசித்து வருவதாகவும் இப்புலத்தில் ஒரு சிலர் சலவைத் தொழில் மட்டும் இத்துறையில் செய்து விட்டு வெளியே வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டு இப்புலத்தில் குடிசை வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு தேவையான குடிநீர் மின்சாரம் கழிப்பிட வசதி ஆகியவை திருவொற்றியூர் நகராட்சியால் செய்து கொடுத்துள்ளதாகவும் மேலும் இவர்களுக்கு குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை மற்றும் மின் கட்டண அட்டை நகல்கள் பெறப்பட்டு இத்துடன் இணைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிராம கணக்குகளில் சர்வே எண்.**223/1** A-**0.79** மற்றும் **2** A-**0.78** ஏர்ஸ் புஞ்சை நிலம் பட்டா எண்.**223**–ன்படி திரு. தர்மைய்யா, திரு. பூபதி மற்றும் காலடிப்பேட்டை சலவைத்தொழிலாளர்கள் சங்கம் பெயரில் பதிவாகியுள்ளது. (கிராம கணக்கு நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) மேலும் நகர நில அளவையின்படி பழைய சர்வே எண்.**223/1**A பகுதி டி.எஸ்.எண்.**134**, புஞ்சை **0.5660** ச.மீ பட்டா எண்.**223** தியாகராஜன் எனவும் ஷரா காலத்தில் திருவொற்றியூர் நகராட்சி சலவைத்துறை (RPG.No.724/1 dt.10.02.2014) என குறிப்பிடப்பட்டுள்ளது (நகல் இணைக்கப்பட்டுள்ளது) மேற்படி புலத்தில் குடிசை மாற்று வாரியத்தால் குடியிருப்புகள் கட்டித்தர திருவொற்றியூர் மண்டல வார்டு குழு தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டதாகவும் தற்போது திருவொற்றியூர் மண்டல சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் மன்றத்தீர்மானம் பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம் என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மண்டலம்–1, வார்டு–14, திருவொற்றியூர் காலடிப்பேட்டை புல எண்.**134**, வார்டு–J, பிளாக் எண்.**4** ல் மொத்த வீஸ்திரணம் **5660** ச.மீட்டரில் **1736** ச.மீட்டர் சலவை தொழில் நிலையம் கட்டப்பட்டது போக மீதிமுள்ள **3924** ச.மீ நிலமானது குடிசைகளாக ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புகள் அமைந்துள்ளதால் அரசாணை எண்.**35** நாள்.**17.02.1997**ன்படி இந்நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.**10,000/–** வீதம் நிலக்கிரய தொகை பெற்றுக்கொண்டு சலவை தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி கொடுப்பதற்கு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கும்
2. மேற்படி நிலத்தில் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் **25** சதவீகிதம் கீழ் நிலை பணியாளர்களான சென்னை மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யவும்,

எனவே, மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"**23.04.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**70/2015**, நாள்.**23.04.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/0518/2015**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.172/2015 **பொருள் எண்.38**

**தானபத்திரம்**

திரு. ஜெ.முகமது அசேப் உசேன் அவர்கள் புதிய எண்.24, பழைய எண்.166, நுங்கம்பாக்கம் கிராமம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, வார்டு–113, மண்டலம்–9ல் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்ப எண். PPA/WDCNO9/10237/ 2013, நாள்:18.10.2013ன் மூலம் விண்ணப்பித்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள மனை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைப்படத்தின்படி கோடம்பாக்கம் நெடுஞ்சாலையை 27 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்த உத்தேசித்துள்ள காரணத்தினால் மனுதாரரின் மனையில் இருந்து 9.70 + 9 மீட்டர் நீளத்திற்கு 4.10 மீட்டர் அகலத்திற்கு ஆக மொத்தம் 38.34 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை சாலை விரிவாக்கத்திற்கு இரண்டாம் உரிமை திட்டத்தின் விதிமுறை 26–ன்படி வழங்க மனுதாரர் திரு.ஜெ. முகமது அசேப் உசேன் சம்மதித்து தானப்பத்திரத்தினை வழங்கியுள்ளார். மேற்படி புலம் ஆர்.எஸ்.எண்.160–ல் 0.2.75.0 ஏக்கர்ஸ் மனுதாரருக்கு சொந்தமானது என எக்மோர் நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் வழங்கியுள்ள சி.ஏ.எண். 555/13, நாள்:23.08.2013 நிரந்தர நிலப்பதிவேட்டின்படி தெரிய வருகிறது.

மனுதாரர் தானப்பத்திரம் மூலம் வழங்க சம்மதித்துள்ள புலம் பார்வையிடப்பட்டதில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் சாலை விரிவாக்கத்திற்கு சாலையை ஒட்டியுள்ள நிலம் தற்போது காலியாக உள்ளது. இதன் நீளம் 9.70+9 மீட்டர், அகலம் 4.10 மீட்டர் ஆக 38.34 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலம் மாமன்ற தீர்மானம் பெற்று தானபத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்து பின்னர் கட்டிட மற்றும் வரைப்பட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் வழங்கிய தானப்பத்திரம் வரைவை 9வது மண்டல வார்டுக் குழு பரிந்துரை செய்து தீர்மானம் எண்.44, நாள்: 20.01.2014ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே தானப்பத்திரம் மூலமாக மேற்படி இடத்தினை சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,

1. புதிய எண்.24, பழைய எண்.166, மண்டலம்–9, வார்டு–113, நுங்கம்பாக்கம் கிராமம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக அமைந்துள்ள மனை பிளாக் எண்.22, நில அளவை எண். 160–ல் அமைந்துள்ளது. விண்ணப்பதாரரிடம் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்கு சொந்தமான (நீளம் 9.70+9 மீட்டர் x அகலம் 4.10 மீட்டர் ஆக மொத்தம் 38.34 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு தரைப்பரப்பு குறியீடு (FSI) பெறாததால், அவ்விடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமை சான்றிதழ்’’ (Development Rights Certificate) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 15.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 29.04.2015 அன்று தீர்மான எண்.07/2015–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பது.ந.க.எண்/40/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.173/2015 **பொருள் எண்.39**

**தானபத்திரம்**

திருமதி. மேகலா தணிகாசலம் என்பவரின் பொது அதிகார பிரதிநிதி திரு.R.M. தியாகராஜன் அவர்கள் பழைய கதவு எண்.121, புதிய கதவு எண்.239, திருவல்லிக்கேணி ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005. R.S.No.12171, Block No.38, திருவல்லிக்கேணி கிராமம் என்ற இடத்திற்கு திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II"ன்படி திருவல்லிக்கேணி ஹைரோடு 18மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகுதான் திட்ட அனமதி வழங்க இயலும். எனவே, திருமதி. மேகலா தணிகாசலம் மனை உரிமையாளர் அவர்கள் தங்களிடத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 12.55 ச.மீ (1.42மீ x 8.84மீ=12.55 ச.மீ) நிலத்தினை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் 12.55 ச.மீ நிலத்தினை தானப்பத்திரம் மூலம் சாலை விரிவாக்கம் செய்ய வேண்டி சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கு பணித்துறைக்கு அனுப்பியுள்ளார்.

இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

1. மனை உரிமையாளர் திருமதி. மேகலா தணிகாசலத்தின் பொது அதிகார பிரதிநிதி R.M. தியாகராஜன் அவர்கள் மூலமாக 12.55 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.21,000/–யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்று கொள்ளவும்,
3. தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 15.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 29.04.2015 அன்று தீர்மான எண்.08/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**சி.தி.ந.க.எண்.பி1/038/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23–4–2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.174/2015 **பொருள் எண்.40**

**சிறப்பு திட்டங்கள் துறை – மூலதன பணிகள் – ரூ.8831 லட்சங்கள் – தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி மற்றும் தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் நிதி கோருவதற்கு – அனுமதி**

சென்னை மாநகராட்சி, சிறப்பு திட்டங்கள்துறையில் 13 மூலதன பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் (TUFIDCO under MIDF) மூலமாக 50 % நிதி ரூ.4415.50 லட்சங்கள், தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) யின் மூலமாக 40 % நிதி ரூ.3532.40 லட்சங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி மூலமாக 10 % நிதி ரூ. 883.10 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் (TUFIDCO under MIDF) மூலமாக 50 % நிதி ரூ.4415.50 லட்சங்கள், தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) யின் மூலமாக 40 % நிதி ரூ.3532.40 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு (Loan) கோரி முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் ஒப்புதலின் பேரில் இவ்வலுவலகத்தின் மூலமாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

தலைவர்/ நிர்வாக இயக்குநர், தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் அவர்கள் 25.03.2015 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சியின் மாமன்றத்தீர்மானம் பெறப்பட்டு அனுப்பி வைக்க கோரப்பட்டது. சிறப்பு திட்டங்கள் துறையில் மேற்கொள்ளும் பணிகள், மதிப்பீட்டு தொகை மற்றும் கோரப்படும் நிதி ஒதுக்கீடுகள் அடங்கிய அட்டவணை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><th rowspan="2">வ. எ ண்</th><th rowspan="2">பணியின் பெயர்</th><th rowspan="2">மதிப்பீடு (லட்சத்தில்)</th><th colspan="2">COC fund</th><th colspan="2">TUFIDCO - MIDF</th><th colspan="2">TNUDF</th></tr>
<tr><th>தொகை</th><th>%</th><th>தொகை</th><th>%</th><th>தொகை</th><th>%</th></tr>
<tr><td>1</td><td>மண்டலம்–9, வார்டு–114ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்கு பகுதியில (அகில இந்திய வானொலி நிலையம் முதல் ஆசிரியர் பயிற்சி மைய வாயில் வரை) அமைந்துள்ள பழைய சுற்றுசுவர்களை மறு கட்டமைப்பு செய்தல் மற்றும் கிரானைட் கற்கள் கொண்டு நடைபாதை அமைக்கும் பணி.</td><td>921</td><td>92.10</td><td>10</td><td>460.50</td><td>50</td><td>368.40</td><td>40</td></tr>
<tr><td>2</td><td>மண்டலம்–9, வார்டு–116ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்கு பகுதியில (ஆசிரியர் கல்லூரி நுழைவாயில் முதல் பார்த்தசாரதி கோயில் நுழைவாயில் வரை) அமைந்துள்ள பழைய சுற்றுசுவர்களை மறு கட்டமைப்பு செய்தல் மற்றும் கிரானைட் கற்கள் கொண்டு நடைபாதை அமைக்கும் பணி.</td><td>713</td><td>71.30</td><td>10</td><td>356.50</td><td>50</td><td>285.20</td><td>40</td></tr>
<tr><td>3</td><td>மண்டலம்–9, வார்டு–114ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்கு பகுதியில (பார்த்தசாரதி கோயில் முதல் மாநில கல்லூரி வரை) அமைந்துள்ள பழைய சுற்றுசுவர்களை மறு கட்டமைப்பு செய்தல் மற்றும் கிரானைட் கற்கள் கொண்டு நடைபாதை அமைக்கும் பணி.</td><td>802</td><td>80.20</td><td>10</td><td>401.00</td><td>50</td><td>320.80</td><td>40</td></tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | மண்டலம்–9, வார்டு–114ல் உள்ள மெரினா காமராஜர் சாலை மேற்கு பகுதியில (மாநில கல்லூரி முதல் சுவாமி சிவானந்தா சாலை வரை) அமைந்துள்ள பழைய சுற்றுசுவர்களை மறு கட்டமைப்பு செய்தல் மற்றும் கிரானைட் கற்கள் கொண்டு நடைபாதை அமைக்கும் பணி. | 874 | 87.40 | 10 | 437.00 | 50 | 349.60 | 40 |
| 5 | மண்டலம்–9, வார்டு–125ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 0 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 799 | 79.90 | 10 | 399.50 | 50 | 319.60 | 40 |
| 6 | மண்டலம்–9, வார்டு–125ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 450 மீட்டர் முதல் 850 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 792 | 79.20 | 10 | 396.00 | 50 | 316.80 | 40 |
| 7 | மண்டலம்–9, வார்டு–125ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 850 மீட்டர் முதல் 1300 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 788 | 78.80 | 10 | 394.00 | 50 | 315.20 | 40 |
| 8 | மண்டலம்–9, வார்டு–126ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 1300 மீட்டர் முதல் 1800 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 880 | 88.00 | 10 | 440.00 | 50 | 352.00 | 40 |
| 9 | மண்டலம்–9, வார்டு–126ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 1800 மீட்டர் முதல் 2200 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 758 | 75.80 | 10 | 379.00 | 50 | 303.20 | 40 |
| 10 | மண்டலம்–9, வார்டு–126ல் உள்ள மெரினா லூப் சாலையில் (காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை சைனேஜ் 2200 மீட்டர் முதல் 2550 மீட்டர் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலையாக புதுப்பித்து மிதிவண்டி பாதை அமைக்கும் பணி | 683 | 68.30 | 10 | 341.50 | 50 | 273.20 | 40 |
| 11 | மண்டலம்–9, வார்டு–124ல் | 565 | 56.50 | 10 | 282.50 | 50 | 226.00 | 40 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அமைந்துள்ள மயிலாப்பூர் கோயில் குளத்தை சுற்றிலும் நடைபாதை மேம்படுத்தும்பணி | | | | | | | |
| 12 | மண்டலம–13, வார்டு–181ல் ராதாகிருஷ்ணன் பிரதாக சாலையில் உள்ள மாளவிகா அவென்யூ 3வது தெருவில் நடைபாதை அமைக்கும் பணி | 152 | 15.20 | 10 | 76.00 | 50 | 60.80 | 40 |
| 13 | மண்டலம்–13, வார்டு–181ல் உள்ள ராதாகிருஷ்ணன் பிரதான சாலையில் மாளவிகா சந்திப்பில் DBM and BCCMP கொண்டு சாலை பலப்படுத்தும்பணி | 104 | 10.4 | 10 | 52.00 | 50 | 41.60 | 40 |
| | **TOTAL** | **8831** | **883.10** | | **4415.50** | | **3532.40** | |

மேற்கூறிய அட்டவணையில் இடம் பெற்றுள்ள **13** பணிகளுக்கு தமிழ் நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் (TUFIDCO under MIDF) மூலமாக **50%** நிதி ரூ.**4415.50** லட்சங்கள், தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) யின் மூலமாக **40%** நிதி ரூ.**3532.40** லட்சங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி மூலமாக **10%** நிதி ரூ.**883.10** லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**58/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**76/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சி.தி.ந.க.எண்.பி1./3450/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.175/2015 **பொருள் எண்.41**

**ஒப்பம் – 2014–15 – சிறப்பு திட்டங்கள் – மண்டலம் –9,வார்டு எண்.124ல் உள்ள மயிலாப்பூர் கோயில் தெருவில் உள்ள கோயில் குளம் சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணிக்கு – ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பம் திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி**

| | | | |
|---|---|---|---|
| 01 | பணியின் பெயர் | : | மண்டலம் –9,வார்டு எண்.124ல் உள்ள மயிலாப்பூர் கோயில் தெருவில் உள்ள கோயில் குளம் சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணி |
| 02. | மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் தீர்மான எண்/ நாள் | : | தீர்மான எண்.578/2014, நாள்.20.11.2014 |
| 03. | திட்ட குறியீட்டு எண் | : | பின்னர் பெறப்படும் |
| 04. | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு | : | 2014 – 2015 |
| | அ) பணியின் செலவினம் | : | ரூ. 4,40,32,879.08 |
| | ஆ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 4,40,328.79 |
| | இ) மேலான செலவினம் | : | ரூ. 44,03,287.91 |
| | ஈ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 11,00,821.98 |
| | உ) மற்றய எதிர்பாரா செலவு | : | ரூ. 10,82,353.45 |
| | ஊ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. 4,40,328.79 |
| | எ) சர்வீஸ் லைன் மற்றும் செலவு | : | ரூ. 50,00,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 5,65,00,000.00 |
| 05. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் | : | இ டெண்டர்<br>சென்னை மாநகராட்சி செய்தி மலர் 20 நாள்.04.12.14<br>இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 04.12.2014<br>நமது எம்.ஜி.ஆர். நாள்.04.12.2014 |
| 06. | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் | : | 09.01.2015 |
| 07. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | : | 09.01.2015 |
| 08. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | : | ஆம் |
| 09. | எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? | : | 6 (கணினி மூலம் பதிவேற்றம்) |
| 10. | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | : | 6 (கணினி மூலம் பதிவிறக்கம்) |
| 11. | ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | : | ஆறு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில் தொழில் நுட்ப பரிசீலனையில் ஆறு ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றுள்ளார். |

குறிப்பு : Two Cover System என்பதால் தொழில் நுட்ப ஒப்பத்திலும், குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த கீழ்காணும் ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றுள்ளார்.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திரு. / திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2014–15ம் ஆண்டு விலையோடு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் % அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட் | 4,40,32,879.08 | 3,86,22,500.00 | (–) 12.29 % குறைவு |

குறிப்பு: திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெ, ஒப்பந்ததாரர் குறைந்த விலைபுள்ளியாக (–) 12.29 % குறைவு அளித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 12. | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | 22.01.2015 (மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார்) |
| 13. | பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் | : | 3,86,22,500.00 (–) 12.29 % குறைவு |
| 14. | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவின் நிலை பதிவு நாள் | : | கட்டட துறையில் முதலாம் வகுப்பு நாள்.13.01.2001 |
| 15. | கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர் | : | –– |
| 16. | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ?<br>அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு | : | ஆம், மூலதன நிதி |
| 17. | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | : | 17.07.2015<br>(கால நீட்டிப்பு கடிதம் பெறப்பட்டுள்ளது) |

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஆறு ஒப்பத்தில் தொழில் நுட்ப ஒப்பத்திலும், குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு மேலும் விலைக்குறைப்பு செய்யாததால் ஒப்ப விழுக்காடு 2014–15 ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (–) 12.29 % குறைவு ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத் தொகை ரூ.3,86,22,500.00 ஆகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மேற்பார்வை பொறியாளர் / சிறப்பு திட்டங்கள் அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட், அவர்களின் ஒப்பத்தொகை ரூ.3,86,22,500.00 ஆகும். ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட் அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 12.29% குறைவான ஒப்பத்தொகை ரூ.3,86,22,500.00க்கு பணியை வழங்க ஒப்பக்குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இதற்கு ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

மேலும் திருத்திய பணியின் செலவினம் ரூ.4,40,32,879.08 மற்றும் இதர செலவினங்கள் கூடிய மொத்த மதிப்பீடு தொகையான ரூ.5,65,00,000.00 க்கு மிகையாமல் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட், அவர்களுக்கு **2014–15**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–) 12.29 %** குறைவு ஒப்பத்தொகை ரூ.**3,86,22,500.00**க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி திருவாளர். பியர்ல் இன்ஜிரியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கூட்டுறவு சங்கம் லிமிட்டெட், அவர்களுக்கு ஒப்பம் வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**64/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

> “ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **84/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சி.தி.ந.க.எண்.பி1./3451/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.176/2015 **பொருள் எண்.42**

**<u>ஒப்பம் – 2014–15 – சிறப்பு திட்டங்கள் – மண்டலம் –13,வார்டு எண்.181ல் உள்ள ராதாகிருஷ்ணன் நகர் பிராதான சாலை, மாளவிக்கா அவென்யூ 3வது தெருவில் நடைபாதை அமைக்கும் பணிக்கு – ஒப்பம் பெறப்பட்டது –திருமதி. K.ரேவதி அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி</u>**

| | | | |
|---|---|---|---|
| 01. | பணியின்பெயர் | : | மண்டலம்–13, வார்டு எண்.181ல் உள்ள ராதாகிருஷ்ணன் நகர் பிராதான சாலை, மாளவிக்கா அவென்யூ 3வது தெருவில் நடைபாதை அமைக்கும் பணி |
| 02. | மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் தீர்மான எண்/ நாள் | : | தீர்மான எண்.05/2015 நாள் 29.01.2015 |
| 03. | திட்ட குறியீட்டு எண் | : | பின்னர் பெறப்படும் |
| 04. | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு | : | 2014 – 2015 |
| | (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 1,08,53,322.92 |
| | (ஆ) மேலான செலவீனம் மட்டும் | : | ரூ. 10,85,332.29 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 2,71,333.07 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 2,71,945.26 |
| | (உ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 1,08,533.23 |
| | (ஊ) உடல் உழைப்போர் நலத்திட்டத்தொகை | : | ரூ. 1,08,533.23 |
| | (எ) சர்வீஸ் லைன் மாற்றும் செலவு | : | ரூ. 25,00,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 1,51,99,000.00 |
| 05. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் | : | இ டெண்டர்<br>சென்னை மாநகராட்சி செய்தி மலர் 20 நாள்.19.02.15<br>நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 19.02.2015<br>மக்கள் குரள் நாள். 19.02.2015 |
| 06. | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் | : | 27.03.2015 |
| 07. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | : | 27.03.2015 |
| 08. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | : | ஆம் |
| 09. | எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? | : | 2 (கணினி மூலம் பதிவேற்றம்) |
| 10. | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | : | 2 (கணினி மூலம் பதிவிறக்கம்) |
| | ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | : | இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில் தொழில் நுட்ப பரிசீலனையில் இரண்டு ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றுள்ளார். |

குறிப்பு : Two Cover System என்பதால் தொழில் நுட்ப ஒப்பத்திலும், குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த கீழ்காணும் ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றுள்ளார்.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திரு. / திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2014–15ம் ஆண்டு விலையோடு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் % அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. K.ரேவதி | 1,08,53,322.92 | 1,11,30,316.65 | (+) 2.55 % அதிகம் |

குறிப்பு: திருமதி. K.ரேவதி, ஒப்பந்ததாரர் குறைந்த விலைபுள்ளியாக (+) 2.55 % அதிகம் அளித்துள்ளார்.

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : 13.04.2015 (முதலாவது பேச்சுவார்த்தை) 16.04.2015 (இரண்டாவது பேச்சுவார்த்தை)

13. இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் : 1,11,30,316.65 (+) 2.55 % அதிகம்

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவின் நிலை பதிவு நாள் : பேருந்து சாலைகள் துறையில் முதலாம் வகுப்பு நாள்.29.08.2013

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : ––
அ) கேட்பு காசோலை எண்/நாள்
வங்கியின் பெயர்

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம், மூலதன நிதி
அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 24.06.2015

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பத்தில் தொழில் நுட்ப ஒப்பத்திலும், குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரர் திருமதி. K.ரேவதி அவர்கள் இரண்டாவது பேச்சு வார்த்தைக்கு பிறகு மேலும் விலைக்குறைப்பு செய்யாததால் ஒப்ப விழுக்காடு 2014–15 ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+) 2.55 % அதிகம் ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத் தொகை ரூ.1,11,30,316.65ஆகும். இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மேற்பார்வை பொறியாளர் / சிறப்பு திட்டங்கள் அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி. K.ரேவதி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,11,30,316.65 ஆகும். சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)0.55% குறைவாகும். ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி. K.ரேவதி அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)2.55% அதிகம். சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)0.55% குறைவாகும். ஒப்பத்தொகை ரூ.1,11,30,316.65க்கு பணியை வழங்க ஒப்பக்குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இதற்கு ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருமதி. K.ரேவதி, அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 2.55 % அதிகம். சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)0.55% குறைவாகும். ஒப்பத்தொகை ரூ.1,11,30,316.65க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி திருமதி. K.ரேவதி, அவர்களுக்கு ஒப்பம் வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.65/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.85/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பே.சா.து.ந.க.எண். பி1/ 1443 /2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.177/2015 **பொருள் எண்.43**

**<u>பேருந்து சாலைகள் துறை – 194 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளை பலப்படுத்தி புதுப்பித்து சாலை அமைக்கும் பணிக்கு – திட்ட மேலாண்மை கலந்தாளுநரை நியமிக்கும் பணிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி ஒப்பத்தை இறுதி செய்து பணியாணை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, பழுதடைந்த **194** பேருந்து தட சாலைகளை மேம்பாடுத்துவதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் நிர்வாக அனுமதி மன்றத் தீர்மான எண்.**634** (ம) **635/2014** நாள்.**29.12.2014** மற்றும் **24/2015** நாள்.**29.01.2015**படி பெறப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் **2014–15** (TURIP) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் நிதி வேண்டி TNUIFSL நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான ஒப்புதலை பெற **13.02.2015** அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் தலைமையின் கீழ் நிதித்துறை செயலாளர், நிதித்துறை (செலவீனம்), முதன்மைச் செயலாளர் (ம) நிர்வாக இயக்குநர் TNUIFSL, முதன்மைச் செயலாளர்/ஆணையர் சென்னை மாநகராட்சி மற்றும் நிர்வாக இயக்குநர் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகியோர் கலந்துக்கொண்ட திட்ட ஒப்புதல் குழுவின் (Project Santioning Commieetee) முன் சமர்ப்பிக்கப்பட்டது.

**21.03.2015** நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் குறிப்பில் திட்ட ஒப்புதல் குழுவின் நடவடிக்கையின் சுருக்கத்தில் **194** பேருந்து தட சாலை பணிகளை மேம்படுத்தும் போது முழுமையான திட்ட மேலாண்மை கலந்தாளுநர் ஒருவரை ஒப்பங்கள் மூலம் தேர்வு செய்து நியமிக்கப்பட் வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

இதுவரை சென்னை மாநகராட்சியில் எந்த ஒரு பணிக்காகவும் இது மாதிரியான ''திட்ட மேலாண்மை கலந்தாளுனர்'' நியமித்தது இல்லை என்பதால், மேலும் இதில் நிறைய பணிகளையும், நிபந்தனைகளையும் சேர்க்க வேண்டி இருப்பதால் இதே போன்று சாலை பணிகளுக்கு நெடுஞ்சாலைத் துறைகள் ஒரு அங்கமாக TNRDC நிறுவனம் ஏற்கனவே இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மேற்கொண்ட உடன்படிக்கையின் அனைத்து அம்சங்களையும் சேர்த்ததுடன் மேலும் சில நிபந்தனைகளையும் சேர்த்து ஒப்பம் கோருவதற்கு சாலை மட்ட அளவினை (Level Survey) ஆராயும் பணியில் தொடங்கி மில்லிங், கேம்பர் கரெக்ஷன், சாலை அமைத்தல், தர பரிசோதனை, பணிநிறைவு மற்றும் இறுதி பட்டி தீர்வு செய்யும் வரையில் திட்ட மேலாண்மை செய்வதற்காக ஒரு திட்டங்கள் மேலாண்மை செய்யும் கலந்தாளுனரை நியமிக்க மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதற்கான திட்ட மேலாண்மை கலந்தாளுநரை நியமிப்பதற்கு திறந்த ஒப்பந்த முறையில் (e-Tender) ஒப்பந்தங்கள் **24.03.2015** அன்று குறுகிய கால ஒப்பந்தமாக கோரப்பட்டது, **30.03.2015** அன்று நடைபெற்ற முன் ஒப்ப கூட்டத்தில் கலந்து கொண்ட கலந்தாளுனர்களின் விவரம் பின்வருமாறு

1) திருவாளர்கள். எஸ்.ஜி.எஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
2) திருவாளர்கள். சர்ட்டிபிகேஷன் இன்ஜினியர்ஸ் இன்டர்நேஷ்னல் பிரைவேட் லிமிடெட்,
3) திருவாளர்கள். வேக்ஸ் கன்சல்டன்ஸ் & மெகா ஸ்டார் சர்வே கன்சல்டன்ட் பிரைவேட் லிமிடெட்
4) திருவாளர்கள். பியுரோ வெரிட்டாஸ் பிரைவேட் லிமிடெட்

மேற்கண்ட திட்ட கலந்தாளுனர்கள் பங்கேற்று வினவிய கேள்விகளுக்கு மாநகராட்சி சார்பில் கீழ்க்கண்ட பதில்கள் அளிக்கப்பட்டது.

| வ. எண் | கலந்தாளுனர்கள் வினவிய கேள்விகள் | சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்ட பதில்கள் |
|---|---|---|
| 1 | தொடர் வங்கி விடுமுறையால் ஒப்ப நாள் நீட்டிக்குமாறு கோரப்பட்டது | ஒப்ப நாள்.01.04.2015 அன்று மாலை 3.00 மணிக்கு பதிலாக 07.04.2015 அன்று மாலை 3.00 மணியாக நீட்டிக்கப்பட்டது |
| 2 | கலந்ததற்குரியவர்கள் சென்னை மாநகராட்சி அல்லது அரசு துறையில் கட்டாயமாக பதிவு பெற்றிருக்க வேண்டுமா ? | கலந்ததற்குரியவர்கள் சென்னை மாநகராட்சி அல்லது அரசு துறையில் பதிவு செய்யவில்லை என்றால் அந்த பணி அவருக்கு வழங்கபடுமேயானால் பணி துவங்குவதற்கு முன் சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்படவேண்டும் |
| 3 | பணி மேற்கொள்ளவிருக்கும் சாலைகளின் விவரங்கள் அளிக்கப்பட வேண்டும் | 194 சாலைகளின் நீளம் மற்றும் பரப்பளவு ஒப்பந்த படிவத்தில் இணைக்கப்பட்டுள்ளது. |
| 4 | கலந்ததற்குரியவர்களின் திட்ட மேலாண்மை கலந்தாளுனர் அலுவலகம் சென்னையில் இருக்க வேண்டியது அவசியமா ? | திட்ட மேலாண்மை கலந்தாளுனர் அலுவலகம் சென்னையில் இருக்க வேண்டியது அவசியம். |
| 5 | இரவு பணி மேற்கொள்ள ஏதுவாக சென்னை மாநகராட்சி காவல் துறையிடமிருந்து அனுமதி பெற்று தருமா ? | ஆம். தேவையான காவல் துறை அனுமதி பெற்றுத் தரப்படும். |
| 6 | கலந்தற்குரியவர்கள் கூட்டு முயற்சி (Joint Venture) மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுமா ? | ஆம். கலந்தற்குரியவர்கள் கூட்டு முயற்சி (Joint Venture) மேற்கொள்ளலாம். |
| 7 | திட்ட கலந்தற்குரியவர்கள் தனியார் துறையில் மேற்கொண்ட திட்ட மேலாண்மை கலந்தாளுனர் பணிகள் ஏற்றுக்கொள்ளப்படுமா ? | அரசு துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்ட மேலாண்மை கலந்தாளுனர் பணிகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். |
| 8 | திட்ட கோரிக்கை அறிக்கையில் பணிக்காலம் 12 மாதங்களாக குறிக்கப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களால் பணிக்காலம் நீட்டிக்கப்படுமானால் கூடுதல் தொகை மாத ஆள் கணக்கில் வழங்கப்படுமா ? | பணிக்காலம் 6 மாதங்கள் ஆகும். திட்ட மேலாண்மை கலந்தாளுனர் அவர்களால் கால தாமதம் ஏற்படவில்லையெனில் ஏற்படும் கால தாமதததிற்கான செலவினங்கள் ஆட்களுக்கான மாத வருமான கணக்கில் வழங்கப்படும் |

இந்த திட்ட மேலாண்மை கலந்தாளுனர் (Project Management Consultancy) செய்ய வேண்டிய பணிகள்.

1) மேற்கண்ட பணிக்கு ஆய்வு மற்றும் பணிகள் செயல்படுத்துவதில் திட்டமிடுதலை ஒப்பந்ததாரர்களுடன் கலந்தாலோசித்து அவர்களிடம் உள்ள உபரகணங்கள், இயந்திரங்கள், வேலையாட்கள் ஆகியவற்றை கணக்கிட்டு வரைபடம் (CPM/PERT) தயாரித்து சென்னை மாநகராட்சியின் ஒப்புதல் பெறுதல்.
2) சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது களப்பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் சாலைகளை தகுதிவாய்ந்த பொறியாளர்களால் மேற்பார்வையிட்டு பணியினை முழுமையான பொறுப்போடு ஒருங்கிணைந்து ஒப்பந்த விதிகள் மூலமாகத்தான் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதனை உறுதி செய்து அந்த அறிக்கைகளை சென்னை மாநகராட்சிக்கு வாரந்தோறும் அளித்தல்.
3) சாலையின் பணிகள் மேற்கொள்வதற்கு முன்பும் பின்பும் நிலை வாரியாக மட்ட கணக்கெடுப்பு (Level Surveying) செய்யப்பட வேண்டும்.
4) ஒவ்வொறு பணிகளின் நிலையிலும் கள அளவு மேற்கொள்ளப்பட்டு அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
5) சாலைப்பணிகள் மேற்கொள்ளும் சமயத்தில் பணிக்குறித்து களப்பணியில் (Site Inspection) தரப்பரிசோதனைகள் மேற்கொண்டு அதன் அறிக்கைகளை சமர்ப்பித்தல் (as per MORTH specifications)
6) ஒவ்வொரு நிலையிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

7) சாலைப் பணிகள் மேற்கொள்ளும் போது மாற்று பாதையில் வாகனங்கள் செல்ல போக்குவரத்து காவல் துறையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும் மேலும், பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்க வேண்டும்.
8) ஒப்பந்ததாரரின் தார் கலவை நிலையங்களை ஆய்வு செய்ய வேண்டும்
9) பணி நடைபெறும் ஒவ்வொரு வார இறுதியில் அப்பணிகளின் முன்னேற்றம் குறித்து சிப்பம் வாரியாக அறிக்கையினை சமர்ப்பித்தல், இப்பணியில் எதேனும் காலதாமதம் ஏற்படின் அதற்கான மூலக்காரணங்களை கண்டறிந்து ஏற்படும் காலதாமதத்தினை நிவர்த்தி செய்ய ஏற்ற அறிக்கைகளை மாநகராட்சிக்கு சமர்ப்பித்தல்.
10) இச்சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது சாலைகளை அளந்து ஆராய்ந்து அதற்குண்டான அளவுகளை அளவு புத்தகத்தில் (M.Book) தகுதி வாய்ந்த பொறியாளர்களால் பதிவு செய்து, மாநகராட்சி பொறியாளர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தீர்வு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளவது திட்டமேலாண்மை கலந்தாளுனரின் பொறுப்பாகும்.
11) சாலைப்பணிகள் மேற்கொள்ளும்பொழுது இச்சாலைப்பணிகளில் பிறசேவைத்துறைகளின் பயன்பாடு குறித்து மதிப்பீடுகள் தயார் செய்யவும் அதன் மீது தொடர் நடவடிக்கை மேற்கொண்டு மாநகராட்சியுடன் ஒருக்கிணைந்து தொடர் நடவடிக்கைகளில் மேற்கொள்ளுதல்.
12) எந்த ஒரு சூழ்நிலையிலும் குறியீடு மற்றும் நடைமுறை விதிகள் (codes and practices) குறித்த அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளுக்கு எல்லா விதத்திலும் ஒரு சரியான முடிவு எடுப்பதற்கு மாநகராட்சிக்கு உதவுதல்.
13) ஒப்பந்த விதிகளில் (Agreement) கூறியுள்ளபடி அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுதல் திட்ட மேலாண்மை கலந்தாளுனரின் பொறுப்பாகும்.
14) சாலை பணிகள் முடிந்ததும் குறைந்தது மூன்று மாத காலத்திற்கு சாலைகளை கண்காணித்து தரத்தை உறுதிப்படுத்தபட வேண்டும் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றை கண்டறிந்து நிவர்த்தி செய்ய ஆலோசனை வழங்க வேண்டும்.

இந்தப்பணிக்காக இவர்கள் நியமிக்க வேண்டிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் விவரம் கீழ்வருமாறு:

**I:-** தொழில் நுட்ப அலுவலர்கள் (Professional Staff)

| வ. எண் | பதவி | கல்வித்தகுதி | அனுபவம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திட்டத் தலைவர்– மூத்த நெடுஞ்சாலை பொறியாளர் | சிவில் பொறியியல் துறையில் முதுகலை பட்டப்படிப்பு (பி.ஜி.) | தகுதி வாய்ந்த துறையில் 15 ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 2. | போக்குவரத்து மற்றும் போக்குவரத்து துறையில் தனி சிறப்பு | பி.இ., சிவில் | 10 ஆண்டுகளுக்கு மேல் – குறிப்பிட்ட துறையில் அனுபவம் | 1 |
| 3. | மூத்த அதிகாரி – சாலை பொறியாளர் | பி.இ., சிவில் | சாலை சம்மந்தப்பட்ட துறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் | 1 |
| 4. | மூத்த தரக்கட்டுப்பாட்டு பொறியாளர் | பி.இ., சிவில் | 10 ஆண்டுகளுக்கு மேல் தரக்கட்டுப்பாட்டு துறையில் அனுபவம் | 1 |
| 5. | மூத்த சாலைப் பாதுகாப்பு பொறியாளர் (Safety Engineer) | பி.இ., சிவில் | சாலைப்பாதுகாப்புத் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் | 1 |
| 6. | மூத்த குவாண்டிட்டி சர்வே இன்ஜினியர் | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் | 1 |

**II:-** துணை தொழில் நுட்ப அலுவலர்கள் (Sub Professional Staff)

| வ. | பதவி | கல்வித்தகுதி | அனுபவம் | நபர்களின் |
|---|---|---|---|---|

| எண் | | | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நெடுஞ்சாலை பொறியாளர் | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் | 3 |
| 2. | உதவி நெடுஞ்சாலை பொறியாளர் | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் | 9 |
| 3. | திட்ட பொறியாளர் (பிளானிங் இன்ஜினியர்) | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 4. | உதவி தரக்கட்டுப்பாட்டு பொறியாளர் | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் தரக்கட்டுப்பாட்டு துறையில் அனுபவம் | 9 |
| 5. | குவாண்டிட்டி சர்வே பொறியாளர் | பி.இ., சிவில் | 5ஆண்டுகளுக்கு மேல் குவாண்டிட்டி சர்வே துறையில் அனுபவம் | 9 |
| 6. | சுற்றுபுற சூழல் பொறியாளர் | பி.இ., சிவில் (அ) சுற்றுபுற சூழல் பிரிவில் பட்டப்படிப்பு | 5 ஆண்டுகளுக்கு மேல் சுற்றுபுற சூழல் துறையில் அனுபவம் | 1 |
| 7. | தொழில்நுட்ப உதவியாளர் | பி.இ., சிவில் (அ) பட்டயம் சிவில் | பி.இ., சிவில் 2 ஆண்டுகளுக்கு மேல் / பட்டயம் சிவில் 5 ஆண்டுகளுக்கு மேல் | 30 |
| 8. | கணக்காளர் | பி.காம் பட்டப்படிப்பு | 10 ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 9. | காசாளர் | பட்டப்படிப்பு | 5 ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 10. | சட்ட ஆலோசகர் | –– | –– | – |

**III:-** அலுவலக உதவியாளர்கள் (Support Staff)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக மேலாளர் | பட்டப்படிப்பு | 2 ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 2 | கணினி ஆப்ரேட்டர் | பட்டப்படிப்பு | 2 ஆண்டுகளுக்கு மேல் | 1 |
| 3 | காவலாளர் | –– | –– | 2 |
| 4 | அலுவலக உதவியாளர் (Office Boy) | –– | –– | 2 |

மேலே கூறப்பட்ட **I** மற்றும் **II** அட்டவனையில் கூறப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவருக்கும் ஸ்மார்ட் போன்கள் வழங்க வேண்டும்.

**IV:-** இந்த நிறுவனம் இந்த பணிகளுக்காக நிறுவ வேண்டிய கட்டமைப்புகள்:–

திட்ட மேலாண்மை கலந்ததற்குரியவர்களுக்கு தேவையான அலுவலக பொருட்கள் மற்றும் இதர கட்டமைப்புகளை உள்ளடக்கிய உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் யாவும் திட்ட மேலாண்மை கலந்ததற்குரியவர்களே சொந்தமாக கொண்டுவர வேண்டும். மேலும் ஆய்வு செய்வதற்கான வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தி கொள்ள வேண்டும். சாலைப்பணியின் தினசரி நடைபெறும் பணிகள் விவரம், அதற்கான வாரந்திர அறிக்கை மற்றும் மாதந்திர அறிக்கை மாநகராட்சி தேவைக்கேற்ப தயாரித்து சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**V:-** இந்த நிறுவனம் இந்த பணிகளுக்காக நிறுவ வேண்டிய தரக்கட்டுப்பாடு உபகரணங்கள்:

1) தார் அளவு பரிசோதனை உபகரணங்கள் (Binder content test equipment) 10 எண்ணிக்கை
2) சாலையின் திடத்தன்மையை அறியகூடிய (Compaction test equipment) உபகரணங்கள் 2 எண்ணிக்கை
3) தார் கலவையின் வெப்பத்தை அளக்கக்கூடிய வெப்ப மானிகள் (Infra Red Temperature Gun) 15 எண்ணிக்கை

4) சல்லடை பகுப்பாய்வு உபகரணங்கள் (Sieve analysis equipment) 10 எண்ணிக்கை
5) தார் சாலையின் நீள வாட்டம் மற்றும் பக்க வாட்டத்தின் வாட்டத்தை அளக்கும் சட்டங்கள் (Camber Board) 15 எண்ணிக்கை
6) தார் சாலையின் தடிமனை அளக்கக்கூடிய கருவிகள் (Thickness Gauge) 15 எண்ணிக்கை

ஒப்ப நாளான 07.04.2015 அன்று தொழில் நுட்ப ஆவணத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது. அதில் ஒரே ஒரு கலந்தாளுனர் திருவாளர்கள். வேக்ஸ் கன்சல்டன்ஸ் மற்றும் மெகா ஸ்டார் சர்வே கன்சல்டன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (JV at 60:40) மட்டுமே கலந்துக்கொண்டார்கள். அவர்களில் அரசு துறைக்கு பணி செய்த முன் அனுபவம் உள்ள நிறுவனம் பிரதானமாக இந்த கூட்டு முயற்சியில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் TNRDC நிறுவனத்தில் இம்மாதிரியான இரு திட்ட மேலாண்மை கலந்தாளுநர் பணிகளை மேற்கொண்டுள்ள திருவாளர்கள்.வேக்ஸ் கன்சல்டன்ஸ் நிறுவனம் 60 சதவீதம் பங்குகளையும் மெகா ஸ்டார் சர்வே கன்சல்டன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் 40 சதவீதம் பங்குகளையும் கொண்ட கூட்டு முயற்சி நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்களின் தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பீடு செய்ததில் 100க்கு 86.5 புள்ளிகள் (தகுதி பெற 80 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும்) பெற்று தகுதி அடைந்துள்ளார்கள். அவர்களின் நிதி ஆவணம் 08.04.2015 அன்று திறக்கப்பட்டது. இந்த நிதி ஆவணத்தில் கலந்தாளுனர் தொகையாக ரூ.7,64,55,000/– குறிப்பிட்டிருந்தார்கள் இதில் சேவை வரி 14 சதவீதம் சேர்த்து அளித்துள்ளார்கள். இந்த ஒப்பத் தொகையானது சாலை பணிகளின் மதிப்பீடான ரூ.383.00 கோடி தொகையுடன் ஒப்பிடும் போது 2 சதவீதம் ஆகும்.

இந்த ஒப்பத்தொகையானது மேலும் விலைக்குறைப்பு அளிக்க கோரியபோது கீழ்க்கண்ட கோரிக்கைகள் கலந்தாளுனர் சார்பில் முன்வைக்கப்பட்டது. இந்த 194 சாலை புதுப்பிப்பதற்கான பணிகள் 33 ஒப்பந்ததாரர்களைக்கொண்டு குறுகிய ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்பதாலும், 194 சாலைகள் வெவ்வேறு இடங்களில் அமைவதாலும் திட்ட கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேல் தேவைப்படுவதாக தெரிவித்தனர். மேலும், சாலை பணிகள் இரவு நேரத்தில் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்பதாலும் ஒப்பந்ததாரர்களின் தார் கலவை மையங்கள் வெவ்வேறு இடங்களில் அதாவது நல்லம்பாக்கம், திருநீர்மலை, திருநின்றவூர் மற்றும் பொன்னேரியில் அமையப்பட்டுள்ளதால் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும், இதனால் கலந்தற்குரியவர்களுக்கு கூடுதல் செலவினங்கள் எற்படுவதாகவும் தெரிவித்தனர். இதனை தமிழ்நாடு ரோடு டெவலப்மேன்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் (TNRDC) அவர்களும் திருவாளர்கள் VKS Infratech Management Pvt Limited in Joint venture M/s.Vax Consultants Pvt Limited அவர்களும் இணைந்து திட்ட மேலாண்மைக்கான பணி உடன்படிக்கை மேற்கொண்ட புத்தகத்தின் நகலோடு திருவாளர்கள். திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd., அவர்களின் உடன்படிக்கையின் நகலோடு ஒப்பீட்டு பார்த்து கீழ்க்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | 194 சாலைகள் திட்டம் – சென்னை மாநகராட்சி | கிழக்கு கடற்கரை சாலை விரிவாக்க பணி – TNRDC |
|---|---|---|---|
| வ. எண் | | திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd | திருவாளர்கள் VKS Infratech Management Pvt Limited in Joint venture M/s.Vax Consultants Pvt Limited |
| 1 | பணியின் பெயர் | சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 194 பேருந்து தட சாலைகளை புதுப்பிக்கும் பணி (சிப்பம் 1 முதல் 33 வரை) | கிழக்கு கடற்கரை சாலையை விரிவுபடுத்தும் பணி |
| 2 | ஒப்பந்தத்தின் எண்ணிக்கை | 33 | 1 |
| 3 | பணியின் மதிப்பு | ரூ.383.00 கோடி | ரூ.277.00 கோடி |
| 4 | பணிக்காலம் | 6 மாதங்கள் | 27 மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 5 | சாலைகளின் எண்ணிக்கை | 194 | 1 |
| 6 | சாலைகளின் நீளம் | 168 கி.மீ | 33 கி.மீ |
| 7 | தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கை | 68 | 20 |
| 8 | ஒப்பந்ததாரரின் தார் கலவை நிலையம் | 30 இடங்களில் | 1 இடம் |
| 9 | பணி நடைபெறும் நேரம் | இரவில் மட்டும் தான் மேற்கொள்ள இயலும் | பகல் மற்றும் இரவில் மேற்கொள்ளலாம் |
| 10 | போக்குவரத்து | மிகுந்த நெருக்கடியான போக்குவரத்தில் செய்ய வேண்டும் | போக்குவரத்து இல்லை |

இதனை தொடர்ந்து திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd., அவர்கள் 13.04.2015 அன்று அளித்த முதல் விலைக்குறைப்பு கடிதத்தில் ரூ.6,27,98,400/–ம் தனியாக சேவை வரி 14 சதவீதம் 87,91,776/–ம் இவற்றை சேர்த்து ரூ.7,15,90,176/– அளித்திருந்தார்கள்.

மீண்டும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் 16.04.2015 அன்று அவர்கள் அளித்த இரண்டாவது விலைக்குறைப்பு கடிதத்தில் ரூ.5,94,34,200/– தனியாக சேவை வரியாக 14 சதவீதம் ரூ.83,20,788/– அளித்திருந்தார்கள்.

மீண்டும் தமிழ்நாடு ரோடு டெவலப்மேன்ட் கம்பெனி அண்டு பிரைவேட் லிமிடெட் அவர்கள் வழங்கிய பணி ஆணையில் குறிப்பிட்ட தொகையுடன் ஒப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்தியபின் கலந்தாளுனர் 20.04.2015 அன்று இறுதியாக மேலும் ஒரு விலைக்குறைப்பு கடிதம் அளித்தார்கள்.

இதில் ரூ.5,60,70,000/–ம் இதற்கு தனியாக சேவை வரி 14 சதவீதம் சேர்த்து (ரூ.78,49,700/– ) மொத்த தொகையாக ரூ.6,39,19,800/– அளித்துள்ளார்கள். கலந்தாளுனர் ஏற்கனவே படிக்கப்பட்ட அனைத்து திட்ட மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு இனங்களுக்கும் அளித்த தொகை விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பொருள் | தொகை |
|---|---|---|
| 1 | தொழில் துறை அலுவலர்கள் (Professional Staff) | 28920000.00 |
| 2 | அலுவலக உதவியாளர்கள் (Support Staff) | 600000.00 |
| 3 | போக்குவரத்து செலவீனம் | 7500000.00 |
| 4 | அலுவலக வாடகை | 600000.00 |
| 5 | அலுவலக பொருட்கள் மற்றும் பயன்பாடுகள் | 1800000.00 |
| 6 | அலுவலக தளவாடங்கள் மற்றும் உபகாரணங்கள் | 3210000.00 |
| 7 | அறிக்கை மற்றும் ஆவணங்கள் (Reorts and Documents) | 540000.00 |
| 8 | சர்வே உபகரணம் முதலியன (Survey Equipments and Survey Party etc.,) | 7200000.00 |
| 9 | தரக்கட்டுபாட்டு கருவிகள் (Quality Control Equipments) | 5700000.00 |
| | தொகை ரூ. | 56070000.00 |
| | சேவை வரி 14 சதவீதம் | 7849800.00 |
| | மொத்த தொகை ரூ. | 63919800.00 |

| | |
|---|---|
| பணியின் மதிப்பு | ரூ.383.00 கோடி |
| கலந்தாளுனருக்காக நிர்ணயிக்கப்பட்ட சாலை பணிகளின் மதிப்பீட்டின்படி விலை விகிதம் | 2 விழுக்காடு |
| கலந்தாளுனர் ஒப்பத்தில் அளித்த விலைவிகிதம் | 2 விழுக்காடு |

| | |
|---|---|
| 13.04.2015 அன்று நடைபெற்ற முதல் பேச்சுவார்த்தைக்குப்பின் கலந்தாளுனர் அளித்த விலை விகிதம் (சேவை வரி தவிர்த்து) | 1.64 விழுக்காடு |
| 16.04.2015 அன்று நடைபெற்ற இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப்பின் கலந்தாளுனர் அளித்த விலை விகிதம் (சேவை வரி தவித்து) | 1.55 விழுக்காடு |
| 20.04.2015 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின் இறுதியாக கலந்தாளுனர் அளித்த விலை விகிதம் (சேவை வரி தவிர்த்து) | 1.46 விழுக்காடு |

கலந்தாளுநரை நியமிக்க நடைமுறையில் உள்ள பரிந்துரைக்கப்பட்ட அலுவலக தோராய மதிப்பீட்டுத் தொகை சாலை புதுப்பிக்கும் பணியின் மதிப்பில் 2.0% அதாவது ரூ.7.66 கோடி ஆகும். இறுதியாக பேச்சுவார்த்தைக்குப்பின் திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd., அவர்கள் ஒப்புக்கொண்ட தொகை (சேவைவரித் தவிர்த்து) ரூ.5,60,70,000/– ஆகும். இதனை சாலை பணிகள் மேற்கொள்ளும் பணிகளின் மதிப்பீட்டில் ஒப்பிடும் போது 1.46% சதவீதம் ஆகும். சேவை வரி 14 சதவீதம் சேர்த்து ஒப்பீடும் போது 1.67 சதவீதம் ஆகும்.

இதே போன்ற பணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறையின் ஒரு அங்கமான TNRDC அளித்த கலந்தாளுனர் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>TNRDCயின் திட்ட மேலாண்மை கலந்தாலுனர்களின் விவரம்:–</u>**

| வ. எண் | கோப்பு எண். | TNRDCயின் பணி விவரம் | ஒப்பந்ததாரரின் சாலை களின் எண்ணிக்கை/ சாலையின் நீளம்/ பணியின் மதிப்பு | பணியின் தன்மை | பணியாளர் எண்ணிக்கை | கலந்தாளுனர் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | TNRDC/CD /558/2014 dated: 10.09.2014 | Supervisory Consultancy Services for the work widening of East Cost Road (ECR) from Double Lane Into Four Lane from KM 22/300 to KM 55/800, Including Improvements to curved Stretches - 13 Nos & Junctions - 7 Nos from KM 55/800 to KM 135/500 in Chennai, in the state of Tamil Nadu, India | 1 சாலை / 33 கி.மீ / ரூ.277 கோடி | Supervisory Consultancy services for the road works | 20 | 5,15,74,750/- |

**<u>சென்னை மாநகராட்சியின் திட்ட மேலாண்மை கலந்தாலுனர்களின் விவரம்:–</u>**

| வ. எண் | பணியின் பெயர் | 194 சாலைகள் திட்டம் – சென்னை மாநகராட்சி |
|---|---|---|
| | | திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd |
| 1 | | சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 194 பேருந்து தட சாலைகளை புதுப்பிக்கும் பணி (சிப்பம் 1 முதல் 33 வரை) |
| 2 | ஒப்பந்தத்தின் எண்ணிக்கை | 33 |
| 3 | பணியின் மதிப்பு | ரூ.383.00 கோடி |
| 4 | பணிக்காலம் | 6 மாதங்கள் |
| 5 | சாலைகளின் எண்ணிக்கை | 194 |
| 6 | சாலைகளின் நீளம் | 168 கி.மீ |
| 7 | தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கை | 68 |
| 8 | ஒப்பந்ததாரரின் தார் கலவை நிலையம் | 30 இடங்களில் |
| 9 | பணி நடைபெறும் நேரம் | இரவில் மட்டும் தான் மேற்கொள்ள இயலும் |
| 10 | போக்குவரத்து | மிகுந்த நெருக்கடியான போக்குவரத்தில் செய்ய வேண்டும் |

மேலும், சென்னையில் உலகமுதலீட்டாளர்கள் சம்மேளனம் விரைவல் நடைபெற இருப்பதாலும் பருவ மழை துவங்குவதற்கு முன் சாலை பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி திருவாளர்கள் Vax Consultants joint venture with Mega Star Survey Consultant (I) Pvt.Ltd., அவர்கள் இறுதியாக அளித்த ஒப்பத் தொகை ரூ.5,60,70,000/– (சேவை வரி தவிர்த்து) இந்த அனைத்து விவரங்களும் ஒப்பங்கள் மற்றும் உயர்மட்ட தொழில் நுட்பம் குழுமத்தின் பரிசீலனைக்காக 24.04.2015 அன்று வைக்கப்பட்டது. எல்லாவற்றையும் தெளிவாக ஆராய்ந்த இத்தொழில்நுட்பக்குழு இதனை ஏற்றுக் கொண்டது. எனவே, மேற்கண்டவாறு பணிகள் செய்ய பணி ஆணை வழங்கிடவும் மேற்படி கலந்தாளுனருக்கு ஒப்பந்ததாரர் மேற்கொள்ளும் சாலை பணிகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட தொகையின்படி 1.46 சதவீதம் வழங்கவும் மற்றும் இப்பணிக்கான பட்டி தீர்வு செய்வதற்கு மதிப்பீட்டில் உள்ள சிறு மேற்பார்வை செலவீனம் என்ற தலைப்பின்கீழ் உள்ள 2.5 விழுக்காட்டில் வரையறுக்கப்பட்ட தொகையில் பட்டி தீர்வு செய்வதற்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.66/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.86/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/1791/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.178/2015 **பொருள் எண்.44**

**சென்னை மாநகராட்சி – பேருந்து தட சாலைகள் துறை – N.S.C. போஸ் சாலையில் வடக்கு பகுதியில் உள்ள நடைபாதையை புதுப்பிக்கும் பணிக்கு – சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு 2014– 15ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ.249.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

சென்னை உயர்நீதிமன்றத்தின் வடக்கு பகுதியில் உள்ள N.S.C. போஸ் சாலை மிகவும் போக்குவரத்து நெருக்கம் மிகுந்த பகுதியாகும். மேலும் இங்கு முக்கியமான மொத்த விற்பனை கடைகள், அதிகளவில் நடைபாதை கடைகள் உள்ளன. இச்சாலையின் அணுகு சாலைகள் மிகவும் குறுகலாகவும், வணிக நடவடிக்கைகள் மிகுந்தும் காணப்படுகின்றது. இந்த அணுகுச் சாலைகளில் மக்கள் நடமாட்டம் மிக அதிகமாக உள்ளது. மேலும் இந்த சாலையில், சென்னை உயர் நீதிமன்றம், பிராட்வே பேருந்து நிலையம் போன்ற மிக முக்கியமான மக்கள் புழக்கம் அதிகமாக உள்ள இடங்களாக உள்ளன.

சென்னை உயர்நீதிமன்றம் N.S.C. போஸ் சாலையில் உள்ள வாகன நிறுத்துமிடம் தொடர்பான வழக்கு எண். **33812/2014** தனது தீர்ப்பாக உடனடியாக வாகனங்களை நிறுத்தவும் மக்கள் சிரமமின்றி நடக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளது. மேலும், மேற்கூறிய N.S.C. போஸ் சாலையில் ITDP மூலம் ஒரு சர்வே செய்ததில் மக்களில் பெரும் பகுதியாளர் ஏறக்குறைய **60**% சாலையில் ஆக்கிரமித்து நடக்கின்றனர் எனவே, மேற்கூறிய சாலைக்கு மக்கள் நடந்து செல்ல உலகத்தரம் வாய்ந்த நடைபாதை அமைப்பது மிக அவசியமாகிறது.

எனவே, பொதுமக்களின் நலன் மற்றும் அவசர அவசியத்தையும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு N.S.C. போஸ் சாலை வடக்குப் பகுதியில் உள்ள நடைபாதையை உடனடியாக சீர்செய்ய வேண்டிய கட்டாயமாகிறது. எனவே, உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க, போக்குவரத்து வரைபட வல்லுநர்களிடமிருந்து N.S.C. போஸ் சாலையில் நடைபாதை அமைக்க வடிவமைப்பு பெறப்பட்டது. தற்போது சாலையின் வடக்குப் பகுதியில் உள்ள நடைபாதை பழுதடைந்து சீரற்று உள்ளது. எனவே, புதிதாக ரப்பர் மோல்ட் கான்கிரீட் கெர்பு (Kerb), ரப்பர் மோல்ட் கான்கிரீட் கற்கள், கான்கிரீட் சாய்வு அமைப்புகள் (Ramp), அணுகு சாலைகளின் சந்திப்பில் கான்கிரீட்டாலான நடைமேடை (Table Top), அலங்கார மின்விளக்குகள், வாகனங்கள் ஏறாதவாறு கிரானைட் தடுப்புகள் (Bollards) மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு இடைவெளி இல்லாமல் சீரான நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.**249.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டில் வாகனம் நிறுத்துமிடத்தில் வெள்ளை வண்ணத்தில் கோடுகள் (Thermoplastic) பிரதிபலிக்கும் மிளிர்வான்கள் (Road marking studs), ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இப்பணியை மேற்கொள்ள **2015–16**ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**TURIF - நிதியின் கீழ் நடைபாதை அமைக்கும் பணி 2015–2016**

| வ. எண். | மண்டலம் | வார்டு | சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | பணியின் மதிப்பு இலட்சத்தில் ரூ. | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 59 & 60 | N.S.C. போஸ் சாலை (வடக்குப் பகுதி) | 1000 | 6000 | 238.76 | 249.50 |

மேற்கண்ட பணிகளுடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட ரூ.249.50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி எதிர்நோக்கி இப்பணிக்கான ஒப்பம் கோரவும் சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.67/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண். 87/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/1792/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.179/2015 **பொருள் எண்.45**

**பேருந்து தட சாலைகள் துறை – N.S.C. போஸ் சாலையில் தெற்கு பகுதியில் உள்ள நடைபாதையை புதுப்பிக்கும் பணிக்கு – சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு 2014– 15ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ரூ.248.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

சென்னை உயர்நீதிமன்றத்தின் தெற்கு பகுதியில் உள்ள N.S.C. போஸ் சாலை மிகவும் போக்குவரத்து நெருக்கம் மிகுந்த பகுதியாகும். மேலும் இங்கு முக்கியமான மொத்த விற்பனை கடைகள், அதிகளவில் நடைபாதை கடைகள் உள்ளன. இச்சாலையின் அணுகு சாலைகள் மிகவும் குறுகலாகவும், வணிக நடவடிக்கைகள் மிகுந்தும் காணப்படுகின்றது. இந்த அணுகுச் சாலைகளில் மக்கள் நடமாட்டம் மிக அதிகமாக உள்ளது. மேலும் இந்த சாலையில், சென்னை உயர் நீதிமன்றம், பிராட்வே பேருந்து நிலையம் போன்ற மிக முக்கியமான மக்கள் புழக்கம் அதிகமாக உள்ள இடங்களாக உள்ளன.

சென்னை உயர்நீதிமன்றம் N.S.C. போஸ் சாலையில் உள்ள வாகன நிறுத்துமிடம் தொடர்பான வழக்கு எண். 33812/2014 தனது தீர்ப்பாக உடனடியாக வாகனங்களை நிறுத்தவும் மக்கள் சிரமமின்றி நடக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளது. மேலும், மேற்கூறிய N.S.C. போஸ் சாலையில் ITDP மூலம் ஒரு சர்வே செய்ததில் மக்களில் பெரும் பகுதியாளர் ஏறக்குறைய 60% சாலையில் ஆக்கிரமித்து நடக்கின்றனர் எனவே, மேற்கூறிய சாலைக்கு மக்கள் நடந்து செல்ல உலகத்தரம் வாய்ந்த நடைபாதை அமைப்பது மிக அவசியமாகிறது.

எனவே, பொதுமக்களின் நலன் மற்றும் அவசர அவசியத்தையும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு உள்ள N.S.C. போஸ் சாலை தெற்குப் பகுதியில் நடைபாதை உடனடியாக சீர்செய்ய வேண்டிய கட்டாயமாகிறது. எனவே, உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க, போக்குவரத்து வரைபட வல்லுநர்களிடமிருந்து N.S.C. போஸ் சாலையில் நடைபாதை அமைக்க வடிவமைப்பு பெறப்பட்டது. தற்போது சாலையின் தெற்குப் பகுதியில் உள்ள நடைபாதை பழுதடைந்து சீரற்று உள்ளது. எனவே, புதிதாக ரப்பர் மோல்ட் கான்கிரீட் கெர்பு (Kerb), ரப்பர் மோல்ட் கான்கிரீட் கற்கள், கான்கிரீட் சாய்வு அமைப்புகள் (Ramp), அணுகு சாலைகளின் சந்திப்பில் கான்கிரீட்டாலான நடைமேடை (Table Top), அலங்கார மின்விளக்குகள், வாகனங்கள் ஏறாதவாறு கிரானைட் தடுப்புகள் (Bollards) மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு இடைவெளி இல்லாமல் சீரான நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.248.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டில் வாகனம் நிறுத்துமிடத்தில் வெள்ளை வண்ணத்தில் கோடுகள் (Thermoplastic) பிரதிபலிக்கும் மிளிர்வான்கள் (Road marking studs), ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இப்பணியை மேற்கொள்ள 2015–16ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**TURIF - நிதியின் கீழ் நடைபாதை அமைக்கும் பணி 2015–2016**

| வ.எண். | மண்டலம் | வார்டு | சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | பணியின் மதிப்பு இலட்சத்தில் ரூ. | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 59 & 60 | N.S.C. போஸ் சாலை (தெற்குப் பகுதி) | 1000 | 5000 | 238.26 | 248.90 |

மேற்கண்ட பணிகளுடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட ரூ.248.90 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி எதிர்நோக்கி இப்பணிக்கான ஒப்பம் கோரவும் சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 78ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.68/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.88/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பே.சா.து.ந.க.எண். பி1/1800/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.180/2015 **பொருள் எண்.46**

**பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 10ல் உள்ள பேருந்து தட சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டது – நடைபாதை வடிவமைப்பு நியமிக்க வேண்டியுள்ளதாலும் மற்றும் பழைய 2013–14ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் நடைபாதைகள் அமைக்க கோரிய ஒப்பங்கள் மற்றும் மதிப்பீடுகளை இரத்து செய்வதற்கு அனுமதி**

சென்னை மாநராட்சி, பேருந்து தட சாலைகள் துறை, மண்டலம் 10ல் உள்ள பேருந்து தட சாலைகளில் நடைபாதைகள் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்ட சாலைகளுக்கு 2013–14ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மன்றத்தின் மூலமாக பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

| வ. எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | மதிப்பீட்டு எண் | மதிப்பீட்டிற்கு மன்றத்தின் தீர்மான எண். மற்றும் நாள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | பே.சா.து.ந.க.எண்.பி1/5021/2013 மண்டலம் 10, வார்டு எண்.140ல் உள்ள பேருந்து தட சாலையான கோவிந்தன் சாலை | 142.75 | BR/2013-14/30634 | 139/2014 நாள் 19.02.2014 | ஒப்பம் பரிசீலனையில் உள்ளது |
| 2 | பே.சா.து.ந.க.எண்.பி1/5020/2013 மண்டலம் 10, வார்டு எண்.140ல் உள்ள பேருந்து தட சாலையான கோடம்பாக்கம் சாலை | 136.55 | BR/2013-14/30636 | 151/2014 நாள் 19.02.2014 | ஒப்பம் பரிசீலனையில் உள்ளது |
| 3 | பே.சா.து.ந.க.எண்.பி1/5026/2013 மண்டலம் 10, வார்டு எண்.140ல் உள்ள பேருந்து தட சாலையான மேற்கு ஜோன்ஸ் ரோடு | 142.70 | BR/2013-14/30272 | 141/2014 நாள் 19.02.2014 | ஒப்பம் பரிசீலனையில் உள்ளது |
| 4 | பே.சா.து.ந.க.எண்.பி1/5022/2013 மண்டலம் 10, வார்டு எண்.141ல் உள்ள பேருந்து தட சாலையான பர்கிட் ரோடு | 145.50 | BR/2013-14/30652 | 154/2014 நாள் 19.02.2014 | ஒப்பம் பரிசீலனையில் உள்ளது |
| 5 | பே.சா.து.ந.க.எண்.பி1/5018/2013 மண்டலம் 10, வார்டு எண்.136ல் உள்ள பேருந்து தட சாலையான பசூல்லா ரோடு | 131.44 | BR/2013-14/30661 | 143/2014 நாள் 19.02.2014 | ஒப்பம் பரிசீலனையில் உள்ளது |

மேற்கண்ட 5 சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணிகளுக்காக ஒப்பம் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மேலும், நிர்வாக நலன் கருதி சென்னை மாநகராட்சியில் பேருந்து தட சாலைகள் துறை தலைமையகத்தில் இயங்கிக்கெண்டிருந்த துறை வட்டார அலுவலகம் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு என மூன்றாக பிரிக்கப்பட்டு வட்டார அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தன.

28.11.2014 அன்று முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வட்டார அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்ட பேருந்து சாலைகள் துறை ஒன்றாக ஒருங்கணைக்கப்பட்டு தலைமையத்தில் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சிறப்பு திட்டங்கள் துறையின் சுற்றறிக்கையில் இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் 24.10.2014 அன்று நடத்தப்பட்ட வாரந்திர கூட்டத்தில் புதிய நடைபாதைகளுக்கான வடிவமைப்புகள் மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால், ஏற்கனவே வடிவமைப்பிலுள்ள புதிய நடைபாதைகளை அமைப்பதற்கு மேற்கொண்ட ஒப்பங்களை இரத்து செய்யுமாறும் மற்றும் திருத்திய மதிப்பீடுகளை தயாரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மேற்கண்ட 5 நடைபாதை பணிகளுக்கு நடைபாதை வடிவமைப்பு கலந்ததற்குரியவர்கள் நியமிக்கப்படாமல் உள்ளது. மதிப்பீட்டுகள் அனைத்தும் 2013–14ம் ஆண்டு அலுவலக விலையில் தயாரிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் உள்ளதாலும் மேற்கொண்டு இப்பணியினை செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

எனவே,

1) மேற்கண்ட 5 நடைபாதை பணிகளுக்காக பெறப்பட்ட ஒப்பந்தங்களை இரத்து செய்யவும் மற்றும் ஒப்பந்ததாரர்கள் செலுத்திய முன் வைப்புத் தொகை, கூடுதல் பிணை வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை திருப்பி அளிக்கவும்
2) மேற்கண்ட 5 நடைபாதை பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட 2013–14ம் ஆண்டு விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கிய மன்றத்தீன் தீர்மானங்களை இரத்து செய்யவும்
3) மேற்கண்ட 5 நடைபாதை பணிகளுக்கு நடைபாதை வடிவமைப்பதற்கு கலந்ததற்குறியவர்களை (Architecture Design for Footpath from Consultant) நியமித்து அவர்களிடத்திலிருந்து வடிவமைப்பு பெற்ற பின்பு மதிப்பீடுகள் தயாரித்து ஒப்புதல் பெறவும்
4) புதிய மதிப்பீடுகள் தயாரித்து ஒப்பங்கள் கோரவும்

மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.60/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.78/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி4/ 1786 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.181/2015 பொருள் எண்.47

**பேருந்து சாலைகள் துறை – கூடுதல் Empanelment – கட்டடக்கலை நிபுணர்கள் – நகர்புற வடிவமைப்பு (Urban Design) பணிக்கு – ஒப்பங்கள் கோர அனுமதி**

மன்றத் தீர்மான எண்: 353/2014 நாள் 26.06.2014படி சென்னை மாநகராட்சியால் தெரிவு செய்யப்பட்டு 10 கட்டடக்கலைஞர்களின் வடிவமைப்பு பெற 21.05.2014 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

இவ்வொப்பத்தில் நகர்புற வடிவமைப்பு (Urban Design) பணிக்கு குறைந்த அளவே விண்ணப்பித்திருந்தனர். தற்போது, பேருந்து சாலைகளில் நடைபாதைகள் அமைக்கும் பணி, நவீன பேருந்து நிழற்குடைகளின் உள்ளே விளம்பர பலகைகள் வடிவமைக்கும் பணி, சாலைகளின் சந்திப்புகள் மேம்படுத்தும்பணி, மத்திய தடுப்பு சுவர் மற்றும் போக்குவரத்து தீவுகள் மேம்படுத்தும் பணி ஆகியவை நடைபெற உள்ளது.

நடைபாதை அமைக்கும் பணிக்காக 471 சாலைகளில் 26 சாலைகளுக்கு கட்டடக்கலைஞர்களின் வடிவமைப்பு பெறப்பட்டு நடைபாதை அமைக்கும்பணி முடிவுற்று, தற்போது மேலும் 20 சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நகர்புற வடிவமைப்பு (Urban design) பணியில் போதுமான கட்டிட கலை நிபுணர்கள் இல்லாததால் மீதமுள்ள சாலைகளில் நடைபாதைகள்அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே நகர்புற வடிவமைப்பு (Urban Design) பணிக்கு குறைந்த அளவே விண்ணப்பித்திருப்பதால் அதற்கு தனியே ஒப்பந்தங்கள் கோரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாத இறுதியில் மேற்கண்ட தகுதி அடிப்படையில் சமன் செய்யும் விருப்பமுள்ள கட்டிட கலை வல்லுநர்களை மேற்கண்ட பட்டியலில் இணைக்க மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கலாம் என மன்றத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மன்றத் தீர்மானத்தில் இப்பட்டியலில் உள்ளவர்களுக்கு Council of Architect ன் விதிப்படி கீழ்க்கண்டவாறு Consultancy fees வழங்கலாம் என ஏற்கனவே 08.02.2014 அன்று முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

| | Building | Landscape | Interior | Conservation | Urban Design |
|---|---|---|---|---|---|
| Architectural services MEP,Structural design (as applicable) | 3 % | 4.5 % | 4.5 % | 4.5 % | 0.6 % |
| Preparation of Detail specification, Rate analysis, Estimate, BOQ and tender document | 1 % | 1.5 % | 1.5 % | 1.50 % | 0.2 % |
| Periodic Inspection Evaluation of work at site, Co-ordination drawing, variations due to design change | 1 % | 1.5 % | 1.5 % | 1.50 % | 0.2 % |
| Total Architectural Fees | 5 % | 7.5 % | 7.5 % | 7.50% | 1 % |

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி கட்டிட வடிவமைப்புக்கு 5%மும், நிலவடிவமைப்புக்கு 7.5%மும், உள்வடிவமைப்புக்கு 7.5%மும், பாதுகாப்பு வடிவமைப்புக்கு 7.5%மும் வழங்கப்படுகிறது. ஆனால், நகர்புற வடிவமைப்பு பணிக்கு கலந்தற்குரியவர் கட்டணம் 1% என மிக குறைவாக இருப்பதால் பணி செய்ய எந்த கட்டிடகலை நிபுணர்களும் ஒத்துக்கொள்ளவில்லை. இதனால் பணிகள் மேற்கொள்ள இயலாமல் தேக்கமடையும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே நகர்புற வடிவமைப்பு பணிக்கான கலந்தற்குரியவர் கட்டணத்தில் கீழ்கண்டவாறு மாற்றம் செய்ய முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

| | Urban Design |
|---|---|
| Architectural services (as applicable) | 0.6 % |
| Preparation of Detail specification, | 0.2 % |
| Rate analysis, Estimate, BOQ and tender document | 0.3 % |
| Periodic Inspection Evaluation of work at site | 0.5 % |
| Co-ordination drawing, variations due to design change | 0.4 % |
| Total Architectural Fees | 2.0 % |

தற்போது 8 கட்டிட கலை நிபுணர்கள் கலந்தற்குரியவர் கட்டணம் 2.0% தொகையில் இணைவதற்கு விருப்ப கடிதம் அளித்துள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு:

1. WEBE design lab
2. Urben viz
3. INMAAS Desinging capabilities
4. Jones Lang Lasalle
5. Velciti Consulting Engineers Pvt Ltd.
6. Nanda & Associates
7. Studio N:A
8. Triple O Studio

எனவே மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்புற வடிவமைப்பு (Urban Design) பணிக்கான கலந்தற்குரியவர் கட்டணம் 2% அடிப்படையில் கட்டிடகலை நிபுணர்களை சேர்ப்பதற்கும், கட்டிட துறையில் அனுமதி பெற்றது போன்று பேருந்து சாலைகள் துறையிலும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாத இறுதியில் தகுதி அடிப்படையில் விருப்பமுள்ள கட்டிட கலை வல்லுநர்களை மேற்கண்ட பட்டியலில் இணைக்க மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்க நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.69/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.89/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2521/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.182/2015 **பொருள் எண்.48**

**மழைநீர் வடிகால் துறை – தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)ன் மேற்கொள்ளப்படும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு உலக வங்கியின் நிதி மூலம் ரூ.660.86 கோடி கடனாகவும் மற்றும் ரூ.330.43 கோடி மான்யமாகவும் பெறுவதற்கு உடன்படிக்கை வகையங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு மன்றத்தின் அனுமதி**

அரசாணை எண்.1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.01.2015ன் மூலம் சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNUSDF) மூலம் உலக வங்கியில் கடன் பெற்று பணி மேற்கொள்ளப்படும் கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவைகளுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட்டது.

| Details | Loan from TNUDF under TNSUDP (60%) | Capital Grant under TNSUDP (30%) | ULB contribution (10%) | TOTAL |
|---|---|---|---|---|
| | (Rs. in crores) | | | |
| Integrated Storm Water Drain in Adyar & Cooum Basins for expanded areas in Corporation of Chennai | 660.86 | 330.43 | 110.14 | 1101.43 |
| Restoration of Narayanapuram lake | 9.40 | 4.70 | 1.57 | 15.67 |
| Total Project cost | 670.26 | 335.13 | 111.71 | 1117.10 |

இதன்படி, சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) மூலம் உலக வங்கியின் கடன் பெறுவதற்கு, சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையின் மூலம் 10.03.2015 அன்று கடன் விண்ணப்பம் சமர்ப்பித்தது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) அவர்களின் 11.03.2015 நாளிட்ட கடிதத்தில் ரூ.660.86 கோடி ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு உலகவங்கியின் மூலம் கடன் வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளுக்கு சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதியினை பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) அவர்களின் 11.03.2015 நாளிட்ட கடிதத்தில் சில நிபந்தனைகளின்படி ரூ.330.43 கோடி சென்னை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்காக உலகவங்கியின் மூலம் மான்யமாக (Grant) வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும் இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி ஒப்புதல் கடிதம் அனுப்புமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) கீழ் உலக வங்கி மூலம் கடன் பெறுவதற்கான உடன்படிக்கையில் இடம் பெற உள்ள கீழ்வரும் வகையங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு (Terms and conditions) சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

**(I) Special Terms and Conditions of loan amount :**

1. **Loan Amount**
   Rupee term loan is Rs.660.86 crores (Rupees six hundred sixty croes and eighty six lakhs only)
2. **Interest**
   The rate of interest for the loan shall be 8.95% p.a at Quarterly rest, payable half-yearly. However, the rates prevailing as on the date of disbursement of loan shall be applicable. The interest rate will be reset once in five years during the tenor of the loan.
3. **Repayment**
   a. Tenor - 15 years
   b. Principal moratorium - 3 years
   c. Interest moratorium - Nil
   d. Repayment period - 12 years
   e. Frequency of Installments- Semi-Annual (Principal and interest)
4. **Validity**
   The loan sanction is valid for a period of three years from the date of execution of loan agreement. If the term loan is not utilized within this validity period, necessary extension may be considered at the request of the Corporation supported by Council Resolution, on the terms and conditions as may be decided by TNUDF at the time of extension.
5. **Implmentation Period**
   The proposed Integrated Storm Water Drains project should be completed within three years from the date of commencement of project.
6. **Project cost and Means of Finance**
   The Corporation shall implement the project within the overall project cost of Rs.1101.43 Crores and in accordance with the financing planboth as agreed to beween the Corporation and TNUDF and which will be set out in the Loan Agreement.
   **Means of Finance:**

| Sl. No. | Details | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 1. | Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 660.86 |
| 2. | Capital Grant under World Bank asisted TNSUDP | 330.43 |
| 3. | ULB Contribution | 110.14 |
| | **TOTAL PROJECT COST** | **1101.43** |

7. **Disbursement of term loan**
   (a) Necessary statutory approvals including Council Resolution and Administrative / Technical sanctions should be obtained by Corporation
   (b) The fund will be released based on progress of the project.
8. **Debt Service Reserve Fund**
   TNUDF proposes to stipulate adequate security mechanisms to ensure timely payment of interest and principal. Hence, as a credit enhancement measure, the Corporation has to open a Debt Service Reserve Fund (DSRF) account. In DSRF account, the amount to an extent of two semi annual installments (1 year requirement) has to be deposited. The DSRF will be in the form of a fixed deposit having a minimum maturity period of five years, jointly in the name of the Corporation and TNUDF. In case of failure to repay the dues from the escrow account, TNUDF will ask the Corporation to close the Fixed Deposit and pay the due. Within next six months the DSRF will have to be recouped.

9. **Other Terms and Conditions**
   (a) Selection of contractors and procurement of goods and services shall be as per the provisions of the existing IBRD procurement guidelines and would need appropriate sanctions from competent authorities. The Corporation would undertake the selection of contractors only after TNUDF approves the selection procedure.
   (b) The Corporation has to provide montly progress reports and Statement of Expenditure (SoE) during the implmentation in the format prescribed by TNUIFSL.

(c) TNUIFSL reserves the right to inspect the implementation of the project any time during the construction stage and subsequently also and provide suggestions for incorporation in the scope of the project, if TNUIFSL deems fit.
(d) The Corporation has to meet any cost overrun from its own sources on account of delay in procurement or due to increase in prices of materials / labour.
(e) The Corporation should not utilize the funds from TNUDF for any land purchase.
(f) The Corporation shall not avail any fresh loans from any other agency during the tenure of TNUDF's loan without obtaining written approval from TNUIFSL.
(g) The project shall be implemented according to the Environmental and Social Management Framework (ESMF) developed by TNUIFSL.

**(II) Conditions of Grant :**

(1) The grant sanction is valid for a period of three years from the date of acceptance of grant terms and conditions. If the grant is not utilized within this validity period of 3 years, necessary extension may be considered at the request of the Corporation, on the terms and conditions as may be decided by TNUDF at the time of extension.
(2) Quarterly progress reports on the utilization of Grants in the prescribed format to be submitted to TNUIFSL.
(3) Services, goods, equipment and material to be financed would be procured according to the provisions of the existing IBRD procurement guidlines and would need appropriate sanctions from competent authorties. The Corporation would undertake the selection of contractors only after TNUDF approves the selection procedure.
(4) In case of rehabilitation and resettlement schemes, ESMF guidelines of TNUIFSL are to be followed.
(5) In case of capital expenditure, the Grant Fund is to be used only to support schemes, which directly benefit urban poor. The target population specified in your loan application should not be changed. If there is any variation, especially a decrease in urban poor benefited, this grant amount will be converted into loan at interest rates currently prevailing on TNUDF loans.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) கீழ் உலக வங்கி மூலம் கடன் மற்றும் மான்யம் பெறுவதற்கு மேற்சொன்ன உடன்படிக்கையில் இடம் பெற உள்ள வகையங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு (Terms and conditions) ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.57/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண். 75/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.நீ.வ.து.ந.க.எண்.பி5/0165/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 20.03.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.183/2015 **பொருள் எண்.49**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – மண்டலம் 9, வார்டு–111ல் கீரிம்ஸ் சாலையில் அப்பல்லோ மருத்துவமனை அருகில் உள்ள நுங்கம்பாக்கம் கால்வாய் பூங்கா வழியாக செல்லும் நுங்கம்பாக்கம் கால்வாயில் உள்ள கழிவு நீரை சுத்திகரிக்க ஒப்பம் பெறப்பட்டது – M/s.Enzotech Solutions Private Limited அவர்களுக்கு ஒப்பம் அளிக்க அனுமதி**

மண்டலம்–9, வார்டு எண்–111ல் கீரிம்ஸ் சாலையில் அப்பல்லோ மருத்துவமனை அருகில் உள்ள நுங்கம்பாக்கம் கால்வாய் பூங்கா வழியாக செல்லும் நுங்கம்பாக்கம் கால்வாயில் உள்ள கழிவு நீரை சுத்திகரிக்க (MBBR Technology) (moving bed Bio Flim Reactor) முறையில் சுத்திகரிக்கும் நிலையம், நிறுவப்பட்டு முன்மாதிரி சோதனை (pilot project) அடிப்படையில் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.40,00,000/–க்கு சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து ஒரு ஆண்டு பராமரிப்பு தொகையாக ரூ.9,98,000/–க்கு ஒவ்வொரு வருடத்திற்கும் முந்தைய விலை மூலம் 10 சதவீதம் விலைவிகிதாச்சார தொகையுடன் வழங்குவதற்கும் நீர்வழிக்கால்வாய் பராமரிப்பு (Waterways cleaning expenses) செலவினத்தில் பெற நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.09.2014 அன்று இரு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் தொழில்நுட்ப முறை ஒப்பம் திறக்கப்பட்டதில் M/s.Enzotech Solutions Private Limited பொதுப்பணித்துறையின் பதிவு சான்றிதழ், 5 வருடத்திற்கான வரவு செலவு சான்றிதழ் மற்றும் பணி முடித்ததற்கான முன் அனுபவ சான்றிதழ், இணைக்கப்படாததால் இப்பணிக்கு நிதி ஆவணத்திற்கு தகுதியற்றவர் என அறிவித்து தேசிய தகவலியல் மையத்தின் (National Informatics Centre) மூலம் பராமரிக்கப்படும் ஒப்பமுறை வளைதளத்தில் பதிவு செய்து அனுப்பப்பட்டது.

இதன்படி, M/s.Enzotech Solutions Private Limited அவர்கள் தனது ஆவனங்கள் அனைத்தும் ஒப்ப வளைதளத்தில் பதியப்பட்டுள்ளதாகவும், அதற்கான சான்றுகளை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் தேசிய தகவலியல் மையத்தின் (National Informatics Centre)ற்கு தொழில்நுட்ப ஆவணத்தின் குறிப்புரையினை வளைஅஞ்சல் (E-mail) மூலம் அனுப்பப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டது. இதன்படி ஒப்பந்தாரர் எட்டு ஆவணங்களில் ஐந்து ஆவணங்கள் மட்டுமே பதியப்பட்டுள்ளதாகவும், இப்பணிக்கான ஒப்பத்தினை நிராகரித்து மறு ஒப்பம் கோருமாறு தேசிய தகவலியல் மையத்திலிருந்து (National Informatics Centre) தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணியினை நிராகரித்து மறு ஒப்பம் கோர இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஆணை பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு இரண்டாம் முறையாக ஒப்பங்கள் கோரப்பட்டதில் இரு ஒப்பங்களாக M/s.Enzotech Solutions Private Limited மற்றும் M/s.Ensys Technologies (I) Private Limited அவர்களிடமிருந்து ஒப்பம் பெறப்பட்டது. இதில் தொழில் நுட்ப முறை ஒப்பம் கோரப்பட்டதில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றதால் நிதி ஆவணத்திற்கு தகுதி பெற்றனர். 12.01.2015 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தாரரான M/s.Enzotech Solutions Private Limited அவர்கள் செட்டியூல் 1ல் அளித்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பத் தொகை ரூ.34,50,000.00 ஆகும். இவ்வலுவலக பணி மதிப்பீட்டு தொகை ரூ.40,00,000யுடன் ஒப்பிடுகையில் ஒப்ப விகிதம் (–) 13.75% குறைவாகும். மேலும் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு பணியான செட்டியூல் – 2ல் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பராமரிப்பு செலவினத்திற்கு, லிட்டருக்கு ரூ.0.08பைசா அளித்துள்ளனர்.

இதன்படி, 30.01.2015 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட முதல் பேச்சு வார்த்தையில் ஒப்பந்ததாரர் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு பணியான செட்டியூல் 2ல் குறிப்பிட்டுள்ள நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் சுத்திகரிப்பு செய்வதற்கு ஆகும் பராமரிப்பு செலவினத்தில் லிட்டருக்கு ரூ.0.08பைசாவிலிருந்து ரூ.0.05பைசாவாக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளனர். இதன்படி, பத்து ஆண்டிற்கு 5 சதவீத விலை விகிதாச்சார தொகையுடன் ரூ.2,29,54,653.88பை (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி ஒன்பது லட்சத்து ஐம்பத்திநான்காயிரத்து அறு நூற்று ஐம்பத்து

மூன்று மற்றும் என்பத்து எட்டு பைசா மட்டும்) ஆகும். மேலும் முதல் மூன்று வருடத்திற்கு ஒப்பந்ததாரருக்கு பராமரிக்க அனுமதி வழங்கவும், சுத்திகரிக்கும் நிலையத்தின் பராமரிக்கும் செயல்பாடு திருப்திகரமாக இருப்பின் மேலும் உள்ள ஏழு வருடங்களுக்கு வழங்க ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழு தீர்மான எண்.1/2015, நாள்.10.03.2015 அன்று பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் M/s.Enzotech Solutions Private Limited அவர்கள் செட்டியூல் 1ல் அளித்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பத் தொகை ரூ.34,50,000/—க்கு இவ்வலுவலக பணி மதிப்பீட்டு தொகை ரூ.40,00,000யுடன் ஒப்பிடுகையில் ஒப்ப தொகை (—) 13.75% குறைவு என்பதாலும், சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு பணியான செட்டியூல் 2ல் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் சுத்திகரிப்பு செய்வதற்கு ஆகும் பராமரிப்பு செலவினத்திற்கு, லிட்டருக்கு ரூ.0.05பைசா மற்றும் 5 சதவீதம் வருட விலைவிகிதாச்சார தொகையுடன் முதல் மூன்று வருட தொகை ரூ.57,53,312.50பை வழங்கவும், முதல் மூன்று வருட காலத்திற்கு ஒப்பந்தாரரின் மூலம் பராமரிக்கப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையத்தினை பராமரிக்கப்படும் செயல்பாடு திருப்திகரமாக இருப்பின் மேலும் ஏழு வருடங்களுக்கு பராமரிப்பு அனுமதி வழங்குவதற்கும் ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.54/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.72/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மநீ.வ.து.ந.க.எண்.பி5/01599/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.184/2015 **பொருள் எண்.50**

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் தமிழ்நாடு நிலையான நகர்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)ன் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் துறையின் திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கும் உலக வங்கியின் மூலம் கடன் பெறுவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது – இப்பணிகளுக்கு ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNUSDF) மூலம் மேற்கொள்ளப்படும் கூவம் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நாராயணபுரம் ஏரியை புனரமைக்கும் பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு நிதி (TNUIFSL) நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு நிதி (TNUIFSL) நிறுவனத்தின் **09.06.2014** நடைபெற்ற கூட்டத்தில், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கையின்படி உலகவங்கி கடன் பெற மன்றத்தின் அனுமதி பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு தோராயமான மதிப்பீட்டு தொகை ரூ.**1101.43** கோடி மற்றும் நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளுக்கு தோராயமான மதிப்பீட்டு தொகை ரூ.**15.67** கோடி, மொத்தம் தோராயமான மதிப்பீட்டு தொகை ரூ.**1117.10** கோடிக்கு அரசின் ஆட்முறை ஒப்பளிப்பு பெறுவதற்கும் மற்றும் உலக வங்கி கடன் பெறுவதற்கும், உலக வங்கியின் நிபந்தனைக்குட்பட்டு ஒப்பம் கோருவதற்கும் மன்றத் தீர்மான எண்.**363/2014**, நாள்.**26.06.2014**ன்படி ஒப்புதல் பெற அனுப்பப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.**1**, நாள், **02.01.2015**ன் மூலம் சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியின்கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNUIFSL) மூலம் உலக வங்கியில் கடன் பெற்று பணி மேற்கொள்ளப்படும் கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவைகளுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட்டது.

| Detail | Loan from TNUDF under TNSUD (60%) | Capital Grant under TNSUDP (30%) | ULB contribution (10%) | TOTAL |
|---|---|---|---|---|
| | (Rs.in crores) | | | |
| Integrated Storm Water Drain in Adyar & Cooum; Basins for expanded areas in Corporation of Chennai | 660.86 | 330.43 | 110.14 | 1101.43 |
| Restoration of Narayanapuram lake | 9.40 | 4.70 | 1.57 | 15.67 |
| Total Project cost | 670.26 | 335.13 | 111.71 | 1117.10 |

மேற்கண்டவையின்படி, முன்னுரிமை அடிப்படையில் மழைநீர் வடிகால் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் கட்டமைப்பு பணிகளுக்கு கீழ்கண்டவாறு **39** சிப்பங்களாக பிரித்து தற்போது நடைமுறையில் உள்ள **2014 –2015**ஆம் ஆண்டு விலைப்பட்டியிலின்படி பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 1) | **36,21,27,000.00** |
| 2 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 2) | **30,72,57,000.00** |
| 3 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 3) | **35,36,15,000.00** |
| 4 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 4) | **26,80,68,000.00** |
| 5 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 5) | **42,43,10,000.00** |
| 6 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 6) | **23,94,11,000.00** |
| 7 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 7) | **30,84,35,000.00** |
| 8 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 8) | **24,01,34,000.00** |
| 9 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 9) | **34,15,10,000.00** |
| 10 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 10) | **39,82,91,000.00** |
| 11 | கூவம் வடிநிலம், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 11) | **24,66,60,000.00** |
| 12 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 12) | **32,52,79,000.00** |
| 13 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 13) | **20,84,05,000.00** |
| 14 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 14) | **32,57,59,000.00** |
| 15 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 15) | **35,63,82,000.00** |
| 16 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 16) | **38,41,18,000.00** |
| 17 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 17) | **55,14,46,000.00** |
| 18 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 18) | **13,92,37,000.00** |
| 19 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பாடிகுப்பம் கால்வாய் மேம்படுத்தும் பணி (சிப்பம் 19) | **33,47,40,000.00** |
| 20 | கூவம் வடிநிலம், பாடிகுப்பம் நீர்ப்பிடிப்பு பகுதியில் கொரட்டூர் **TNHB** கால்வாய் மேம்படுத்தும் பணி (சிப்பம் 20) | **16,09,33,000.00** |
| 21 | கூவம் வடிநிலம், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 21) | **26,47,62,000.00** |
| 22 | கூவம் வடிநிலம், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 22) | **28,40,35,000.00** |
| 23 | கூவம் வடிநிலம், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 23) | **41,11,23,000.00** |

| | | |
|---|---|---|
| 24 | கூவம் வடிநிலம், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதியில் அம்பத்தூர் SIDCO கால்வாய் மேம்படுத்தும் பணி (சிப்பம் 24) | **8,52,04,000.00** |
| 25 | கூவம் வடிநிலம், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதியில் நொளம்பூர் கால்வாய் மேம்படுத்தும் பணி (சிப்பம் 25) | **31,53,43,000.00** |
| 26 | கூவம் வடிநிலம், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 26) | **17,09,40,000.00** |
| 27 | கூவம் வடிநிலம், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 27) | **33,33,81,000.00** |
| 28 | கூவம் வடிநிலம், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 28) | **36,36,60,000.00** |
| 29 | கூவம் வடிநிலம், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 29) | **24,86,89,000.00** |
| 30 | கூவம் வடிநிலம், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 30) | **21,69,60,000.00** |
| 31 | அடையாறு வடிநிலம், அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 31) | **32,56,30,000.00** |
| 32 | அடையாறு வடிநிலம், அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 32) | **30,97,42,000.00** |
| 33 | அடையாறு வடிநிலம், மணப்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 33) | **31,99,11,000.00** |
| 34 | அடையாறு வடிநிலம், மணப்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 34) | **21,67,58,000.00** |
| 35 | அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 35) | **27,58,62,000.00** |
| 36 | அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 36) | **30,74,05,000.00** |
| 37 | அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 37) | **36,38,34,000.00** |
| 38 | அடையாறு வடிநிலம்,நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (சிப்பம் 38) | **42,37,97,000.00** |
| 39 | அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதியில் நந்தம்பாக்கம் கால்வாய் மேம்படுத்தும் பணி (சிப்பம் 39) | **108,56,00,000.00** |
| | மொத்த பணித்தொகை | **1259,87,53,000.00 (அ) ரூ.1259.88 கோடி** |

மேலும் அரசாணையின்படி அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட்ட கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் உலக வங்கியின் நிபந்தணைக்கு உட்பட்டு 35 சிப்பங்களுக்கு ஒப்பங்கள் கோரப்பட்டது. மற்றொரு பணியான நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகள் பின்னர் ஒப்பங்கள் கோரப்படவுள்ளது. அரசாணை பெறப்பட்ட 2012–13ம் ஆண்டின் விலைப்பட்டியலின்படி ரூ.1101.43 கோடியாகும். தற்போது 2014–15ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.1259.88 கோடியாகும்.

எனவே,

(1) மழைநீர் வடிகால் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNUSDF) மூலம் உலக வங்கியில் கடன் பெற்று பணி மேற்கொள்ளப்படும் கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளினை 39 சிப்பங்களாக பிரித்து தற்போது நடைமுறையில் உள்ள 2014 – 2015ஆம் ஆண்டு திருத்திய விலைப்பட்டியிலின்படி ரூ.1259.88 கோடிக்கு பணிக்கான தொகைக்கு ஒப்புதலும்,

(2) கூவம் வடிநில பகுதி மற்றும் அடையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளான 39 சிப்பங்களில் 35 சிப்பங்கள் ஒப்பங்கள் கோரியதற்கும், உலக வங்கியின் நிபந்தனைப்படி மீதம்முள்ள நான்கு சிப்பங்கள் 19, 24, 25, 38ல் நீர்வழிக்கால்வாய்களில் உள்ள 330 ஆக்கிரமிப்புகள் அகற்றி மறுகுடியமர்வு செய்தபின் ஒப்பம் கோரி மேம்பாட்டு பணியினை மேற்கொள்ளவும் மற்றோரு பணியான நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளினை பின்னர் ஒப்பம் கோருவதற்கும்,

(1) மற்றும் (2) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.70/2015,–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.91/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.வ.அ.ந.க.எண்.இ3 /996 /2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.185/2015 **பொருள் எண்.51**

**மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் : 110** **மண்டலம் : 9**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–9, வார்டு–110, நுங்கம்பாக்கம் பள்ளி சாலையில் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், நூலகம், கழிப்பறைகள் ஆசிரியர்களுக்கான அறைகள் மற்றும் படிக்கட்டுகளுடன் கூடிய தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் மற்றும் ஆண்கள், பெண்கள், ஆசிரியர்களுக்கான தனித்தனி கழிப்பறைகள், உணவு அருந்தும் கூடம் கட்டும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | துணை ஆணையர் (கல்வி) |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | கல்வித்துறை |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர் (கட்டடம்)<br>T.S.No. 009 /2014-15,<br>நாள் 08.12.2014 |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014 -2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 7 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 2,95,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 2,48,93,606.74 |
| | (ஆ)மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 24,89,360.67 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 6,22,340.17 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | : | ரூ. 6,46,820.28 |
| | (உ) தரக்கட்டுப்பாடு | : | ரூ. 2,48,936.07 |
| | (ஊ) கலந்தறிதர் கட்டணம் | : | ரூ. 3,50,000.00 |
| | (எ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 2,48,936.07 |
| | மொத்தம் | : | ரூ. 2,95,00,000.00 |
| 8 | 1 சதுர மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ. 18,779.26 |
| 9 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 10 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | : | பெறப்படவுள்ளது. |
| 11 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 12 | நிதியின் தன்மை | : | மூலதனநிதி |
| 13 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 2,95,00,000.00 |

மேற்கண்ட பணிக்காக 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.2,95,00,000/—க்கு (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் **16.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **24.04.2015** அன்று தீர்மான எண்.**11/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**61/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**79/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.7.ந.க.எண்.02116/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.186/2015 **பொருள் எண்.52**

**மதிப்பீடு – 2013–2014 ஆம் ஆண்டிற்கான பணி மண்டலம்–7 (அம்பத்தூர்), வார்டு–83, வண்டிபாட்டை சாலை (ஸ்ரீனிவாசபுரம் 3வது பிரதான சாலை முதல் கருக்கு பிரதான சாலை வரை)ல் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி – 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு – ரூ.2,75,00,000/–ற்கு ஆட்சி முறை ஒப்பளிப்புக்கு – அனுமதி**

மண்டலம்–7, வார்டு–83ல் 10,000 சாலை திட்டத்தின் கீழ் கண்ட சாலைகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

| வ. எண். | வார்டு எண். | சாலையின் பெயர் | நிர்வாக அனுமதி பெறப்பட விவரம் | ஒப்பம் அனுமதிக்கப்பட்ட மன்ற தீர்மான எண். | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 83 | வண்டி பாட்டை தெரு | பெறப்படவில்லை | 202/2014 நாள். 25.02.2014 | சிப்பம் எண்.13 |
| 2 | 83 | பத்மாவதி நகா (ம) நம்மாழ்வார் தெரு | நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றது | | |
| 3 | 83 | கணபதி தெரு 1வது, 2வது தெரு 1 (ம) 2வது தெருக்கள் | நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றது | | |

மேற்கண்ட எட்டு உட்புற சாலைகளுக்கு அவசரம் அவசியம் கருதி ஒப்பம் 14.02.2014 அன்று கோரப்பட்டு, மன்றத்தின் தீர்மான எண்.202/2014 நாள். 25.02.14ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட 8 உட்புற சாலைகளில் 7 சாலைகளுக்கு மதிப்பீடு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. ஒரு சாலையான வண்டிபாட்டை சாலை மதிப்பீட்டிற்கு பொதுப்பணித்துறையின் மறுப்பின்மை சான்றிதழ் பெறப்படாததால் நிர்வாக அனுமதி பெறப்படவில்லை.

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பணி /சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 83 | வண்டி பாட்டை சாலை (ஸ்ரீனிவாசபுரம் 3வது பிரதான சாலை முதல் கருக்கு பிரதான சாலை வரை) | வண்டி பாட்டை சாலை (ஸ்ரீனிவாசபுரம் 3வது பிரதான சாலை முதல் கருக்கு பிரதான சாலை வரை)_ல் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி | 1500 | 9000 | ரூ.2,75,00,000/– |
| மொத்தம் | | | | | | ரூ.2,75,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மன்ற உறுப்பினர், வார்டு –83 |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | மண்டலம் –7 |
| 4. | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம் |
| 5. | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர் (பொது) |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013 – 2014 |
| 7. | மதிப்பீடு தொகை | : | |
| | அ) பணி செலவீனம் மட்டும் | : | ரூ. 2638070.00 |
| | ஆ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 263840.70 |
| | இ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 79152.21 |
| | ஈ) TNEB செலவு | : | ரூ. 263840.70 |
| | உ) TNWG நல நிதி | : | ரூ. 79152.21 |
| | மதிப்பீட்டின் மொத்த தொகை | : | ரூ. 27500000.00 |

| | | | |
|---|---|---|---|
| 8. | அ) மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா ?<br>ஆ) அதன் அளவு குறிப்பிடவும் | : | பொருந்தாது |
| 9) | ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ. 2932/— |
| 10) | வரைபடம் வைக்கப்பட்டுள்ளது ? | : | ஆம் |
| 11) | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி | | பின்னேற்பு பெறப்படும் |
| 12) | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 13) | நிதியின் மூலத்தன்மை | : | |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | |
| | இ) மீதமுள்ள நிதி (அ—ஆ) | : | |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 27500000.00 |
| 14) | ASSET CODE | : | 044/25209/15620/2013—14 |

தற்பொழுது பொது பணி துறை (PWD)யின் மறுப்பின்மை சான்றிதழ் 06—04—2015 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்—7, வார்டு—83ல் வண்டிபாட்டை சாலைக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,75,00,000/— சென்னை மாநகராட்சி சட்ட 1919 விதி 78ன் கீழ் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.71/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண். 92/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண். இ2/9953/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.187/2015 **பொருள் எண்.53**

**மண்டலம் –7 வார்டு 86ல், மண்ணூர்பேட்டையில் உள்ள பல்வேறு தெருக்களுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணி – ஒப்பந்தப்புள்ளிகள் 13.03.2015 அன்று கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திரு. U.R.சுப்பிரமணியன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

மண்டலம்–7 வார்டு 86ல், மண்ணூர்பேட்டையில் உள்ள கீழ்கண்ட சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தனித்தனியாக நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 பிள்ளையார் கோயில் தெருவில் (ரீச் – 2 லோகைய்ய நாயுடு தெரு முதல் மலையத்தம்மன் தெரு வரை) தார்சாலை அமைக்கும் பணி | ரூ.29,60,000/– |
| 2 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 பிள்ளையார் கோயில் தெருவில் (ரீச் – 3 மலையத்தம்மன் தெரு முதல் பெருமாள் கோயில் தெரு வரை) தார்சாலை அமைக்கும் பணி | ரூ.29,60,000/– |
| 3 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 பிள்ளையார் கோயில் தெருவில் (ரீச் – 4 பெருமாள் கோயில் தெரு முதல் சி.டி.எச். சாலை வரை) தார்சாலை அமைக்கும் பணி | ரூ.29,60,000/– |
| 4 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 மலையத்தம்மன் பிரதான தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | ரூ.24,80,000/– |
| 5 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 மலையத்தம்மன் முதல் தெரு, இரண்டாம் தெரு மற்றும் மூன்றாம் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | ரூ.30,00,000/– |
| 6 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 மலையத்தம்மன்குறுக்கு தெரு மற்றும் லோகைய்ய நாயுடு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | ரூ.29,60,000/– |
| 7 | வார்டு–86, ப–19, மண்டலம்–7 பிள்ளையார் கோயில் தெருவில் (ரீச் – 1 மேனாம்பேடு சாலை முதல் லோகைய்ய நாயுடு தெரு வரை) தார் சாலை அமைக்கும் பணி | ரூ.29,60,000/– |
| | மொத்தம் | ரூ.2,02,80,000/– |

மேற்கண்ட பணிகளை ஒருங்கிணைத்து ஒரே சிப்பமாக ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப நாளான 13.03.2015 அன்று ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழிற்நுட்ப சிப்பம் (Technical Bid) திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

1. திருவாளர்கள்.S.P.பில்டர்ஸ்
2. திரு.U.R.சுப்பிரமணியன்

மேலும் இந்த தொழிற்நுட்ப சிப்பத்தை ஆராய்ந்ததில் இவ்வொப்பத்தில் பங்கேற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தகுதி உள்ளவர்களாக கருதப்படுகிறார்கள்.

மேலும், இவ்வொப்பத்தில் கலந்து கொண்ட தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு,

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2014–2015ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு | சந்தை விலையை ஒப்பிடுகையில் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். S.P.பில்டர்ஸ் | ரூ.17367108.30 | ரூ.19509836.00 | (+) 12.34 % அதிகம் | (+) 11.67 % அதிகம் |
| 2 | திரு.U.R.சுப்பிரமணியன் | ரூ.17367108.30 | ரூ.18946862.50 | (+) 9.10 % அதிகம் | (+) 8.44 % அதிகம் |

மேற்கண்ட விபரங்களின் படி இவ்வொப்பத்தில் கலந்து கொண்ட 2 ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திரு.U.R.சுப்ரமணியன் அவர்களிடம் 23.03.2015 அன்று விலைகுறைப்பு கேட்கப்பட்டது. அதன்படி திரு.U.R.சுப்ரமணியன் அவர்கள் சில இனங்களுக்கு விலைகுறைப்பு செய்து தனது 26.03.2015 நாளிட்ட கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். இதன்படி திரு.U.R.சுப்ரமணியன் அவர்களின் ஒப்பத் தொகை ரூ.1,73,65,567.50 ஆகும். இத்தொகை 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட (–) 0.01% குறைவு மற்றும் சந்தை விலையை விட (–) 0.60% குறைவாகும்.

இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு.U.R.சுப்ரமணியன் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.1,73,65,567.50 ஆனது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (–) 0.01 % குறைவு மற்றும் 31.01.2015 நாளிட்ட சந்தைவிலையைவிட (–) 0.60% குறைவாக உள்ளதாலும், ஒப்பக் கூர்ந்தாய்வு குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பத்ததாரரான திரு.U.R.சுப்ரமணியன் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.1,73,65,567.50க்கு பணியினை வழங்க ஒப்பக் கூர்ந்தாய்வு குழுமம் பரிந்துரை செய்துள்ளது. மேலும் IRC வழிகாட்டுதலின் படியும் மற்றும் இவை உட்புறச்சாலைகள் என்பதாலும் DBM 50mm கனம் போதுமானது எனக் கருதி ஒப்பந்தத்தில் உள்ள DBM 55mm கனத்திற்கு பதிலாக DBM 50mm கனத்திற்கு குறைத்து பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தி பணம் பட்டுவாடா செய்யப்படும்.

எனவே,

(1) மேற்கண்ட பணிகளை ஒருங்கிணைத்து ஒரே சிப்பமாக பெறப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,02,80,000/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒரே சிப்பமாக ஒப்பம் கோரப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்;

(2) இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.U.R.சுப்ரமணியன் அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–)0.01% குறைவான ஒப்பத்தொகை ரூ.1,73,65,567.50க்கு பணியை வழங்கவும்;

மேற்கண்ட இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.72/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிற".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண். 93/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மி.து.ந.க.எண். சி.பி.மே.2/பி1 /3420/2012**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.188/2015 **பொருள் எண்.54**

**மின் துறை – பயனற்ற கழிவுகள் MSTC நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் மூலம் விற்பனை– பல்வேறு வகையான பயனற்ற கழிவுகள் 150.36 டன் எடையில் இரும்பு பொருட்கள் 809.46கி.கி எடையில் அலுமினிய பொருட்கள், 616.35 கிகி எடையில் செம்பு பொருட்கள், 525.36 கி.கி எடையில் பித்தளை பொருட்கள் மேலும் 675.44 கி.கி எடையில் பிலாஸ்டிக் மற்றும் மரசாமான்கள் கொண்ட ஒரு தொகுப்பு விற்பனை செய்ய மின்னணு ஏலம் கோரப்பட்டது – அதிகபட்ச ஏலத்தொகை அளிக்க கோரிய M/SM.R.TRADERS நிறுவனத்தை பரிந்துரைக்க அனுமதி**

1. பணியின் பெயர். பயனற்ற கழிவு விற்பனை ( தொகுப்பு அடிப்படையில் ) பழைய மண்டலம் –I முதல் X ல் மின்துறையிலிருந்து பெறப்பட்ட பயனற்ற கழிவு பொருட்களான, **150.36** டன் எடையில் இரும்பு பொருட்கள் **809.46**கி.கி எடையில் அலுமினிய பொருட்கள், **616.35** கிகி எடையில் செம்பு பொருட்கள், **525.36** கி.கி எடையில் பித்தளை பொருட்கள் மேலும் **675.44** கி.கி எடையில் பிலாஸ்டிக் மற்றும் மரசாமான்கள் உள்ளன.

| வ. எண் | வார்டு எண் | ஏலம் விடப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்ட இடம் | குழுவின் மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 01. | – | வேப்பேரி கிடங்கு | 42,67,100 / – |

**2.** மதிப்பீட்டின் எண். : மேற்படி வேப்பேரி கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவுகள் மின்னணு ஏலம் மூலம் ரூ. **42,67,100 / –** மதிப்பில் விற்பனை செய்ய இணை ஆணையரின் **28.08.2013** நாளிட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கழிவுகள் MSTC நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்ய மன்றத்தின் **30.09.2014** நாளிட்ட தீர்மான எண்.**515/2014** மூலம் மற்றும் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் **24.11.2014** நாளிட்ட ஆணை மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**3.** ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு. :
அ. பணியின் செலவினம் :
ஆ. மேற்பார்வை செலவு :
இ. சில்லரை மேற்பார்வை செலவு :
ஈ. மற்ற செலவு :

} மின்னணு ஏல அடிப்படையில் பயனற்ற மற்றும் உபயோகமற்ற இரும்பு பொருட்கள் தொகுப்பு அடிப்படையில் விற்பனை

உ. மின்சாரம் செலவினம் :

**4.** எந்தெந்த பத்திரிக்கையில் மின்னணு ஏலம் பிரசுரிக்கப்பட்டது / நாள் :

| | | |
|---|---|---|
| அ | மாநகராட்சி வெளியீட்டில் | **26.03.2015** |
| ஆ | பத்திரிக்கைகள் | நமது எம் ஐ ஆர், New Indian Express **26.03.2015** |

**9.** மின்னணு ஏலம் சென்னை மாநகராட்சி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது **15** நாட்கள் ஒதுக்கப்பட்டதா, இல்லை ஏனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : ஆம்

**11.**மின்னணு ஏலம் நடத்தப்பட்ட நாள் : **09.04.2015**

**12.**மின்னணு ஏலத்தில் பங்கேற்றவர்

| வ. | மின்னணு ஏலத்தில் பங்கேற்க | பயனற்ற கழிவின் | மின்னணு ஏலத்தில் கேட்கப்பட்ட |
|---|---|---|---|

| எண். | தகுதிபெற்ற ஏலதாரர்கள் | குழுவின் மதிப்பு | அதிகபட்ச விலை |
|---|---|---|---|
| 1 | 20 | ரூ.42,67,100/– | 39,01,100/– |

பயனற்ற கழிவு விற்பனைக்காக (தொகுப்பு அடிப்படையில்) பழைய மண்டலம் – 1 முதல் மண்டலம்–10 வரையில் பயனற்ற கழிவுகள் 150.36 டன் எடையில் இரும்பு பொருட்கள் 809.46கி.கி எடையில் அலுமினிய பொருட்கள், 616.35 கிகி எடையில் செம்பு பொருட்கள், 525.36 கி.கி எடையில் பித்தளை பொருட்கள் மேலும் 675.44 கி.கி எடையில் பிலாஸ்டிக் மற்றும் மரசாமான்கள்ஆகிய பயனற்ற கழிவுகளை மின்னனு ஏலம் மூலம் ரூ. 3384000 /– மதிப்பில் விற்பனை செய்ய ஆணையரின் 18.06.2012 நாளிட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பயனற்ற கழிவின் விற்பனைக்காக நடத்தப்பட்ட ஏலத்தில் (நாள்:02/07/2012) 115 ஏலதாரர்கள் பங்கேற்று அதில் அதிகபட்ச ஏலத் தொகையான ரூ.36,20,000/–க்கு பரிந்துரை செய்து குறிப்பு வைக்கப்பட்டது. ஆணையாளர் அவர்கள் ''ஏலத்தொகை குறைவாக உள்ளது, மறு ஒப்பம் கோருமாறு'' குறிப்பிட்டுள்ளார்கள். ஆகையால் மறு ஒப்பம் கோருவதற்கு பயனற்ற கழிவுகளின் மதிப்பு, தகுதி நிலை மற்றும் ஒப்ப ஆவணம் மறு மதிப்பீடு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. 20.10.2012 நாளிட்ட குறிப்பில் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு குழு அமைக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் விவரம்

- (i) மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்)
- (ii) மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)
- (iii) நகர பொறியாளர்
- (iv) நிதி ஆலோசகர்
- (v) கோட்ட மின் பொறியாளர் (தலைமையிடம்)
- (vi) கோட்ட மின் பொறியாளர் (தெற்கு)
- (vii) கோட்ட மின் பொறியாளர் (மையம்)
- (viii) கோட்ட மின் பொறியாளர் (வடக்கு)

மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் அலுவலகத்தில் 13/12/2012 அன்று குழு கூட்டப்பட்டு வேப்பேரி கிடங்கில் உள்ள பயனற்ற கழிவுகளை அகற்ற மறு ஒப்பம் கோருவதற்கு கீழ்க்கண்டவை கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

1) இணையதளம் மூலம் பயனற்ற கழிவுகளின் விலைகள் பெறப்பட்டு ஒப்பத்தொகை நிர்ணயம் செய்யவும்
2) ஒப்பந்ததாரர்களின் தகுதி நிலை முன்பு ஒப்பத்தில் கோரப்பட்டவையே தொடரவும்
3) முன்பு கோரப்பட்ட ஒப்ப ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளே தொடரவும் முடிவு செய்யப்பட்டது.
4) இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் மதிப்பு ரூ.3408700/–க்கு நிர்ணயம் செய்யப்பட்டது

குழுவின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்புகளின் அடிப்படையில் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு குறிப்பு வைக்கப்பட்டது.

கூடுதல் ஆணையாளர் (பணிகள்) அவர்கள் கலந்தாய்வு செய்து தற்போதைய விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற கழிவுகள் மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் விலை நிர்ணயம் செய்து குறிப்பு அனுப்புமாறு தெரிவித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில் 02/03/2013 அன்று மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம் அவர்கள் அலுவலகத்தில் குழு கூட்டப்பட்டு பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்ய கீழ்கண்டவை முடிவு கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

1) w.w.w.recycleinme. com இணையதளத்திலிருந்து 02/01/2013 முதல் 31/01/2013 இடைப்பட்ட காலத்தில் உள்ள பயனற்ற கழிவுகளின் விலைகள் எடுத்துகொண்டு ஒப்பத்தொகை நிர்ணயம் செய்யவும்.
2) மேலே கூறப்பட்டுள்ள காலத்தில் பயனற்ற கழிவுகளின் அதிகப்படியான விலை எடுக்கப்பட்டு பயனற்ற கழிவுகளின் விலை நிர்ணயம் செய்யவும்.

| வ. | பொருட்களின் விவரம் | முந்தய விலை | தற்போதைய விலை |
|---|---|---|---|

| எண் | | 11/10/2012 முதல் 10/11/2012 வரை ரூ. | 02/01/2013 முதல் 31/01/2013 வரை ரூ. |
|---|---|---|---|
| 1 | எம். எஸ். இரும்பு பொருட்கள் | 21.00 | 25.00 |
| 2 | இரும்பு பொருட்கள் | 21.00 | 25.50 |
| 3 | அலுமினிய பொருட்கள் | 89.50 | 94.00 |
| 4 | செம்பு பொருட்கள் | 400.00 | 425.00 |
| 5 | பித்தளை பொருட்கள் | 290.00 | 295.00 |
| 6 | பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மரசாமான்கள் | 3.50 | 6.00 |

3) இணையதளத்திலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு பயனற்ற கழிவுகளின் விலை நிர்ணயம் செய்யப்படும்போது வரிகள் குறைக்கப்படாமல் விலை நிர்ணயம் செய்யவும்

4) இணையதளத்திலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் மதிப்பு

**II st LOT**

| வ. எண் | பொருட்களின் விவரம் | மொத்த நிகர எடை (கி.கிராம்) | இணையதளம் மூலம் பெறப்பட பயனற்ற கழிவுகளின் விலை / (கி.கிராம்) ரூ. | பயனற்ற கழிவுகளின் மொத்த விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | எம்.எஸ்.இரும்புபொருட்கள் | 128562.75 | 25.00 | 3214068.75 |
| 2 | இரும்பு பொருட்கள் | 21802.00 | 25.50 | 555951.00 |
| 3 | அலுமினிய பொருட்கள் | 809.46 | 94.00 | 76089.24 |
| 4 | செம்பு பொருட்கள் | 616.35 | 425.00 | 261948.75 |
| 5 | பித்தளை பொருட்கள் | 525.36 | 295.00 | 154981.20 |
| 6 | பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மரசாமான்கள் | 675.44 | 6.00 | 4052.64 |
| | | | மொத்தம் | 4267091.58 |

மேற்படி கழிவுப்பொருட்களின் மதிப்பு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 10.04.2013 நாளிட்ட ஆணை மூலம் நிர்னையிக்கப்பட்டது. மேலும், இத்தொகுப்பினை விற்பனை செய்ய ஒப்பம் மற்றும் ஏலத்திற்கான ஒப்பங்கள் கோர அனுமதிக்கப்பட்டு 27.5.2013 அன்று ஏலநாளாக அறிவிக்கப்பட்டது. ஏலநாளான 25.7.2013 அன்று ஒரே ஒரு ஏலதாரர் கலந்து கொள்ள முன்வந்தார். ஆனால், அவர் ஏலத்தொகை ஏதும் கேட்க முன்வரவில்லை.

எந்த நிறுவனமும் இத்தொகுப்பின் விற்பனைக்காக ஏலத்தில் பங்கேற்காதலால் மின்னணு ஏலம் மூலம் ஏலம் நடத்தி கழிவு பொருட்களை விற்பனை செய்ய இணை ஆணையர் 25.09.2013 நாளிட்ட அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–15, வார்டு–196ல் சின்னான்டிகுப்பம் மேட்டுத்தெரு, கடற்கரை அருகில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பறை கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | நீலாங்கரை ஊராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 49 சதுர மீட்டர் |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 49 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.3,500/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து கீழே விழக் கூடிய நிலையில் இருப்பதாலும், அவ்விடத்தை இடித்து விட்டு புதிய கழிப்பறை கட்டிடம் கட்டி சென்னை மாநகராட்சி மூலம் பராமரிப்பதற்காக. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துறை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–15 |
| 10 | வார்டு குழு தீர்மான எண். (ம) நாள் . | 15வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.126/2015, நாள்.18.03.2015 |

**வார்டு –197 ல் , ராஜிவ்காந்தி சாலை ,பெரியபாளையத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பறை கட்டிடத்தின் விவரம் .**

| வ. எண் | வார்டு எண்–197 | மண்டலம் –15 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம் –15 , வார்டு 197ல் ராஜிவ்காந்தி சாலை பெரியபாளையத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பறை கட்டிடத்தை இடிக்க அனுமதி |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | காரப்பாக்கம் ஊராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 15 சதுர மீட்டர் |

| | | |
|---|---|---|
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 15 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.2,500/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து கீழே விழக் கூடிய நிலையில் இருப்பதாலும், அவ்விடத்தை இடித்து விட்டு புதிய கழிப்பறை கட்டிடம் கட்டி சென்னை மாநகராட்சி மூலம் பராமரிப்பதற்காக. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துறை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–15 |
| 10 | வார்டு குழு தீர்மான எண். (ம) நாள் . | 15வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.132/2015, நாள்– 18.03.2015 |

எனவே,

1. வார்டு–192ல் நீல கடற்கரை சாலை ,முத்துமாரியம்மன் கோவில் அருகில் பெரிய நீலாங்கரை குப்பத்தில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கும்,
2. வார்டு–192ல் மரக்காயர் நகர் 7வது குறுக்குத் தெரு பழன்டியம்மன் கோவில் அருகில் பெரிய நீலாங்கரை குப்பத்தில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்ததற்கும்,
3. வார்டு–192ல் கபாலீஸ்வரர் நகர் முதல் மெயின் ரோடு , சுகாதார நிலையம் அருகில் நீலாங்கரையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்ததற்கும்,,
4. வார்டு–196, சின்னான்டி குப்பம், மேட்டுத்தெரு, கடற்கரை அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்ததற்கும்,
5. வார்டு 197–ல், ராஜிவ்காந்தி சாலை பெரியபாளையத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.74/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.15.ந.க.எண்.பி1/1102/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.193/2015 **பொருள் எண்.59**

**மண்டலம் 15– வார்டு–197ல் – ராஜீவ்காந்தி சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கு கட்டிடத்தை இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு –197 | மண்டலம் –15 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–15 வார்டு 197ல், ராஜிவ்காந்தி சாலையில் மண்டல அலுவலக–15 பின்புறம் பழுதடைந்த நிலையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை உரகிடங்கு கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | சோழங்கநல்லூர் பேரூராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1–வது பிளாக்– 37.45 சதுர மீட்டர்<br>2–வது பிளாக்– 154.86 சதுர மீட்டர்<br>3–வது பிளாக்– 19. 80 சதுர மீட்டர்<br>4–வது பிளாக்– 198.00 சதுர மீட்டர் |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1–வது பிளாக்– 37.45 சதுர மீட்டர்<br>2–வது பிளாக்– 154.86 சதுர மீட்டர்<br>3–வது பிளாக்– 19. 80 சதுர மீட்டர்<br>4–வது பிளாக்– 198.00 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.10,000/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | லாரிகள் நிறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து கீழே விழக் கூடிய நிலையில் இருப்பதாலும், அவ்விடத்தை இடித்து விட்டு லாரிகள் நிறுத்தவும் மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கவும் |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துறை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–15 |
| 10 | வார்டு குழு தீர்மான எண் (ம) நாள் . | 15வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.129/2015, நாள்.18.03.2015 |

எனவே, வார்டு 197ல், ராஜிவ்காந்தி சாலை, மண்டல அலுவலகம்–15ன் பின்புறம் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை உரகிடங்கு கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.91/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொது நக எண்.பி1 /2084 /2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்28.04.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.194/2015 பொருள் எண்.60

**<u>பொதுசுகாதாரத்துறை– ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம்,யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள், ( Medical Officers ( Ayurvedha, Yoga & Naturopathy, Unani, Siddha, Homeopathy ) ) மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் – வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்துதல் – சம்பளம் நிர்ணயம் செய்தல் மற்றும் ஒப்பம் கோருவதற்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டல சுகாதார அலுவலகங்களில் உட்பட்ட பகுதிகளில் பல்வேறு மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பொதுசுகாதாரத் துறைக்கான அலோபதி மருத்துவ அலுவலர்கள், முழுநேரம் மற்றும் பகுதி நேர பணிகளில் வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்திட ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளிகள் ஏற்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிவிப்பில் சித்தா மற்றும் ஆயுர்வேத சிகிச்சை மருந்தகங்கள் மண்டலத்திற்கு ஒன்று வீதம் ஏற்படுத்தப்படும் எனவும், ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி மருத்துவ சேவைகள் சென்னை மாநகராட்சி ஆரம்ப சுகாதார மையங்களில் மற்றும் ரிப்பன் மாளிகை வளாகத்தில் ஏற்படுத்தப்படும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்ற தீர்மானத்தில் ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், சித்தா, மருத்துவ அலுவலர்கள் 15 மண்டலத்திற்கும் மாதம் ரூ.40,000 / சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் வெளிநிறுவனங்கள் மூலம் பணியமர்த்த தீர்மானிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்பந்ததாரரால் கூடுதலாக ஒப்பத்தொகை அளிக்கப்பட்டிருந்ததால் ஒப்பம் ரத்து செய்யப்பட்டது.

அரசாணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 110 விதியின் கீழ் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், நவீன மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் யோகா இயற்கை மருத்துவம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவித்ததின்படி யோகா மற்றும் இயற்கை மருத்துவம் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தவும், மருத்துவ அலுவலர்களுக்கான கல்வி தகுதி மற்றும் தேவையான மருத்துவ சாரா பணியாளர்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 1 முதல் 15 மண்டலத்திற்கு தேவையான மருத்துவ அலுவலர்களுடன் கூடுதலாக மருத்துவ சாரா பணியாளர்கள் பணியமர்த்தப்பட உள்ளதால், மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.30000/ வழங்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6, 9, 12 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் 4 சித்தா மருத்துவ பிரிவுகள் உள்ளன. இதில் மண்டலம் 9 மட்டும் சித்தா மருத்துவ அலுவலர் மற்றும் மருந்தாளுனர் யாரும் பணியில் இல்லை. மற்ற 4 மண்டலங்களில் 4 சித்த மருத்துவ அலுவலர்கள் மற்றும் 4 மருந்தாளுனர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மண்டலம் 9 ல் ஒரு ஆயுர்வேதா மருத்துவ பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு ஒரு மருத்துவ அலுவலர் மட்டும் பணிபுரிந்து வருகின்றார். மருந்தாளுனர் பணியில் இல்லை.

மண்டலம் 5 மற்றும் 9 ல் இரண்டு ஹோமியோபதி மருத்துவ பிரிவு செயல்பட்டு வருகிறது. இதில் இரண்டு மருத்துவ அலுவலர்கள் பணி புரிந்து வருகின்றனர். மருந்தாளுனர்கள் பணியில் இல்லை.

மண்டலம் 5 மற்றும் 6 ல் மண்டலத்திற்கு ஒன்று வீதம் இரண்டு யுனானி மருத்துவ பிரிவுகள் உள்ளன. மண்டலம் 6ல் உள்ள யுனானி மருத்துவ பிரிவில் மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. மண்டலம் 5 பணியில் உள்ள யுனானி மருத்துவ அலுவலர் 31.05.2015 ல் பணி ஓய்வு பெறுகிறார். இரண்டு மருத்துவ பிரிவுகளிலும் மருந்தாளுனர்கள் உள்ளனர். இரண்டு மருத்துவ பிரிவுகளுக்கும் இரண்டு யுனானி மருத்துவ அலுவலர்கள் தேவை.

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிவிப்பின்படி, 1 முதல் 15 மண்டலங்களிலும் மற்றும் ரிப்பன் மாளிகையிலும் ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம்,யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள், ( Medical Officers ( Ayurvedha, Yoga & Naturopathy, Unani, Siddha, Homeopathy ) மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

**<u>ஆயுர்வேதா மருத்துவ பிரிவு</u>**

| வ எண் | அலுவலர்கள் விவரம் | தேவைப்படும் அலுவலர்கள் / பணியாளர்கள் | தற்போது பணியில் உள்ளவர்கள் | மீதம் தேவைப்படும் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவஅலுவலர் (ஆயுர்வேதா) | 16 | 1 | 15 |
| 2 | பல்நோக்கு பணியாளர் | 16 | 1 | 15 |

**<u>இயற்கை மற்றும் யோகா மருத்துவ பிரிவு</u>**

| வ எண் | அலுவலர்கள் விவரம் | தேவைப்படும் அலுவலர்கள்/ பணியாளர்கள் | தற்போது பணியில் உள்ளவர்கள் | மீதம் தேவைப்படும் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவஅலுவலர் (இயற்கை மற்றும் யோகா) | 16 | – | 16 |
| 2 | மருத்துவசிகிச்சை உதவியாளர் (ஆண் ) | 16 | – | 16 |
| 3 | மருத்துவசிகிச்சை உதவியாளர் (பெண் ) | 16 | – | 16 |
| 4 | பல்நோக்கு பணியாளர் | 16 | – | 16 |

**<u>யுனானி மருத்துவ பிரிவு</u>**

| வ எண் | அலுவலர்கள் விவரம் | தேவைப்படும் அலுவலர்கள்/ பணியாளர்கள் | தற்போது பணியில் உள்ளவர்கள் | மீதம் தேவைப்படும் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர்(யுனானி) | 16 | – | 16 |
| 2 | பல்நோக்கு பணியாளர் | 16 | 2 | 14 |

**<u>சித்தா மருத்துவ பிரிவு</u>**

| வ எண் | அலுவலர்கள் விவரம் | தேவைப்படும் அலுவலர்கள்/ பணியாளர்கள் | தற்போது பணியில் உள்ளவர்கள் | மீதம் தேவைப்படும் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் (சித்தா) | 16 | 4 | 12 |
| 2 | பல்நோக்கு பணியாளர் | 16 | 4 | 12 |

**<u>ஹோமியோபதி மருத்துவ பிரிவு</u>**

| வ எண் | அலுவலர்கள் விவரம் | தேவைப்படும் அலுவலர்கள்/ பணியாளர்கள் | தற்போது பணியில் உள்ளவர்கள் | மீதம் தேவைப்படும் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) | 16 | 2 | 14 |
| 2 | பல்நோக்கு பணியாளர் | 16 | 2 | 14 |

**<u>மருந்தாளுனர்கள்</u>**

| **வஎண்** | **அலுவலர்கள் விவரம்** | **தேவைப்படும் அலுவலர்கள்/ பணியாளர்கள்** | **தற்போது பணியில் உள்ளவர்கள்** | **மீதம் தேவைப்படும் அலுவலர்கள்** |
|---|---|---|---|---|
| 1 | மருந்தாளுனர் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி,) | 16 | 6 | 10 |

இந்த மருத்துவ அலுவலர்களுக்கு மற்றும் மருத்துவ சாரா பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நிர்ணயித்து வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் அதற்கான செலவு விவரங்கள் பின்வருமாறு

| Sl.No | Category of Staff | Required Number of Staff | Approximate Salary per Month Rs | Cost per year Rs | Qualification |
|---|---|---|---|---|---|
| 1 | Medical Officers (Ayurveda) | 15 | 30000 | 54,00,000 | BAMS from recognized university |
| 2 | Medical Officers (Yoga and naturopathy) | 16 | 30000 | 57,60,000 | Bachelor degree or diploma in naturopathy with not less than four years academic duration from recognized university |
| 3 | Medical Officers (Unani ) | 16 | 30000 | 57,60,000 | BUMS from recognized university |
| 4 | Medical Officers (Siddha) | 12 | 30000 | 43,20,000 | BSMS from recognized university |
| 5 | Medical Officers (Homeopathy) | 14 | 30000 | 50,40,000 | BHMS from recognized university |
| 6 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Male) | 16 | 10000 | 19,20,000 | Diploma in Nursing therapist |
| 7 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Female) | 16 | 10000 | 19,20,000 | Diploma in Nursing therapist |
| 8 | Pharmacist ( Ayurveda, Unani Siddha and Homoeopathy ) | 10 | 10000 | 12,00,000 | Diploma in integrated pharmacy (Ayurveda, Unani ,Siddha and Homoeopathy) |
| 9 | Multipurpose worker | 71 | 8000 | 68,16,000 | |
| | Total | 186 | | 3,81,36,000 | |

1. சென்னை மாநகராட்சி மண்டலம் **1–15** மற்றும் ரிப்பன் வளாகத்திற்கு தேவையான, அட்டவணையில் தெரிவிக்ப்பட்டுள்ள ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம்,யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள், ( Medical Officers ( Ayurvedha, Yoga & Naturopathy, Unani, Siddha, Homeopathy ) ) மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் தகுதி வாய்ந்த வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திட அனுமதியும்,
2. அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சாரா பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும்,
3. இப்பணிகளுக்கென தோரய செலவினம் ரூ. 3,81,36,000/ க்கு நிர்வாக அனுமதியும் ,
4. இந்த பணியாளர்களை பணியமர்த்த குறுகிய கால மின்னணு ஒப்பம் கோர அனுமதியும்,
5. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ், பிரிவு குறியீடு **30–35–01** கணக்கு குறியீடு **210–10–06–05** என்ற தலைப்பின்கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

6. இந்த மருத்துவ வசதிகளை வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு ஆகிய மூன்று வட்டார பகுதிகளில் உள்ள ஏதேனும் ஒரு மண்டலத்தில் (மூன்று மண்டலங்களில்) மற்றும் ரிப்பன் வளாகத்தில் முதற்கட்டமாக ஏற்படுத்தவும், மேலும் மற்ற மண்டலங்களில் படிப்படியாக இந்த மருத்துவ வசதிகளை விரிவுபடுத்த அனுமதியும்,

எனவே மேற்கண்ட 1 முதல் 6 இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொதுசுகாதாரம்) வின் கூட்டம் 17.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.11/2015ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.90/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/15114 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.195/2015 **பொருள் எண்.61**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளராக பணியாற்றும் திரு.ஆர்.வரதராஜன், வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 30.04.2015 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்புப் பொறியாளர், வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்கள் சென்னை மாநகராட்சியில் வரைவாளர் பதவியில் 16.09.1978 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு)—ல் கண்காணிப்புப் பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மண்டலம்—03, 07, 13 மற்றும் மழைநீர் வடிகால் துறையை தவிர பிற துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலம்—03, 07, 13 மற்றும் மழைநீர் வடிகால் துறையில், தனியரை கூட்டுப்பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் நிலுவையில் இருப்பதாகவும் இணை இயக்குநர் (பொ) உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் 09.04.2015 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்பு பொறியாளர், வட்டார அலுவலகம் (தெற்கு) அவர்கள் 30.04.2015ல், வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார். நிதி நிர்வாகப் பிரிவு கடிதத்தின்படி தனியரைப் பொறுப்பாக்கி மொத்தம் 45 தணிக்கைத் தடை பத்திகள் மொத்தம் ரூ.1,21,00,618/— கூட்டுப் பொறுப்பிலும், ரூ.23,39,964/— தனிப்பொறுப்பாக்கியும் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு, தணிக்கைத் தடை பத்திகளின் தற்போதைய நிலை குறித்து கோரப்பட்டதில், தற்போதைய நிலையில் கீழ்கண்ட தணிக்கைத் தடைப்பத்திகள் மட்டும் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்கு ட்படுத்தப்பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர் களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்பு பொறியாளர் அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ப.மண்டலம்—03 பு.மண்டலம்—06 | 1996—97 | 93 (இ) | 56192.00 | 2 | 28096.00 |
| 2 | ப.மண்டலம்—03 பு.மண்டலம்—06 | 2001—02 | 72 | 30088.00 | 8 | 3761.00 |
| 3 | ப.மண்டலம்—03 பு.மண்டலம்—06 | 2002—03 | 53 | 2397.00 | 1 | 2397.00 |
| 4 | ப.மண்டலம்—03 பு.மண்டலம்—06 | 2002—03 | 54 | 2850.00 | 1 | 2850.00 |
| 5 | மண்டலம்—07 | 2008—09 | 64 | 105792.00 | 1 | 105792.00 |
| 6 | ப.மண்டலம்—10 பு.மண்டலம்—13 | 1999—2000 | 68 (அ,ஆ,உ) | — | — | — |
| 7 | ப.மண்டலம்—10 பு.மண்டலம்—13 | 2010—11 | 26 | 3267.00 | 3 | 1089.00 |
| 8 | மழைநீர் வடிகால் துறை | 2005—06 | 55 (ஆ,உ) | 57755.00 | 2 | 28878.00 |
| | **மொத்தம்** | | | | | **ரூ.1,72,863.00** |

மேலும், கண்காணிப்பு பொறியாளர் (நிர்வாகம்) ம.நீ.வ.துறை அவர்களின் குறிப்பு ம.நீ.வ.துறை எண்.அ1/2704/2014 நாள்.27.01.2015 ன்படி, திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்பு பொறியாளர், வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்கள் மீது ரூ.1,00,000/— (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) முன்பணம் நேர்செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

தனியர் மீது மேற்குறிப்பிட்ட மண்டலம் 3,7,10, மற்றும் மழைநீர் வடிகால் துறை தவிர்த்து, பிற மண்டலங்கள்/துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என மண்டலங்கள் / துறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**27.03.2015** நாளிட்ட திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்பு பொறியாளர், வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**30.03.2015** நாளிட்ட கடிதத்தில் தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் வகுப்பு–1Bன் கீழ்வரும் கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

எனவே, திரு.ஆர்.வரதராஜன், கண்காணிப்பு பொறியாளர், வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும் , அவ்வாறு நிவர்த்தி செய்யாத பட்சத்தில் தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.1,72,863/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து எண்ணூற்றி அறுபத்திமூன்று மட்டும்) மற்றும் மழைநீர் வடிகால் துறையில் பெற்ற முன்பணம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் **ரூ.2,72,863/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து எண்ணூற்றி அறுபத்திமூன்று மட்டும்)** யையும், மற்றும் தனியர் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.04.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்க, மன்றத்தின் பின்னேற்புற்குட்பட்டு அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/17006/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.196/2015 பொருள் எண்.62

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு.சு.மரிய வர்கீஸ், உதவி செயற்பொறியாளர், மத்திய வட்டார அலுவலகம் அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 30.04.2015 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

திரு.சு.மரிய வர்கீஸ், உதவி செயற்பொறியாளர், மத்திய வட்டார அலுவலகம் அவர்கள் சென்னை மாநகராட்சியில் அளவையர் பதவியில் 05.05.1978 அன்று பணியில் சேர்ந்துள்ளார். 05.05.1998 அன்று உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். 19.08.2014 அன்று முற்பகல் முதல் தற்போது வரை மத்திய வட்டார அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த / பணிபுரிந்து வரும் துறை / மண்டலங்கள் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பதவி | மண்டலம்/துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| 01 | அளவையர் | பணித்துறை | 05.05.1978 | 16.09.1984 |
| 02 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழையவடக்குமாவட்டம்) | 17.09.1984 | 30.061989 |
| 03 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–4 (பழைய மண்டலம்–1) | 01.07.1989 | 31.07.1991 |
| 04 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–5 (பழைய மண்டலம்–2) | 01.08.1991 | 16.01.1994 |
| 05 | உதவி பொறியாளர் | மண்டலம்–5 (பழைய மண்டலம்–2) | 17.01.1994 | 18.07.1994 |
| 06 | உதவி பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–4) | 19.07.1994 | 12.02.1996 |
| 07 | உதவி பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 13.02.1996 | 04.05.1998 |
| 08 | உதவி செயற்பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 05.05.1998 | 03.09.2000 |
| 09 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–3) | 04.09.2000 | 15.10.2008 |
| 10 | உதவி செயற்பொறியாளர் | நிலம் மற்றும் உடைமைத் துறை | 16.10.2008 | 18.08.2014 |
| 11 | உதவி செயற்பொறியாளர் | மத்தியவட்டார அலுவலகம் | 19.08.2014 | இந்நாள் வரை |

தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மண்டலம்–06, மற்றும் மழைநீர் வடிகால் துறையை தவிர பிற துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

22.04.2015 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்று முன்பணம் நிலுவை ஏதேனும் இருப்பின், அதன் விவரம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், இந்நாள் வரை கூட்டுறவு சங்கத்திலிருந்து அறிக்கை பெறப்படவில்லை என்றும், 23.04.2015 நாளிட்ட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த பழைய மண்டலம்–4, (தற்போது புதிய மண்டலம்–6) பழைய மண்டலம்–3 (தற்போது புதிய மண்டலம்–6) பழைய மண்டலம்–2 (தற்போது புதிய மண்டலம்–5) மற்றும் மழைநீர் வடிகால் துறையில் தனியர் மீது தனியரை கூட்டுப்பொறுப்பாக்கும் கீழ்கண்ட தணிக்கை தடைகள் நிலுவையில் இருப்பதாக இணை இயக்குநர் (பொ) உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களுக்கு அனுப்பப்பட்ட நிதி ஆலோசகரின் 24.04.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக் குட்படுத்தப்பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.சு.மரிய வர்கீஸ், உ. செ.பொ அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழைய மண்டலம்–04 | 1994–95 | 38 | 33485 | 3 | 11162.00 |
| 2 | மழைநீர் வடிகால் துறை | 1998–99 | 72 (அ,உ) | – | – | – |
| 3 | மழைநீர் வடிகால் துறை | 1998–99 | 73 | 9483 | 2 | 4742.00 |
| 4 | மழைநீர் வடிகால் துறை | 1998–99 | 84 | 5866 | 1 | 5866.00 |
| 5 | மழைநீர் வடிகால் துறை | 1998–99 | 86 (1,3) | 62941 | 2 | 31471.00 |
| 6 | மழைநீர் வடிகால் துறை | 1999–2000 | 28 | 93955 | 1 | 93955.00 |
| 7 | பழைய மண்டலம்–3 | 2002–03 | 58 | 1169 | 1 | 1169.00 |
| 8 | பழைய மண்டலம்–3 | 2006–07 | 53D | 1763 | 2 | 882.00 |
| 9 | பழைய மண்டலம்–2 | 2001–02 | 40 | 1000 | 1 | 1000.00 |
| | | | மொத்தம் | | | ரூ.1,50,247.00 |

மேலும், 24.04.2015 நாளிட்ட மண்டல அலுவலர் 6 அவர்களின் கடிதத்தின்படி, திரு.மரிய வர்கீஸ் உதவி செயற்பொறியாளர் அவர்கள், மண்டலம் 3 ல் (தற்போது மண்டலம் 6) பணியாற்றிய காலங்களில் கீழ்கண்ட தணிக்கைத்தடைகள் நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக் குட்படுத்தப்பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர் களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.சு.மரிய வர்கீஸ், உ. செ.பொ அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழைய மண்டலம்–3 | 2000–01 | 90 | 14272 | 3 | 4,757.00 |
| 2 | பழைய மண்டலம்–3 | 2002–03 | 45 | 168644 | 4 | 42,161.00 |
| 3 | பழைய மண்டலம்–3 | 2005–06 | 56 | 104 | 2 | 52.00 |
| 5 | பழைய மண்டலம்–3 | 2005–06 | 47 | 31147 | 2 | 15,574.00 |
| 4 | பழைய மண்டலம்–3 (நிதி ஆலோசகர் கடிதத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுஉள்ளது) | 2006–07 | 53D | 1 763 | 2 | (–) 882.00 |
| | | | மொத்தம் | | | ரூ.62,544.00 |

தனியர் நிலம் மற்றும் உடைமைத்துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்த காலத்தில், தன் மேலதிகாரிகளின் அறிவுரைகளை பின்பற்ற தவறிய குற்றத்திற்காக சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி 10(a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு இறுதியில் ஓராண்டு ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து 05.08.2014 நாளிட்ட ஆணையின் மூலமாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தனியர் தண்டனையை ஆட்சேபித்து மேல்முறையீடு மனு அளித்திருந்ததால் தனியரின் மேல்முறையீட்டு மனுவை அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டு ஆணை எதிர் நோக்கப்பட்டு வருகிறது.

தனியர் வகித்து வரும் பதவி, சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ன் கீழ் வருவதால், தனியரை வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, திரு.சு.மரிய வர்கீஸ், உதவி செயற்பொறியாளர், மத்திய வட்டார அலுவலகம் அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு நிவர்த்தி செய்யாத பட்சத்தில் 24.04.2015 நாளிட்ட நிதிஆலோசகர் கடிதத்தில் தணிக்கைத்தடை சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ.1,50,247.00** (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்றி நாற்பத்தேழு மட்டும்)யையும், மற்றும் 24.04.2015 நாளிட்ட புதிய மண்டலம்–6 அவர்களின் கடிதத்தில் (பழைய மண்டலம்–3) குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி **ரூ.62,544/–** (ரூபாய் அறுபத்து இரண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) ஆகிய மொத்தத்தொகை **ரூ.2,12,791/–** னையும், **(ரூபாய் இரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்)** தனியர் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 30.04.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/16298 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.197/2015 **பொருள் எண்.63**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றும் திரு.எ.கோபாலகிருஷ்ணன், மண்டலம்–10 அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 30.04.2015 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

திரு.எ.கோபாலகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–10 அவர்கள் சென்னை மாநகராட்சியில் இளநிலை பொறியாளராக 27.07.1995 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது உதவி செயற்பொறியாளராக 31.10.2013 அன்று பதவி உயர்வு பெற்று மண்டலம்–15ல் பணியில் சேர்ந்து, தற்போது மண்டலம்–10ல் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/38341/2012, நாள்.17.07.2014–ன்படி பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த / பணிபுரிந்து வரும் துறைகள் / மண்டலங்கள் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | பதவி | மண்டலம்/துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| 01 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–9 (பழைய மண்டலம்–7) | 27.07.1995 | 15.05.1998 |
| 02 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–10 (பழைய மண்டலம்–9) | 16.05.1998 | 18.08.2000 |
| 03 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–13 (பழைய மண்டலம்–10) | 19.08.2000 | 29.03.2001 |
| 04 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–9 (பழைய மண்டலம்–7) | 30.03.2001 | 22.10.2007 |
| 05 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–13 (பழைய மண்டலம்–10) | 23.10.2007 | 19.12.2011 |
| 06 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–15 | 20.12.2011 | 31.10.2013 |
| 07 | உதவி செயற்பொறியாளர் | கட்டடத்துறை (மண்டலம்–15ல் பணி) | 31.10.2013 | 29.01.2014 |
| 08 | உதவி செயற்பொறியாளர் | தெற்கு வட்டார அலுவலகம் | 30.01.2014 | 03.03.2014 |
| 09 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–15 | 04.03.2014 | 16.07.2014 |
| 10 | உதவி செயற்பொறியாளர் | தெற்கு வட்டார அலுவலகம் | 17.07.2014 | 10.11.2014 |
| 11 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–10 | 10.11.2014 பி.ப. | இன்று வரை |

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மண்டலம்–09, 10, 13, மற்றும் தெற்கு வட்டார அலுவலகத்திலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் ஏதும் நிலுவையில் இல்லை என இன்மை சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலம்–15, மற்றும் கட்டடத்துறையில் தனியர் மீது முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் எதுவும் இல்லை எனவும், குறிப்பிட்டுள்ள ஆண்டிற்கான தணிக்கை ஆய்வு அறிக்கை இன்னும் பெறப்படவில்லை எனவும் தணிக்கை அறிக்கை பெற்றபின் விவரம் தெரிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

31.03.2015 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு துறை விழிப்பு அலுவலரின் குறிப்பில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

23.04.2015 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திலிருந்து தனியருக்கு கடன் நிலுவைத்தொகை எதுவும் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.எ.கோபாலகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–10 அவர்கள் சென்னை மாநகராட்சி பணியில் சேர்வதற்கு முன்பு 14.12.1981 முதல் 04.09.1987 வரை பொதுப்பணித்துறையில் பணியாற்றியுள்ளதாகவும், தனியர் பணியாற்றிய காலத்தில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவைகள் எதுவும் இல்லை என ரூ.20/– முத்திரைத்தாளில் தனியர் சான்றளித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் பணியில் சேருவதற்கு முன்னர் பொதுப்பணித்துறையில் பணியாற்றிய காலத்தை, சென்னை மாநகராட்சி பணிக்காலத்துடன் சேர்க்கப்படவில்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இன்றைய நிலையில் தனியர் மீது முன்பண நிலுவை எதுவும் இல்லை எனவும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை எனவும் மண்டல அலுவலரால் (மண்டலம்–10) சான்றளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விதியின்படி நிலை –2 அலுவலர்களை பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, தனியரை கீழ்கண்ட நிபந்தனைகுட்பட்டு 30.04.2015 பிற்பகல் முதல் முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

1. தனியரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நேர் செய்யப்படாத முன் பண நிலுவைத்தொகை மற்றும் தணிக்கைத்தடை இருப்பதாக பின்னர் தெரியவரின், தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,

2. தனியரின் செயல்பாடுகளினால் சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என பின்னர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் தெரியவரின் அத்தணிக்கை தடைகளுக்கு தனியரை முழுப்பொறுப்பாக்கி தணிக்கைத்தடையில் தெரிவிக்கப்படும் தொகை முழுவதும் அவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், திரு.எ.கோபாலகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–10 அவர்களை 30.04.2015 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/5240/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.198/2015 **பொருள் எண்.64**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர்.U.சுகுணபூஷண குமாரி, மருத்துவ அலுவலர், மண்டலம்–8 அவர்கள் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 19.04.1995 அன்று பணியில் சேர்ந்து இதுவரை பணிபுரிந்து வருகிறார். தனியருடைய பிறந்த தேதி 23.04.1957 இதன்படி தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள் 30.04.2015 ஆகும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட மண்டலம்/துறைகளில் பணிபுரிந்துள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளின் பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1. | மருத்துவ அலுவலர் | சுகாராத் துறை (தலைமையிடம்) | 19.04.1995 | 30.01.1996 |
| 2. | மருத்துவ அலுவலர் | பழைய மண்டலம்–6 ( புதிய மண்டலம்–9) | 31.01.1996 | 08.10.1998 |
| 3. | மருத்துவ அலுவலர் | பழைய மண்டலம்–3 ( புதிய மண்டலம்–6) | 09.10.1998 | 24.09.2001 |
| 4. | மருத்துவ அலுவலர் | பழைய மண்டலம்–5 ( புதிய மண்டலம்–8) 05.06.2008 முதல் 29.04.2010 வரை DPH course | 25.09.2001 | 30.05.2010 |
| 5. | மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்(பொ) | பழைய மண்டலம்–1 ( புதிய மண்டலம்–4) | 31.05.2010 | 13.07.2011 |
| 6. | மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்(பொ) | மண்டலம்–9 | 14.07.2011 | 07.02.2012 |
| 7. | மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்(பொ) | புதிய மண்டலம் – 5 | 08.02.2012<br>06.02.2013<br>21.11.2013 | 18.07.2012<br>18.03.2013<br>20.08.2014 |
| 8. | மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்(பொ) | புதிய மண்டலம் – 15 | 19.07.2012 | 06.02.2013 |
| 9. | மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்(பொ) | புதிய மண்டலம் – 2 | 19.03.2013 | 20.11.2013 |
| 10. | மருத்துவ அலுவலர் | புதிய மண்டலம் – 8 | 21.08.2014 | இது நாள் வரை |

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/13003/94 நாள்:13.03.1999ன்படி பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மன்றத்தீர்மானம் எண்.38/2002 நாள்: 12.02.2002ன் படிமருத்துவ அலுவலர் பதவியில் 19.04.97 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.U.சுகுணபூஷண குமாரி, மருத்துவ அலுவலர், மண்டலம்–8, அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 1.04.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ மற்றும் விசாரணைகளோ ஏதும் நிலுவையில் இல்லை என மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 03.02.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களிலிருந்து தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் 19.03.2013 முதல் 22.11.2013 வரை மண்டலம்–2ல் பணியாற்றிய காலத்தில் தனியர் மீது தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் 28.01.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 09.10.1998 முதல் 24.09.2001 வரை (பழைய மண்டலம்–3) புதிய மண்டலம்–6ல் பணிபுரிந்த காலத்தில் தனியரை மருத்துவ அலுவலராக நியமனம் செய்ததற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்படவில்லை என தெரிவித்து தணிக்கைத் தடை பத்தி எண்.134/2001 எழுப்பப்பட்டுள்ளதாக மண்டல அலுவலர்–6 அவர்களின் 16.04.2015 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போது சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ன் கீழ் வரும் பதவிகளை நியமனம் செய்யும் அதிகாரம் அரசிடமிருந்து சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால் இவ்விவரத்தை தணிக்கைத் துறைக்கு தெரியப்படுத்தி தணிக்கை தடையை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே டாக்டர்.U.சுகுணபூஷண குமாரி, மருத்துவ அலுவலர், மண்டலம்–8, அவர்கள் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 30.04.2015 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.சு.ந.க.எண்.ஈ2/16406/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.199/2015 **பொருள் எண்.65**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர்.வீ.ரபீந்திரநாத், கால்நடை உதவி மருத்துவர், பெரம்பூர் இறைச்சிக்கூடம், அவர்கள் சென்னை மாநகராட்சியில் கால்நடை உதவி மருத்துவராக **05.07.1984** அன்று பணியில் சேர்ந்து இதுவரை பணிபுரிந்து வருகிறார். தனியருடைய பிறந்த தேதி **06.05.1957** இதன்படி தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள் **31.05.2015** ஆகும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட துறைகளில் பணிபுரிந்துள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளின் பெயர் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1. | கால்நடை உதவி மருத்துவர் | Conservancy (South) 'D' Cattle Depot, (New) Zone -5 | 05.07.1984 | 17.05.1985 |
| 2. | | Conservancy (North) 'A' Cattle Depot, (New) Zone – 5 | 18.05.1985 | 24.06.87 |
| 3. | | முந்தைய தமிழ்நாடு இறைச்சி கழகம் | 25.06.1987 | 17.07.1990 |
| 4. | | 'I' Cattle Depot, (New) Zone – 13 | 17.07.1990 | 23.06.1995 |
| 5. | | பெரம்பூர் இறைச்சி கூடம், பொது சுகாதாரத்துறை | 23.06.1995 | இன்றைய நாள் வரை |

டாக்டர்.வீ.ரபீந்திரநாத், கால்நடை உதவி மருத்துவர், பெரம்பூர் இறைச்சிக்கூடம், அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் **21.04.2015** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ மற்றும் விசாரணைகளோ ஏதும் நிலுவையில் இல்லை என மாநகர சுகாதார அலுவலர் (பொ), அவர்களின் **21.04.2015** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களிலிருந்து தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் **25.06.1987** முதல் **17.07.1990** வரை முந்தைய தமிழ்நாடு இறைச்சி கழகத்தில் அயற்பணியில் பணியாற்றியுள்ளார். இந்நிறுவனம் தற்போது கலைக்கப்பட்டுவிட்டதால் இக்காலத்திற்கு சான்று பெறும் நிலை எழவில்லை என மாநகர சுகாதார அலுவலர் (பொ), அவர்களின் **21.04.2015** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் **31.05.2015** அன்று வயது முதிர்வு பெறுவதை முன்னிட்டு தனியருக்கு ஓய்வு கால பயன்கள் வழங்க தணிக்கை சான்று பெற தணிக்கை துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து தனியருக்கு ஓய்வூதிய பயன்களை வழங்க இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் கடிதம் நி.மு.எண்.எ4/508/2014, நாள்: **13.04.2015**ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **2**ன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே டாக்டர்.வீ.ரபீந்திரநாத், கால்நடை உதவி மருத்துவர், பெரம்பூர் இறைச்சிக்கூடம், அவர்கள் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை **31.05.2015** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/16102 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.200/2015 **பொருள் எண்.66**

**திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டுதிடல் பயிற்சியாளர் அவர்களுக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு முன்தேதியிட்டு வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சியில் அரங்கத் துறையில் விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் மற்றும் அரங்க அலுவலர் (பொ) ஆக பணிபுரியும் திரு.எஸ்.செல்வராஜ் அவர்களின் கடிதத்தில், தான் அரங்க அலுவலர் பதவிக்கு மன்றத் தீர்மானம் எண்.313/07, நாள்.22.6.2007ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளை பெற்றிருந்ததால், தனக்கு அரங்க அலுவலராக பதவி உயர்வு வழங்க நியமனக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததாகவும், ஆனால் அச்சமயத்தில் தன் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால், தனக்கு பதவி உயர்வு வழங்குவது சம்பந்தமான கோப்பின் மீது நடவடிக்கை நிறுத்தப்பட்டு, தனக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனவும், தன்மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தற்போது கைவிடப்பட்டதால், தான் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியில் சேர்ந்த 29.02.2008 முதல் தனக்கு அரங்க அலுவலர் பதவியில் முறையாக பதவி உயர்வு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், 20.04.2015 நாளிட்ட அரங்க அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பில், திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டு திடல் பயிற்சியாளர் அவர்களுக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் அரங்கத்துறைக்கு அரங்க அலுவலர் பதவியில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் 2 ஆகும். அரங்க அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பதவியாகும். வகுப்பு 2ன் கீழ் வரும் பதவிகளுக்கு பணிவிதிகள் உருவாக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. அரங்க அலுவலர் பதவிக்கு இதுவரை பணிவிதிகள் உருவாக்கி அரசாணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

அரங்க அலுவலர் பதவிக்கு கீழ்கண்டவாறு பணிவிதிகளை உருவாக்க அரசின் ஆணை பெறுவதற்கு மன்றத்தீர்மான எண்.313/2007, நாள்: 22.06.2007ல் தீர்மானிக்கப்பட்டு, ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசின் ஆணை எதிர்நோக்கப்பட்டு உள்ளது.

| பதவி பெயர் | நியமன முறை | கல்வித் தகுதி |
|---|---|---|
| அரங்க அலுவலர் வகுப்பு II ஊதிய விகிதம் ரூ. 15600–39100 + தரஊதியம் ரூ.5400 /– | அ) நேரடி நியமனம் அல்லது<br>ஆ) சென்னை மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு–3ன் கீழ்வரும் மூத்த விளையாட்டுத் திடல் பயிற்சியாளர்(scale of pay Rs.5200-20200+2800 Grade pay) பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் அல்லது<br>இ) மேலே ஆ–வில் தகுதியுள்ளவர் இல்லையானால், சென்னை மாநகராட்சி பணியமைப்பு வகுப்பு–3ன் கீழ்வரும் விளையாட்டுத் திடல் பயிற்சியாளர் (scale of pay Rs.5200-20200+2800 Grade pay) பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட உடற் கல்வியில் பட்டப்படிப்பு<br>2. சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 மற்றும் பாகம்–2ல் தேர்ச்சி அல்லது செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி<br>3. அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி<br>விளக்கம்:<br>நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படும் நபர் தகுதி காண்பருவம் முடிவதற்குள் 2 மற்றும் 3 குறிப்பிடப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் |

இத்தருணத்தில் அரங்கத்துறையில் அரங்க அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊட்டப்பதவியான விளையாட்டுத் திடல் பயிற்சியாளர் பதவியில் மூப்பு நிலையின் படி கீழ்கண்டவர்கள் பணிபுரிந்து வந்தனர்.

| வ.எண். | பெயர் | பதவியில் சேர்ந்த நாள் | செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்ற வருடம் |
|---|---|---|---|
| 1 | எம்.வாசு | 25.05.1998 | – |
| 2 | எம்.ஆனந்தன் | 20.05.1998 | – |
| 3 | டி.அன்ஸ் தேவ கமலா ஜெயராஜ் | 26.05.1998 | மே 2013 |
| 4 | என்.பிரபு குமார் | 20.05.1998 | மே 2014 |
| 5 | எஸ்.செல்வராஜ் | 20.05.1998 | மே 2002 |
| 6 | எ.பி.சிவகுமார் | 20.05.1998 | மே 2000 |
| 7 | எ.சரவணன் | 20.05.1998 | – |
| 8 | ஐ.ராஜா துரை காந்தி | 20.05.1998 | மே 2014 |

அரங்க அலுவலர் பதவிக்கு மன்றத் தீர்மானம் எண்.313/07, நாள்.22.06.2007ல் நிர்ணயிக்கப்பட்டிருந்த தகுதிகளை பெற்று பணிமூப்பு நிலையை திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டுத் திடல் பயிற்சியாளர்அவர்கள் பெற்றிருந்ததால், தனியரை சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை அ.அ.ந.க.எண்.அ3/754/2007, நாள்: 29.02.2008ன்படி அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியாற்றிட உத்தரவிடப்பட்டு, தனியர் 29.02.2008 அன்று பிற்பகல் முதல் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் அரங்க அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளை பெற்றிருந்த திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டுத் திடல் பயிற்சியாளர் மற்றும் அரங்க அலுவலர்(பொ) அவர்கள், அரங்க அலுவலர் பதவியில் தனக்கு முறையான பதவி உயர்வு வழங்குமாறு கோரியிருந்ததால் தனியர் மன்றத் தீர்மான எண்.313/07, நாள்: 22.06.2007ல் அரங்க அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றிருந்ததால் தனியருக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்க நியமனக்குழுவின் அனுமதி கோரியதில், இதற்கு நியமனக்குழு தனது தீர்மான எண்.220/2009, நாள்: 20.08.2009ல் அனுமதி வழங்கியது.

இதன் தொடர்ச்சியாக தனியருக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்க மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கும் தருணத்தில், தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் தனியருக்கு பதவி உயர்வு வழங்குவது சம்மந்தமான கோப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்வதை நிறுத்தி வைக்கும்படி 31.10.2009 நாளிட்ட துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்களது குறிப்பில் தெரிவித்து அரங்க அலுவலகத்திற்கு கோப்பு அனுப்பப்பட்டதால், இக்கோப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்வது அரங்கத் துறையால் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், அரங்க அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையும் நிறுத்தி வைக்கப்பட்டது.

மேற்படி, தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தற்போது ஒழுங்கு நடவடிக்கை 7 ஆண்டுகளுக்கு பின், கைவிடப்பட்டு, முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ7/31752/2009, நாள்: 13.04.2015ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது இவ்வொழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமலிதிருந்தால் தனியருக்கு அந்த சமயத்திலேயே அரங்க அலுவலர் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும்.

தனியர் தற்போது தன்மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதாலும் தான் 31.05.2015ல் ஓய்வு பெற இருப்பதாலும், தான் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியில் சேர்ந்த 29.02.2008 முதல் அரங்க அலுவலர் பதவியில் தனக்கு முறையான பதவி உயர்வு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது, சென்னை மாநகராட்சி எல்லை 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், 3 வட்டார அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாலும் இந்த வட்டார அலுவலங்களுக்கு உதவி விளையாட்டுகள் அலுவலர் (Assistant Sports Officer) என்ற பதவியில் 3 பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், தற்போதுள்ள அரங்க அலுவலர் பதவியை விளையாட்டுகள் அலுவலர் (Sports Officer) என பதவி பெயர் மாற்றம் செய்வதற்கும், இவ்வாறு தோற்றுவிக்கப்படவுள்ள உதவி விளையாட்டுகள் அலுவலர் என்ற பதவியை விளையாட்டுகள் அலுவலர் (Sports Officer) பதவிக்கு ஊட்டப்பதவியாக நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டு, மன்றத்தீர்மான எண்.612/2014, நாள்: 29.12.2014ல் அனுமதி பெற்று ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதில், இவ்வாறு உதவி விளையாட்டுகள் அலுவலர் (Assistant Sports Officer) என்ற

பதவியில் மூன்று பணியிடங்களை தோற்றுவிக்கவேண்டிய அவசியம் குறித்து விரிவான விவரத்தை (Proper Justification) அனுப்பி வைக்குமாறு அரசு தனது கடித எண்.25244/மா.ந.3/2013–8, ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 10.04.2015ல் கேட்டுக்கொண்டுள்ளது.

எனினும், சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்பே திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டு திடல் பயிற்சியாளர் அவர்கள் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியமர்த்தப்பட்டார். மேலும், அரங்க அலுவலர் பதவியில் முறையான பதவி உயர்வு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தருணத்தில் தனியருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதால் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

திரு.எஸ்.செல்வராஜ், அவர்கள் 29.02.2008 முதல் எவ்வித பணப்பயனின்றி 7 ஆண்டுகள் அரங்க அலுவலர் (பொறுப்பு) ஆக பணியாற்றியுள்ளார். தனியர் மன்றத்தீர்மான எண்.313/2007, நாள்: 22.06.2007ல் அரங்க அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை அப்போதே பெற்றிருந்தார். நியமனக்குழுவும் தனது தீர்மான எண்.220/2009, நாள்: 20.08.2009ல் தனியர் அரங்க அலுவலர் பதவி உயர்வு கோரும் கோரிக்கையின் மீது அனுமதி வழங்கியிருந்தது,

தற்போது சென்னை மாநகராட்சி அரங்கத்துறையில் விளையாட்டு திடல் பயிற்சியாளராக பணிபுரியும் திரு.D.அன்ஸ் தேவகமலா ஜெயராஜ், என்பவர் தான் அரங்க அலுவலர் பதவிக்கான முழுதகுதிகள் பெற்றுள்ளதால் பணிமூப்பின்படி, தனக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்குமாறு 20.04.2015 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியரின் கோரிக்கைப்படி, தற்போதைய நிலையில் விதிகளின்படி, தெரிவுப்பட்டியல் மூலம் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில், பணிமூப்புப்பட்டியலில் திரு.எஸ்.செல்வராஜ், என்பவரைவிட முதுநிலையில் உள்ள திரு.D.அன்ஸ் தேவகமல ஜெயராஜ், பதவி உயர்வு பெறுவதற்கு தற்போது தகுதி பெற்றுள்ளதால், திரு.எஸ்.செல்வராஜ், அவர்களுக்கு தெரிவுப்பட்டியல் மூலம் பதவி உயர்வு வழங்க வாய்ப்பு இல்லை.

எனினும், 2009 ஆம் ஆண்டில் அப்போதைய நிலையில், அரங்க அலுவலர் பதவிக்கு மூப்புநிலைப்பட்டியலில் திரு.எஸ்.செல்வராஜ், அவர்களுக்கு முதுநிலையில் உள்ளவர்கள் உரிய முழுதகுதிகளை பெற்றிருக்கவில்லை என்பதாலும், அத்தருணத்தில் இளையவராக இருந்த திரு.எஸ்.செல்வராஜ், அவர்கள் முழுதகுதிகளை பெற்றிருந்ததாலும் இவரது பெயர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் அரங்க அலுவலர் பதவிக்கு எவ்வித தெரிவுப்பட்டியலும் அப்போதைய நிலையில் தயாரிக்கப்படவில்லை.

இருப்பினும், அரங்க அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் ஏதும் தயாரிக்கப்படாத நிலையிலும் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையிலும், திரு.எஸ்.செல்வராஜ், விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் மற்றும் அரங்க அலுவலர் (பொ) அவர்கள் 31.05.2015ல் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாலும், தனியர் தற்போது அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்குமாறு விடுத்துள்ள கோரிக்கையை கருணை நோக்குடன் பரிசீலனை செய்து, தனியரின் கோரிக்கையை ஏற்று, தனியர் அரங்க அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணியில் சேர்ந்த 29.02.2008 அன்று பிற்பகல் முதல் அனைத்து பயன்களுடன் முன்தேதியிட்டு தனியருக்கு அரங்க அலுவலர் பதவி உயர்வு வழங்குவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பூ.து.ந.க.எண்.பி2 /0443/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.201/2015 **பொருள் எண்.67**

**மண்டலம்–13 – பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பக்கிங்காம் கால்வாயின் மேற்கு கரையில் – ராஜீவ்காந்தி சாலை ஓரமாக (OMR சாலை) பொதுப் பணித்துறையிலிருந்து முன் நுழைவு அனுமதி பெறப்பட்டது – பணி மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டார இணை ஆணையர் அவர்களின் 17.04.2015 நாளிட்ட (ZO.C.No.G1/Spl/2015,dt.17.04.2015) கடிதத்தின்படி, மண்டலம்–13ல் பொதுப் பணிதுறைக்கு சொந்தமான பக்கிங்காம் கால்வாயின் மேற்கு கரையில் ராஜீவ்காந்தி சாலையின் ஓரமாக (OMR சாலை) சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை (மத்திய கைலாஷ்) முதல் லேட்டிஸ் பாலம் வரையில் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள பொதுப்பணித்துறையிலிருந்து முன் நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், அதனை ஏற்றுக் கொண்டு விவர மதிப்பீடு தயார் செய்ய அனுமதி கோரியுள்ளார்கள்.

திரு.என்.மகேஸ்வரன்,பி.இ. மேற்பார்வை பொறியாளர், பொதுப் பணித் துறை அவர்களின் 23.03.2015 நாளிட்ட முன் நுழைவு அனுமதி (Lr.No.AEE7/F03/2015, dt.23.03.2015) கடிதத்தின்படி, மண்டலம்–13ல் பொதுப்பணிதுறைக்கு சொந்தமான தெற்கு பக்கிங்காம் கால்வாயின் மேற்கு கரையில் ராஜீவ்காந்தி சாலை ஓரமாக (OMR சாலை) சர்தார் பட்டேல் சாலை முதல் (மத்திய கைலாஷ் அருகில்) லேட்டிஸ் பாலம் வரை கால்வாய் தடுப்புச் சுவருக்கும் ராஜீவ்காந்தி சாலைக்கும் இடையே உள்ள திறந்தவெளி நிலத்தில் சென்னை மாநகராட்சியின் மூலம், பூங்கா அமைக்க பொதுப்பணித்துறையிருந்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தற்காலிக முன் நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:–

1. கால்வாயில் குப்பைகள் மற்றும் தடுப்பு பொருட்கள் எதுவும் கொட்டாமல் பராமரிக்க வேண்டும்.
2. பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலப்பரப்பில் எந்தவித கட்டுமான பணியையும் சென்னை மாநகராட்சி அனுமதிக்க கூடாது.
3. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள கால்வாய் அகலத்திற்குட்பட்ட பகுதியில் ஆக்கிரமிப்புகள் இல்லாமல் பராமரிக்கப்படவேண்டும்.
4. பக்கிங்காம் கால்வாயில் எந்த நேரத்திலும் தண்ணீர் தாராளமாக செல்வதற்கு எந்த இடையூறும் இருக்க கூடாது.
5. சென்னை மாநகராட்சி, பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே எந்த விதமான, கட்டுமான பணியும் பொதுப்பணிதுறையின் முன் அனுமதியின்றி மேற்கொள்ள அனுமதிக்க கூடாது.
6. இந்த தற்காலிக முன் நுழைவு அனுமதி வழங்கிய நோக்கத்திலிருந்து எந்த விதத்திலும் மாறுபடக்கூடாது. மேலும், இந்த இடம் பொதுப்பணித்துறைக்கு முழுமையாக சொந்தமான இடமாகும்.
7. இந்த இடம் இனிவரும் காலங்களில் பொதுப்பணித்துறையின் மேம்பாட்டுக்காக தேவைப்பட்டு மீண்டும் தன்வசம் எடுத்துக்கொண்டால், அதற்கான இழப்பீடு எதுவும் வழங்காது.
8. சென்னை மாநகராட்சி இந்த நிபந்தனையிலிருந்து மாறுபட்டாலோ வேறு எந்த நிகழ்வும் நடந்தாலோ, இப்போது வழங்கப்பட்டுள்ள முன் நுழைவு அனுமதி வாபஸ் பெறும் போது எந்தவித இழப்பீடும் கோர இயலாது.
9. பணி ஆரம்பிக்கும் முன்பு செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, ஆரணியாறு வடிநில கோட்டம், பொதுப்பணிதுறை, சென்னை–600 005 அவர்களுக்கு தகவல் தெரியப்படுத்த வேண்டும்.
10. சென்னை மாநகராட்சி பணி முடியும் பட்சத்தில் கால்வாயின் கட்டுமானத்தில் ஏதும் பழுது ஏற்படின் சென்னை மாநகராட்சி செலவிலேயே சரி செய்து தரவேண்டும்.

11. இப்பணியில் இனிவரும் காலத்தில் ஏதேனும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பின், செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, ஆரணியாறு வடிநில கோட்டம், பொதுப்பணிதுறை, சென்னை–600 005 அவர்களின் முன் அனுமதி பெறவேண்டும்.
12. நீர்வளத் ஆதாரத்துறை அதிகாரிகள் எந்த நேரத்திலும் பணி நடைபெறும் போதும், பணி முடிவுற்ற போதும் கள ஆய்வு மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

எனவே,

அ. பொதுப்பணித்துறையினரிடமிருந்து பக்கிங்காம் கால்வாயின் ஒரத்தில் பணிமேற்கொள்ள முன் நுழைவு அனுமதி பெறப்பட்டதை ஏற்றுக் கொள்ளவும்,

ஆ. குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலவடிவமைப்பாளர்களிடமிருந்து விரிவான மதிப்பீடு மற்றும் நிலவடிவமைப்பு வரைப்படம் பெறவும்,

இ. மேற்கண்ட நிகழ்வுகளை வார்டு குழு பின்னேற்பை எதிர்நோக்கி மன்றத்தின் அனுமதி கோருவதற்கும்,

ஈ. மன்றத்தின் அனுமதி பெற்றவுடன் நிலம் மற்றும் உடைமைத்துறை மூலமாக பத்திர பதிவு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 16.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.12/2015ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.79/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.99/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.4.ந.க.எண்.பி2/9768/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.202/2015 **பொருள் எண்.68**

**மண்டலம்–4, வார்டு–43ல் கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை துவக்கப்பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

| வ. எண். | வார்டு எண்–43 | மண்டலம்–4 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, வார்டு–43ல் கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை துவக்கப் பள்ளி கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1983 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 367.80 ச.மீ – தரைதளம் மட்டும். |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 877.30 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.19,230/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | பொது மக்கள் பயன்பாட்டிற்காக சமூக நல கூடம் அமைப்பதற்கும், அதே சமயத்தில் புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தினால் பொது மக்கள் பாதிக்கும் போது தங்க வைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மாமன்ற உறுப்பினர், வார்டு–43. |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள் | 4வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.561, நாள்.18.12.2014 |

1983ஆம் ஆண்டு கட்டப்பட்ட இப்பள்ளிக்கட்டிடம் பழுதடைந்துள்ளதாலும், இப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாலும், 2003ஆம் ஆண்டு இந்த சென்னை மாநகராட்சி துவக்கப்பபள்ளியில் பயின்ற 56 மாணவர்களை, இப்பள்ளியில் இருந்து அருகாமையில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு மாற்றி, படிப்பை தொடர்வதற்காக வழி வகை செய்யப்பட்டது. மேலும், பழுதடைந்த இப்பள்ளிக் கட்டிடத்தை இடித்து விட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சமூக நலக்கூடம் அமைப்பதற்கும், புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தினால் இப்பகுதியில் வாழும் பொது மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களை அதில் தங்க வைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்—4, வார்டு—43ல் கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள பழுதடைந்து, இடிந்து விழும் நிலையில் உள்ள பயன்பாட்டில் இல்லாத, முன்பு சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி இயங்கி வந்த கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 16.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.13/2015ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.63/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/616/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.203/2015 **பொருள் எண்.69**

**படிகள் –அகவிலைப்படி – 01.01.2015 முதல் உயர்த்தி அளிக்கப் பட்டுள்ள 6 சதவிகித அகவிலைப்படி – அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி**

அரசாணை எண்.121 நிதி (படிகள்) துறை நாள். 22.04.2015 ஜனவரி 2015 முதல் அகவிலைப்படி **107** விழுக்காடிலிருந்து 113 விழுக்காடு உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.01.2015 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும், ஜனவரி முதல் மார்ச் வரை அகவிலைப் படி நிலுவைத் தொகை வழங்கவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடியத் தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ்வரசாணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், சில்லரை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும் எனவும், பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், சிறப்புப்பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் / எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படி உயர்வினால் சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ.**1.05** கோடியாகும் எனவும், நடப்பு நிதியாண்டில் ரூ.**12.60** கோடி கூடுதல் செலவு ஏற்படும் என கருதப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.**121** நிதி (படிகள்) துறை நாள்.22.04.2015னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **94/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2184/2009**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 23.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.204/2015 **பொருள் எண்.70**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ. 100,60,77,292/–க்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு 05.05.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 04.07.2012க்குள் முடிக்கப்பட வேண்டும்.

மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காகவும், மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்ச்சியாக வருவதினாலும், சேவைத்துறையினரின் பணிகளாலும், போக்குவரத்து காவல் துறையினரின் அனுமதி மற்றும சில இடர்பாடுகளாலும் இருமுறை முறையாக 03.01.2013 மற்றும் 31.03.2014 வரை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டு, மேலும் கழிவுநீர் பழைய மழைநீர் வடிகால்வாய்களில் செல்வதாலும், போக்குவரத்து காவல் துறையினரின் அனுமதி பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுவதாலும் 31.03.2014க்குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க மூன்றாம் முறையாக 01.04.2014 முதல் 30.09.2014 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என மன்றத் தீர்மான எண்.295/2014, நாள்.30.05.2014ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், இத்தீர்மானத்தில் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதி நீர்வழிக்கால்வாய், கூவம் நீர்ப்பிடிப்பு பகுதி மழைநீர் கால்வாய், வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி, இராயபுரம், வடக்கு, மத்திய மற்றும் தெற்கு பக்கிங்காம் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு, மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி, வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதி, மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி ஆகிய கால்வாய்களை மேம்படுத்தும் பணிக்காக ஒப்பந்தம் விடப்பட்டு 04.07.2012க்குள்ளாக முடிக்க பணியாணை வழங்கப்பட்டது. தேர்தல் மற்றும் பல்வேறு இயற்கை இடர்பாடுகளின் காரணமாக இந்த பணியானது குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாத காரணத்தினால் ஒப்பந்ததாரரால் தயாரித்து அளிக்கப்பட்ட வேலை அட்டவணை (Work chart)யை பரிசீலித்து கால நீட்டிப்பு இம்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. இறுதியாக 31.03.2014 வரை கால நீட்டிப்பு அனுமதிக்கப்பட்டது. இந்த கால கட்டத்திற்குள் பணி முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு மேலும் பணி நிட்டிப்பு வழங்குவது என்பது தேவையற்ற ஒன்றாகும். இருப்பினும் அம்முறை மட்டும் கடைசி வாய்ப்பாக ஒப்பந்ததாரர்களுக்கு 30.09.2014 வரை கால நீட்டிப்பு வழங்க இம்மன்றம் அனுமதி அளிக்கிறது. இந்த கால நீட்டிப்பிற்கு வேலை விகிதச்சார உயர்வு (Escalation Charges) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது. மேலும், இதற்கு பிறகு எந்த விதமான கால நீட்டிப்பும் கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது. ஏற்கனவே கால நீட்டிப்பு வழங்கப்பட்ட இனங்களில் அனுமதிக்கப்பட்ட வேலை விகிதாச்சார உயர்வு குறித்து இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையிலான குழு மறு ஆய்வு செய்யவும், அவ்வாறு மறு ஆய்வு செய்து அனுப்பப்படும் அறிக்கையில் தவறுகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மீது உச்சபட்ச நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டது முடிவடையும் தருவாயில் உள்ளதாகவும், மாம்பலம் மற்றும் நந்தனம் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியில் மீதம் உள்ள பணிகளை விரைந்து முடிக்க கால நீட்டிப்பு வழங்க வேண்டியுள்ளனர். மேலும், இப்பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation charges) வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு கழிவுநீர் பழைய மழைநீர் வடிகால்வாய்களில் செல்வதாலும், போக்குவரத்து காவல் துறையினரின் அனுமதி பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுவதாலும், மாம்பலம் மற்றம் நந்தனம் கால்வாய் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியில் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்கள் 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மீதம் உள்ள பகுதிகளில் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. கால்வாய் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம்

மறுகுடியமைப்பு செய்து வருகின்றனர். இப்பணி முழுவதும் முடிவடைந்ததும் பகுதியில் உடனே பணி மேற்கொண்டு முழுவதும் முடிக்கப்படும். எனவே, **30.09.2014**குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க **01.10.2014** முதல் **31.03.2015** வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான **2009 – 2010**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி பணி ஆணை வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் பணிபுரியும் பணிக்களுக்கான பணப்பட்டுவாடா **2009 – 2010**ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படியே வழங்கப்படுகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாடா பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினாலும், இப்பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation charges) வழங்குவதின் மூலம் புதிய ஒப்பம் கோரி பணி துவக்கும் செலவினத்தை விட குறைவாகவே இருக்கும். மேலும் இவ் ஒப்பந்ததாரின் மூலமே இப்பணிகளை முழுவதுமாக முடிக்க **31.03.2015** வரை கால நீட்டிப்புடன் வேலை விகிதச்சார தொகையினையும் வழங்கலாம் என கருத்துப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு **30.09.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.10.2014** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

**(1)** திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு முழுவதுமாக முடிப்பதற்கு **30.09.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.10.2014** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

**(2)** மாம்பலம் மற்றும் நந்தனம் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation charges) **01.04.2014** முதல் **31.03.2015** வரை வழங்குவதற்கும்,

**(3)** மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.10.2014** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட **(1)** முதல் **(3)** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**80/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**100/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**தி.வ.ப.ந.க.எண்.அ1/0345/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.215 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.205/2015 **பொருள் எண்.71**

**"Expression of interest" – Urban Transform (நகரமைப்பு உருமாற்றம்) ஆய்வு திட்டம் – சுற்றுச் சூழல் சமூக அறிவியல் மற்றும் பூகோளம் நிறுவனம் – ஜெர்மனி பல்கலைக்கழகம் இசைவு கடிதம் அனுப்பப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

திருவாளர்.டாக்டர்.கிறிஸ்டன் ஹேக்கன்புரோச், ப்ரீபெர்க் பல்கலைக்கழகம், ஜெர்மனி அவர்கள் சென்னை நகரமைப்பு உருமாற்றம் ஆய்வு திட்டம் ஐந்தாண்டுகள் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2021 வரை சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளும் பொருட்டு தன்விருப்பம் தெரிவித்துள்ளார்.

"Urban Transform – Potentials and strategies for sustainable and inclusive redevelopment of Urban Space integrated concepts for the core city". சென்னை நகரமைப்பு உருமாற்றம் ஆய்வு திட்டம் கூட்டமைப்புக்கு சென்னை மாநகராட்சி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மூன்று பல்கலைக்கழகங்கள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் (German Research Institute on Ecology and IITM, ICLEI World Office and GIZ), சிட்டி கணக்ட் (City Connect) மற்றும் சென்னை மாநகராட்சி கூட்டாக ஒருங்கிணைந்து இந்த ஆய்வு திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் விவரங்கள் ஆய்வு திட்டத்தின் போது ஆராய்ச்சிக்கு தேவையான தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளவும் கூட்டாக சிறந்த வழிமுறைகள் உட்புகுத்தி ஐந்தாண்டுகள் முடிவில் தன்னிகர் மாநகராட்சியாக உருவாக்கலாம் என கருத்து தெரிவித்துள்ளார். இந்த ஆய்வு திட்டம் ஐந்தாண்டுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அதற்கான கால அட்டவணை கீழ்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

முதலாண்டு சென்னை மாநகராட்சியிடமிருந்து ஆய்வு திட்டத்திற்கு தேவையான தகவல் சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து திட்டம் வகுப்பது மற்றும் பயிற்சி கலந்தாலோசனை கூட்டங்கள் நடத்தப்படும் இரண்டு, மூன்று மற்றும் நான்காம் ஆண்டு ஆய்வாளர்களுக்கு தகவல் அளித்தல், கூட்டங்களில் பங்களிக்க அனுமதி அளித்தல் மற்றும் ஜெர்மனியில் பயிற்சி கலந்தாலோசனை கூட்டம் நடத்துதல் போன்ற அம்சங்கள் செயல்படுத்தப்படும். நான்காம் மற்றும் ஐந்தாம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் புதிய சிந்தனைகளை நடைமுறைப்படுத்த மற்றும் செயல்படுத்தும் வழிமுறைகள் பற்றி பரிந்துரைக்கப்படும்.

இந்த ஆய்வுத்திட்டத்தை சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த மாநகராட்சியின் எந்த ஒரு நிதி செலவீனமும், பண பரிமாற்றமும் இல்லை என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் ஆய்வுத்திட்டத்தின் இறுதி அறிக்கை மற்றும் மேம்பாடு குறித்த தகவல்கள் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் நிராகரிப்பது குறித்து சென்னை மாநகராட்சி தன்னிச்சையாக முடிவெடுக்கலாம். இந்த ஆய்வு திட்டம் சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தினால் உள்கட்டமைப்பு மேம்படுத்துதல், நகரமைப்பு உருமாற்றம் போன்றவற்றிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என கருதப்படுகிறது. இது குறித்து சென்னை மாநகராட்சியின் இசைவுக் கடிதம் மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி 27.04.2015 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,

1. ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2021 வரை ஐந்து ஆண்டுகளுக்கு ஆய்வு திட்டம் மேற்கொள்ள மூன்று பல்கலைக்கழகம்/ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் City Connect சென்னை மாநகராட்சியுடன் கூட்டாக ஒருங்கிணைந்து பணியாற்றவும் அதற்குண்டான இசைவுக் கடிதம் (Expression Of Interest) அனுப்பியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், மேலும் இதற்கான தொடர் நிகழ்வுகளுக்கான அனுமதியும்.

மேற்கண்ட இனத்திற்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**81/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**101/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி8/561/1/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.206/2015 பொருள் எண்.72

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

1. பணியின் பெயர் : ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்று சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி

2. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் : அரசாணை எண், G.O(Ms)No.9) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC.I) துறை, நாள்.13.01.2015

3. திட்டக்குறியீட்டு எண் :

4. மதிப்பீட்டுத் தொகை ரூ. 45,68,00,000.00

அ) கட்டுமான பணி செலவீனம் : ரூ. 35,27,45,024.25

ஆ) மேலான மேற்பார்வை செலவு : ரூ. 3,52,74,502.42

இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 88,18,625.61

ஈ) எதிர்பாரா செலவு : ரூ. 88,13,819.23

உ) திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் 2.5.% : ரூ. 88,13,819.23

ஊ) ஏற்ற இறக்க நிலை செலவீனம்(Escalation Charges): ரூ. 3,52,74,502.40

எ) தரக்கட்டுப்பாடு ரூ 35,27,450.24

ஏ) எதிர்பாரா இனங்கள் (Unforeseen Items) : ரூ. 35,27,450.24

**மொத்தம்** : ரூ. 45,68,00,000.00

5. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் :
1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.05.03.2015.
2. தினத்தந்தி. தமிழ் நாளிதழ் நாள். 05.03.2015.
3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள். 05.03.2015.

6. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : 10.04.2015

7. ஒப்பம்செய்தித்தாள்களில்பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? : ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது

8. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? : இரண்டு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது).

9. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2014–2015 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 35,27,45,024.25 | 41,82,78,278.00 | (+) 18.58% அதிகம் |
| 2 | ஜீனிதா கன்ஷ்ட்ரக்ஷன் | 35,27,45,024.25 | 44,01,23,450.00 | (+) 24.77% அதிகம் |

10. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம். நாள். 17.04.2015 மற்றும் 20.04.2015

11. பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம். : ரூ.40,49,02,378/- (+) 14.79 % அதிகம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி

12. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள். : வகுப்பு –1 நாள்

13. கூடுதல் பிணை வைப்புத்தொகை : இல்லை

செலுத்தப்பட்ட விவரம்

**14.**பணிக்கான நிதி ஆதாரம் : அரசு நிதி G.O.(Ms)No.9 நகராட்சி

அ) வரவு செலவு திட்ட தலைப்பு நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC.I) துறை நாள் 13.01.2015

**15.**ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம். : 09.07.2015

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 10.04.2015 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 10.04.2015 அன்று திறக்கப்பட்டு, ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் (Price Bid) 16.04.2015 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத் தொகை 2014-2015ஆம் ஆண்டின் பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.35,27,45,024.25 யைவிட (+)18.58% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.41,82,78,278/- ஆகும். எனவே, 17.04.2015 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)15.52% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இரண்டாம் முறையாக 20.04.2015 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை (+)14.79% ஆக குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.40,49,02,378/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.40,49,02,378/- |
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+)14.79% அதிகம் |
| The Hindu (Habitat) dated.11.04.2015 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (+) 2.84% அதிகம் |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 27.04.2015 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.40,49,02,378/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பம் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ரூ.40,49,02,378/- (ரூபாய் நாற்பது கோடியே நாற்பத்தொண்பது இலட்சத்து இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தெட்டு மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்**.82/2015,–**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **102/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

********

**மி. து.ந.க.எண்,சி.மே2/ பி3/ 2619/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.207/2015 **பொருள் எண்.73**

**மறு மின்னனு ஒப்பம் – சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 2335 எண்ணிக்கையில் 90 வாட் முதல் 120 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்க 19.09.2014 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டது தகுதி உள்ள குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் ஒப்பத்தை பரிந்துரைக்க அனுமதி**

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 2335 எண்ணிக்கையில் 90 வாட் முதல் 120 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்க |
| 2 | மதிப்பீடு | ரூ. 35463980//- |
| 3 | தேவைப்படும் இடம் | சென்னை மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | **03.07.2014 07.08.2014, 21.08.2014, 04.09.2014** |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | **03.07.2014**, 07.08.2014, 21.08.2014, 04.09.2014 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், நமது எம்ஜஆர், |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | – |
| 7 | ஒப்பத்தில் பங்குபெறுவதற்கான இறுதி நாள் | **08.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது, பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | **08.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| ஆ | ஒப்பம் திறக்கப்பட்ட நாள் | **08.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் முலம் மட்டும் இந்த மின்னனு ஒப்பத்தில் பங்கேற்றனர் |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | **9** |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | **ரூ.** 3,55,000/- |

| 13 | ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள் | | |
|---|---|---|---|
| **Sl no** | **Criteria** | **Document to be produced** | |
| 1 | EMD / NSIC / Bank guarantee: | Bank Guarantee / Banker's cheque, Demand Draft Drawn in favour of The Commissioner, Corporation of Chennai payable at Chennai. | In original |
| 2 | Exemption from payment of EMD | (i) Small Scale Industrial Units located within the State - Copy of valid Registration Certificate with the Tamil Nadu Small Industries Development Corporation or the National Small Industries Corporation or the District Industries Centres of Directorate of Industries and Commerce - in respect of those items for which the Registration Certificate has been obtained. | Notarised copy |
| | | (ii) SSI units located out-side the State - Copy of valid Registration Certificate with NSIC in respect of items manufactured by them for which tenders have been called | |
| 3 | ISI / ISO Certificate | Valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| 4 | Manufacturer of LED Street light fittings | Certificate of Incorporation or Registration. | Notarised copy |
| 5 | Authorised dealer | Dealer ship certificate from manufacturer having valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| | | Certificate of Incorporation or Registration of both manufacturer and dealer. | Notarised copy |
| 6 | Consortium with proper legal document | (1) . Certificate of Incorporation or Registration of all the partners shall be submitted. | notarised copy |
| | | (2) Copy of consortium agreement shall be submitted (OR) A letter of intent to execute a consortium agreement in the event of a successful bid shall be signed by all the partners and submitted with the bid along with the copy of proposed Consortium Agreement . | In original |
| | | (3) In case of Consortium, all partners of the consortium shall be liable jointly and severally for the execution of the contract in accordance to the contract terms and a statement to this effect shall be included in the letter of intent. | In original |
| 7 | They must be in this field of work at least for 2 years. (2011.12 to 2012-13) | Copies of purchase orders received in the period for the tendered item. | Notarised copy |
| 8 | Should have an annual minimum financial turnover of not less than 1.5 times of the value put to tender in any one financial year in the preceding "Five" years (2008-09 to 2012-13) . Turn over should not be less than (RS53195970 | Balance sheet and Profit & Loss statement for the period | Copy |

| | | | |
|---|---|---|---|
| 9 | Should have satisfactorily completed supply orders in the last two years: (11-12 TO 12-13) | | |
| | 15% Rs. 5319597/- of the tender value through various orders each not less than 2% Rs.709279.6of the tender value to Indian Government organisations (OR) | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | Notarised copy. |
| | 50 % of the tender value through single agreement to Other Nation Government organisations Rs. 177311990/- (OR) | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | copy notarised by officials of the embassy |
| | 5% Rs.17731997/- of the tender value through various orders each not less than 2% of the tender value to Indian Government organisations and 15% - of the tender value through various orders each not less than 2% - of the tender value to reputed private organisations in India. | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | Notarised copy. |
| 10 | Proof of the applicant should have working capital sufficient to finance at least 25% Rs: 8865995 of value of tender.[Working capital will be calculated by adding the amount available in the bank account of the applicant on the date of submission of application and the unutilized amount of overdraft / credit facility extended to the applicant by the Nationalized / Scheduled banks] enclosed? | Letter with details required as per tender document from the bank where tenderer is holding account and is providing the credit | notarised copy |

| | | | |
|---|---|---|---|
| 11 | Should submit the audited balance sheet for last five years.(2008-09 to 2012-13) | | Copy |
| 12 | Latest TIN return | | Copy |
| 13 | Power of attorney / Authorization for | | |
| | •Persons signing the Tender | | in original |
| | •For Partner – in-charge | | in original |
| | Whether Annexure A to G have been enclosed duly filled in | | |
| 14 | Proof for having the installed capacity to manufacturer and to supply the quoted quantity | copies of purchase orders received for the tendered item. | Copy |
| | | copies of other relevant document showing the installed capacity of the manufacturer | Copy |
| 15 | Declare the number of LED fittings you can supply out of the tender quantity | declaration of the manufacturer on their letter head | In original |
| 16 | Technical details of fittings, test reports of the fittings | technical data sheet of manufacturer, test report from third party NABL accredited laboratory, design using software | In original |
| 17 | Departmental test report | | |

மறு மின்னனு ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆவணம் **19.09.2014** அன்று திறக்கப்பட்டு பரிசிலிக்கப்பட்டது.**1.** SRT Janakiraman Agencies தகுதி பெருவதற்கான தகுந்த NSIC registration ஆவணங்கள் அளிக்கவில்லை மேலும் ஒப்பத்தொகையும் அளிக்கவில்லை. **2.** Beacon Industries, 3. G E India Industrial Pvt Ltd 4. The National Small Industries Corporation Ltd and 5. STANLED Electric Company Pvt Ltd நிறுவனங்கள் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதி (eligible criteria conditions) பெருவதற்கான ஆவணங்கள் மற்றும் பரிசோதனை அறிக்கை (Test Report) அளிக்கவில்லை. **6.** M/s Servotech Power System (P) Ltd நிறுவனம் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதியான நடப்பு மூலதனம் (Working Capital) ஒப்பப்புள்ளி சமர்ப்பிக்கும் தேதி அன்று பெறவில்லை மேலும் பரிசோதனை அறிக்கை (Test Report) தெரழில்நுட்ப தரவு தாள் (technical data sheet), Rohs Compliance and proof for having inhouse lab facility அளிக்கவில்லை. **7.** M/s Sre Sakthi Lighting Tech India Pvt Ltd தங்களின் மின்னனு ஒப்பத்தில் TIN return அளிக்கவில்லை மேலும் பரிசோதனை அறிக்கை (Test Report) தொழில்நுட்ப தரவு தாள் (technical data sheet), Rohs Compliance and proof for having inhouse lab facility அளிக்கவில்லை. **8.** M/s Philips India Ltd and 9. M/s Crompton Greaves Ltd பெரும்பாலான தொழில்நுட்ப ஆவணங்கள் அளித்துள்ளனர்.

மின்னனு ஒப்பத்தில் பங்குபெற்ற **9** நிறுவனங்களின் ஒப்பங்கள் பரிசீலிக்கப்ட்டு அதன் விவரங்கள் கீழே அட்டவனையிடப்பட்டுள்ளது.

| | | Beacon Industries 1 | Crompton Greaves 2 | G E India Industrial Pvt Ltd 3 | National Small Industries Corporation Ltd 4 | Philips India Ltd 5 | Servotech Power System (P) Ltd 6 | Sre Sakthi Lighting Tech Indi Pvt Ltd 7 | SRT Janakiraman Agencies 8 | STANLED Electric Company Pvt Ltd 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | EMD/ NSIC /Bank Guarantee | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | No | Yes |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | Manufacturer or authorised dealer or a consortium | Consortium. NO | Manufacturer | Manufacturer | Consortium. | Manufacturer | Manufacturer | Consortium | | Consortium |
| 3 | ISO certificate | NO | Yes | Yes | No | Yes | Yes | Yes | | Yes |
| 3 | Must be in this field of work at least for 2 years | Yes | No | No | No | Yes | Yes | Yes | | Yes |
| 4 | Should have an annual minimum financial turnover | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | | Yes |
| 5 | Should have satisfactorily completed supply orders in the last two years: | Yes | Yes | Yes | No | Yes | yes | Yes | | No |
| 6 | The applicant should have working capital | Yes | Yes | No | No | Yes | No | Yes | | No |
| 7 | Should submit the audited balance sheet for last five years.(2008-09 to 2012-13) | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | | Yes |
| 8 | Should submit latest TIN return | No | Yes | No | No | Yes | Yes | No | | No |
| 9 | Annexure A to G have been enclosed duly filled in | No | Yes | No | Yes | Yes | Yes | Yes | | No |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | Test certificates and technical details | No | No | No | No | No | No | No | | No |
| 11 | Proof for having the installed capacity | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | | Yes |
| 12 | Number of LED fittings that can be supplied out of the tender quantity | Yes | Yes | No | No | Yes | Yes | No | | Yes |
| 13 | Departmental Test Report | Not tested | Satisfied | Not tested | Not tested | Satisfied | Not tested | Not tested | Not tested | Not tested |

**ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் 10.11.2014 அன்று நடைப்பெற்ற கூட்டம்**

கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தில் பார்வைக்காக **10.11.2014** அன்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற ஒப்பங்கள் குழுமத்தில் 7 நிறுவனங்களின் ஒப்பங்களை போதிய ஆவணங்கள் சமர்விக்காத காரணத்திற்காக நிராகரிக்கவும் மற்றும் பெரும்பாலான ஆவனங்கள் அளித்த M/s Philips India Ltd and M/s Crompton Greaves Ltd நிறுவனங்களின் மாதிரி பிட்டிங் துறையின் ஆய்வில் தேர்ச்சி பெரும் பட்சத்தில் நிதி ஆவணம் திறக்கப்படும் என பரிந்துரைக்கப்பட்டது. நிறுவனங்களின் மாதிரி பிட்டிங் DEE/CENTER, ADEE / XIV, ADEE/XIII மற்றும் ADEE/ VII கொண்ட குழுவால் பரிசோரிக்கப்பட்டன. துறையின் மின் பரிசோதனை கூடத்தில் செய்யப்பட்ட மின் பரிசோதனை தேர்ச்சி பெற்றன. இரு நிறுவனங்களின் மாதிரி பிட்டிங்களின் Average lux, Uniformity ratio மற்றும் Trasnsverse uniformity ratio கண்டறிய field test செய்யப்பட்டதில் தேர்சிசி பெற்றன

**ஒப்பப்புள்ளி அடங்கிய உறைகள் திறப்பு**

| | |
|---|---|
| 14 | **தொழில் நுட்ப ஆவணங்களில் தேர்வு பெற்ற நிறுவனங்கள்** ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தில் பரிந்துறையின் படி M/s Philips India Ltd and M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் **நிதி ஆவணம்** 21.11.2014 அன்று திறக்கப்பட்டன. |

| SL.No. | Name of the company | Qty | Unit Rate | Tax Amount | Rate Including Tax | Amount Quoted (incl of ED and Sales tax) | % less / more – compared to schedule of rate (13-14 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | 2335 | 7900 | 1145.5 | Rs.9045.5 | Rs.21121242.5 | **(–) 40.44**% |
| **2** | M/s Philips India Limited, | 2335 | 10200 | 1479 | Rs.11679 | Rs.27270465 | **(–) 23.10** % |

**குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த நிறுவனம்**

As per the tender condition, L1 of the tender will be decided on the basis of the Total Cost of Ownership. The total cost of ownership = (total cost of fittings) + ((total system wattage of LED fitting/1000) x 12 x 365 x 7 x 5.5).

The total cost of ownership of the quoted fittings is detailed below:

| SL.No. | Name of the company | Total cost of one fitting | Total system wattage of one fitting | Total cost of ownership per LED fitting |
|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | Rs.9045.50 | 90.22 W | Rs.24259.30 |
| 2 | M/s Philips India Limited, | Rs.11679 | 93.1 W | Rs.27378.45 |

Hence, M/s Crompton Greaves Ltd Limited are having the capacity to supply the entire tendered quantity. M/s Crompton Greaves Ltd have reduced their rates after negotiation vide their letters dated on 21.11.2014, the details of which are given below

**Rate Négotiation**

| SL.No. | Name of the company | Qty | Unit Rate | Tax Amount | Rate Including Tax | Amount (incl of ED and Sales tax) | % less / more – compared to schedule of rate (13-14) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | 2335 | 7899 | 1145.35 | Rs.9044.35 | Rs.21118557.25 | (-) 40.45% |

| | | |
|---|---|---|
| 16 | குறைந்த ஒப்ப புள்ளி அளித்த நிறுவனம் | M/s Crompton Greaves Ltd, நிறுவனம் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ளது |
| 17 | துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s Crompton Greaves Ltd, நிறுவனம் **21.11.2014** நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்துள்ளது |
| 18 | முந்தைய கொள்முதல் விவரம் | M/s Philips Electronics India Ltd நிறுவனத்திற்கு பிட்டிங் ஒன்று ரூ.12480.50 (ஆயத்தீர்வை மற்றும் வரிகள் உள்ளிட்டது) வீதம் வழங்க **11.02.2014** நாள் அன்று கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 19 | மதிப்பீடு | M/s Crompton Greaves Ltd, நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி, ரூ 9044.35 (incl of ED and Sales tax) துறையின் SOR 2013-14 மதிப்பு ரூ. **15188**/- விட **(–) 40.45** % குறைவாக உள்ளது. கடந்த கொள்முதல் விலையை விட **(–) 27.53** % குறைவாக உள்ளது |

ஒப்பத்தில் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பவிலை மிகவும் குறைவாக **(–) 44.85** உள்ளதாலும், மேலும் 7 ஆண்டுகளுக்கு மாற்று பிட்டிங் வழங்கும் உத்தரவாதம் ஒப்பத்தில் உள்ளதாலும், இவ்வளவு குறைந்த விலைக்கு அந்த நிறுவனத்தால், தரமான பணி செய்ய இயலுமா என்பது குறித்து மறு பரிசீலனை செய்ய முடிவுசெய்யப்பட்டது

**<u>M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் விளக்கம்</u>**

M/s Crompton Greaves Ltd நிறுவனத்திற்கு **15.12.2014** மற்றும் **24.12.2014** நாளிட்ட கடிதம் முலம் “ மிக குறைந்த விலை அளித்தற்கு உறிய விளக்கம் அளிக்குமாறு“ அனுப்பப்பட்டது. M/s Crompton Greaves Ltd நிறுவனம் **26.12.2014** மற்றும் **28.04.2015** நாளிட்ட கடிதத்தில் “ We have considered all the technical specification and all the other terms & conditions as per ther tender clause for the bid submitted by us “ என அளித்துள்ளனர்.

**ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின்29.04.2015அன்று நடைப்பெற்ற கூட்டம்**

மீண்டும் இக்கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்கு **29.04.2015** அன்று நடந்த கூடத்தில் வைக்கப்பட்டது, M/s Crompton Greaves Ltd நிறுவனம் ஒப்ப தொழில் நுட்ப விவரங்கள் படி மற்றும் நிபந்தனைகளின் படி தனது ஒப்பப்புள்ளி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் இதன் அடிப்படையில் நிறுவனம் வழங்கும் LED பிட்டிங்களுக்கு 7 வருடங்கள் திரும்ப வழங்கும் உத்தரவாதம் இருப்பதாலும், நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்க ஒப்பங்கள் கூர்ந்து ஆய்வு குழுமம் முடிவு செய்துள்ளது.

எனவே

1. சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 2335 எண்ணிக்கையில் CROMPTON GREAVES 90 வாட் முதல் 120 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் 2013–2014 ஆண்டு துறை விலை மதிப்பீட்டை விட (–) 40.45% சதவீதம் குறைவாக, பிட்டிங் ஒன்று பேச்சுவார்த்தைக்கு பின் ரூ. 9044.35/- (தற்போதைய அடிப்படையில் ஆயத்தீர்வை உள்ளிட்டது, 14.5 % VAT உள்ளிட்டது) வீதம் வழங்க குறைக்கப்பட்ட ஒப்பப்புள்ளி அளித்துள்ள M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும், மொத்தம் ரூ. 2,11,18,557.25 (ஆயத்தீர்வை உள்ளிட்டது, வரிகள் உள்ளிட்டது) மதிப்பிற்கு கொள்முதலுக்கான ஆணை வழங்கவும்,
2. இந்த கொள்முதலுக்கான செலவினத்தை மின்துறையின் மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரையின் படி ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.83/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.103/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

********

**மி.து.ந.க.எண்.சி.மே2/ பி3/ 10109/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.208/2015 **பொருள் எண்.74**

**மறு மின்னனு ஒப்பம் – சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 1325 எண்ணிக்கையில் 90 வாட் முதல் 120 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்க 19.09.2014 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டது – தகுதி உள்ள குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் ஒப்பத்தை பரிந்துரைக்க அனுமதி**

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 1325 எண்ணிக்கையில் 90 வாட் முதல் 120 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்க |
| 2 | மதிப்பீடு | ரூ. 20124100//- |
| 3 | தேவைப்படும் இடம் | சென்னை மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | **24.07.2014, 07.08.2014, 21.08.2014, 04.09.2014** |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | **24.07.2014** 07.08.2014 22.08.2014, 04.09.2014 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், மக்கள் குரல் |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | – |
| 7 | ஒப்பத்தில் பங்குபெறுவதற்கான இறுதி நாள் | 27.08.2014 என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் 19.09.2014 என மாற்றப்பட்டது |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 27.08.2014 என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் 19.09.2014 என மாற்றப்பட்டது |
| ஆ | ஒப்பம் திறக்கப்பட்ட நாள் | 27.08.2014 என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் 19.09.2014 என மாற்றப்பட்டது |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் முலம் மட்டும் இந்த மின்னனு ஒப்பத்தில் பங்கேற்றனர் |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | **9** |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | **ரூ.** 201300/- |
| 13 | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்** | |

| Sl no | Criteria | Document to be produced | |
|---|---|---|---|
| 1 | EMD / NSIC / Bank guarantee: | Bank Guarantee / Banker's cheque, Demand Draft Drawn in favour of The Commissioner, Corporation of Chennai payable at Chennai. | In original |
| 2 | Exemption from payment of EMD | (i) Small Scale Industrial Units located within the State - Copy of valid Registration Certificate with the Tamil Nadu Small Industries Development Corporation or the National Small Industries Corporation or the District Industries Centres of Directorate of Industries and Commerce - in respect of those items for which the Registration Certificate has been obtained. | Notarised copy |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) SSI units located out-side the State - Copy of valid Registration Certificate with NSIC in respect of items manufactured by them for which tenders have been called | |
| 3 | ISI / ISO Certificate | Valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| 4 | Manufacturer of LED Street light fittings | Certificate of Incorporation or Registration. | Notarised copy |
| 5 | Authorised dealer | Dealer ship certificate from manufacturer having valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| | | Certificate of Incorporation or Registration of both manufacturer and dealer. | Notarised copy |
| 6 | Consortium with proper legal document | (1) . Certificate of Incorporation or Registration of all the partners shall be submitted. | notarised copy |
| | | (2) Copy of consortium agreement shall be submitted (OR) A letter of intent to execute a consortium agreement in the event of a successful bid shall be signed by all the partners and submitted with the bid along with the copy of proposed Consortium Agreement . | In original |
| | | (3) In case of Consortium, all partners of the consortium shall be liable jointly and severally for the execution of the contract in accordance to the contract terms and a statement to this effect shall be included in the letter of intent. | In original |
| 7 | They must be in this field of work at least for 2 years. (2011.12 to 2012-13) | Copies of purchase orders received in the period for the tendered item. | Notarised copy |
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு 2847எண்ணிக்கையில் 40 வாட் முதல் 50 வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் வழங்க |
| 2 | மதிப்பீடு | ரூ. 22166742/- |
| 3 | தேவைப்படும் இடம் | சென்னை மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் |
| 4 | மின் பண்டக சாலையின் இருப்பு | இல்லை |
| 5 | ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி | |
| அ | மாநகராட்சி ஒப்பந்த மலரில் வெளியிட்ட நாள் | **24.07.2014, 21.08.2014, 04.09.2014** |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | **24.07.2014**– 22.08.2014, 04.09.2014 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், மக்கள் குரல் |
| 6 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | – |
| 7 | ஒப்பத்தில் பங்குபெறுவதற்கான இறுதி நாள் | **27.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| 8 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 30 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| 9 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | **27.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| ஆ | ஒப்பம் திறக்கப்பட்ட நாள் | **27.08.2014** என முதலில் பிரசுரிக்கப்பட்டது பின்னர் **19.09.2014** என மாற்றப்பட்டது |
| 10 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் முலம் இந்த ஒப்பத்தில் பங்கேற்றனர் |
| 11 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | **10** |
| 12 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | **ரூ.** 221700/- |
| 13 | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்** | |

| Sl no | Criteria | Document to be produced | |
|---|---|---|---|
| 1 | EMD / NSIC / Bank guarantee: | Bank Guarantee / Banker's cheque, Demand Draft Drawn in favour of The Commissioner, Corporation of Chennai payable at Chennai. | In original |
| 2 | Exemption from payment of EMD | (i) Small Scale Industrial Units located within the State - Copy of valid Registration Certificate with the Tamil Nadu Small Industries Development Corporation or the National Small Industries Corporation or the District Industries Centres of Directorate of Industries and Commerce - in respect of those items for which the Registration Certificate has been obtained. | Notarised copy |
| | | (ii) SSI units located out-side the State - Copy of valid Registration Certificate with NSIC in respect of items manufactured by them for which tenders have been called | |

| | | | |
|---|---|---|---|
| 3 | ISI / ISO Certificate | Valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| 4 | Manufacturer of LED Street light fittings | Certificate of Incorporation or Registration. | Notarised copy |
| 5 | Authorised dealer | Dealer ship certificate from manufacturer having valid ISI / ISO certificate with scope of manufacturing the item for which tender have been called. | Notarised copy |
| | | Certificate of Incorporation or Registration of both manufacturer and dealer. | Notarised copy |
| 6 | Consortium with proper legal document | (1) . Certificate of Incorporation or Registration of all the partners shall be submitted. | notarised copy |
| | | (2) Copy of consortium agreement shall be submitted (OR) A letter of intent to execute a consortium agreement in the event of a successful bid shall be signed by all the partners and submitted with the bid along with the copy of proposed Consortium Agreement . | In original |
| | | (3) In case of Consortium, all partners of the consortium shall be liable jointly and severally for the execution of the contract in accordance to the contract terms and a statement to this effect shall be included in the letter of intent. | In original |
| 7 | They must be in this field of work at least for 2 years. (2011.12 to 2012-13) | Copies of purchase orders received in the period for the tendered item. | Notarised copy |
| 8 | Should have an annual minimum financial turnover of not less than 1.5 times of the value put to tender in any one financial year in the preceding "Five" years (2008-09 to 2012-13) . Turn over should not be less than Rs. 33250113 | Balance sheet and Profit & Loss statement for the period | Copy |
| 9 | Should have satisfactorily completed supply orders in the last two years: (11-12 TO 12-13) | | |
| | 15% Rs. 3325011/- of the tender value through various orders each not less than 2% Rs.443335of the tender value to Indian Government organisations (OR) | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | Notarised copy. |
| | 50 % of the tender value through single agreement to Other Nation Government organisations Rs. 11083371/- (OR) | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | copy notarised by officials of the embassy |
| | 5% Rs.1108337/- of the tender value through various orders each not less than 2% of the tender value to Indian Government organisations and 15% - of the tender value through various orders each not less than 2% - of the tender value to reputed private organisations in India. | copy of work orders and satisfactory completion obtained from the agency issuing work order | Notarised copy. |
| 10 | Proof of the applicant should have working capital sufficient to finance at least 25% Rs: 5541686 of value of tender.[Working capital will be calculated by adding the amountavailable in the bank account of the applicant on the date of submission of application and the unutilized amount of overdraft / credit facility extended to the applicant by the Nationalized / Scheduled banks] enclosed? | Letter with details required as per tender document from the bank where tenderer is holding account and is providing the credit | notarised copy |

| | | | |
|---|---|---|---|
| 11 | Should submit the audited balance sheet for last five years.(2008-09 to 2012-13) | | Copy |
| 12 | Latest TIN return | | Copy |
| 13 | Power of attorney / Authorization for | | |
| | •Persons signing the Tender | | in original |
| | •For Partner – in- charge | | in original |
| | Whether Annexure A to G have been enclosed duly filled in | | |
| 14 | Proof for having the installed capacity to manufacturer and to supply the quoted quantity | copies of purchase orders received for the tendered item. | Copy |
| | | copies of other relevant document showing the installed capacity of the manufacturer | Copy |
| 15 | Declare the number of LED fittings you can supply out of the tender quantity | declaration of the manufacturer on their letter head | In original |
| 16 | Technical details of fittings, test reports of the fittings | technical data sheet of manufacturer, test report from third party NABL accredited laboratory, design using software | In original |
| 17 | Departmental test report | | |

மறு மின்னனு ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆவணம் **19.09.2014** அன்று திறக்கப்பட்டு பரிசிலிக்கப்பட்டது.**1.** SRT Janakiraman Agencies தகுதி பெருவதற்கான தகுந்த NSIC registration ஆவணங்கள் அளிக்கவில்லை மேலும் ஒப்பத்தொகையும் அளிக்கவில்லை. **2.** Beacon Industries, 3. G E India Industrial Pvt Ltd, 4. STANLED Electric Company Pvt Ltd, 5.The National Small Industries Corporation Ltd and 6. Osram India (P) Ltd நிறுவனங்கள் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதி (eligible criteria conditions) பெருவதற்கான ஆவணங்கள் மற்றும் பரிசோதனை அறிக்கை (Test Report) அளிக்கவில்லை. **7.**M/s Servotech Power System (P) Ltd நிறுவனம் தங்களின் மின்னனு ஒப்பத்தில் அடிப்படை தகுதியான நடப்பு மூலதனம் (Working Capital) ஒப்பப்புள்ளி சமர்ப்பிக்கும் தேதி அன்று பெறவில்லை மேலும் பரிசோதனை அறிக்கை (Test Report) தொழில்நுட்ப தரவு தாள் (technical data sheet), Rohs Compliance and proof for having inhouse lab facility அளிக்கவில்லை. **8.** M/s Sre Sakthi Lighting Tech India Pvt Ltd தங்களின் மின்னனு ஒப்பத்தில் TIN return அளிக்கவில்லை மேலும் பரிசோதனை அறிக்கை (Test Report) தொழில்நுட்ப தரவு தாள் (technical data sheet), Rohs Compliance and proof for having inhouse lab facility அளிக்கவில்லை. **9.** M/s Philips India Ltd and 10. M/s Crompton Greaves பெரும்பாலான தொழில்நுட்ப ஆவணங்கள் அளித்துள்ளனர்.

மின்னனு ஒப்பத்தில் பங்குபெற்ற **10** நிறுவனங்களின் ஒப்பங்கள் பரிசீலிக்கப்ட்டு அதன் விவரங்கள் கீழே அட்டவனையிடப்பட்டுள்ளது.

| | | Beacon Industries 1 | Crompton Greaves 2 | G E India Industrial Pvt Ltd 3 | The National Small Industries Corporation Ltd 4 | Osram India (P) Ltd 5 | Philips India Ltd 6 | Servotech Power System (P) Ltd 7 | Sre Sakthi Lighting Tech Indi Pvt Ltd 8 | SRT Janakiraman Agencies 9 | STANLED Electric Company Pvt Ltd 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | EMD/NSIC/Bank Guarantee | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | No | Yes |
| 2 | Manufacturer or authorised dealer or a consortium | Consortium. NO | Manufacturer | Manufacturer | Consortium | Manufacturer | Manufacturer | Manufacturer | Consortium | | Consortium |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | ISO certificate | NO | Yes | Yes | No | Yes | Yes | Yes | Yes | | Yes |
| 4 | Must be in this field of work at least for 2 years | Yes | No | No | No | No | Yes | Yes | Yes | | Yes |
| 5 | Should have an annual minimum financial turnover | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | | Yes |
| 6 | Should have satisfactorily completed supply orders in the last two years: | Yes | Yes | Yes | No | No | Yes | yes | Yes | Yes | No |
| 7 | The applicant should have working capital | Yes | Yes | No | No | Yes | Yes | No | Yes | Yes | No |
| 8 | Should submit the audited balance sheet for last five years.(2008-09 to 2012-13) | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | Yes |
| 9 | Should submit latest TIN return | No | Yes | No | Yes | No | Yes | Yes | No | Yes | No |
| 10 | Annexure A to G have been enclosed duly filled in | No | Yes | No | Yes | Yes | Yes | Yes | Yes | Yes | No |
| 11 | Test certificates and technical details | No | No | No | No | No | No | No | No | No | No |
| 12 | Proof for having the installed capacity | Yes | Yes | Yes | No | NO | Yes | Yes | Yes | Yes | Yes |
| 13 | Number of LED fittings that can be supplied out of the tender quantity | Yes | Yes | No | No | Yes | Yes | Yes | No | Yes | Yes |
| 13 | Departmental Test Report | Not tested | Satisfactory | Not tested | Not tested | Not tested | Satisfactory | Not tested | Not tested | Not tested | Not tested |

**<u>ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் 10.11.2014 அன்று நடைப்பெற்ற கூட்டம்</u>**

கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்காக 10.11.2014 அன்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற ஒப்பங்கள் குழுமத்தில் 6 நிறுவனங்களின் ஒப்பங்களை போதிய ஆவணங்கள் சமர்விக்காத காரணத்திற்காக நிராகரிக்கவும் மற்றும் பெரும்பாலான ஆவனங்கள் அளித்த M/s Philips India Ltd and M/s Crompton Greaves Ltd நிறுவனங்களின் மாதிரி பிட்டிங் துறையின் ஆய்வில் தேர்ச்சி பெரும் பட்சத்தில் நிதி ஆவணம்

திறக்கப்படும் என பரிந்துரைக்கப்பட்டது. நிறுவனங்களின் மாதிரி பிட்டிங் DEE/SOUTH, ADEE / XV, ADEE/X மற்றும் ADEE/ III கொண்ட குழுவால் பரிசோரிக்கப்பட்டன. துறையின் மின் பரிசோதனை கூடத்தில் செய்யப்பட்ட மின் பரிசோதனை தேர்ச்சி பெற்றன. இரு நிறுவனங்களின் மாதிரி பிட்டிங்களின் Average lux, Uniformity ratio மற்றும் Trasnsverse uniformity ratio கண்டறிய field test செய்யப்பட்டதில் தேர்சிசி பெற்றன.

**ஒப்பப்புள்ளி அடங்கிய உறைகள் திறப்பு**

| | |
|---|---|
| 14 | **தொழில் நுட்ப ஆவணங்களில் தேர்வு பெற்ற நிறுவனங்கள்**<br>ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தில் பரிந்துறையின் படி M/s Philips India Ltd and M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் **நிதி ஆவணம்** 17.11.2014 அன்று திறக்கப்பட்டன.. |

| SL.No. | Name of the company | Qty | Unit Rate | Tax Amount | Unit rate (incl of ED and Sales tax) | Amount Quoted (incl of ED and Sales tax) | % less / more – compared to schedule of rate (13-14 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | 2847 | 3751 | 543.9 | Rs.4294.9 | Rs 12227580.30/- | **(–) 44.84** % |
| 2 | M/s Philips India Limited, | 2847 | 4850 | 703.25 | Rs.5553.25 | Rs.15810102.75/- | **(–) 28.67** % |

**குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த நிறுவனம்**

As per the tender condition, L1 of the tender will be decided on the basis of the Total Cost of Ownership. The total cost of ownership = (total cost of fittings) + ((total system wattage of LED fitting/1000) x 12 x 365 x 7 x 5.5).

The total cost of ownership of the quoted fittings is detailed below:

| SL.No. | Name of the company | Total cost of one fitting | Total system wattage of one fitting | Total cost of ownership per LED fitting |
|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | Rs.4294.9 | 41.17W | Rs.11237.397 |
| 2 | M/s Philips India Limited, | Rs.5553.25 | 43.8W | Rs.12939.244 |

Hence, M/s Crompton Greaves Ltd Limited are having the capacity to supply the entire tendered quantity. M/s Crompton Greaves Ltd have reduced their rates after negotiation vide their letters dated on 17.11.2014, the details of which are given below

**Rate Négotiation**

| SL. No. | Name of the company | Qty | Unit Rate | Tax Amount | Unit rate (incl of ED and Sales tax) | Amount (incl of ED and Sales tax) | % less / more – compared to schedule of rate (13-14) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s Crompton Greaves Ltd | 2847 | 3750 | 543.75 | Rs.4293.75 | Rs.12224306.25 | (-) 44.85% |

| | | |
|---|---|---|
| 16 | குறைந்த ஒப்ப புள்ளி அளித்த நிறுவனம் | M/s Crompton Greaves Ltd, நிறுவனம் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ளது |
| 17 | துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s Crompton Greaves Ltd, நிறுவனம் **17.11.2014** நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்துள்ளது |
| 18 | முந்தைய கொள்முதல் விவரம் | M/s Sanarti signals Pvt Ltd நிறுவனத்திற்கு பிட்டிங் ஒன்று ரூ. 5553 (ஆயத்தீர்வை மற்றும் வரிகள் உள்ளிட்டது) வீதம் வழங்க **05.03.2014** நாள் அன்று கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 19 | மதிப்பீடு | M/s Crompton Greaves Ltd, நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி, ரூ 4293.75 (incl of ED and Sales tax) துறையின் SOR 2013-14 மதிப்பு ரூ. **7786**/- விட **(–) 44.85** % குறைவாக உள்ளது. கடந்த கொள்முதல் விலையை விட **(–) 22.67** % குறைவாக உள்ளது |

**ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் 19.11.2014 அன்று நடைப்பெற்ற கூட்டம்**

இக்கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்கு **19.11.2014** அன்று நடந்த கூடத்தில் வைக்கப்பட்டது. அக்கூடத்தில் M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்க மன்றத்திற்கு பரிந்துறைக்கப்பட்டது. ஒப்பத்தில் குறைந்த ஒப்ப புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பவிலை மிகவும் குறைவாக **(–) 44.85** உள்ளதாலும், மேலும் 7 ஆண்டுகளுக்கு மாற்று பிட்டிங் வழங்கும் உத்தரவாதம் ஒப்பத்தில் உள்ளதாலும், இவ்வளவு குறைந்த விலைக்கு அந்த நிறுவனத்தால், தரமான பணி செய்ய இயலுமா என்பது குறித்து மறு பரிசீலனை செய்ய முடிவுசெய்யப்பட்டது

**<u>M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் விளக்கம்</u>**

M/s Crompton Greaves Ltd நிறுவனத்திற்கு **15.12.2014** மற்றும் **24.12.2014** நாளிட்ட கடிதம் முலம் " மிக குறைந்த விலை அளித்தற்கு உறிய விளக்கம் அளிக்குமாறு" அனுப்பப்பட்டது. M/s Crompton Greaves Ltd நிறுவனம் **26.12.2014** மற்றும் **28.04.2015** நாளிட்ட கடிதத்தில் " We have considered all the technical specification and all the other terms & conditions as per ther tender clause for the bid submitted by us " என அளித்துள்ளனர்.

**<u>ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின்29.04.2015அன்று நடைப்பெற்ற கூட்டம்</u>**

மீண்டும் இக்கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்கு **29.04.2015** அன்று நடந்த கூடத்தில் வைக்கப்பட்டது, M/s Crompton Greaves Ltd நிறுவனம் ஒப்ப தொழில் நுட்ப விவரங்கள்படி மற்றும் நிபந்தனைகளின்படி தனது ஒப்பப்புள்ளி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் இதன் அடிப்படையில் நிறுவனம் வழங்கும் LED பிட்டிங்களுக்கு 7 வருடங்கள் திரும்ப வழங்கும் உத்தரவாதம் இருப்பதாலும், நிறுவனத்தின் குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்க ஒப்பங்கள் கூர்ந்து ஆய்வு குழுமம் முடிவு செய்துள்ளது.

எனவே

1. சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு **2847** எண்ணிக்கையில் CROMPTON GREAVES **40** வாட் முதல் **50** வாட் எல்.இ.டி. பிட்டிங்குகள் 7 ஆண்டுகள் மாற்று பிட்டிங் வழங்கும் உத்திரவாதத்துடன் **2013–2014** ஆண்டு துறை விலை மதிப்பீட்டை விட **( – ) 44.85** % சதவீதம் குறைவாக, பிட்டிங் ஒன்று பேச்சுவார்த்தைக்கு பின் ரூ. 4293.75/- (தற்போதைய அடிப்படையில் ஆயத்தீர்வை உள்ளிட்டது, **14.5**% VAT உள்ளிட்டது) வீதம் வழங்க குறைக்கப்பட்ட ஒப்பப்புள்ளி அளித்துள்ள M/s Crompton Greaves Ltd நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும், மொத்தம் ரூ.12224306.25/- (ஆயத்தீர்வை உள்ளிட்டது, வரிகள் உள்ளிட்டது) மதிப்பிற்கு கொள்முதலுக்கான ஆணை வழங்கவும்;
2. இந்த கொள்முதலுக்கான செலவினத்தை மின்துறையின் மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்.

மேற்கண்ட **1** மற்றும் **2** வரை உள்ள இனங்களுக்கு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரையின் படி ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** & **(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**87/2015,–**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **107/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*********

**பே.சா.து.ந.க.எண்.பி1/1453–1/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.212/2015 **பொருள் எண்.78**

**பேருந்து சாலைகள் துறை – மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பேருந்து சாலைகளில் சேவைத்துறையினரால் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டினை சீரமைக்கும் பணிக்கு – 3 சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை அளிக்க மன்றத்தின் அனுமதி**

முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் பே.சா.து.ந.க.எண்.பி1/0040/2015 நாள்.04.02.2015 சுற்றறிக்கையில் இனிவரும் காலங்களில் பேருந்து சாலைகளில் சாலை வெட்டு சீராமைக்கும் பணியினை பேருந்து சாலை துறையின் மூலமாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.109/2015 நாள்.23.03.2015ன்படி பேருந்து சாலைகளில் சேவைத் துறையினரால் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டினை பேருந்து சாலைகள் துறை மூலமாக சீரமைப்பதற்காக வட்டாரத்திற்கு 5 கோடி என்று மூன்று வட்டாரத்திற்கு (வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு) ஒப்பங்கள் கோருவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் 3 சிப்பங்களாக ஒப்பம் கோரி 26.03.2015 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மக்கள் குரல் தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னனு முறையில் (e- tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 10.04.2015 அன்று தொழில் நுட்ப ஆவணத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்களில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 13.04.2015 அன்று திறக்கப்பட்டது.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை – I**

| வ. எண் | சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர்/திருவாளர்கள் | பணியின் செலவினம் | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) | ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விகிதம் 2014–15 ஆண்டு அலுவலக விலைப் பட்டிப்படி |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | எஸ்.பி.பில்டர்ஸ் | 5,00,00,000/– | 5,49,50,000/– | + 9.90 % |
| 2 | 2 | எ.ஜெயராஜ் | 5,00,00,000/– | 5,49,95,000/– | + 9.99 % |
| 3 | 3 | கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,00,00,000/– | 5,90,00,000/– | + 18.00 % |

குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட அதிகம். இதனை விலை குறைப்பு செய்ய, ஒப்பந்ததாரர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் விலை குறைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்கள். விலை குறைப்பு செய்த ஒப்பங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை – II**

| வ. எண் | சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர் / திருவாளர்கள் | பேச்சுவார்த்தைக்கு முன் ஒப்பந்ததாரர் ஒப்பத்தில் குறிப்பிட்ட தொகை | பேச்சு வார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை (ரூபாய்) | பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர்களுக் கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2014–15 ஆண்டு அலுவலக விலைப் பட்டிப்படி | ஒப்பந்ததாரர் களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் சந்தைவிலையுடன் ஒப்பிடுகையில் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | எஸ்.பி.பில்டர்ஸ் | 5,49,50,000/– | 5,20,00,000/– | + 4.20% | 1.80 % குறைவு |
| 2 | 2 | எ.ஜெயராஜ் | 5,49,95,000/– | 5,20,00,000/– | + 3.90% | 3.30 % குறைவு |
| 3 | 3 | கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,90,00,000/– | 5,20,00,000/– | + 4.00% | 4.34 % குறைவு |

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் பேருந்து சாலைகள் துறையின் மூலம் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக்கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.
2) இப்பணியின் மூலம் சென்னை மாநகரில் உள்ள பேருந்து தட சாலைகளில் சேவைத்துறையினரால் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டுகள் சீர்செய்யப்படும்.
3) சாலைப் பணிகள் செய்வதற்கான மூலப்பொருள்கள்விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதால் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது.
4) இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக இருந்தாலும் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது.
5) பணிகள் முன்னேற்றம் கருதி தற்போதுள்ள மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன் படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.
6) சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள 471 பேருந்து சாலைகளில் 197 பேருந்து சாலைகளுக்கு புதியதாக சாலை சீரமைக்கும் பணிக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த சாலைகளில் பராமரிப்பு காலமான 3 வருட பராமரிப்பு காலத்தில் தொண்டு நிறுவனங்கள் சாலை வெட்டு பணியினை மேற்கொண்டால் ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களே சாலை வெட்டினை சீரமைப்பதற்கு மன்றத் தீர்மான எண்.109/2015 நாள்.23.03.2015 –படி நிறைவேற்றப்பட்டுள்ளது. இதை தவிர்த்து மீதமுள்ள ஏற்கனவே பணி முடிக்கப்பட்டுள்ள சாலைகளில் பராமரிப்பு காலமான 3 ஆண்டிற்குள் சாலை வெட்டினை சரி செய்வதற்கு அந்தந்த ஒப்பந்ததாரர்களை அழைத்து சாலை வெட்டினை சரி செய்ய வேண்டும். அந்த ஒப்பந்ததாரர்கள் பணி மேற்கொள்ளாவிடில் சாலைகளில் ஏற்படும் சேதத்திற்கு அவர்களே பொறுப்பாவார்கள். அந்த ஒப்பந்ததாரர்கள் சாலை வெட்டினை மேற்கொள்ளாவிடில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வட்டார ஒப்பந்ததாரர்கள் மூலம் சாலை வெட்டினை சீரமைக்க வேண்டும் .

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 24.04.2015 அன்று நடந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட அதிகமாக இருந்தாலும் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது. இதனை 24.04.2015 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையில் நடந்த உயர்மட்ட ஒப்பம் ஆராயும் குழு ஏற்று ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே,

<u>அட்டவணை</u>

| வ. எண் | சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர்/திருவாளர்கள் மற்றும் கோப்பு எண் | பணியின் செலவினம் | இறுதி ஒப்பத் தொகை (ரூபாய்) | இறுதி விலை விகிதம் 2014–15 ஆண்டு அலுவலக விலைப் பட்டிப்படி |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | எஸ்.பி.பில்டர்ஸ் பே.சா.து.ந. க.எண். பி1/1453–1/2015 | 5,00,00,000/– | 5,21,00,000/– | 4.20 % அதிகம் |
| 2 | 2 | எ.ஜெயராஜ் பே.சா.து.ந.க.எண்.பி1/1453–2/2015 | 5,00,00,000/– | 5,19,50,000/– | 3.90 % அதிகம் |
| 3 | 3 | கே.சி.பி.இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் பே.சா.து.ந.க.எண். பி1/1453–3/2015 | 5,00,00,000/– | 5,20,00,000/– | 4.00 % அதிகம் |

மேற்கண்ட அட்டவணையின்படி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பத்தினை முடிவு செய்யப்பட்ட ஒப்பத்தொகைக்கு பணி ஆணை வழங்க ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**88/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **108/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*********

**ப.து.ந.க.எண்.0063/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.213/2015 **பொருள் எண்.79**

**பணித்துறை – மண்டலம் 12 – சர்வே எண் 176/1,2, 177, 178, 187 (பகுதி), 188 (பகுதி), 189 (பகுதி) & 190 – சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு – தானமாக பெறப்பட்ட நிலம் (சாலை மற்றும் திறந்த வெளி ஒதுக்கீட்டு) – மீண்டும் திரும்ப ஒப்படைத்தல் – அரசுக்கு பரித்துரைப்பதற்கு அனுமதி**

உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் எண். L1/16164/2014, நாள் 11.03.2015 சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் சர்வே எண். சர்வே எண் 176/1,2, 177, 178, 187 (பகுதி), 188 (பகுதி), 189 (பகுதி) & 190, மதனந்தபுரம் இடத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் (PPO/LO எண்.59/2007) தானமாக வழங்கப்பட்ட சாலை நிலம் மற்றும் திறந்த வெளி ஒதுக்கீட்டு நிலங்களை ரத்து செய்து மீண்டும் மனுதாரருக்கு வழங்க வேண்டி மன்றத்தின் தீர்மானம் பெற்று அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இது சம்மந்தமாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

சர்வே எண் 176/1,2, 177, 178, 187 (பகுதி), 188 (பகுதி), 189 (பகுதி) & 190, மதனந்தபுரம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்தில் மனைப்பிரிவு செய்ய திரு. கே. ஸ்ரீதரன் மற்றும் எஸ். அறிவழகி ஆகியோருக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம். தனது கடித எண். (PPO/LO எண்.59/2007) படி அங்கீரம் அளித்துள்ளது. மேற்கண்ட இடம் தற்போது மனைப்பிரிவு செய்யப்படாமல் காலியாக உள்ளது.

உத்தேச மனைப்பிரிவு விஸ்தீரணம் முழுவதும் எந்த அபிவிருந்தி பணியும் மேற்கொள்ளப்படாமல் காலியாக உள்ளது. மனைப்பிரிவில் அபிவிருத்தியளரால் எந்த சாலையும் அமைக்கப்படவில்லை. மனைப்பிரிவு முழுவதும் கற்றுச் சுற்றுச் கவர் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சென்னை மாநகராட்சியின் மூலம் திட்ட அனுமதி, கட்டிட அனுமதி மற்றும் மனை உட்பிரிவு ஏதும் வழங்கப் படவில்லை. மேலும் மேற்கண்ட மனைப்பிரிவு சாலையினை அணுகு பாதையாக வைத்து அதை சுற்றிலும் எந்தவொரு திட்ட அனுமதியோ அல்லது மனை உட்பிரிவோ வழங்கப்படவில்லை.

இதனை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படுள்ளது.

மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும் பொழுது, தானமாக அளிக்கப்படும் நிலம், அரசிற்கு சொந்தமானதாகும். இவற்றை ரத்து செய்து மீண்டும் அளிப்பதற்கு அரசிற்குத்தான் அதிகாரம் உள்ளது.

இவ்வாறு திரும்ப ஒப்படைப்பதற்கு சென்னை மாநகராட்சி மன்றத்தின் பரிந்துரைப் பெற்று அரசிற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

ஒப்புதல் வழங்கப்பட்ட நிலத்தில் சாலைகள் அமைக்கப்படாததாலும் இச்சாலையினை அணுகு சாலையாக கருதி எந்த ஒரு திட்ட அனுமதியும் வழங்கப்படாததாலும், அப்பகுதி எவ்விதமான அபிவிருத்தி மேற்கொண்ணப்படாமல் காலியாக இருப்பதாலும், சாலைக்கென மற்றும் திறந்த வெளி ஒதுக்கீட்டிற்காக தானமாக அளிக்கப்பட்ட 826 ச.மீ மற்றும் 2162 ச.மீ நிலத்தினை திருப்ப வழங்குவதற்கு அரசிற்கு பரிந்துரை செய்யலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் (PPO/LO எண்.59/2007) சர்வே எண் 176/1,2, 177, 178, 187 (பகுதி), 188 (பகுதி), 189 (பகுதி) & 190, மதனந்தபுரம் கிராமம் அமைந்துள்ள சாலைக்கென ஒதுக்கப்பட்ட 8268 ச.மீ நிலமும் திறந்த வெளி ஓதுக்கீட்டிற்கு ஒதுக்கப்பட்ட 2112 ச.மீ நிலத்தினையும் மீண்டும். திருவாள்கள் ஸ்ரீதரன் மற்றும் பலருக்கு திருப்ப ஒப்படைப்பது தொடர்பாக அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு.

மேற்கண்ட இனம்–1ற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**88/2015,–**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **108/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*********

**பா.து.ந.க.எண்.பி3/ 1275/2011**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.214/2015 **பொருள் எண்.80**

**மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுப்பு 2012–13 அறிவிப்பு எண்.63 மண்டலம் – 12, கோட்டம் – 161 (ம) 163ல் ஆலந்தூர் ஏ.ஜே.எஸ்.நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள இரயில்வே சந்திக்கடவு எண் 15 ல் இரயில்வே இருப்பு பாதைகளின் குறுக்கே பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்கும் பணி – இரயில்வே துறையின் மதிப்பீட்டுத்தொகையான ரூ. 2,29,12,500/– மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு வழங்கப்பட்டது – இரயில்வே துறையால் ஒப்பங்கள் இறுதி செய்ய இயலவில்லை – இரயில்வே துறை திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 61,46,200/– ஐ வழங்க கோரியுள்ளது – திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 61,46,200/– இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுப்பு 2012–13 அறிவிப்பு எண்.63ல் ஒரு பணியான ஆலந்தூர் ஏ.ஜே.எஸ். நிதி மேல்நிலைப்பள்ளி எதிரே இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் இரயில்வே வைப்புத்தொகை பணி அடிப்படையில் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்கும் பணி இரயில்வே துறையால் வைப்புநிதி அடிப்படையில் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆலந்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே சந்திக்கடவுகளான எண். 16, 17 மற்றும் 18 ல் ஆகியவற்றில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக வாகன சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக ஆலந்தூர் ஏ.ஜே.எஸ்.நிதி மேல் நிலைப்பள்ளி அருகில் உள்ள இரயில்வே சந்திக்கடவு எண்.15 மூடப்பட்டது.

இச்சந்திக்கடவு எண்.15 மூடப்பட்டதன் காரணமாக ஆலந்தூர் ஏ.ஜே.எஸ்.நிதி மேல் நிலைப்பள்ளிக்கு செல்லும் சுமார் 3500 மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆலந்தூர் பகுதியில் இருந்து ஆதம்பாக்கம் பகுதிக்கு செல்ல முடியாமல் பரங்கிமலை இரயில்வே நிலைய சுரங்கப்பாதை வழியாக சுற்றி செல்ல வேண்டியுள்ளதினால் சந்திக்கடவு எண்.15 ல் பொதுமக்கள் வசதிக்காக இரயில்வே இருப்புப்பாதைகளின் குறுக்கே பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்க 12.03.2007 நாளிட்ட கடிதத்தில் ஆணையர், ஆலந்தூர் நகராட்சி அவர்களால் இரயில்வே கோட்டப்பொறியாளர் அவர்களிடம் கோரப்பட்டது.

18.03.2010 நாளிட்ட கடிதத்தில் இரயில்வே கோட்டப்பொறியாளர் அவர்கள் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தினை வைப்பு நிதி மூலம் மேற்கொள்ள இசைவு தெரிவித்து அதற்கான தோராய மதிப்பீட்டுத்தொகையாக ரூ.1,56,00,000/–ஆக செலவினம் ஆகும் எனவும், பணி முடிக்கப்பட்ட பிறகு இச்சுரங்கப்பாதையின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் பணியின் முடிவுத்தொகையில் 2.50% வழங்க வேண்டும் எனவும், திட்ட வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிக்க பணியின் மதிப்பீட்டில் 2% நூற்றுவீதக்கட்டணமாக (Centage Charges) ரூ.3,12,000/– வழங்கவும் கோரப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.371/2011, நாள்.22.12.2011ன்படி இரயில்வே துறைக்கு ரூ.3,12,000/– மதிப்பிலான காசோலை 27.01.2012 அன்று வழங்கப்பட்டது.

இரயில்வே துறை தனது 30.01.2013 நாளிட்ட கடிதத்தில் இப்பணிக்கான மதிப்பீடு ரூ.2,29,12,500/– ஆகும் என தெரிவித்து இம்மதிப்பீட்டு தொகையை வழங்க கோரியது. மேலும், சுரங்கப்பாதையின் பராமரிப்புக்கான செலவினை ஆண்டுதோறும் இரயில்வே துறைக்கு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தது.

இரயில்வே துறை கோரிய ரூ.2,29,12,500/– மதிப்பீட்டில் ஏற்கனவே நூற்றுவீதக்கட்டணமாக ரூ.3,12,000/– வழங்கப்பட்டுள்ளதை கழித்து ரூ.2,26,00,500/–ஐ வழங்க மன்ற தீர்மான எண்.121/2013, நாள் 22.02.2013ன்படி காசோலை 01.04.2013 அன்று வழங்கப்பட்டது.

04.03.2015 நாளிட்ட முதுநிலை கோட்டப் பொறியாளர், தென்னக இரயில்வே அவர்களின் கடிதத்தில், மதிப்பீட்டுத்தொகை ரூ. 2,26,00,500/– இரயில்வே துறைக்கு செலுத்தப்பட்டது எனவும், ஒப்பம் கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கப்பட்டது எனவும், வேலைக்கான உத்தரவாதத்தினை குறித்த காலத்திற்குள் ஒப்பந்ததாரர் வழங்காததால் இவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும், மறு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றும், மீண்டும் மறு ஒப்பம் கோரப்பட்டதில், மிகுந்த விலைப்புள்ளியே பெறப்பட்டது எனவும், இப்பணியிடத்தில் சுரங்கப்பாதை கடினப்பாறையை ஊடுருவி அமைத்தல், இப்பணிக்கு தேவையான Precast box

களை தயாரிப்பதற்கு இடப்பற்றாக்குறை, தற்காலிக உத்திரங்களை(Temporary girders) நான்கு இருப்புப்பாதைகளுக்கு அடியில் செலுத்துதல் மற்றும் R.C. box களை இருப்புப் பாதைகளுக்கு அடியில் தள்ளுவதற்கு Thrust bed அமைத்தல் போன்ற காரணங்களை கருத்தில் கொண்டு, இப்பணிக்கான மதிப்பீட்டைதிருத்துவது தவிர வேறு வழியில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது இப்பணிக்கு ரூ. **2,90,58,700/–** மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே இரயில்வே துறைக்கு செலுத்தப்பட்ட தொகையாக ரூ. **2,29,12,500/–** ஐ கழித்து மீதம் ரூ.**61,46,200/–** ஐ இரயில்வே துறைக்கு செலுத்துமாறும் கோரியுள்ளார்.

இத்திட்டத்தின் அவசியம் கருதி இரயில்வே துறைக்கு இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தில் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் **23.04.2015** அன்று பெறப்பட்டு ரூ.**61,46,200/–** (ரூபாய் அறுபத்தியொரு லட்சத்து நாற்பதாயிரத்து இருநூறு மட்டும்) " The Senior Divisional Finance Manager, Chennai Division, Southern Railway, Chennai – 600 003" என்ற பெயரில் முன்பணமாக காசோலை **28.04.2015** அன்று செலுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **21.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண்.**89/2015,–**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.04.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **30.04.2015** அன்று தீர்மான எண். **83/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*********

**இ.டி.பி.சி.எண்.சி1/2866/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.215/2015 **பொருள் எண்.81**

**மின் ஒப்பம் – பதிவறையில் உள்ள முக்கிய கோப்புக்கள் மற்றும் பதிவேடுகளை ஸ்கேனிங் செய்யும் பணிக்கு திறந்த மின் ஒப்பம் 20.03.2015 அன்று TECHNICAL BID திறக்கப்பட்டது – 22.04.2015 அன்று FINANCIAL BID திறக்கப்பட்டது – குறைந்த ஒப்பப்புள்ளியை பரிந்துரைக்க அனுமதி**

| | |
|---|---|
| செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | பதிவறையில் உள்ள முக்கிய கோப்புக்கள் மற்றும் பதிவேடுகளை ஸ்கேனிங் செய்யும் பணி |
| தேவைப்படும் இடம் | General Department, Record Section |
| **ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி** | |
| 1) மாநகராட்சி வெளியீட்டில் | 26.02.2015 |
| 2) பத்திரிக்கைகள் | 25.02.2015, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்<br>26.02.2015,மக்கள் குரல் |
| மின் ஒப்பப்புள்ளி பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் | 20.03.2015, 3.00 P.M |
| மின்ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| மின்ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (மின் ஒப்பம் திறக்கப்பட்ட நாள்) | 20.03.2015, 3.00 P.M<br>20.03.2015, 3.30 P.M |
| பெறப்பட்ட மின் ஒப்பங்களின் எண்ணிக்கை | 5 |
| செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை | **ரூ. 1,04,000 / –** |
| **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் விவரங்கள்** | |

தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் 20.03.2015 அன்று திறக்கப்பட்டன. பங்குப்பெற்ற நிறுவனங்கள் முறையே 1) M/s. SHCIL Projects Ltd, 2) M/s Ricoh India Ltd., 3) M/s. Maples Imaging Solution, 4) M/s. United Data Services Pvt. Ltd மற்றும் 5) M/s. Netcom Computers Pvt. Ltd. ஆகும்.

1) M/s. SHCIL Projects Ltd மற்றும் 2) M/s. Netcom Computers Pvt. Ltd ஆகிய நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டன. இந்த நிறுவனங்களின் விலைப்புள்ளி 22.04.2015 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது. இந்த நிறுவனங்களின் விலைப்புள்ளி துறையின் விலைப்புள்ளியோடு ஒப்பீடு செய்யப்பட்டது. ஒப்பிடப்பட்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணி வ.எண் (A,B,C&D) கூட்டு தொகை ரூ | விற்பனை வரி | துறையின் மதிப்பீட்டுத்தொகை ரூ | துறையின் மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுதல் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1 | M/s. SHCIL Projects Ltd | **1,18,61,483.38** | உள்ளிட்டது | **1,03,36,051.57** | (+)14.75 % அதிகம் |
| 2 | M/s. Netcom Computers Pvt. Ltd | **2,17,15,064.00** | உள்ளிட்டது | **1,03,36,051.57** | (+)110.09 % அதிகம் |

| | |
|---|---|
| ஏற்கத்தக்க ஒப்பப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் | M/s. SHCIL Projects Ltd நிறுவனம் குறைந்த ஒப்பபுள்ளி அளித்துள்ளது. |
| துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s. SHCIL Projects Ltd நிறுவனம் தனது 24.04.2015 நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்துள்ளது. |

| S.no | Description | M/s. SHCIL Projects Ltd | |
|---|---|---|---|
| 1 | பதிவறையில் உள்ள முக்கிய கோப்புக்கள் மற்றும் பதிவேடுகளை ஸ்கேனிங் செய்யும் பணி. | மொத்த தொகை (கூட்டு தொகை + சேவை வரி + விற்பனை வரி) ரூ | இறுதி ஒப்பத் தொகை ரூ |
| | | 1,18,61,483.38 | 1,15,24,635.78 |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | THIS TENDER QUOTED RATE | துறையின் மதிப்பீட்டுத்தொகை ரூ (C) | துறை மதிப்பீட்டுத் தொகை (C) விட விழுக்காடு அதிகம்/குறைவு ரூ |
|---|---|---|---|---|
| 1 | M/s. SHCIL Projects Ltd | 1,15,24,635.78 | 1,03,36,051.57 | (+) 11.50% அதிகம் |

குறைந்த ஒப்பந்ததாரரான M/s. SHCIL Projects Ltd நிறுவனம் 24.04.2015 நாளிட்ட விலை குறைப்பு கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது எனவும் இறுதி விலைப்புள்ளித்தொகையை ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருதப்படுகிறது. ஒப்ப கூர்ந்தாய்வுக்குழுமம் இந்த குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதி பெற பரிந்துரை செய்துள்ளது.

| **பரிந்துரைக்கப்படும் நிறுவனம்** | M/s. SHCIL Projects Ltd |
|---|---|
| செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |
| ஆயத் தீர்வை | உள்ளிட்டது |
| உள்ளூர் வரிகள்/மத்திய விற்பனை வரிகள் | உள்ளிட்டது |
| பணி நிறைவு காலம் | ஒன்பது மாதம் |
| பிணை வைப்புத் தொகை | ரூ. 2,30,500/– |
| பணம் பட்டுவாடா | 30 நாட்கள் |
| செலவினம் பற்று வைத்தல் | இப்பணிக்கான செலவினத்தை இடிபி செல்லின் 2015–2016 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும் |
| உடன்படிக்கை | துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும். |

எனவே

1. சென்னை மாநகராட்சியில் பதிவறையில் உள்ள முக்கிய கோப்புக்கள் மற்றும் பதிவேடுகளை ஸ்கேனிங் செய்ய ஒன்பது மாதங்களுக்கு வழங்குவதற்கான இறுதி ஒப்பத் தொகை **ரூ.1,15,24,635.78** (ரூபாய் ஒரு கோடியே பதினைந்து லட்சத்து இருபத்துநான்காயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து பைசா எழுபத்தெட்டு மட்டும்) (வரிகள் உள்ளிட்டது ஆகும்). இந்த தொகை துறை பணித்தொகையைவிட (+) 11.50% அதிகம் என்பதால் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள M/s. SHCIL Projects Ltd நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும் மற்றும் பணி செய்ய ஆணை வழங்கவும்.
2. இந்த பணி செய்வதற்கான செலவினத்தை இ.டி.பி செல் 2015–2016 நிதி ஆண்டின் கீழ் மேற்கொள்ளவும் கூடுதல் நிதி ரூ.1,15,25,000/– இ.டி.பி செல் துறைக்கு ஒதுக்கவும்.

மேற்கண்ட இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1)&(2)ன்படி நிலைக்கழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 21.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும்அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.89/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.113/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*********

**பொ.சு.து.ந.க.எண்.சி1/1761/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.4.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.216/2015 பொருள் எண்.82

**பணியமைப்பு – சென்னை மாநகராட்சி – பொது சுகாதாரத் துறை எல்லையுடன் இணைக்கப்பட்ட திருவொற்றியூர் மணலி, ஒக்கியம்துரைப்பாக்கம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் போன்ற பகுதியிலுள்ள நான்கு அரசு மருத்துவமனைகளை – சென்னை மாநகராட்சியில் எடுத்துக்கொள்ளவும் அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டத்தில் சென்னை மாநகராட்சி எல்லையுடன் திருவொற்றியூர், மணலி, ஒக்கியம்துரைப்பாக்கம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் பகுதிகள் இணைந்ததால், இப்பகுதியில் உள்ள நான்கு மருத்துவமனைகள் சென்னை மாநகராட்சி எடுத்துக்கொள்வதற்காக அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.42965/எப்1/2014–3, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள். 09.03.2015 ல் மண்டலம்–1ல் உள்ள திருவொற்றியூர் Times of India மருத்துவமனை, மண்டலம்–2ல் உள்ள மணலி புதுநகர் ஆரம்ப சுகாதார மையம், மண்டலம்–15ல் உள்ள ஒக்கியம் துரைப்பாக்கம் ஆரம்ப சுகாதார மையம் மற்றும் மண்டலம்–15ல் உள்ள ஈஞ்சம்பாக்கம் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள்/பணியாளர்கள் சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

மாநகர நல அலுவலர்(பொ) அவர்களின் கடிதம், பொது சுகாதாரதுறை ந.க.எண்.1761/2015, நாள்.19.03.2015ல், மேற்படி மருத்துவமனைகளை அதில் பணிபுரியும் மருத்துவர்கள் / பணியாளர்களுடன் சென்னை மாநகராட்சி பராமரிப்பு எடுத்துக்கொள்ள இசைவினை தெரிவிக்கலாமென பரிந்துரைத்துள்ளார்.

பொதுத்துறை ந.க.எண்.ஈ2/4267/2015, நாள்.08.04.2015 நாளிட்ட கடிதத்தில் இரண்டு மருத்துவமனைகள் சென்னை மாநகராட்சியில் எடுத்துக்கொள்வது தொடர்பாக விவரங்கள் அளிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதன்படி கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்கப்படுகின்றது:**

1. மண்டலம்–1ல் அமைந்துள்ள Times of India மருத்துவ மனையில் மருத்துவர்கள்/பணியாளர்கள் மண்டலம்–15ல் உள்ள ஈஞ்சம்பாக்கம் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்/பணியாளர்கள் வேறு அரசு மருத்துவமணைகளிலிருந்து பணிமாற்று அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

**Times of India – Hospital – Zone-1**

| S.No. | Name of the Post | Nos. |
|---|---|---|
| 1 | Medical Officer | **4** |
| 2 | Staff Nurse | **6** |
| 3 | Pharmacist | 1 |
| 4 | Lab Tech. | 1 |
| 5 | M.N.A. | 1 |
| 6 | FNA | 2 |
| 7 | Office Assistant | 1 |

**Enjampakkam Peripheral Hospital – Zone-15**

**Staff Details**

| S.No | Name of the Post | Nos. |
|---|---|---|
| 1 | Medical Officer | 1 |
| 2 | Head Nurse | 1 |
| 3 | Staff Nurse | 1 |
| 4 | Pharmacist | 1 |
| 5 | NCD Nurse | 1 |
| 6 | FNA | 1 |
| 7 | Cook | 1 |

1. Trauma Care Unit

| S.No. | Name of the Post | Nos. |
|---|---|---|
| 1 | Medical Officer | 2 |
| 2 | Staff Nurse | 2 |

2. மண்டலம்–1ல் உள்ள டைம்ஸ் ஆப் இந்தியா மருத்துவமனை இயக்குநரகம் மருத்துவப்பணிகள் தேனாம்பேட்டைக்கு சொந்தமான கட்டிடத்திலும், மண்டலம்–15ல் உள்ள ஈஞ்சம்பாக்கம் மருத்துவமனை பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன.

3. மேற்குறிப்பிட்ட இவ்விரு மருத்துவமனைகளும் சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டு மாநகர சமூக நல மையம் (Urban Health Community Health Centre)ஆக தரம் உயர்த்தி செயல்படுத்தப்படும் ஒரு மருத்துவமனைக்கு தேவைப்படும் பணியாளர்களின் விவரம் :

| S.No. | Staffs | Req/UCHC |
|---|---|---|
| 1 | Medical Officer | 4 |
| 2 | Specialist | |
| | a. Anesthetist | 1 |
| | b. Obstetrician | 3 |
| | c. Pediatrician | 2 |
| | d. Dentist | 2 |
| | e. General Physician | 1 |
| | f. General Surgeon | 1 |
| 3 | Pharmacist | 2 |
| 4 | Lab Technician | 4 |
| 5 | Staff Nurse | 30 |
| 6 | ANM / UHN/ | 8 |
| 7 | Ward Sister | 2 |
| 8 | Theatre Assistant | 3 |
| 9 | Male Ward Attender | 10 |
| 10 | Female Ward Attender | 15 |
| 11 | Clerk | 2 |
| 12 | Data Entry Operator | 4 |
| 13 | Security | 3 |
| 14 | Sanitary Worker | 10 |
| 15 | Medical records tech | 2 |
| 16 | Counselor | 2 |
| 17 | Nutrition Specialist | 3 |
| 18 | Shelter Coordinator | |
| 19 | System analyst | |
| 20 | Programmer Indian System of Medicine | 1 |
| 21 | Siddha | 1 |
| 22 | Ayurvedha | 1 |
| 23 | Unani | 1 |
| 24 | Homeopathy | 1 |
| 25 | Naturopathy & Yoga | 1 |
| 26 | Pharmacist | 2 |
| | Total | 122 |

எனவே,

1. Times of India – ISHA Foundation Hospital, Community Health Centre, Tiruvottiyur
2. Manali Pudhunagar Primary Health Centre
3. Okkiyam Thuraipakkam Primary Health Centre
4. Government Peripheral Hospital, Injambakkam

   ஆகிய நான்கு மருத்துவமனைகளையும், சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள அனுமதியும்,

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மருத்துவமனைகளில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் வெளிநிறுவனங்கள் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி பணி நியமனம் செய்யவும், மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சாரா பணியாளர்களுக்கு தேசிய நகர்புற சுகாதாரத்திட்ட (National Urban Health Mission) நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும்.
3. பின்னர் நிரந்தர மருத்துவர்கள்/பணியாளர்களை பணியமர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும்.
4. அரசுக்கு இசைவு கடிதம் அனுப்பவும்,

மேற்குறிப்பிட்ட ஐந்து இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்) வின் கூட்டம் 17.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.12/2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 23.04.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 30.04.2015 அன்று தீர்மான எண்.109/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1 /12426/ 2015.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.217/2015 **பொருள் எண்.83**

**2015—2016ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவிக்கான 01.04.2015ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | செயற் பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 01.04.2015 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600 – 39100 + 7600 தர ஊதியம் | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | அ) உதவி செயற்பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,<br>ஆ) உதவி செயற்பொறியாளர் பதவியில் 5 ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும். | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | –– | 59 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 59 |
| | | 2. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 00 |
| | | 3. மைய நாளில் உள்ள காலிப்பணியிடம் | – | 04 |
| | | 4. கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படுவதால் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | – | 03 |
| | | 5. மண்டல அலுவலராக பதவி உயர்வு அளிப்பதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 07 |
| | | 6. பட்டியல் ஆண்டில் வயது முதிர்வு ஒய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 01 |
| | | 7. விடுப்பு காலிப்பணியிடம் ( அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014–ன்படி 30%) | – | 05 |
| | | **நிகர காலிப்பணியிடம்** | **–** | **20** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | | –ஆம்– | |

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் மன்றம் பெற்று உள்ளது.

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்த / பணிபுரியும் நபர்களுக்கிடையே ஒருங்கிணைந்த மூப்புப்பட்டியல் மற்றும் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் பின்வருமாறு.

| **வ. எண்.** | **பெயர் / திருவாளர்கள்** | **உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள்** | குறிப்புரை |
|---|---|---|---|
| 01 | வி.புவனேஷ்வரன், | 16.06.2003 | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைபாடு மற்றும் மேல்முறையீடு) 1970 விதி 10(பி)ன்கீழ் (பொ.து.ந.க.எண்.ஈ1/ 43030 /2012)ல் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. தனியரின் ஊதிய உயர்வு 2 ஆண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட நாள்.14.09.2013 |

| | | | |
